பாரதி

“இந்தியா”

சிலம்பு நா. செல்வராசு

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

பாரதி
'இந்தியா'

பாரதியின் புதுச்சேரி 'இந்தியா' இதழ் பற்றிய நூல்

முனைவர் சிலம்பு நா. செல்வராசு
விரிவுரையாளர்
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி - 605 001

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

டாக்டர் சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் — டாக்டர் சிவந்தி ஆதித்தனார், அதிபர், தினத்தந்தி நாளிதழ்)
வரிசை எண் : 2 நாள் : 26.02.2003

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Bharathi 'INDIA'
Editor	:	Dr. Silambu N. Selvarasu
Publisher	:	International Institute of Tamil Studies C.P.T. Campus, Chennai - 600 113 Ph: 2254 2992
General Editor	:	Dr. S. Krishnamoorthy
Publication No.	:	444
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	2003
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	xiv+154
No. of Copies	:	1200
Price	:	Rs.40/- (Rupees forty Only)
Printed by	:	United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004
Subject	:	Journalism

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

இலக்கியம் என்பது சமுதாயச் சூழலின் வெளிப்பாடாகும். மக்களின் உணர்வு வெளிப்பாடு அவ்விலக்கியங்களில் மறைவாகவும், வெளிப்படையாகவும் அமைந்துவிடும். மறைவாகச் சுட்டப்பெறும் இலக்கியங்கள் அல்லாமல் அவ்வுணர்வுகளின் வெளிப்பாடாகவே உருவாகும் இலக்கியங்களும் உண்டு. எனவே, எந்தவோர் இலக்கியத்தையும், சமுதாயச் சூழலினின்றும் பிரித்துப் பார்க்கவியலாது. மக்களுக்காகவே, மக்களின் உணர்வுகளுக்காகவே அத்தகு உணர்வுடையோர்களால் படைக்கப்படும் இலக்கியங்கள் ஏதேனும் ஒரு நோக்கத்திற்கான விளைவை எதிர்நோக்கியே உருவாக்கப்படுகின்றன. எனவே, எந்தவோர் இலக்கியத்தையும் அது தோன்றிய காலம், இடம், அரசியல், பொருளாதாரம் ஆகிய சூழல்களிலிருந்து பிரித்துப் பார்க்கவியலாது.

இவ்வகையில் இதழ்களும் கருதத்தக்கன. குறிப்பாக, இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டவும், ஆளும் வர்க்கத்தின் அநீதிகளை எடுத்துரைக்கவும், அதற்காக மக்களை வெகுண்டெழச் செய்யவும் ஆகிய நிலைகளில் இதழ்கள் பெரும்பங்காற்றியுள்ளன என்றால் அது மிகையாகாது. விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு இதழ்கள் பெரும் பங்காற்றியுள்ளன. அவற்றுள் பாரதியின் இந்தியா இதழ் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. இதழியல் கோட்பாடுகளுக்குட்பட்டு அதன் வடிவமைப்பும், அட்டைப்படமும், கட்டுரைகளும், பிற செய்திகளும் முறையாக வடிவமைக்கப்பட்டு வெளிவந்துள்ளது என்பதை நோக்கும்போது அவ்விதழ் எந்த அளவு மக்களின் வரவேற்பிற்குள்ளாகியிருந்தது என்பதை அறியமுடிகிறது. பல்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு இடங்களிலிருந்து இவ்விதழ் வெளிவந்தாலும் அதன் தரத்திலும், வெளிப்பாட்டிலும் தீவிரவாதப் போக்கு, சற்றும் குறையாமல் வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. விடுதலைப் போராட்டக் காலத்தில் வெளிவந்த

பாரதியின் இந்தியா இதழ் பற்றிய முழுமையான ஆய்வாக இந்நூல் அழகுற அமைந்துள்ளது. டாக்டர் சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளையின் 2ஆம் அறக்கட்டளைச் சொற்பொழிவு இப்பொருண்மையில் அமையும் வகையில், இச்சொற் பொழிவைக் குறித்த காலத்தில் அமைத்துத் தந்த புதுவை மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர் சிலம்பு நா. செல்வராசு அவர்களுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாரதி இந்தியா இதழை அதன் அமைப்பு, உள்ளடக்கம், வகைப்பாடு என்ற வகையில் ஆய்வுசெய்து, ஒரு முழுமையான ஆய்வாக இச்சொற்பொழிவை அமைத்துத் தந்துள்ளார். இச்சொற்பொழிவைப் பாரதி 'இந்தியா' என இதழின் பெயரிலேயே நூலாக வெளிக்கொணர்வதில் இந்நிறுவனம் பெரிதும் மகிழ்வடைகிறது.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் திரு. எஸ். செம்மலை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திரு. பு.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்களுக்கும், கூடுதல் செயலாளர் திரு. தா. சந்திரசேகரன், இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலிற்குச் சிறந்த முறையில் ஒளியச்சுக்கோப்புச் செய்த திருமதி பி. கௌசல்யாவிற்கும், அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் : 13-02-2003 இயக்குநர்

ஆசிரியரைப்பற்றி



பெயர் : சிலம்பு நா.செல்வராசு

பிறந்த ஊர் : பழைய தஞ்சை மாவட்டத்து இடமணல் கிராமம்- 609 131.

பிறந்தநாள் : 01.03.1955.

பெற்றோர் : வீ.ஏ. நாராயணசாமி - காசி அம்மாள்.

கல்வித்தகுதி : புலவர் (1977) டிஇஉ., (1978), பி.லிட்., (1979), எம்.ஏ., (1981), எம்.பில்., (1982) பிஎச்.டி., (1990).

பணியாற்றிய இடங்கள் : தமிழ்ப் பல்கலைக்கழகம் (1984 - 1987)
புதுவைப் பல்கலைக்கழகம் (1990 - 1992)

பணி விவரம் : விரிவுரையாளர்
இலக்கியப்புலம்
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி - 605 001.

நூல் வெளியீடுகள்:
1. சமூகவியல் பார்வையில் தமிழ் மரபுகள் (1988)
2. சமூகமானுடவியல் பார்வைகள் (1990)
3. வள்ளிமுருகன் வழிபாடு (1990)
4. இருபதாம் நூற்றாண்டுச் சிற்றிலக்கியங்கள் (1995)
5. சங்க இலக்கியம்- சமூக மானுடவியல் ஆய்வு (1996)
6. இலக்கிய அரசியல் (1997)
7. கோயில் பண்பாடு (1999)
8. தொல்தமிழர் சமயம் (2000)
9. வள்ளுவப் பெண்ணியம் (2002)
10. சங்க இலக்கியமும் சமூகவியலும் (2002)

பதிப்பு நூல்களின் எண்ணிக்கை : 60

வெளியிட்ட கட்டுரைகளின் எண்ணிக்கை	: 85
கருத்தரங்க ஒருங்கிணைப்பு பணி	: 40 கருத்தரங்குகள்
குறிக்கத்தக்க கல்விசார் அமைப்புப் பணி	: செயலாளர் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், திருச்சிராப்பள்ளி - 620 017.
கலந்து கொண்ட கருத்தரங்குகள்	: வட்டார, தேசிய, உலக அளவிலான கருத்தரங்குகள் : 50
நிறைவு செய்யப் பெற்ற ஆய்வுத் திட்டங்களின் எண்ணிக்கை	: 11 (பதினொன்று)

❄ ❄ ❄

எழுபிறப்பும் உள்ளுவம்

"வள்ளன்மை" தமிழர் பண்புகளில் ஒன்று; அறக்கொடை சங்க காலத்தில் மட்டும் அன்று; இன்றும் உண்டு. இதற்குத் தக்க காட்டு, கல்வி நிறுவனங்களில் அமைக்கப்பெறும் அறக்கொடைகள். தமிழர் பெருமைக்கு ஒன்றாக விளங்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பெற்ற அறங்கள் பல. அவற்றுள் "டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார்" அவர்கள் பெயரில் அமைக்கப் பெற்ற அறமும் ஒன்று. டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளையின் சார்பாக இந்த நூல் வெளிவருகின்றது.

அறக்கட்டளைப் பொழிவு ஆற்றவும் அந்தப் பொழிவும் பொழிவுநாளன்றே நூலாக வெளிவரவும் தக்க களம் அமைத்து, வாய்ப்பு நல்கி, ஊக்கம் தந்து, உதவி புரிந்து, நல்ல பணிகள் பலவற்றை ஆற்றிவரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி** அவர்கள் இந்த நிகழ்வுக்குத் தலைமைக் காரணர் ஆவார். அவரும் அந்நிறுவனத்தார் பலரும் நன்றிக்கு உரியோர் ஆவர்.

இந்த நூல் உருவாக்கத்தில் தனிக்கவனம் செலுத்தியவர் எமது ஞானத்தந்தை **க.ப. அறவாணன்** அவர்கள். நூலை முழுதும் படித்து விவாதித்துக் கருத்துகள் பல உதவியவர். இந்நூல் எழுத ஊக்கப்படுத்திய அன்பிற்குரிய சகோதரர் பேராசிரியர் **அ.அறிவு நம்பி** அவர்கள்; உடன் இருந்து எழுதத் தூண்டிய தோழர் **எல். இராமமூர்த்தி** அவர்கள்; அன்புத் தம்பி **இரா. அறவேந்தன்** அவர்கள்; தோழமை யுள்ள **இரா. கௌதம சங்கர்** அவர்கள்;

பாரதி அருங்காட்சியகத்தைப் பயன்கொள்ள அனுமதி வழங்கியவர் புதுவை அரசின் கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் திரு. **சி. சந்திரசேகரன்** அவர்கள்;

பாரதியின் 'இந்தியா' இதழ் பற்றிய செய்திகளைச் சேகரிக்கவும் இதழ்களைப் படியெடுக்கவும் பன்முறை உதவியவர் எம்முடைய அன்புச் சகோதரி முனைவர் **நா. செங்கமலத்தாயார்**

அவர்கள்; பெயருக்கு ஏற்ற தாயுள்ளம் வாய்த்தவர்; புதுச்சேரிப் பாரதி அருங்காட்சியகத்து ஆராய்ச்சி மைய ஆய்வுத்துறை அலுவலர்.

"பாரதி இந்தியா" என்ற இந்த நூலை எழுதக் காலமும் களமும் தேவைப்பட்டன. அறக்கட்டளைப் பொழிவு பற்றியும் அது நூலாக வெளிவருவது பற்றியும் எமது புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் பேராசிரியர் **ப. மருதநாயகம்** அவர்களிடம் எடுத்துக் கூறினேன். ஆய்வு தொடர்பான எந்த ஒன்றையும் மகிழ்ச்சியோடு வரவேற்கும் அவர்கள் இந்த அறக்கட்டளைப் பொழிவு பற்றி மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்களின் துணையோடுதான் இந்நூலை முழுநேரப் பணியாக எழுதி நிறைவு செய்ய நேர்ந்தது.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது

புதுச்சேரி
11-12-2002
மகாகவி பிறந்தநாள்

நன்றியுடன்
சிலம்பு நா. செல்வராசு

உள்ளே

தொடங்குவதற்கு முன் . . .

இயல் ஒன்று 1

பண்டைச் செய்தித் தொடர்பு வரலாறும்
இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும்

இயல் இரண்டு 11

புதுச்சேரி இதழ்களின் வரலாறு :
'இந்தியா' இதழின் முன்னும் பின்னும்

இயல் மூன்று 31

பாரதியின் புதுச்சேரி வருகையும்
புதுச்சேரி 'இந்தியாவின்' உதயமும்

இயல் நான்கு 53

'இந்தியா' இதழ்ச் செய்திகள்
அமைப்பும் வகைப்பாடும் வாய்பாடும்

இயல் ஐந்து 100

இந்தியா இதழ்க் கருத்துப்படங்கள் :
இதழ்ச்செய்திகள் - கருத்துப்படங்கள்
வாய்பாடுகளின் ஒப்பீடு

நிறைவிற்கு முன் 124

'இந்தியா' மீண்டும் மலராமையும்
பாரதியின் அரசியலும்

துணைநூற்பட்டியல் 130

பின்னிணைப்புகள் 131

கருத்துப்படங்கள் 132

தொடங்குவதற்கு முன்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் 'இந்திய விடுதலை இயக்கம்' ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றது. உலகெங்கும் விடுதலை விழிப்புணர்வு ஏற்பட்டிருந்த அந்தக் காலக்கட்டத்தில் இந்துக்கள் மிகுதியாக வாழும் பகுதியையும் இசுலாமியர் மிகுதியாக வாழும் பகுதியையும் பிரிக்க எண்ணிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வங்கப் பிரிவினையைக் கொண்டு வந்தது. வங்கப் பிரிவினை 'நவீன கிளர்ச்சிக்கு' வழி கோலியது. தேசிய விடுதலை இயக்கம் மிததேசிய வாத இயக்கமாகவும், தீவிர தேசியவாத இயக்கமாகவும் பிரிந்து செயல்பட வேண்டிய சூழல் உருவானது. 1906-இல் கிளர்ந்தெழுந்த தீவிர தேசியவாதம், ஆயுதப் புரட்சிக்கும் வெடிகுண்டுப் புரட்சிக்கும் இரகசிய நடவடிக்கைகளுக்கும் வழி அமைத்துக் கொடுத்தது. வங்கமும், பஞ்சாபும், தமிழ்நாடும் ஒரு முக்கோண நிலையில் இவ் வியக்கத்தில் இணைந்தன. 1908-இல் முதல் வெடிகுண்டுப் புரட்சி நிகழ்ந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அதன் பிறகு இரண்டே ஆண்டுகளில் தீவிரதேசிய வாத இயக்கத்தை அழித்து ஒழித்தது.

தீவிர தேசிய வாத இயக்கத்தின் பிரதிநிதியாகத் தமிழ்நாட்டில் இருந்து இயங்கிய தலைவர்கள் பலர். 1908க்குப் பிறகு இவர்களுள் பலரும் கொடுஞ்சிறையில் அடைக்கப்பட்டனர். பல்வேறு சட்டங்கள், பல்வேறு தண்டனைகள், பல்வேறு அடக்கு முறைகள் மூலம் தமிழ்நாட்டில் இருந்த இந்த இயக்கத்தைத் துடைத்து எறிந்தனர். ஆனால் அன்றைய காலத்தில் பெரும் எழுச்சிபெற்று நின்ற அந்த இயக்கத்தை அழித்தாலும் அதன் சுவடுகள் இந்திய வரலாற்றில் ஆழமாய்த் தடம் பதித்தன.

இந்தக் காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் முனைப்போடு நின்று தீவிர தேசியவாத இயக்கத்தின் மூலம் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர் சி. சுப்பிரமணிய பாரதி. ஒரு மகாகவியாகிய பாரதியின் பன்முகப்பட்ட பண்புகளுள் இது தலைமையானது. 1906-இல் இருந்து 1910 வரையும் பாரதியின் வாழ்க்கை இந்த இயக்கத்தோடுதான் கழிந்தது. பாரதி மிதவாதியா? தீவிரவாதியா? என்ற அரசியல்முகப்பட்ட ஆய்வுகளுக்கு முடிவு இல்லைதான். ஆனால் 'இந்தியா' என்ற வீறுமிக்க இதழைப் படித்தவர்கள் இந்த விவாதத்திற்கு ஒரு முடிவு செய்து விடுவார்கள்.

தமிழ்நாட்டில் எழுச்சிமிக்க இயக்கமாகக் கிளர்ந்து எழுந்த தீவிரவாத தேசிய இயக்கத்தையும் அதன் கொள்கைகளையும் நிகழ்வுகளையும் மக்களிடையே கொண்டு சென்ற தூதுவனாக அன்று செயல்பட்டது "இந்தியா" இதழ்தான். வந்தேமாதரம், சுயராஜ்ஜியம் முதலான பல்வேறு பெயர்களில் பல்வேறு இடங்களில் தீவிரதேசிய வாத இழ்கள் எழுந்தன. இவையாவும் ஆங்கிலேய அரசின் அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டு வலுவிழந்தன.

"இந்தியா" இதழ் தீவிரவாத தேசிய இயக்கத்திற்குப் பின்னடைவை உண்டுசெய்யும் மிதவாத இயக்கத்தாரையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் கடுமையான முறையில் கண்டித்தது. சுயராஜ்ஜியம், சுதேசியம் முதலியவற்றை ஏற்று அவற்றின் முதன்மைகளை மக்களிடத்தே கொண்டு சென்றது. இந்தக் கடுமை நிறைந்த பணியை "இந்தியா" இதழின் பின்னே இருந்து நிறைவேற்றியவர் மகாகவி பாரதியார்.

பாரதி "இந்தியா" - என்பது இந்நூலுக்குச் சூட்டப்பெற்ற தலைப்பு. பாரதி புதுச்சேரிக்கு வந்து "இந்தியா" இதழை நடத்திய 1908 அக்டோபர் முதல் 1910 மார்ச்சு வரையிலான "இந்தியா" இதழ் பற்றிய செய்திகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கால எல்லையுள் 1909 ஆண்டு சனவரி முதல் திசம்பர் வரையிலான இதழ்களே இங்கு ஆய்வில் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளன. எனவே "பாரதியின் புதுச்சேரி 'இந்தியா' இதழ் பற்றிய நூல்" என்பதாக இந்நூலின் தலைப்புப் பொருள்விளக்கம் அமைக்கப் பெறுகின்றது. பாரதியின் 'புதுச்சேரி இந்தியா' இதழை ஆய்விற்கு உட்படுத்தியமைக்குக் காரணங்கள் உண்டு. 1908-ஆம் ஆண்டில்தான் தீவிரதேசியவாத இயக்கத்தின் செயல்பாடுகள் உச்சநிலையை அடைந்தன. இயக்கத்தலைவர்கள் பலரையும் திலகர், அரவிந்தர், வ.உ.சி., சுப்பிரமணியசிவா முதலான பலரும் கைது செய்யப்பெற்றுச் சிறையில் அடைக்கப்பட்ட காலமும் அதுதான். தீவிரதேசியவாத இயக்கம் நெருக்கடி மிகுந்த சூழ்நிலையில் இயங்கிய காலமாக அமைந்துவிட்டதால் 1908 அக்டோபர் முதல் உள்ள காலவரையறை மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியா இதழின் ஆசிரியர் கைது செய்யப்பெற்றுச் சிறையில் அடைக்கப்பட்டதும் அலுவலகம் சோதனையிடப் பட்டதுமான சூழலில் பாரதி புதுச்சேரியில் தஞ்சம் புகுந்து செயல்படத் தொடங்கினார். பிரெஞ்சிந்தியப் பகுதியான புதுச்சேரி அரசியல், பிரிட்டிஷ் அரசிற்கு எதிரானது; பகையானதும் கூட எனவே பாரதி புதுச்சேரி மண்ணில் நின்று இந்தியா இதழை வெளியிட்டு

வந்தார். இயக்கத்திற்குக் கடும் நெருக்கடி மிகுந்த அந்தக் காலக்கட்டத்தில் புதுச்சேரி மண்ணில் இருந்து ஓரளவு சுதந்திரமான முறையில் அரசியல் விமர்சனங்களை முன் வைக்க முடிந்தது. எனவேதான் 1909 ஆம் ஆண்டு வெளிவந்த இதழ்கள் இந்த ஆய்வில் முதன்மை பெறுகின்றன.

"இந்தியா" இதழின் பதிவு பெற்ற ஆசிரியர் பாரதியார் அல்லர். ஆனாலும் "இந்தியா" இதழ் முழுமையும் பாரதியார் மேற்பார்வையில்தான் உருவானதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நூலும் இதனையே வழிமொழிகின்றது.

பாரதியின் வாழ்க்கை பற்றியும் இந்தியத் தேசிய விடுதலை வரலாறு பற்றியும் முன்பே அறிஞர் பலர் ஆராய்ந்து கூறியுள்ளனர். ரா.அ. பத்மநாபன் (1982), ஸி.எஸ். சுப்பிரமணியம் (1986) சீனி விசுவநாதன் (1993) ரகுநாதன் (1986) ஆ. இரா. வேங்கடாசலபதி (1994) இறையரசன் (1995) முதலியோர் நூலில் ஆராய்ந்து உரைக்கப்பெற்ற கருத்துகள் இந்நூலுக்குத் துணை கொள்ளப் பெற்றுள்ளன. இதே போல் தமிழ் இதழியல் வரலாறு தொடர்பாகச் சு. சக்திவேல் (1997), மா.சு. சம்பந்தன் (1987) க.சச்சிதானந்தம் (1996) சு.தில்லைவனம் (1997) கு. இராசேந்திரன் (2002) முதலியோர் கருத்துகள் துணை கொள்ளப் பெற்றுள்ளன.

இந்நூலின் இறுதிப் பகுதியில் உரைக்கப்பெற்ற சில முடிவுகளுக்குப் பேராசிரியர் க.ப.அறவாணன் அவர்களின் கலந்துரையாடலும் நூலும் (2002) துணை செய்துள்ளன.

இந்நூல் ஐந்து பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை தவிர "நிறைவிற்கு முன்" என்ற தலைப்பில் நிறைவுரை இடம் பெற்றுள்ளது.

இயல் ஒன்று, பண்டைச் செய்தித் தொடர்பின் வரலாறு பற்றியும் இதழ்களின் தோற்றம் வளர்ச்சி பற்றியும் ஆராய்ந்துள்ளது. இயல் இரண்டு புதுச்சேரி இதழ்களின் வரலாற்றை நிரல்படத் தொகுத்துத் தந்துள்ளது.

இயல் மூன்று பாரதி புதுச்சேரிக்கு வந்த காரணத்தை இந்தியத் தேசிய விடுதலை வரலாற்றின் பின்னணியில் விளக்கி உள்ளது. "இந்தியா" இதழ் சென்னையில் இருந்து புதுவைக்கு வந்த விதம் கூறப்பட்டுள்ளது. இயல் நான்கு "இந்தியா" இதழ் ஒன்றை ஆய்வுக்கு உட்படுத்தி அதன் அமைப்பையும் அது நுவலும் செய்திகளின் வகைப்பாட்டையும் அதிலிருந்து பெறப்படும் சில வாய்பாடுகளையும் ஆராய்ந்துள்ளது. இயல் ஐந்து முன்னியலில்

அறியப்பெற்ற வாய்பாடுகளை 1909 ஆண்டில் வெளிவந்த இந்தியா இதழ்க் கருத்துப் படங்களோடு ஒப்பிட்டு இந்தியா இதழின் பொது வாய்பாடுகளைக் கண்டறியும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளது. 'நிறைவிற்குமுன்' எனும் நிறைவுரையில் "இந்தியா" இதழ் மீண்டும் தோன்றாமை பற்றியும் பாரதியின் அரசியல் மாற்றம் குறித்தும் ஆராயப்பெற்று முடிவுகள் கண்டறியப் பெற்றுள்ளன.

நூலின் முதன்மை நோக்கம்

இந்நூல் "இந்தியா" இதழ்பற்றிய "மாதிரி ஆய்வாக" அமைக்கப் பெற்றுள்ளது. 'இந்தியா' இதழ் ஒன்றின் அமைப்பை அறிமுகப்படுத்துவதும் அதில் அமைந்துள்ள செய்திகளை வகைப்படுத்துவதும் அவ்வகைச் செய்திகள் முழுவதையும் வாசகர் பார்வைக்கு அறியத் தருவதுமான முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றன. இதற்கென "இந்தியா" இதழ் ஒன்று தேர்வு செய்யப்பெற்றது. "இந்தியா" இதழ் சென்னையிலிருந்து புதுச்சேரிக்கு வந்து வெளிவரத் தொடங்கி ஓராண்டு நிறைவடைந்து இரண்டாம் ஆண்டு தொடங்கிய முதல் இதழ் 16.10.1909 ஆம் நாள் இதழ், மாதிரி ஆய்விற்கான தரவாகக் கொள்ளப்பெற்றது.

இந்த இதழ் நுவலும் செய்திகளை வகைப்படுத்தி அந்த வகைகளிலிருந்து வடித்து எடுக்கப்படும் பிழிவுகள் சில வாய்பாடுகளாக இனம் காணப்பட்டன. இந்த வாய்பாடுகளும் ஆறு வகையாகப் பிரிக்கப்பெற்றன.

இந்த ஆறு வாய்பாடுகளையும் கருதுகோள்களாகக் கொண்டு இவற்றை மீள் சரிபார்ப்புக்கு உட்படுத்த 1909 ஆம் ஆண்டு சனவரி முதல் திசம்பர் வரை வெளிவந்த இந்தியா இதழ்களின் 53 கருத்துப்படங்களும் கருத்துப்பட விளக்கங்களும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. கருத்துப்படச் செய்திகளும் வகைப்படுத்தப்பெற்று அவற்றிலிருந்து உருவாக்கப் பெற்ற வாய்பாடுகளை முன்பு கண்டறியப்பெற்ற வாய்பாடுகளோடு ஒப்பிட்டு முடிவுகள் இனம் காணப் பெற்றுள்ளன.

"இந்தியா" இதழின் நோக்கத்தையும் அந்நோக்கத்தை நிறைவேற்றும் போக்குகளையும் இந்த ஆய்வுமூலம் அறிவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது; இதுவே இந்நூலின் முதன்மை நோக்கமாகவும் அமைக்கப் பெற்றுள்ளது. இந்நூல் மொழி நடையில் பிறமொழி ஆட்சி தவிர்க்க இயலா நிலையில் இடம் பெற்றுள்ளதையும் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும்.

இயல் ஒன்று

பண்டைச் செய்தித்தொடர்பு வரலாறும் இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும்

மனித இனம் என்று தோற்றம் கொண்டதோ அன்றே செய்தித் தொடர்பும் தோற்றம் கொண்டது. மனித இனத்திற்கு முந்தைய விலங்கு நிலையில் கூடச் செய்தித்தொடர்பு உண்டு. காக்கைகள் உணவிற்காகக் கரைவதும், நாய்கள் குரைப்பதும் ஒருவகைச் செய்தித் தொடர்பே. விலங்கு நிலையிலிருந்து விடுபட்டு நின்ற மனிதனின் செய்தித்தொடர்பு பற்றி ஏராளமான சான்றுகள் உண்டு. தொல் மனித குலத்தின் இனக்குழு வாழ்க்கையில் இச்செய்தித் தொடர்புகளை அறியலாம். இனக்குழுவின் குலமரபுச் சின்னங்கள், அக்குழுவினரின் நடை, உடை, பழக்க வழக்கங்கள், வழிபாடுகள் எல்லாமே இந்தக் குறிப்பிட்ட குழுவினர் இவர் என்பதை வெளிப்படுத்தும் ஒருவகைச் செய்திக் குறிப்புகள் ஆகும்.

மனிதன் முதலில் சைகைகள் மூலம் செய்திகளைப் புலப்படுத்தினான். பின்னர் ஒலியெழுப்புவதன் மூலம் ஒருவகைச் செய்திகளை வெளியிட்டான். தீ மூட்டிப் புகையைக் கிளப்புவதன் மூலமாகவும் தீ அம்புகளை வானத்தில் விடுவதன் மூலமாகவும் சூரிய வெளிச்சத்தைக் கண்ணாடி கொண்டு பிரதிபலிக்கச் செய்வதன் மூலமாகவும் செய்திகளைப் பண்டைய மனிதன் அறிவித்தான் என்று அறிஞர் கூறுவர் (மா.சு. சம்பந்தன். 1987). மனிதன் நாகரிகம் அடைந்தவுடன் புறாக்களின் மூலமும், மனிதர்களின் மூலமும் தான் அனுப்பும் செய்திகளைத் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு எட்டச் செய்தான். தற்போது சாரணர் கொடிகளை அசைத்தும், கப்பற்படையினர் விளக்கு ஒளியைக் காட்டியும் செய்திகளை அனுப்புவதைப் பார்க்க முடிகிறது.

பண்டைத் தமிழகத்தில் நிலவிய செய்தித் தொடர்பின் முதன்மையான இரண்டு வகைகளை இங்குச் சுட்டுதல் வேண்டும்.

1. பறை அறைதல் 2. தூது விடுதல்.

சங்க காலத்தில் முரசு அறைந்து திருமணம், படையெடுப்பு முதலிய செய்திகளைத் தெரிவித்தனர்.

நாவலந் தண்பொழில் நண்ணார் ஒற்றுநம்
காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா
வம்பணி யானை வேந்தர் ஒற்றே
தஞ்செவிப் படுக்கும் தகைமைய வற்றோ
அறைபறை யென்றே அழும்பில் வேள் உரைப்ப
(சிலம்பு. காட்சி. 173-177)

என்ற சிலப்பதிகாரப் பாடல் அடிகள் படையெடுப்பு நிகழ்வதைப் பறை அறைந்து தெரிவித்த கருத்தை விவரிக்கின்றன. படையெடுப்பு நிகழ இருப்பதைப் பறை அறைந்து தெரிவித்திட அந்நாட்டில் உலவும் வேற்று நாட்டு ஒற்றர்கள் தம் மன்னர்க்கு இரகசியச் செய்தி அனுப்பி வைத்தமையையும் அறிய முடிகின்றது.

அரசு செய்திகளை முரசறைந்து அறிவிப்பவனை "வள்ளுவ முதுமகன்" என்று அழைத்தனர். வள்ளுவ முதுமகன் சிறப்பு நாட்களுக்கு மட்டுமே பறையறைவான் என்று பெருங்கதை குறிப்பிடுகின்றது.

பெரும்பணைக் கொட்டில் உளரும் பலியோச்சி
முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சித்
திருநாள் படைநாள் கடிநாள் ஒன்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்
(பெருங்.இலா.)

நெல்லையும் நெற்கதிரையும் புனல் கவர்ந்து கொண்டதைத் துடி மூலம் (ஒரு வகைப்பறை) மற்றவர்களுக்கு அறிவித்ததைப் பரிபாடல் (7) கூறுகிறது.

நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்கு
பறையறைந்து செல்லற் கெனா இறை
(கலி.குறி.)

என்ற பாடல் வரி நிறை அழிந்த யானை தெருவில் வரும் போது அதன் வருகையைப் பறையறைந்து தெரிவித்த செய்தியைப் புலப்படுத்துகிறது. முரசு அறைதல் எவ்வாறு என்பதை மணிமேகலை விவரிக்கிறது. அது வருமாறு:

வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி
ஏற்றுரி போர்த்த இடியுற முழக்கின்
கூற்றுக்கண் விளிக்கும் குருதி வேட்கை
முரசுகடிப் படூஉம் முதுகுடிப் பிறந்தோன்
திருவிழை மூதூர் வாழ்கென்று ஏத்தி
வானம் மும்மாரி பொழிக மன்னவன்
கோள்நிலை திரியாக் கோலோன் ஆகுக
(மேகலை.விழாவ. 27-31)

வச்சிரக் கோட்டத்தில் உள்ள முரசு யானைப் பிடரியின் மேல் ஏற்றப்படுகிறது. கூற்றையும் விளிப்பது போன்ற இடிமுழக்கம் உடையது அப்பறை. அப்பறையை முதுகுடியில் பிறந்தோனாகிய வள்ளுவ முதுமகன் ஒலிக்கச் செய்கிறான். செல்வம் மிக்கு விளங்கும் மூதூரை வாழ்த்துகிறான். வானம் மும்மாரி பெய்க என்றும் மன்னவன் மழைக்கோள் நிலை திரியாதவாறு செங்கோலன் ஆகுக என்றும் வாழ்த்துகிறான். இவ்வாறாக முரசு அறைந்து செய்தி அறிவிக்கப்படுகிறது.

செய்திகளை அனுப்பப் புறாக்களைப் பயன்படுத்தியதையும் அறியமுடிகிறது. செய்திகளைக் கல்வெட்டிலும், செப்பேட்டிலும் ஓலைச்சுவடிகளிலும் எழுதி வைப்பது மரபாக இருந்துள்ளது.

தமிழகத்தில் புழக்கத்தில் இருந்த ஓலைச் சுவடிகள், செய்தித் தொடர்பில் குறிப்பிடத்தக்கவை. இலக்கியங்கள், இலக்கணங்கள், சோதிடம், கலைகள், ஆவணங்கள் முதலியவற்றை அடுத்த தலைமுறைக்கு வழங்கி வந்த பெருமை ஓலைச்சுவடிகளுக்கு உண்டு. ஓலைச்சுவடிகள் பற்றி அறிஞர்கள் கூறுவது வருமாறு:

பத்ரம் என்னும் வடமொழிச் சொல்லுக்கு "இலை" என்பது பொருள். பண்டைக் காலத்தில் காகிதம் கண்டு பிடிப்பதற்கு முன்பு எழுதுவதற்குப் பயன்பட்ட பொருள் பனைமரத்தின் இலை. பனையின் இலையையும் அந்தத் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற மரங்களின் இலைகளையும் "ஓலை" என்று அழைக்கிறோம். பனை ஓலையிலிருந்து கிழித்து எடுக்கப்பெற்ற ஏடுதான் எழுதும் பொருளாகப் பயன்பட்டது. மன்னர்கள் சில சமயங்களில்

சிறிய சதுரத் திரைச் சீலையிலும் தூரிகை கொண்டு கடிதங்களைத் தீட்டிச் செய்திகளை அனுப்புவார்கள். ஆனால் அவற்றையும் ஓலை என்றே அழைத்தனர். இதையே ஏடு என்றும் சொல்வது உண்டு. பழைய இலக்கியங்கள், பத்திரங்கள், குறிப்புகள், கணக்குகள் அனைத்துமே ஏட்டில் எழுப்பட்டிருந்தன. இவற்றை ஏடு என்றே குறித்தனர். இதன் காரணமாகவே இன்றைய நூல்களையும் பருவ இதழ்களையும் கூட ஏடுகள் என்றே குறிப்பிடுகிறார்கள்.

'பத்ர'த்திலிருந்து 'பத்ரிகா' என்னும் வடமொழிச் சொல் உருவானது. அதையே நாம் 'பத்திரிகை' என்று தமிழ்ப்படுத்திக் கொண்டோம். இப்பொழுது 'பத்திரிகை' எனும் சொல்லைப் பலரும் ஒதுக்கிவிட்டு நாளிதழ், நாளேடு, வாரஇதழ், வாரயேடு என்று குறிப்பிடுகிறார்கள். இதழ்கள் என்றாலும் ஏடு என்றாலும் ஒன்றே (மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு. 1987).

இன்று நிலம், வீடு முதலியவற்றை ஆவணப்படுத்தும் முறைக்குப் பத்திரம் எழுதுதல் என்று பெயர். அரசு பத்திரத்தில் நிலம் வீடு முதலியவற்றின் விவரங்களை எழுதிப் பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்வது முறை. இது முற்காலத்தில் பத்ரமாகிய ஓலைகளில் எழுதப்பட்டது. சுந்தரரை ஆட்கொண்ட இறைவன் ஓலை ஆவணத்தைக் காட்டியது இங்குச் சுட்டத்தக்கது. சுந்தரரின் முன்னோர் தம் குலத்தார் அடிமைப்பட்ட விவரத்தை ஓலையிலேயே எழுதி அளித்திருந்தார் என்று பெரியபுராணம் விவரிக்கும்.

ஆதிகாலத்தில் திருமணம் முதலியவற்றை ஓலையில் எழுதிதான் உறவினர்களுக்குத் தெரியப்படுத்தினர். ஓலை எழுதுதலை 'முகூர்த்த ஓலை' எழுதுதல் என்ற சடங்குவழிச் செய்துள்ளனர். பெண் கொடுப்போர் எடுப்போர் இடையே இந்த ஓலையே ஆவணமாகக் கருதப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இன்றும் திருமண அழைப்பு மடலைத் 'திருமண அழைப்போலை' என்று அழைப்பதின் வழி உணரமுடியும். இதே போன்று இறப்பு குறித்தும் ஓலை அனுப்புவது உண்டு. நாட்டுப்புற வழக்காற்றில் ஓலை வந்துள்ளது என்றாலே மரணச் செய்தி வந்துள்ளது என்றுதான் பொருள். இறந்தவர் யார்? அவர் யார் யாருக்கு என்னென்ன உறவுமுறை? எப்பொழுது இறந்தார்

ஆகிய விவரங்கள் அந்த ஓலையில் குறிக்கப்பட்டிருக்கும். இவ்விவரங்களை எந்தெந்த ஊரைச் சேர்ந்த யார் யார் மகன் அல்லது உறவுகள் அறிய வேண்டும் என்ற செய்தியும் இச்செய்தியை அனுப்புவது யார் என்ற செய்தியும் இந்த ஓலையில் இடம் பெற்றிருக்கும். பிற்காலத்தில் சில இடங்களில் ஓலை என்ற சொல்லைத் திருமண அழைப்பிதழ் முதலியவற்றில் பயன்படுத்துவதைத் தவிர்த்தனர்.

ஓலையைப் போன்றே அண்மையில் உள்ளவர்க்குத் தகவல் தரச் சில வகை ஒலிகளை எழுப்புவது உண்டு. பறை அடித்து எழுப்பப்படும் ஒலியே சில தகவல்களைத் தந்துவிடும். மரணத்திற்கான ஒலித்தல் முறை வேறு; வழிபாட்டிற்கான ஒலித்தல் முறை வேறு. ஒலித்தலின் சந்தம் கொண்டே அங்கு நடைபெறும் நிகழ்ச்சியை அறியமுடியும். இதேபோல் கிராமங்களில் நிலவும் 'குலவை இடுதல்' முறையைச் சுட்டலாம். பெண்கள் குழுவாகச் சேர்ந்து ஒலியெழுப்புதலைக் குலவை இடுதல் என்பர். இந்த ஒலியின் மூலமே எந்த இடத்தில் என்ன நிகழ்ச்சி நடந்துள்ளது என்பதை அறியமுடியும்.

செய்திகளைத் திரட்டுவதும் பரப்புவதும் செய்தி இதழ்களின் தலையாய பணிகளாகும். செய்தி இதழ் அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல் என்ற முப்பெரும் பணிகளைப் புரிகிறது. அச்சுக்கலையின் தோற்றத்திற்கு முன்பும் அரசுச் செய்திகள் வாய்மொழி வழியாக அறிவிக்கப்பட்டன. பின்னர்க் கல்வெட்டுகளாயின; செப்பேடுகள் ஆயின. பின்னர்ச் செய்தி அறிக்கைகள் ஆயின. சூலியசு சீசர் கி.மு. 59-இல் 'ஆக்டா டையூரனா' (Acta-Diurana) என்ற செய்தி அறிக்கையை மக்கள் பார்வைக்கு வைத்தார். இவரே உலக அளவில் 'இதழியலின் தந்தை' எனவும் போற்றப்படுகிறார் (வாழ்வியல் களஞ்சியம் xi).

சீன நாட்டில் மிக நெடுங்காலமாகச் செய்திகளைக் கவிதைகள் ஆக்கித் தெருவில் பாடிச் செல்லும் மரபு இருந்துள்ளது. பின்னர் அங்கு மர அச்சு அமைப்பில் அச்சடித்து இதழை வெளியிடும் வழக்கம் வந்தது. இது சுமார் 2500 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. இவ்வாறு வந்த இதழ்களுள் குறிப்பிடத்தக்கவை "கிங்போ", "பீகிங்நியூஸ்", "பீகிங்கெஜட்" என்பனவாகும். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் சீன அரசாங்கம் "இத்சிங் பவே" எனும் இதழைத் தொடங்கியது. "பீகிங் நியூஸ்" கி.பி. 363-இல் தொடங்கப்பட்டது. மரப்பலகையில்

சீன எழுத்தைச் செதுக்கிப் பின்னர் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இது 1935வரை இடையறாது நடைபெற்றுள்ளது. இதன் 1500 ஆம் ஆண்டு விழா கி.பி. 1863-இல் கொண்டாடப்பட்டது. இதுதான் உலகின் மிகப் பழமையான இதழாகக் கருதப்படுகிறது.

பண்டைக் காலத்தில் ரோமானிய அரண்மனையிலிருந்து பல திசைகளில் இருந்த இராணுவ அதிகாரிகளுக்கு நாள் தோறும் செய்திகள் அனுப்பப்பட்டன. இதற்கு "ஆக்டோ டயூர்னா" (Acta Diurna) என்று பெயர். இத்தாலிய நாட்டில் தாள்களில் செய்திகளை எழுதித் தெருக்களின் முக்கிய இடங்களில் ஒட்டி வைப்பார்கள். இதனை அருகில் சென்று படிப்பதற்குக் "கெஜட்டா" எனும் சிறு இத்தாலிய நாணயம் தர வேண்டும். இதிலிருந்ததான் 'கெஜட்' (Gazette) என்ற பெயர் ஏற்பட்டது. பழங்கால இதழ்கள் எல்லாம் 'கெஜட்' என்ற பின் அடைமொழியைப் பெரும்பாலும் பெற்றிருக்கும் (மா.சு. சம்பந்தன். 1987). சீனாவில் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் செய்தி ஏடு அரசு சார்பில் தொடங்கப்பட்டது. வெனிசு அரசு கி.பி. 1566 இல் போர்ச் செய்திகளை மக்களுக்கு அறிவிக்க அறிக்கைகளைத் தயாரித்து அளித்தது. இவை அனைத்தும் செய்தி இதழ் வரலாற்றின் முன்னோடிகளாக அமைகின்றன எனலாம்.

உலக நாடுகளில் செய்தி இதழ் தோன்றியதின் விவரம் வருமாறு :

செருமனியில்	கி.பி. 1609
இலண்டனில்	கி.பி. 1621
பிரான்சில்	கி.பி. 1631
சுவீடனில்	கி.பி. 1645
அமெரிக்காவில்	கி.பி. 1690
இந்தியாவில்	கி.பி. 1780

செருமனியில் 1609 இல் இஸ் டராஸ்பெர்க் நகரில் தோன்றிய 'திரிலேஷன்' (The Relation) என்ற நாளிதழ்தான் முதல் நாளிதழாகக் கொள்ளப்படுகிறது. இது தனிப்பட்ட ஒருவரால் நவீன முறையில் அச்சிட்டு வெளியிடப்பட்ட முதல் செய்தித் தாளாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் 29-09-1690 இல் பெஞ்சுமின் ஆரிஸ் (Benjamin Harris) என்பவர் அமெரிக்க முதல் நாளிதழை வெளியிட்டார். "பொது நிகழ்ச்சிகள்" (The Public

Occurences) என்பது அந்நாளிதழின் பெயர். இவ்விதழ் அரசாங்கத்தை மிகக் கடுமையாகத் தாக்கி எழுதியதால் அது வெளியான முதல் நாளே அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது.

இந்தியாவில் செய்தித்தாள்களின் வரலாறு கி.பி. 18 ஆம் நூற்றாண்டிலிருந்துதான் தொடங்குகிறது. முதன்முதலில் கி.பி. 1780 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆம் நாள் முழுமை பெற்ற அச்சு வடிவத்தால் ஆன செய்தித்தாள் கல்கத்தாவில் இருந்து வெளிவந்தது. அச்சுக்கலையில் ஆர்வம் கொண்டிருந்த ஆங்கில நாட்டு வணிகரான சேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி (James Augustus Hickey) என்பவர் இந்த இதழை வெயிட்டார். 12" x 8" என்ற அளவினை உடையது அவ்விதழ். "பெங்கால் கெசட்" (Bengal Gazatte) அல்லது "கல்கத்தா செனரல் அட்வர்டைசர்" (Calcutta General Advertizer) என்பது அதன் பெயர். இதுவே இந்தியாவின் முதல் செய்தித்தாள் என்ற பெருமையைப் பெறுகிறது. இதழ்களின் உரிமைக்காகத் தமது அரசாங்கத்தை எதிர்த்துப் போராடிய ஆங்கில வணிகர் இவரே. இந்த இதழில் இங்கிலாந்தில் வெளிவந்த செய்திகளும் விளம்பரங்களுமே இடம் பெற்றிருந்தன. இந்திய மக்களுக்குத் தேவையான செய்திகள் இடம் பெறவில்லை. ஆங்கில அரசு நடத்திய முறையற்ற செயல்களை இந்த இதழ் கண்டித்தது. அதனால் அரசின் வெறுப்பிற்கும் ஆளாகியது. அஞ்சல் வழியாக அனுப்பும் சிறப்பு உரிமையும் நீக்கப்பட்டது. சிறைத் தண்டனையும் ஒறுப்புத் தொகையும் விதிக்கப்பட்டன. இருப்பினும் இவர் எதற்கும் அஞ்சாமல் சிறைக்குள் இருந்தே இதழை வெளியிட்டார். ஆனால் 1782 ஆம் ஆண்டு இவர்தம் அச்சுப் பொறிகளும் பிறவும் பறிமுதல் செய்யப்பட்டன. எனவே 'பெங்கால் கெசட்' இதழ் இதுமுதல் நின்றுபோனது. முதன் முதலில் தோன்றிய இவ்விதழ் வாரஇதழாகவே வெளிவந்து கொண்டிருந்தது (வாழ்வியல் களஞ்சியம் xi).

பெங்கால் கெசட் இதழைத் தொடர்ந்து செய்தித்தாள்கள் வெளிவரத் தொடங்கின. கல்கத்தாவில் "இந்தியா கெசட்டு" (India Gazette) என்ற இதழ் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1784 ஆம் ஆண்டு "கல்கத்தா கெசட்டு அண்டு ஓரியண்டல் அட்வர்டைசர்" (Calcutta Gazette and Oriental Advertizer) என்ற செய்தி இதழ் வெளிவந்தது. இதனை அரசாங்கமே வெளியிட்டது. 1785 இல் "பெங்கால் ஜேர்னல்" (Bengal Journal) என்ற இதழ் தாமஸ் ஜோன்ஸ் என்ற வணிகரால் தொடங்கப்பட்டது.

முதலில் தோன்றிய இதழ்கள் அனைத்தும் கல்கத்தாவில் தோன்றியமை குறிக்கத்தக்கது. ஆங்கிலேயர் கல்கத்தாவைத் தம் தலைமையிடமாகக் கொண்டிருந்தமையே இதற்குக் காரணம் எனலாம்.

இந்தியப் பகுதிகளில் முக்கிய நகரங்களான கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய பகுதிகளில்தாம் தொடக்கத்தில் இதழ்கள் வேகமான வளர்ச்சியைப் பெற்றன. "பாம்பே ஏரால்டு" (Bombay Herald) என்ற வார இதழ் கி.பி. 1789 இல் பம்பாயில் தோன்றியது. லூக் ஆஸ்பெர்னர் (Luke Osberner) என்பவர் 1790 இல் "பாம்பே கூரியர்" (Bombay Courier) என்ற இதழைத் தொடங்கி நடத்தினார். இவ்விதழ் கி.பி. 1838 இல் பாம்பே டைம்ஸ் (Bombay Times) என்ற பெயர் மாற்றத்தைப் பெற்றது. இப்பொழுது "டைம்ஸ் ஆப் இந்தியா" (Times of India) என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருக்கிறது (வாழ்வியல் களஞ்சியம் xi).

மதராஸ் கூரியர் (Madras Courier) என்ற இதழ் கி.பி. 1785 இல் சென்னையில் தொடங்கப்பட்டது. ரிச்சர்டு சான்ஸ்டன் (Richard Johnston) என்பவர் இதனைத் தொடங்கினார். இதுவே சென்னையில் தோன்றிய முதல் செய்தித்தாள் ஆகும். நான்கு பக்கங்களைக் கொண்டிருந்த இவ்வார இதழில் இங்கிலாந்து செய்திகளே பெரிதும் இடம் பெற்றிருந்தன. இது தொடக்கக் காலத்தில் அரசின் ஆதரவுடனே வெளிவந்தது. பின்பு இதுவும் அரசின் வெறுப்பினைத் தேடிக் கொண்டது. தேசிய விடுதலை இயக்கத்தின் காரணமாக இந்து பத்திரிகை 1878 இல் தொடங்கப்பட்டது. இந்து இதழின் தோற்றம் குறிப்பிடத்தக்க ஒன்றாக ஆராய்ச்சியாளர்களால் சுட்டப்படுகின்றது (மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு 1987).

இந்திய வட்டார மொழிகளில் இதழ்களின் தோற்றமும் ஏறத்தாழ இதே காலக் கட்டத்தில்தான் நிகழ்ந்துள்ளது. மொழி வாரியாக முதல் இதழ்களின் பெயர்களும் வெளிவந்த ஆண்டுகளும் வருமாறு :

வங்கமொழி	1818	சமாச்சார் தர்பன்
குஜராத்திமொழி	1822	மும்பாய்னா சமாச்சார்
மராத்திமொழி	1832	பம்பாய் தர்பன்
உருதுமொழி	1833	ஜுப்தத் அல் அக்பர்
இந்திமொழி	1826	ஊதந்த் மார்டண்டு

பஞ்சாபிமொழி	1867	அக்பர் தர்பார் சாகிப்
அஸ்ஸாமி மொழி	1846	அருணோதயா
ஓரியா மொழி	1925	ஆஷா
தெலுங்கு மொழி	1835	சத்தியதூதன்
கன்னடமொழி	1812	கன்னட சமாச்சார்
மலையாள மொழி	--	விஞ்ஞான நிக்ஷேடம்
தமிழ்மொழி	1802	சிலோன் கெஜட்

இந்திய மொழிகளிலேயே தமிழ் மொழியில்தான் முதன்முதலில் இதழ் (1802) வெளிவந்துள்ளது. இந்த இதழ் இலங்கையிலிருந்து வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது (இதழ்ப்பட்டியல் : சு. சக்திவேல் 1997)

சிலோன் கெஜட் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழிப் பத்திரிகையாக வெளிவந்தது. அதாவது ஒவ்வொரு கட்டுரை அல்லது செய்தியும் மூன்று மொழிகளிலும் வெளியாகும். சென்னையில் தொடங்கப்பெற்ற முதல் தமிழ் இதழ் "தமிழ் மெகஸின்" (Tamil Magazine) என்பது ஆகும். இது 1831 இல் தொடங்கப்பட்டது. கிறித்தவ மதத்தைத் தமிழ் இந்து மக்களிடையே பரப்பும் நோக்கமே இதன் வெளியீட்டிற்குக் காரணம். 1833-இல் சென்னையிலிருந்து ராஜவிருத்தி போதினி என்னும் இதழ் வெளியானது. ஆங்கில அரச வம்சத்தை ஆதரிப்பதும் கிறித்தவ மதத்தைப் பரப்புவதும் இதன் நோக்கமாக இருந்தது.

1840இல்	சுவிசேஷ பிரபாவ விளக்கம் (மாத இதழ்)
	பாலதீபிகை (காலாண்டு இதழ்)
1841இல்	ஜன சிநேகன்
1847இல்	திராவிட தீபிகை (மாத இதழ்)
1849இல்	நற்போதகம் (மாத இதழ்)
1855இல்	தினவர்த்தமானி (வார இதழ்)

மேலே கூறப்பெற்ற இதழ்கள் யாவும் கிறித்தவ மதத்தைப் பரப்புவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தன. இது பற்றி அறிஞர் கூறுவது வருமாறு:

" 1865 வரையில் தமிழ்ப் பத்திரிகைகள் என்பவை கிறித்தவ மதத்தைப் பரப்பும் பிரச்சாரத்தையே நோக்கமாகக் கொண்டிருந்தன. பெரும்பாலும் மாத இதழ்களாக

இருந்ததால் நாட்டு நடப்புச் செய்திகள் அதிகம் இடம் பெறவில்லை. அப்படிச் செய்திகளாகச் சில வெளியிடப்பட்டாலும் சமயச்சார்பு நிகழ்ச்சிகள் பற்றியதாகவே இருக்கும். மற்றபடி மதபோதனைக் கட்டுரைகள், பாடல்கள், ஆங்கில அரசை ஆதரிக்கும் விஷயங்கள் அடங்கி இருக்கும் (மணிமேகலைப் பிரசுரஆசிரியர் குழு 1987).

1866 இல் முதன் முதலாக இந்துமதச் சார்புடைய கலாவர்த்தினி என்னும் மாத இதழ் சென்னையிலிருந்து தொடங்கப்பட்டது.

1870இல்	ஜநவிநோதினி
1877இல்	சித்தாந்த சங்கிரகம்
1883இல்	சுகுண போதினி
1886இல்	பிரம்ம வித்தியா பத்திரிகை
1890இல்	நாகை நீலலோசினி
1898இல்	பிரபஞ்ச மித்திரன்

முதலிய இந்துமத ஆதரவு இதழ்கள் பெருவீச்சில் வெளிவரத் தொடங்கின. இந்த இதழ்கள் பற்றி அறிஞர்கள் கூறுவது வருமாறு:

இதில் இந்துமத சித்தாந்தம், விரத மகிமைகள், புராணம், தர்க்கம், தமிழ் வைத்திய சாஸ்திரம், வான சாஸ்திரம் சங்கப்புலவர் வரலாறு போன்ற பல செய்திகள் இடம் பெற்றிருந்தன. இத்தனை ஆண்டுகளாகக் கிறித்தவ மதத்தினர் செய்து வந்த பிரச்சாரத்திற்கு ஈடுசெய்ய முயல்வது போல அளவற்ற ஆர்வம் தென்பட்டது. . . முதலில் கிறித்தவ மத எதிர்ப்புப் பிரச்சாரத்திற்காகத் தொடங்கிய போதிலும் நாளடைவில் வெவ்வேறு நோக்கங்களுக்காகப் பத்திரிகைகள் தோன்றின (மேலது).

ஆக ஒட்டு மொத்தமாக 19ஆம் நூற்றாண்டின் தமிழ் இதழ்களின் போக்கினைக் காணுமிடத்து அது சமயச்சார்பு உடையதாகவே விளங்கி உள்ளதை அறியமுடிகின்றது. என்றாலும் அரசியல், நிர்வாகம் தொடர்பான செய்திகளைத் தெரிவிக்கும் முறையும் தொடக்கத்தில் இருந்ததை இதழ்களின் பட்டியல் ஒருவாறு தெரிவிக்கிறது.

இயல் இரண்டு

புதுச்சேரி இதழ்களின் வரலாறு : "இந்தியா" இதழின் முன்னும் பின்னும்

பகுதி ஒன்று

புதுச்சேரி மாநிலம் பிரெஞ்சியரின் வருகைக்குப் பின்னர்த் தனித்துவம் பெற்ற பகுதியாக மாறத் தொடங்கியது. இந்திய அரசின் நான்கு மாநிலங்களில் புதுச்சேரியின் நிலப்பரப்பு பரந்து காணப்பட்டது. தமிழக நிலப்பரப்போடு தொடர்புடைய புதுச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதிகள் புதுச்சேரி மாநிலத்தின் பெரும் பகுதி நிலப்பரப்பினை உடையன. மாகே கேரள நிலப்பரப்போடும், ஏனம் ஆந்திர நிலப்பரப்போடும், சந்திரநாகூர் வங்காள நிலப்பரப்போடும் தொடர்புடையன. இவற்றுள் சந்திரநாகூர் வங்காளத்துடன் இணைக்கப்பட்டு விட்டது. எஞ்சிய பகுதிகள் புதுச்சேரி மாநிலமாக அமைந்துள்ளன.

புதுச்சேரிப் பகுதி பழமைச் சிறப்புடையது என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. சங்க காலப் புலவர்களுள் ஒருவரான வீரை வெளியனார், புதுச்சேரியின் வீராம்பட்டினத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார். இந்த வீராம்பட்டினம் புகழ்பெற்ற அகழ்வாராய்ச்சிப் பகுதியாகிய அரிக்கமேட்டின் ஒருபகுதி என்பது குறிப்பிடத்தக்கது. பல்லவர் காலத்தில் புதுச்சேரியின் ஒருபகுதியாகிய பாகூர் புகழ்பெற்று விளங்கியது. இங்குதான் வடமொழிக் கல்லூரி ஒன்று செயல்பட்டு வந்துள்ளது.

புதுச்சேரிப் பகுதியின் வரலாற்றை உலக ஆய்வாளர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தவர்களில் பேராசிரியர் ழூவோதுய்ப்ராய், போஷோ பாதிரியார், மார்ட்டின் வீலர், கஸால், ஜூலியன் தெலாஃபோன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர் (சு. தில்லைவனம் 1980). இவர்களில் துய்ப்ராயும், போஷோ

பாதிரியாரும் 1937இல் புதுச்சேரிக்குத் தெற்கே உள்ள 'அரிக்கமேடு' எனும் இடத்தில் அகழ்வாய்வைத் தொடங்கினர். இதன் பயனாக அந்தஇடம் கி.பி. 50 முதல் கி.பி. 200 வரையில் யவன வணிகர்களின் இருப்பிடமாகத் திகழ்ந்தது என்ற முடிவிற்கு வந்தனர். இந்த ஆய்வை அடிப்படையாகக் கொண்டு மார்ட்டின் வீலர் 1944இல் மேலும் ஆய்வைத் தொடர்ந்து நிகழ்த்தினார். இவ்விடத்தில் கண்டு எடுக்கப்பட்ட வண்ணமணிகள், வளையல்கள், நாணயங்கள் எழுத்துகள் பொறிக்கப்பட்ட ஓடுகள், முதுமக்கள் தாழிகள் எனப் பல தொல்பொருட் சின்னங்களைக் கண்டெடுத்துத் துய்ப்ராயின் கருத்தினை உறுதி செய்தார். அரிக்க மேட்டில் கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளில் ஆந்திராவை ஆண்ட சாதவாகனர்களின் நாணயங்கள் சிலவும் கிடைத்துள்ளன. கி.பி. 3ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் கொற்கைப் பாண்டியர் நாணயம் ஒன்றும் கிடைத்துள்ளது (சு. தில்லைவனம் 1980).

புதுச்சேரிப் பகுதிகள் பல்லவர் ஆட்சியிலும் பிற்காலச் சோழர் ஆட்சியிலும் விஜயநகர ஆட்சியிலும் இசுலாமியர் ஆட்சியிலும் மாறிமாறி ஆளுகைக்கு உட்பட்டிருந்ததை வரலாறு மெய்ப்பிக்கிறது (சு. தில்லைவனம் 1980). பிரெஞ்சியரின் வருகை வரை இந்நிலையே நீடித்துள்ளது. கி.பி. 1600 இல் ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் குழுவும் கி.பி. 1602 இல் டச்சு வணிகக் குழுவும் அமைக்கப்பட்டன. ஐரோப்பாவிலிருந்து இறுதியாக இந்தியாவிற்கு வந்த பிரெஞ்சியரின் வணிகக் கழகம் கி.பி. 1664இல் அமைக்கப்பட்டது. பிரெஞ்சியர்கள் புதுச்சேரியில் தங்கள் வணிகக் கழகத்தை அமைக்கும் முன்பு அது ஒரு சிற்றூராக ஐதராபாத் நிசாமின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. கி.பி. 1674 முதல் 1707 வரை பிரெஞ்சிந்தியாவின் முதல்கவர்னராக இருந்தவர் பிரான்சுவாமர்த்தேன் ஆவார். இவர் பீஜப்பூர் சுல்தானிடம் இருந்து புதுச்சேரி, பாகூர், வளவனூர் ஆகிய பகுதிகளைக் கி.பி. 1673 இல் உள் நாட்டு வணிகத் தொடர்பிற்காகப் பெற்றிருந்தார். சிவாஜியின் சூரத் கொள்ளையும் பம்பாய் முற்றுகையும் ஆங்கிலேயர்க்கும் பிரெஞ்சியர்க்கும் அச்சத்தை விளைவித்ததால் வணிகநிலைகள் கோட்டைகளாக மாறின. தமிழகச் சிற்றூர்களைச் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கொண்டும் விலைக்கு வாங்கிக் கொண்டும் வந்த பிரெஞ்சியர் அங்கெல்லாம் தம் ஆட்சியைச் செலுத்தத் தொடங்கினர். ஆனந்தரங்கப் பிள்ளை

தம் காலத்தில் நாற்பது சிற்றூர்கள் பிரெஞ்சியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 1693இல் புதுச்சேரியை டச்சுக்காரர்கள் கைப்பற்றினர். அவர்கள் கி.பி. 1698 வரை புதுச்சேரியை ஆண்டனர். பின்பு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் புதுச்சேரி பிரெஞ்சியருக்குச் சொந்தமானது. கி.பி. 1725இல் மாகே பிரெஞ்சியர் வசமானது. கி.பி. 1739இல் காரைக்கால் பகுதியைப் பிரெஞ்சியர் தஞ்சை மராட்டிய மன்னரிடம் இருந்து பெற்றனர். பின்பு ஏனம் பகுதியும் அவர்தம் வசம் ஆயிற்று. பிரான்சுவா மர்த்தேன், எபேர், துய்விலியே, லெனுவார், துய்மா, தியூப்ளே முதலியோர் புதுச்சேரிக் கவர்னராயிருந்து ஆங்கிலேயரை விடச் சிறப்பான முறையில் ஆட்சி செய்ததாக அறிஞர்கள் கூறி உள்ளனர். தியூப்ளேவிற்குப் பின்வந்த புதுச்சேரிக் கவர்னர்கள் திறமையற்றுத் தமக்குள் சச்சரவுகள் உள்ளவர்களாக இருந்ததாலும் தாய் நாடான பிரான்சு நாட்டிலிருந்து உற்றநேரத்தில், உதவி கிட்டாமையினாலும் பிரெஞ்சியர் தளர்ச்சி அடையத் தொடங்கினர். 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மூன்றுமுறை பிரெஞ்சு ஆங்கிலேயப் போர்கள் நடைபெற்றன. 1761, 1778, 1793 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற இப்போர்களின் விளைவாகப் பிரெஞ்சியரின் ஆட்சிப்பரப்பு மட்டுமின்றி ஆளுகையும் குன்றியது. கி.பி. 1947 இல் இந்தியா சுதந்திரம் அடைந்தது. இதனை ஒட்டிப் பிரெஞ்சிந்தியப் பகுதிகளிலும் சுதந்திர வேட்கை கால்கொண்டது. இதன் விளைவாகக் கி.பி. 1948 சூன் மாதத்தில் பிரெஞ்சு - இந்திய அரசு உடன்படிக்கை ஒன்று கையெழுத்தானது. இதன்படி பிரெஞ்சிந்தியக் குடிமக்கள் தங்கள் எதிர்கால அரசியல் நிலையைத் தாங்களே முடிவுசெய்யும் உரிமை அளிக்கப்பட்டது. கி.பி. 1949இல் பிரெஞ்சிந்தியப் பிரதிநிதிகள் பிரதமர் நேருவைச் சந்தித்து இந்தியாவிலுள்ள பிரெஞ்சுப் பகுதிகளை இணைத்துத் தனி மாநிலமாக உருவாக்குமாறு கேட்டுக் கொண்டனர். கி.பி. 1954 இல் பிரெஞ்சிந்தியக் கவுன்சிலர்களும் கொம்யூன்களின் மேயர்களும் கலந்து கொண்ட வாக்கு எடுப்பின் மூலம் அக்டோபர் 13 ஆம் தேதி புதுச்சேரி இந்தியாவோடு இணைக்கப்பெற்றுத் தனி மாநில உரிமையைப் பெற்றது. 1954 நவம்பர் 1 முதல் புதுச்சேரி செயல் முறையில் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது (செய்தித் தொகுப்பு : சு. தில்லைவனம் 1980).

பகுதி இரண்டு

புதுச்சேரிப் பகுதியில் பிரெஞ்சியர் வருகை பல்வேறு மாற்றங்களைத் தோற்றுவித்தது. அரசியல், சமயம், சமுதாயம், கல்வி, குடும்பம் போன்ற சமூக நிறுவனங்களில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்த மாற்றங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கலை இலக்கியங்களிலும் இருபதாம் நூற்றாண்டின் கலை இலக்கியங்களிலும் எதிரொலித்தன. பிரெஞ்சு மொழி, பண்பாடு, சமயம் ஆகியவற்றின் தாக்கம் தமிழர் இடையேயும் தமிழ்மொழி இடையேயும் மறுமலர்ச்சியை உண்டாக்கியது. குறிப்பாக ஐரோப்பியரின் வருகை தமிழரிடையே கல்வி எனும் சமூக நிறுவனத்தில் பெரும் புரட்சியையே செய்து முடித்தது. அரசாங்க ஊழியம் கருதியும் பிறவற்றிற்காகவும் கல்வி கற்ற இடைத்தர வர்க்கம் தமிழ்நாட்டில் உருவாயிற்று. இந்த நிலை புதுச்சேரியிலும் எதிரொலித்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலக் கட்டமும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலக்கட்டமும் மிகவும் முதன்மை வாய்ந்த காலக் கட்டங்கள் ஆகும்.

1. இந்திய அரசியலில் தமிழக அரசியலில் பெரும் மாற்றங்கள் விளைந்தன. குறிப்பாக விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற இந்தியத் தேசிய காங்கிரசின் உதயமும் அதனால் ஏற்பட்ட விடுதலை உணர்வும் குறிப்பிடத்தக்கவை.

2. அந்நிய மொழி, பண்பாடு, அரசியல் எதிர்ப்பு என்பது கனன்று எழுந்ததும் இக்காலத்தில்தான்.

3. ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர்ச் சமய நிலையில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. ஏற்கெனவே இசுலாம் சமயத்தைப் பலர் தழுவி இருந்தனர். ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர்க் கிறித்துவ மதமாற்றம் பெருவீச்சில் நிகழ்ந்தது. கிறித்துவ சமயத்தின், பண்பாட்டின் பெருமைகள் உயர்வுகள் ஆகியவற்றை முன்னிறுத்தும் இதழ்களும் நூல்களும் வெளிவரத் தொடங்கின.

4. இதற்கு மறுதலையாக வைதீக இந்துசமயத்தை முன்னிறுத்தும் போக்கு தோன்றியது. இதனைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு இதழ்கள் குறிப்பாகத்

தமிழ் இதழ்கள் வெளிப்படுத்துகின்றன. இந்துசமயம், புராணம், வாழ்க்கை, பண்பாடு பற்றிய உயர்வுகளும் பெருமைகளும் வெளியிடப்பட்டன.

5. அயல் சமயம், பண்பாடு, அரசியல் ஆகியவற்றிற்கு மாற்றாகச் சுதேசிய சமயம், பண்பாடு, அரசியல் ஆகியவற்றைக் கட்டமைக்க வேண்டி இருந்தது. கண்ணுக்குப் புலனாகாத இந்தப் போராட்டத்தில் சுதேசிய சமயம், பண்பாடு, அரசியல் ஆகியவற்றில் புதுமை செய்ய வேண்டிய தேவையும் எழுந்தது.

6. இந்தப் "புதுமை செய்தல்" தமிழரின் கலை இலக்கியங்களிலும் எதிரொலித்தது. இந்துப் புதுமை செய்யும் காலக் கட்டத்தில்தான் பாரதி புதுச்சேரிக்கு வருகை தருகிறார். கூடவே தமிழ் இலக்கிய வரலாற்றின் புதுமையையும் கொண்டு வருகிறார்.

புதுச்சேரித் தமிழ் இதழ்களின் போக்குகளை மேலோட்டமான முறையில் பின்வருமாறு காட்சிப் படுத்த முடியும்.





இந்தப் பின்னணியோடு புதுச்சேரி இதழ்களின் வரலாற்றை ஆராய நுழையலாம். புதுச்சேரியில் பாரதியால் நிகழ்த்தப் பெற்ற இந்தியா இதழை மையமாக வைத்து அதற்கு முன்பும் பின்பும் வெளிவந்த புதுச்சேரி மாநில இதழ்கள் இங்குப் பட்டியலிடப் படுகின்றன. ஆய்வாளர்களுக்குத் தரவுகளாக இவை பயன்படும் என்ற நிலையில் கட்டுரையின் மையமாகவே இப்பட்டியல் இடம்பெறுகிறது. இப்பட்டியலைப் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன நூலகர் கு. இராசேந்திரன் உருவாக்கியுள்ளார். முதன் முறையாக முழுமை பெற்ற பட்டியலாக உருவாக்கிய பட்டியல் வருமாறு.

புதுச்சேரி "இந்தியா" இதழுக்கு முன்னர்ப் புதுச்சேரி இதழ்கள்

1823 - பிரஞ்சிந்தியரசு நிர்வாக ஆவணம் (முதல்வார இதழ்)

1825 - வித்யா விநோதன்

1828 - பிரஞ்சிந்திய நிர்வாகச் சிற்றிதழ் (தமிழகத்தின் 4 ஆவது தமிழ் இதழ்)

1838 - இந்திய ஞாயிறு (வாரம்) முதல் தமிழ் இதழ்

1838 - புதுவை நடுநிலை (வாரம்) பிரஞ்சு-தமிழ் மொழி

1842 - Annuaire des etablissements francais dan I' India

1849 - L'Impartial de Pondichery (மாத மிருமுறை)

1850 - பிரெஞ்சு இந்தியச் சிற்றிதழ்

1850 - மொனிதேர் அபிசியல் (Le Moniteur Officiel) பிரெஞ்சு, தமிழ்

1856 - அருள்மேரி (வாரம்)

1868 - காரை ஞானபானு

1872 - Le Courrier de I'Inde Francaise

1879 - Le progres de karaikal

1879 - காரைக்கால் முன்னேற்றம் (வாரம்) முதல் அரசியல் இதழ்.

1880 - புதுவை நாகரிக வர்த்தமானி (வாரம்)

1881 - Le Temps de I'Inde Francaise

1881 - Le progress de I'Inde Francaise (காரைக்கால்)

1882 - சத்தியாபிமாணி (வாரம்) முதல் தமிழ் இதழ் (காரைக்கால்)

1882 - புதுவை நாகரிக வர்த்தமானி

1883 - Mezzo-Termine

1883 - Yananan conseil local

1883 - பிராஞ்சு இந்தியா (பிராஞ்சு இந்திய டைம்ஸ்) பிரஞ்சு-தமிழ் (வாரம்)

1883 - விகட பிரதாபன் (நகைச்சுவை இதழ்)

1883 - காரைக்கால் நகராட்சி - தமிழ் - பிரெஞ்சு

1883 - புதுவை முன்னேற்றம் (வாரம்) தமிழ் - பிரெஞ்சு

1883 - நடுநிலை (வாரம்) தமிழ் - பிரெஞ்சு

1883 - Le Progres (வாரம்) பிரெஞ்சு - தமிழ்

1884 - புதுவை நீதியபிமானி (மாதம்)

1884 - Kchattiriganou Palam - தமிழ்- (மாதமிருமுறை) காரைக்கால்.

1885 - Journal des Colonies francaises

1885 - Le Trait d' Union

1885 - புரோகிறோ பிரெஞ்சு-தமிழ் மொழி (வாரம்)

1886 - The Beaver - ஆங்கிலம்-சந்திரநாகூர்

1887 - புதுவை இந்து நேசன் (வாரம்)

1887 - புதுவை எதிரொளி (வாரம்)

1887 - The Dhumkatu- ஆங்கிலம்-பிரஞ்சு (வாரம்) சந்திரநாகூர்

1888 - இந்திய விகட வினோதன் (வாரம்) காரைக்கால்

1888 - முகமது சமாதானி (வாரம்) காரைக்கால்

1889 - India Gup and Gossip (இந்திய விகட விநோதன்) தமிழ் (மாத மிருமுறை) (காரைக்கால்)

1890 - The Surabhi Pataka (வாரம்) வங்காளம் சந்திரநாகூர்

1891 - L'Union Republicaine

1891 - Journal de I'Francaise

1891 - புதுவை குடியரசு (வாரம்)

1892 - பொந்திசேரியன் (Le Pondicherry) (வாரம்)

1893 - ஸ்ரீ கஜநரஞ்சனி

1893 - திராவிட மந்திரி (வாரம்) காரைக்கால்

1893 - சுவேதபத்மாஜனை

1893 - Tara Press (வங்காளம்) சந்திரநாகூர்

1893 - L'Inde Francaise

1894 - மெய்ஞ்ஞான பானு (மாதமிருமுறை) காரைக்கால்

1894 - Le Pondicherry

1895 - வித்தியா விநோதன் (மாதம்)

1895 - புதுவை இந்து (L'Hindu) (வாரம்)

1896 - Journal republicain de Pondichery

1897 - சுதந்திரன் (வாரம்)

1897 - செங்கதிரோன் - காரைக்கால்

1897 - வித்யாபிவிருத்தினி (மாதம்)

1898 - தியாகி (வாரம்)

1898 - Bangabandhu - வங்காளம்-பிரெஞ்சு (மாத மிருமுறை) (சந்திரநாகூர்)

1898 - Le Patriote

1900 - புதுவை நேசன்

1900 - Le Messager de I'Inde

1900 - புதுவை விநோதன்

1900 - புதுவை மித்ரன்

1901 - Union Hindoue (வாரம்)

1901 - Asie Francaise : bulletin

1904 - சுதேச வர்த்தமானி

1907 - சர்வ வியாபி (வாரம்) இன்று மாதம்

1908 - சூர்யோதயம்

1908 - இந்தியா

புதுச்சேரி "இந்தியா" இதழ்க்குப் பின்னர்ப் புதுச்சேரி இதழ்கள்

1909 - கர்மயோகின் (ஆங்கிலம்)

1909 - விஜயா

1909 - கர்மயோகி (தமிழ்)

1909 - தருமம்

1909 - ஆரோரே-தமிழ் (மாதமிருமுறை)

1910 - கத்தோலிக்க ஐக்கியம் (மாதம்)

1910 - The Pondi Mail (வாரம்)

1910 - புதுவைக் கலைமகள்

1910 - வசந்தா - காரைக்கால்

1913 - கற்பகம்

1913 - பிரஞ்சு நேசன் - தமிழ் (வாரம்)

1914 - ஆர்யா - ஆங்கிலம் (மாதம்)

1916 - Revue Historique de Inde Francaise. பின்பு Revue Historique. Rovue de-Historique என்று பெயர் மாற்றப்பட்டு வெளியாகிக்கொண்டிருக்கிறது.

1916 - சுகாபி விருத்தினி (பக்ஷத்திற் கொருமுறை)

1918 - தமிழ் மகவு

1919 - Journal Judiciaire de L'India Francaise

1922 - தேச சேவகன்

1922 - குடியரசு-தமிழ் (மாதமிருமுறை) காரைக்கால்

1923 - ஆத்மசக்தி (இனிய செந்தமிழ் மாத சஞ்சிகை)

1923 - Semeur de L'Inida Francaise (Revue Cathalique Mensuelle)

1923 - ஆசிரியன் - காரைக்கால்

1925 - Sri Soudjanarandjai பிரெஞ்சு-தமிழ் (வாரம்)

1925 - நியாயபிமானி-தமிழ் (மாத மிருமுறை) (காரைக்கால்)

1927 - சுகந்த வாசம் வீசும் சிறிய புஷ்பம் (மாதம்)

1928 - ஐவ்வஹருல் இஸ்லாம் (மாதம்)

1928 - தக்ஷ்பந்து-தமிழ் (மாத மிருமுறை)

1928 - Le Flambeau

1929 - ஜோதி (வாரம்)

1930 - புதுவை முரசு

1932 - பாரதம்-தமிழ் (மாத மிருமுறை)

1933 - டியூப்ளக்ஸ்-பிரஞ்சு-தமிழ் (மாத மிருமுறை)

1933 - Nagarik வங்காளம் (மாத மிருமுறை) சந்திரநாகூர்

1933 - வித்தகம்

1933 - Sevak (வங்காளம்)

1933 - Nava Sa அபாய வங்காளம் (மாத மிருமுறை) சந்திரநாகூர்

1934 - தாய்நாடு

1934 - சுதந்திரம் (மாதம்) இன்று வார பத்திரிக்கை

1935 - விதூஷகன்

1935 - ஞான போதினி

1935 - ஜன மித்திரன்
1935 - ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்
1937 - ரம்ஜான் மாத நோன்பின் பயன் (வாரம்)
1937 - தேசபாகரி-பிரஞ்சு-தமிழ்
1937 - பாரத மாதா-தமிழ் (சினிமா)
1937 - Prajasakti- வங்காளம் -சந்திரநாகூர்
1938 - மென்மலர்
1938 - சரஸ்வதி
1938 - எதிரொலி-தமிழ்
1938 - Le Semeur de Pondichery
1943 - Advent (ஆங்கிலம்)
1943 - Trait d'Union
1944 - பால்யன் (வாரம்) இவ்விதழ் பின்பு பாலியன் என்று பெயர் மாற்றப்பட்டது.
1944 - Journal of the Aurobindo Society
1944 - பிர்தௌஸ் (மாதம்) (காரைக்கால்)
1945 - கத்தோலிக்கன் (வாரம்)
1945 - வானொலி (மாதம்)
1945 - வெண்ணிலா
1945 - வர்த்தகன்
1945 - வெள்ளி (வாரம்)
1946 - ஸ்டார் (மாத மிருமுறை) காரைக்கால்
1946 - கதிர் (மாதம்) காரைக்கால்
1946 - ஆயரேறு-தமிழ் (மாத மிருமுறை)
1947 - Arcana (Hindi)
1947 - சமுதாயம்
1947 - வீக் முஸல்மான் (வாரம்)
1947 - சங்கு-தமிழ் (மாத மிருமுறை) காரைக்கால்
1947 - ஜனதா தமிழ் (மாத மிருமுறை)
1947 - Jeunesse (மாதம்)

1947 - முஸ்லீம் லீக்-தமிழ் (வாரம்) காரைக்கால்

1947 - நாடார் குலம் - தமிழ்

1947 - பாரத சக்தி-தமிழ்

1947 - குயில் (மாதம்)

1948 - குயில் (தினசரி)

1948 - மாநிலம் - தமிழ்

1948 - பொதுஜனம்-தமிழ் (மாத மிருமுறை)

1948 - Sri Aurobindo International Centre of Education

1948 - Jeunesse et joie - "Cluny Pondi"

1948 - Mother Inida.

1949 - குரல் (மாத மிருமுறை) காரைக்கால்

1949 - Republique francaise தமிழ்-பிரெஞ்சு (மாத மிருமுறை)

1949 - Bulletin of Sri Aurobindo International Centre of Physical Education.

1949 - பிரெஞ்சு குடியரசு (வாரம்)

1949 - L' Educateur - தமிழ் - பிரெஞ்சு

1953 - Purodha

1954 - புதுவை குடியரசு (வாரம்)

1955 - Indian Philosophy and Culture (காலாண்டு)

1956 - La Gazette de L'Etat de Pondicherry

1956 - அருள் மேரி (வாரம்)

1956 - புதுவைச் செய்திகள் (புதுவை அரசு வெளியீடு)

1959 - தமிழ் முரசு

1960 - அன்புமலர்

1960 - தமிழ்ச் செல்வி

1960 - வானம்பாடி

1960 - தமிழணங்கு

1966 - Quarterly Bulletin of the Chamber of Commerce, Pondicherry.

1966 - New Times Observer

1966 - பூஞ்சோலை (வாரம்) காரைக்கால்

1967 - பாரதிதாசன் குயில்

1968 - காலாண்டு செய்தி வெளியீடு (புதுச்சேரி வர்த்தகச் சபை வெளியீடு)

1968 - சீலம் (மாதம்)

1968 - News from Pondy- ஆங்கிலம்

1968 - Indian Journal of Pharmacology (இரு மாத இதழ், JIPMER மருத்துவ மனையிலிருந்து வெளிவரும் மருந்தியல் ஆய்விதழ்)

1969 - தமிழன்பன்

1969 - அணில் (சிறுவர் இதழ்)

1970 - வைகறை

1970 - Yogo life (monthly)

1970 - Sri Aurobindo's Action (The Journal of India's Resurgence)

1970 - Navaprakash

1971 - போர்வாள்

1972 - வண்ணங்கள் (கலை இலக்கிய மாத இதழ்)

1972 - ஓங்காரம் (ஆன்மீக இதழ்)

1973 - ஏப்ரல் (மாத இதழ்; இன்று மாதம் இருமுறையாக வெளிவருகிறது)

1973 - விருந்து

1973 - ஆசிரியர் நெஞ்சம்

1973 - ஏன் (கவிதை-கவிதை விமர்சன இலவச இதழ்)

1973 - தமிழ்ப்பறை (தனித்தமிழ் திங்களிருமுறை)

1973 - கிளர்ச்சி (வாரம்)

1974 - புதுவை மலர் (நாளிதழ்)

1974 - கூட்டுறவுச் சுடர் (மாதம்)

1975 - இறை அமுதம்

1975 - புதுவைக் குரல் (வாரம்)

1975 - Law and Social Problems

1979 - வில்லியனூர் விடிவெள்ளி (மாதம்)

1979 - மராப்பூ

1979 - தமிழ்முனிவன்

1979 - Youth Age

1981 - துளிகள் (கலை இலக்கிய மாத இதழ்)

1981 - வரலாற்றுச் சுவடுகள்

1981 - உதயதாரகை

1984 - பாரதிதாசன் குயில்

1981 - தலைமகன்

1985 - மெய்ப்பொருள் (மாத இதழ்)

1985 - பாரதி (இன்று உங்கள் பாரதி)

1985 - ஜனமித்ரா-தெலுங்கு (வாரம்) ஏனாம்

1985 - ஜனமித்ரா-ஆங்கிலம், ஏனாம்

1985 - Lokasamskrutam

1985 - ISDL Working Papers in Linguistics

1986 - ISDL Working Papers in Applied Linguistics

1986 - ஆசிரியர் நெஞ்சம் (திங்களிதழ்)

1986 - மதி (மாத இதழ்)

1986 - அடெக்ஸ்பிரஸ் (வாரம்)

1986 - அன்புள்ள ஆசிரியர்க்கு (திங்களிதழ்) காரைக்கால் (புதுவை மாநில ஆசிரியர் சங்க அலுவல் முறைத் திங்களிதழ்)

1986 - இறை அமுதம் (மாதம்)

1986 - துளிர் - சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் (தமிழ்நாடு அறிவியல் இயக்கம் - புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் இதழ்)

1986 - புதுவை ஒளி ஓசை

1987 - சுவனப் பூங்கா (மாதம்)

1987 - இயேசுவின் குரல் (காரைக்கால்)

1987 - பாலி இதழ் (திங்கள் இரு முறை)

1988 - ஆம்பல் (தமிழுறவு மாத மலர்)

1988 - கரந்தடி (புதுவையின் முதல் ஹைக்கூ இதழ்)

1989 - இயேசுவை நோக்கிப்பார் (மாதம்)

1989 - அரசு ஊழியர் முழக்கம் (புதுவை மாநில அரசு ஊழியர் சங்கங்களின் சம்மேளனத் திங்களிதழ்)

1989 - தன்னம்பிக்கை

1989 - Pondy Papers in Social Sciences

1990 - இதய மலர்

1990 - தேசிய ஒளி (வாரம் மூன்று முறை)

1990 - மெய்த் தமிழ்

1991 - PILC Journal of Dravidic Studies

1991 - ஜீவ நீரோடை எழுச்சி மலர் (மாதம்)

1991 - ஜீவ நீரோடை (இருமாதம்)

1992 - அன்றில்

1992 - தேசிய ஒளி

1993 - ஸ்ரீ மாதவ விஜயம்

1993 - நல்ல தமிழ் (பின்பு தெளி தமிழ்)

1993 - பாண்-கா-மா-யா (மாதம்)

1993 - வெல்லும் தூயதமிழ் (மாதம்)

1994 - மலர்ந்த ஜீவியம் (மாத இதழ்)

1995 - தமிழ் மண் (காலாண்டு இதழ்)

1995 - Adsun

1995 - தமிழ்ப் புதுவை

1996 - சாப்பறை

1996 - புதுச்சேரியின் குரல்

1997 - புதுவை அறிவியல் இயக்கச் செய்தி மடல்

1997 - கதை சொல்லி

1997 - யாணர் (அரையாண்டிதழ்)

1998 - புதுவைக் கல்வி (புதுவை அரசு கல்வித்துறை வெளியீடு)

1998 - மக்கள் காப்புரிமை (மனித உரிமை இதழ்)

1996 - செந்தமிழ்க் கொண்டல்

1999 - தமிழருவி

1999 - நண்பர்கள் தோட்டம் (மாதம்)

1999 - மத்தியக் கூட்டமைப்பின் குரல்

1999 - சுதேசி தமிழ்

2000 - தமிழாட்சி (மாதம்)

2000 - நற்றமிழ் (மாதம்)

2001 - Realty (a monthly magazen devoted to the construction Industries)

2001 - பரலோக ராஜ்யத்தின் திறவு கோல் (மாத இதழ்)

2001 - Advision

2001 - தின பாலி (வாரம்) காரைக்கால்

2001 - சூரியோதயம் (மாதம்)

2001 - உறவு (மாதம்)

2002 - News from Pondy (புதுச்சேரி அரசு வெளியீடு)

2002 - புதிய தன்னம்பிக்கை (மாதம்)

2002 - தேசியத்தமிழ்

2002 - மனித ஒற்றுமை

2002 - சட்டம் (மாதம்)

2002 - புதுவை வானம்பாடி (மாதம்)

2002 - வல்லினம் (காலாண்டிதழ்)

புதுச்சேரி இதழ்களின் தொடக்கக்கால வரலாற்றை அறிவது எளிதான ஆய்வாக இல்லை. தொடக்கக்காலம் என்பது அறிஞர்க்கு அறிஞர் வேறுபடுகிறது. புதிது புதிதாகப் பழைய இதழ்களைக் கண்டு பிடிக்கும் நிலையில் "தொடக்கக்காலம்" பற்றிய முடிவுகளும் மாறிக் கொண்டே உள்ளன. க. சச்சிதானந்தம் (1996) நாகரிக வர்த்தமானி என்ற தமிழ் இதழ் 1882-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதாகத் தகவல் தந்துள்ளார்.

1745 ஆம் ஆண்டு லபூர்தொனே என்ற பிரெஞ்சுப் படைத்தலைவன் சென்னையை வசமாக்கினான். சென்னையிலிருந்து அச்சு இயந்திரங்கள் புதுச்சேரிக்குக் கொண்டு வரப்பட்டன. அதன் பின்னரே புதுச்சேரியில் இதழ்கள் அச்சிடப்பெற்றன என்று சு. தில்லைவனம் கருதுகிறார் (1980). 1860 ஆம் ஆண்டில் பிரெஞ்சு இந்திய அரசு 'மொனித்தேர்

ஒப்பிசியேல்' என்ற இதழை நடத்திற்று. 1861 ஆம் ஆண்டில் 'மூர்னால் ஒப்பிசியேல் தெ லெந்த் பிரான்சேக்' என்ற இதழை அரசே வெளியிட்டது. இந்த இதழில் 'மூலியேன் வேன்சான்' என்பவர் கம்பராமாயணத்திலிருந்து தாடகை வதைப்படலம், அகலிகை விமோசனப்படலம் முதலியவற்றைப் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார் என்று முதல் இதழ்கள் பற்றிய தகவலைத் தந்துள்ளனர் (சு. தில்லைவனம் 1980).

> புதுவையின் முதல் இதழாகப் 'புதுவை நாகரிக வர்த்தமானியைக் குறிப்பிடலாம். இது 1882 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. அடுத்துப் புதுச்சேரியில் நகைச்சுவை இதழாக 1888 ஆம் ஆண்டு விகடப் பிரதாபன் வெளிவந்துள்ளது. இவை தவிரப் 'புதுவை நீதியபிமானி' (1884), இந்து நேசன் (1887), சுவேத பத்மாஜனை (1893), ஸ்ரீ சுஜன ரஞ்சனி (1895), வித்யா விநோதன் (1895) முதலிய இதழ்களும் தொடக்ககாலப் புதுச்சேரி இதழ்களாகக் கொள்ளத்தகுவன

என்று சு. தில்லைவனம் (1980:166) கூறியுள்ளார்.

18 ஆம் நூற்றாண்டிலேயே அச்சகங்களும் இதழ்களும் புதுச்சேரியில் தொடங்கப்பட்டுவிட்டன என்று கு. இராசேந்திரன் (2002) கருதுகிறார். 1710 ஆம் ஆண்டு புதுச்சேரிக்கு அச்சு இயந்திரம் கொண்டு வரப்பட்டதாக அவர் கூறியுள்ளார். முதன் முதலில் பிரெஞ்சியர்ஆட்சிக்கு உட்பட்ட அலுவலகங்களில் நடைபெறும் நிகழ்வுகளை வெளியிட 1750 ஆம் ஆண்டு பிரெஞ்சுச் செய்தித்தாள்கள் சுற்றுக்கு விடப்பட்டன. அதனைத் தொடர்ந்து செய்திகளும் விளம்பரங்களும் புதுச்சேரியில் வழங்கும் மொழிகளில் வெளியிட ஆவன செய்யப்பட்டன. 1778 ஆம் ஆண்டில் பிரெஞ்சு அரசு ஓர் ஆணையை வெளியிட்டுள்ளது. விதி எண் 36,37 இன்படி காவலர் உத்தரவு இல்லாமல் புதுச்சேரியில் நூல்களோ செய்தி அறிக்கையோ வெளியிடக் கூடாது என்று அந்த ஆணை கூறியுள்ளது. எனவே 1778-க்கு முன்பாகவே செய்திகள் வெளிவந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது. 1815 ஆம் ஆண்டில் சில தமிழ்ச்சுவடிகள் அச்சிடப்பட்டுள்ளன. 1816 இல் அரசு அச்சகம் தொடங்கப் பட்டுள்ளது. இதன்மூலம் அரசின் அறிவிப்புகள் சிறுசிறு பிரசுரங்களாக வெளியிடப்பட்டன. 1840 இல் பொன்னர் .என்ற கத்தோலிக்கத் துறவி, புதுச்சேரியில் புகழ்பெற்ற மிஷன் பிரசைத்

தொடங்கினார். இது தொடக்கத்தில் சன்மவிராக்னி மாதா கோயில் அச்சுக்கூடம் என்று அழைக்கப்பட்டது. இந்த அச்சுக்கூடமே புதுச்சேரியின் பழைமை வாய்ந்த இன்றும் இயங்குகிற அச்சுக்கூடம் ஆகும். பிரெஞ்சு அரசாங்கம் பல வார, மாத, இதழ்களை வெளியிட்டுள்ளது. 1823 இல் Archives Administratives ஆவணம் என்ற பிரெஞ்சு வார இதழினை வெளியிட்டுள்ளது. பின்னர் இந்த இதழே "Bulletein de actes Administratits des establissements Francais dans le Inde" என்ற பெயரில் வெளிவந்தது. இதில் தமிழ்ச் செய்திகளும் இடம் பெற்றன. 1838 இல் "இம்பார்சியல் தே பாண்டிச்சேரி" என்ற பிரெஞ்சு தமிழ் வார இதழ் தொடங்கப்பெற்றது. இதே ஆண்டில் 'இந்திய ஞாயிறு' என்ற வார இதழும் தொடங்கப்பெற்றது (கு. இராசேந்திரன் 2002). இவற்றையே புதுச்சேரி இதழ்களின் ஆதிவரலாறாக அறிய முடிகின்றது.

பகுதி மூன்று

புதுச்சேரி ஒரு சிறிய மாநிலம். ஆனால் இதழ்கள் வரலாற்றில் அது ஆற்றியுள்ள பங்கு மிகப்பெரியது. ஏறத்தாழ 268 இதழ்கள் இதுவரை வெளிவந்துள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

"இந்தியா" இதழுக்கு முன்பு வெளிவந்தவை	--	71 இதழ்கள்
"இந்தியா" இதழுக்குப் பின்பு வெளிவந்தவை	--	197 இதழ்கள்
ஆகக் கூடுதல்		268 இதழ்கள்

இந்தப் புள்ளிவிவரம் வருங்காலத்தில் கிடைக்கக் கூடிய இதழ்களுக்குத் தக உயர்வதற்கு வாய்ப்பு உண்டு.

இந்தியா இதழ் புதுச்சேரியில் வெளியாவதற்கு முன்பு உள்ள சமூகச் சூழல்களில் இரண்டு சூழல்கள் கவனத்தைக் கவர்கின்றன.

ஒன்று : புதுச்சேரியின் கல்வி நிலை

இரண்டு : அச்சு இயந்திரத் தொழில் நுட்பம்

இவற்றைப் பற்றிச் சுருக்கமாகச் சில செய்திகளை அறிய வேண்டியது அவசியமாகிறது.

பிரான்சு அரசு தொடக்கத்திலேயே கல்வியில் நாட்டம் கொண்டிருந்தது. இதனால் பள்ளிக்கூடங்கள் பல திறக்கப்பட்டன. என்றாலும் பள்ளிகளில் பிரெஞ்சு மொழியே ஆதிக்கம் செலுத்தியது. தமிழ்மொழி இடம் பெறவில்லை. எனவே அரசு பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தது. பிரெஞ்சு அரசுப்பணி வேண்டுமெனில் பிரெஞ்சு மொழி படிக்க வேண்டும் என்ற நிலை இருந்து வந்தது. தமிழ்மொழி இடம் பெறாத அரசு பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தது. மாறாகக் கட்டணம் செலுத்திப் படிக்கும் திண்ணைப் பள்ளிக் கூடங்களுக்குப் பெருமளவில் மாணவர்கள் சென்றனர். இதனால் அரசு உடனே மாற்று ஏற்பாடுகளைச் செய்தது. அதன்படி புதுச்சேரி, காரைக்காலில் தமிழ்மொழியும், மாகேயில் மலையாள மொழியும், ஏனாமில் தெலுங்கு மொழியும் சந்திர நாகூரில் வங்காள மொழியும் கற்பிக்க அரசு ஏற்பாடு செய்தது.

1885ஆம் ஆண்டில் மொழிவாரியாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் பட்டியல் வருமாறு:

தமிழ்மொழி	ஆசிரியர் ஆடவர்	25 பேர்	ஆசிரியர் மகளிர்	49 பேர்
வங்காளம்	ஆடவர்	2 பேர்	மகளிர்	1 ஒருவர்
மலையாளம்	ஆடவர்	4 பேர்	மகளிர்	3 பேர்
தெலுங்கு	ஆடவர்	6 பேர்	---	---

பிரெஞ்சு அரசில் பெண்கல்விக்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளதை ஆசிரியைகளின் எண்ணிக்கையால் அறியமுடிகிறது. ஆசிரியர்களின் எண்ணிக்கையை வைத்து 1885 ஆண்டு வாக்கில் கற்றவர்களின் தொகையை ஊகிக்கவும் முடிகிறது.

> "மிகச் சிறிய பிரெஞ்சிந்தியா மிகப்பெரிய இந்தியாவில் பெரும் சாதனை ஒன்றை நிகழ்த்தி உள்ளது. அதுதான் பெண் கல்வி. இந்தியாவில் பெண்கல்வி தொடங்கப்பட்ட இடம் புதுச்சேரிதான். புதுவையின் பெரும் சிறப்புகளில் இது முதலிடம் பெறுகின்றது. பிரான்சுவா மர்த்தேன் காலத்தில் மதப் போதகிகள் புதுச்சேரிக்கு வந்தனர். அவர்கள்தாம் பெண்கல்வியைத் தொடங்கியவர்கள்.

பெண்களுக்குத் தையல் வகுப்புகளும் தொடங்கப்பட்டன. 19.08.1881-இல் பிரெஞ்சு இந்தியப் பகுதியான ஏனம் என்ற பகுதியைச் சேர்ந்த காமிசெட்டி பெரேமா என்பவர் ஒரு சொற்பொழிவில் பின்வரும் கருத்தைக் கூறியுள்ளார். "விவசாயம், உதவித்தொகை, இலவசக்கல்வி, சிறப்பாகப் பெண்கல்வி முதலிய உதவிகளைப் பிரெஞ்சு அரசு செய்து வருகிறது. அதற்கு நாம் நன்றிகூற வேண்டும்" (க. சச்சிதானந்தம், 1996).

ஆகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தமிழ் சார்ந்த ஐரோப்பியக் கல்வி புதுச்சேரியில் அறிமுகமாகி விட்டதையும் பெண்கல்வி இடம் பெற்று விட்டதையும் அறியமுடிகிறது.

கல்வி வளர்ச்சியும் பெருக்கமும் இதழ்கள் மிகுதியாகத் தோன்றுவதற்குக் காரணமாகி உள்ளன. படித்த பெண்கள் இடையே பல்சுவை இதழ்கள் பரவலாக வரவேற்கப் பெற்றமைக்கும் இதுவே காரணமாகி உள்ளது. கல்வி போலவே அச்சு இயந்திரத் தொழில் நுட்பமும் இதழ்களின் வளர்ச்சிக்குக் காரணமாகி உள்ளது. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே புதுவையில் அச்சகங்கள் இருந்தன. படைத்தலைவன் லெபூர்தொனே 1745 வாக்கில் சென்னையிலிருந்து புதுவைக்கு அச்சு இயந்திரங்களைக் கொண்டு வந்ததாகத் தெரிகிறது. பழைமை வாய்ந்த அச்சகங்கள் சில வருமாறு (க. சச்சிதானந்தம் 1996 : 133).

அரசு அச்சகம் (Imprimerie de goruvernment)

அற்புதசாமி குழுமத்தின் அச்சகம் (1887)

(Imprimerie Civile Arpoudassamy et cie)

வளர்ச்சி அச்சகம் (1887) (Imprimerie de progres)

கிறித்துவ சங்க அச்சகம் (Imprimerie de La Mission)

புதின அச்சகம் (Imprimerie moderne)

கல்வி வளர்ச்சி, அச்சகத் தொழில் நுட்பப் பெருக்கம், அரசியல், மதச் சூழல், இலக்கிய ஆர்வம் முதலிய பல்வேறு காரணங்கள் இந்தியா இதழ்க்கு முன்னர்ப் புதுச்சேரி இதழ்கள் பலவாகத் தோன்றி வளரக் காரணங்களாக விளங்கி உள்ளன.

இயல் மூன்று

பாரதியின் புதுச்சேரி வருகையும் புதுச்சேரி "இந்தியாவின்" உதயமும்

பகுதி ஒன்று

மகாகவி பாரதி சிறந்த கவிஞர், தீவிரமிக்க தேசபக்தர், தலைசிறந்த இதழாளர் - இவ்வாறு பல்வேறு பண்புகளை உடையவராகவே சுப்பிரமணிய பாரதி திகழ்ந்திருக்கிறார். அவர் வாழ்ந்த காலம், குறிப்பாக அவரின் இளம் பருவ காலம் உலக அரங்கிலும் பிரிட்டிஷ் இந்தியாவிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்த காலமாகவே படுகிறது. குறிப்பாக 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகள் 1900 முதல் 1920 வரை நிகழ்ந்த அரசியல் செயற்பாடுகள் பாரதியின் எழுத்துகளில் வன்மையாக வெளிப்பட்டு விளங்குவதை அறியமுடிகின்றது. பாரதியின் பன்முகப்பட்ட படைப்பாக்கங்களில் கவிதை முதன்மை பெறுவது போலவே இதழ்களும் முதன்மை பெற்று உள்ளன.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் பாரதி தாம் பொறுப்பேற்றிருந்த இதழ்கள் மூலம் ஆற்றிய தொண்டு மகத்தானது. 1904 தொடங்கி 1921 வரை பாரதி பொறுப்பேற்றிருந்த இதழ்கள் வருமாறு (தமிழ்மணி. மானா 1997).

சுதேசமித்திரன் (சென்னை)	-	1904 நவம்பர் முதல் 1906 ஆகஸ்ட் இறுதி வரை -துணை அசிரியர் பொறுப்பு.
சக்கரவர்த்தினி (சென்னை)	-	1905 ஆகஸ்ட் முதல் (ஓர் ஆண்டும் ஒரு மாதமும்)
இந்தியா (சென்னை)	-	1906, மே முதல் ஆசிரியர் பொறுப்பு
பால பாரதா (சென்னை)	-	1906 நவம்பர் முதல் ஆசிரியர் பொறுப்பு

இந்தியா (புதுச்சேரி)	-	1908 அக்டோபர் முதல் ஆசிரியர் பொறுப்பு
விஜயா (புதுச்சேரி)	-	1909 செப்டம்பர் முதல் ஆசிரியர் பொறுப்பு
கர்மயோகி (புதுச்சேரி)	-	1910 சனவரி முதல் ஆசிரியர் பொறுப்பு
தர்மம் (புதுச்சேரி)	-	1910 சனவரி முதல் ஆசிரியர் பொறுப்பு
சூரியோதயம் (புதுச்சேரி)	-	1910 முதல் ஆசிரியர் பொறுப்பு
பால பாரதா (புதுச்சேரி)	-	1910 முதல் ஆசிரியர் பொறுப்பு
சுதேசமித்திரன் (சென்னை)	-	1920 நவம்பர் முதல் துணை ஆசிரியர் பொறுப்பு

இதழியல் துறையில் பாரதி நுழைவதற்கும் அவர் புதுச்சேரிக்கு வருகை தருவதற்குமான சூழல் ஒரு சிறிதாவது இங்குச் சுட்டப் பெறுதல் வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 1905 ஆம் ஆண்டில் நடந்த ரஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து உலகில் குறிப்பாக ஆசியாவில் ஏற்பட்ட விழிப்பின் விளைவாகச் சீனா, துருக்கி, பாரசீகம் முதலிய பல ஆசிய நாடுகளிலும் புரட்சிகள் வெடித்தன. அவற்றின் தன்மைகள் எவ்வாறு இருந்த போதிலும் அவையாவும் ஆசிய மக்களிடையே ஏகாதிபத்தியத்திற்கும் ஏதேச்சதிகாரத்திற்கும் எதிராகப் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தின. இந்த விழிப்பின் ஒரு பகுதியாகத்தான் இந்தியாவிலும் இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டு காலத்தில் தேசிய இயக்கம் புதிய வேகத்தையும் வீச்சையும் பெற்றுத் தீவிரவாத இயக்கமாக வளர்ச்சி உற்றது. இது இன்று மறுக்க முடியாத சரித்திர உண்மையாக நிலைபெற்றுவிட்டது. பாரதியின் இலக்கிய வாழ்க்கைக் காலத்தை எடுத்துக் கொண்டால் அந்த வாழ்க்கை இந்த விழிப்புக் காலக்கட்டத்தில் தொடங்கி 1917 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் சோசலீசப் புரட்சி வெற்றி பெற்று அங்குச் சோசலீசச் சமுதாயம் நிலைபெற்று வந்த காட்சியையும் கண்டு பாரதி அமரத்துவம் அடைந்த

> 1921ஆம் ஆண்டு வரையிலும் நீடித்தது என்றே கூறலாம். இந்த இருபெரும் புரட்சிகளையும் கண்டு அதன் மூலம் பாரதி அவனது காலத்தில் தெரிய வந்த நிகழ்ச்சிகளையும் விஷய ஞானத்தையும் கொண்டே தமது அரசியல், சமுதாய, பொருளாதாரக் கருத்துகளை உருவாக்கிக் கொண்டான் என்று சொல்லலாம் (ரகுநாதன், 1975).

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட ரஷ்யப்புரட்சியும் அதனால் மலர்ந்த சோசலிச சமுதாயக் கட்டுமானமும் உலக அரசியல் தளத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. அது மட்டுமல்லாமல் காலனிய ஆதிக்க நாடுகளில் குறிப்பாக ஆசிய நாடுகளில் விடுதலையை நோக்கி உந்து சக்தி ஒன்று உருப்பெற்று நிலைகொண்டது. இந்தியாவில் இது தீவிரவாத தேசிய விடுதலை இயக்கமாக உருவெடுத்தது. தேசியவாதியாகத் திகழ்ந்த பாரதி இந்தச் சக்தி மூலம் விடுதலையை நோக்கிய விழிப்புணர்வைத் தமிழரிடையே கொண்டு செல்வதற்குப் பத்திரிகைகளைக் கருவியாகக் கொண்டார். இயக்கத்தின் தீவிரப்போக்கு இதழ்களின் செய்திகளிலும் கனலைக் கக்குவதாக அமைந்துவிட்டது.

இதே காலக் கட்டத்தில் பாரதியின் இதழியல் பணி பற்றி ரகுநாதன் (1975) கூறுவது குறிப்பிடத்தக்கது. "தேசிய மறுமலர்ச்சிக் காலமாகிய 1904 நவம்பர் மாதத்தில்தான் பாரதி சுதேசமித்திரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். 1905-ஆம் ஆண்டில் தேசிய கவியாக மலர்ச்சியுற்றார். அது மட்டுமல்லாமல் 1905-ஆம் ஆண்டில் மாதர் முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட 'சக்கரவர்த்தினி' என்ற மாத இதழுக்கும் ஆசிரியராக இருந்தார். சுதேசமித்திரனை விட்டு விலகுமுன்பே 1906 ஏப்ரல் மாதம் தொட்டு "இந்தியா" வாரப் பத்திரிகையின் பொறுப்பு ஆசிரியராகவும் பணியேற்றிருந்தார். இந்தியா பத்திரிகை நடந்து வந்த காலத்திலேயே 1907 நவம்பர் முதல் பாலபாரதா என்ற ஆங்கில வாரப்பத்திரிகையின் பொறுப்பாசிரியர் பதவியையும் அவர் ஏற்றிருந்தார். இவ்வாறு இந்தியத் தேசிய இயக்கம் தீவிரவாதத் திசை வழியில் வேகமாக முன்னேறி வந்த காலக்கட்டத்தில் பாரதி மூன்று பத்திரிகை ஆசிரியர் பொறுப்பையும் ஏக காலத்தில் ஏற்று முழுமையாகப் பாடுபட்டு வந்தார்".

இதழியல் துறையில் மிகத்தீவிரமாக ஈடுபட்டுத் தீவிரவாத தேசிய அரசியலில் சிந்தனை செலுத்தி வந்த பாரதியார் இந்தியா இதழின் பொறுப்பினை ஏற்றதற்கும் சென்னையில் இருந்து புதுச்சேரிக்கு வருகை தந்ததற்கும் ஆன காரணங்கள் குறித்து ஒரு சில செய்திகளை இங்கே கூற வேண்டி உள்ளது. இந்தியத் தேசிய விடுதலை இயக்கத்தில் இரு பிரிவினர்களின் போக்குகளை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காண முடிகின்றது. மிதவாதிகள் ஒருபுறமும் தீவிரவாதிகள் ஒருபுறமும் இந்தியாவில் நிலைகொண்டு இருந்தனர். தீவிரவாதப் போராட்டமே முழுச் சுதந்திரத்திற்குக் கருவியாகும் என்ற கருத்துடையவர்கள் எழுச்சி பெறுவதற்கு வங்கப் பிரிவினை ஒரு காரணம் ஆகியது.

16.10.1905 ஆம் ஆண்டு வங்காளப் பிரிவினை அமுலுக்கு வந்தது. அன்றைய வைஸ்ராய் லார்டு கர்சன் வங்காளப் பிரிவினையை நடைமுறைப்படுத்தினார். இதனால் இந்திய வரலாற்றில் அதுவரை கண்டிராத ஒருபெரும் கொந்தளிப்பு வங்கத்தில் வெடித்துக் கிளம்பியது. வந்தே மாதர மந்திரம் தேசிய தாரக மந்திரம் ஆயிற்று. இந்தப் போராட்டம் தீவிரவாதிகளின் செயல்களைக் கூர்மைப்படுத்தித் தீவிரவாதம் தீவிரம் அடையக் காரணமாக அமைந்துவிட்டது. கோகலே போன்ற தலைவர்கள் மிதவாதக் கருத்தைக் கொண்டிருந்தனர். லாலா லஜபதிராய், திலகர், விபின சந்திரபாலர் போன்றவர்கள் தீவிரவாத அணியைச் சேர்ந்து இருந்தனர். வங்காளப் பிரிவினையை ஒட்டிய காலத்தில் காசிக் காங்கிரசில் ஏற்பட்ட ஒரு பிரச்சனையை இங்கே சுட்ட வேண்டும். பிரச்சனை மிக்க இதே காலக்கட்டத்தில் 1905 திசம்பரில் காசியில் காங்கிரசு கூடியது. 1906-இல் இந்தியாவிற்கு வருகை தர இருக்கும் வேல்ஸ் இளவரசரையும் இளவரசியையும் வரவேற்கும் தீர்மானம் காங்கிரஸ் கூட்டத்தில் கொண்டு வரப்பட்டது. தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் இத்தீர்மானத்தை எதிர்த்துக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். இத்தீர்மானம் பற்றி ரகுநாதன் (1986) குறிப்பிடுவது வருமாறு:

> உண்மையில் மிதவாதிகளின் போக்கும் தீவிரவாதிகளின் போக்கும் வேற்றுமை உடையதாகவே நிலவின. இந்தத் தீர்மானம் விஷயாலோசனைக் கமிட்டியில் வந்த போது எழுந்த புயல் போன்ற எதிர்ப்பினால் இந்த வேற்றுமை வெளிப்பட்டது. இத்தகைய தீர்மானங்களின் மூலம் தமது ராஜவிசுவாச உணர்ச்சியை வெளியிடுவதையே மித

> வாதிகள் எப்போதும் விரும்பினர். ஆனால் திலகரும் லாலா லஜபதிராயும் இதனை வன்மையாக எதிர்த்தனர். எனினும் கோகலே, லாலாஜியைக் மத்தியஸ்தராக இருக்கக் கேட்டுக் கொண்டார். பின்னர் அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியதாக அறிவிக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழியின் பேரில் திலகர் தமது எதிர்ப்பை வாபஸ் வாங்கிக் கொண்டார்.

காசிக் காங்கிரஸின் மிதவாதி தீவிரவாதி போக்கு சென்னையிலும் எதிரொலித்தது. பாரதி வேலைபார்த்து வந்த சுதேசமித்திரனிலும் எதிரொலித்தது. சுதேசமித்திரன் உரிமையாளர் சுப்பிரமணிய அய்யரும், பாரதியாரும் இருவருமே காசிக் காங்கிரசுக்குச் சென்றிருந்தனர். சுதேசமித்திரன் பத்திரிகை கோகலேயைத் தலைமைப் பீடத்திற்கு வழி மொழிந்த சுப்பிரமணிய அய்யருக்கு உரியது. அவரோ மிதவாதி. அதாவது வேல்ஸ் இளவரசருக்கு வரவேற்பு அளிக்கும் தீர்மானத்தை ஆதரித்தவர், அதற்கு வாக்களித்தவர். ஆனால் துணை ஆசிரியராக இருந்த பாரதியோ அந்தத் தீர்மானத்தை வெளிப்படையாக இல்லாவிட்டாலும் உள்ளுக்குள் எதிர்த்தவர். 26.01.1906 நாள் வேல்ஸ் இளவரசருக்குப் பரதகண்டத்தாய் நல்வரவு கூறுதல் என்ற தலைப்பில் எழுதப்பட்ட பாடல் ஒன்று மிஸ்டர் சி.சுப்பிரமணிய பாரதி இயற்றியது என்ற குறிப்புடன் சுதேச மித்திரனில் வெளிவந்துள்ளது. வேல்ஸ் இளவரசருக்கு வரவேற்புக் கூறும் இந்தப்பாடல் பாரதி ஆராய்ச்சியாளர்க்கு ஒரு பெரும் புதிர் என்ற குறிப்புடன் ரகுநாதன் (1986) கூறுவது வருமாறு:

> வேல்ஸ் இளவரசருக்குப் பாரத கண்டத்தாய் நல்வரவு கூறுதல் என்ற தலைப்பிட்டுப் பாடலைத் தொடங்கும் பாரதி அந்தத் தலைப்புக்கு அடியிலேயே அடைப்புக் குறிகளுக்குள் "பாரதமாது தானே பணித்தன்று" என்று அடிக்குறிப்பும் எழுதிஉள்ளான். இந்த அடிக்குறிப்பிற்கு என்ன அர்த்தம்? இப்படிப்பட்ட பாடலை எழுது என்று பாரதமாதா எனக்குக் கட்டளை இடவில்லை என்பதுதானே பொருள். அப்படியானால் கட்டளை இட்டது யார்? வேல்ஸ் இளவரசருக்கு வரவேற்புக் கூறும் காங்கிரஸ் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்த சுதேசமித்திரன் பத்திராதிபர் ஜி. சுப்பிரமணிய அய்யர்தான் என்பது தெளிவு.

இவ்வாறு விவரிக்கும் ரகுநாதன் (1986) இந்த முரண்பாடே சுதேசமித்திரன் பத்திரிகையிலிருந்து பாரதி வெளியேறக் காரணமான முரண்பாட்டின் தொடக்கம் என்று கூறியுள்ளார். மேலும் இந்த அடிக்குறிப்பே பாரதி தீவிரவாதியாக விளங்கியதைப் புலப்படுத்தும் முதல் அறிகுறி என்றும் மிதவாதியான சுதேசமித்திரன் ஆசிரியருக்கும் தீவிரவாதியான பாரதிக்கும் இடையே முரண்பாடு தோன்றுவதன் தொடக்கம் என்றும் விவரித்துள்ளார்.

இதன் விளைவாகப் பாரதி இந்தியா பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுச் செயல்பட வேண்டிய சூழல் தோன்றியது. இந்தியா இதழின் முதல் இதழ் 12.05.1906 நாள் வெளிவந்துள்ளது.

பாரதி பொறுப்பேற்றிருந்த பத்திரிகைகளில் இந்தியா பத்திரிகைதான் மிகமிக முக்கியமானது; முதன்மையானது. பாரதி ஆசிரியராகப் பொறுப்பு ஏற்றிருந்த பத்திரிகைகளில் இந்தியா ஒன்றே வேகமும் விறுவிறுப்பும் மிக்கதாக விளங்கியது. இந்தியா ஒரு தமிழ் இலக்கியப் பத்திரிகை அன்று. அதை அரசியல் பத்திரிகை என்றே கூறலாம். அது ஒரு வாரப் பத்திரிகை. பத்திரிகையின் பத்திராதிபர் பகுதியில் வந்துள்ள குறிப்புகள் பெரும்பாலும் அரசியல் குறிப்புகளே. அன்றைய நிகழ்ச்சிகளைப்பற்றி விமர்சனமாக எழுதப்பட்டவை. இந்த விமர்சனமும் ஒரு குறிப்பிட்ட நிலையில் நின்று அரசியல் கண்ணோட்டத்தின் அடிப்படையில் எழுதப்பட்டவை. விமர்சனமாக மட்டும் இல்லாமல் செய்ய வேண்டியதையும் குறிப்பிட்டு வழிகாட்டும் தன்மையைச் சில கட்டுரைகளில் காணலாம் (சி.எஸ். சுப்பிரமணியம், 1986).

தீவிரவாத அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்த பாரதி தம் கருத்துகளை வெளியிடுவதற்கு இந்தியா இதழை முதன்மையான ஊடகமாகப் பயன்படுத்திக் கொண்டார். 1906-ஆம் ஆண்டு தொடங்கி 1908-ஆம் ஆண்டு இடைக்காலம் வரை இந்தியா இதழே ஒருவகையான தீவிரவாதத் தேடலோடேயே வெளிவந்திருக்கிறது. இதுபற்றிய ஒரு சில சான்றுகளை இங்கே சுட்டுவது வேண்டற்பாலது.

1907-ஆம் ஆண்டு மே மாதத்தில் மதுரையில் நடந்த ஒரு சுதேசியக் கூட்டத்தைக் காவலர் ஒருவர் நடத்தவிடாமல் செய்ததைப் பாரதியார் பின்வருமாறு கண்டித்து உள்ளார்.

ஜனங்களே! நீங்கள்தான் இந்தப் பூமிக்குச் சொந்தக் காரர்கள். அரசாட்சியார் உங்களிடம் சம்பளம் வாங்கிக் கொண்டு உங்களுக்கு வேலை செய்யும் தொழும்பர்கள். ஒரு அரசாட்சியார் சரியானபடி வேலை செய்யாவிட்டால் அதனை மாற்றும் சக்தி உங்களுக்கு உண்டு. உங்களுடைய சுதந்திரங்களையும் உரிமைகளையும் அறிந்துகொண்டு நீங்கள் செய்யும் சட்டத்திற்கு இணங்கிய காரியங்களிலே தலையிடுவோர்களைத் தாட்சண்யம் இன்றி எவ்விதங்களாலும் அடக்கிவிடுங்கள். மனத்துணிவு உடையவர்களிடம் போலீஸாரின் குறும்பு செல்லமாட்டாது. மனத்துணிவு உடையவர்களைப் பிசாசு கூட அணுகாது (இந்தியா 4.5.1907, பாரதிதரிசனம் II).

இதே போன்று அதே மாதத்தில் தஞ்சாவூரில் சிவாஜி ஊர்வலத்தைத் தடுத்த கலெக்டரின் செய்கையைக் கண்டித்தும் பாரதி எழுதி உள்ளதை 18.05.1907 இந்தியா வெளியிட்டு உள்ளது. "இந்தக் கலெக்டரின் கட்டளைகளை மீறி நடப்பது சிறிதேனும் குற்றமாகாது" என்று பாரதி கூறியுள்ளதைச் சுட்டுதல் வேண்டும்.

1907-இல் லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்ட செய்தியை அறிந்த பாரதி தமது இந்தியா பத்திரிகையில் 'அராஜரிகம்' என்ற தலைப்பிலும் 'ஆரிய ஜாதிக்கு நிகழ்ந்த அவமானம்' என்ற துணைத் தலைப்பிலும் கண்டித்து எழுதி உள்ளதை அறியமுடிகிறது.

"பொதுக்கூட்டங்களைத் தடுத்தல், பாடசாலைகளைப் பயமுறுத்துதல், ஜனத்தலைவர்களைத் தீபாந்திரத்திற்கு ஏற்றி அனுப்புதல் முதலிய கொடுங்கோல் முறைமைகளை அனுசரிப்பது சர்க்காருக்கே பெருங்கேடாய் முடியும். சமாதான வழிகளிலே விருப்பம் கொண்டு வேலை செய்யும் ஜனங்களைக் கவர்ன்மெண்டார் உக்கிர வழிகளிலே செல்லும்படி பலவந்தப்படுத்துதல் அவர்களுக்கு சேமகரமான செய்கை ஆகுமா? (இந்தியா, 18.05.1907, பாரதி தரிசனம் II).

இந்த ஆசிரிய உரையில் பாரதி அரசாங்கத்தின் செயல்பாடு கொடுங்கோல் முறையாக உள்ளது என்று உரைப்பதையும் மக்கள் சினவயப்பட்ட நிலையில் வன்முறை வழியில் செல்ல அரசாங்கமே துணை நிற்கிறது என்று கூறுவதையும் சுட்டிச் சொல்ல வேண்டும்.

1906-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் நாள் அன்று இந்தியா பத்திரிகையில் 'வங்காளத்திலே ராஜாங்கப் புரட்சி செய்யும் நோக்கமுடைய ஒருவிளம்பரம்' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரை குறிப்பிடத்தக்கது. வங்காளத்தில் ஸ்வர்ண வங்கம் என்ற கழகம் ஏற்பட்டிருக்கிறது என்றும் அக்கழகத்தார் பிரிட்டிஷாருக்கு விரோதமான நோக்கம் உடையவர்கள் என்றும் அவர்கள் நாடுமுழுவதும் இரகசியமாக ஒரு விளம்பரத்தைப் பரப்பி வருகிறார்கள் என்றும் அந்த விளம்பரங்கள் இப்பொழுதுதான் வெளிப்பட்டுள்ளன என்றும் அதனைச் சில ஆங்கிலப் பத்திரிகைகள் வெளிப்படுத்தி உள்ளன என்றும் கூறும் பாரதி அந்த விளம்பரத்தை அப்படியே இந்தியா இதழில் வெளியிட்டு உள்ளார்.

> "50,000 ஜனங்கள் நம்மவர்களில் இறந்துபோக வேண்டும் அப்படி யில்லாமல் வெறும் வாய்க் கூச்சல் இட்டு யாதொரு பயனும் கிடையாது. நமது நெஞ்சு ரத்தம் கீழே சிந்தினால் ஒழிய நன்மை வரமாட்டாது. வெள்ளைக் காரர்களின் வீடுகளை இடித்து அவர்களைத் துண்டு துண்டாக வெட்டிக் கங்கை நதியிலே எறிய வேண்டும். இது நடக்கும்வரை நமது அனுகூலங்களை யாரும் கவனிக்கமாட்டார்கள். எந்த மதஸ்தராயினும் எந்த ஜாதியாராயினும் பெங்காளத்தின் புத்திரர்கள் எனப் பெருமை யாருக்கெல்லாம் வேண்டுமோ அவர்களை எல்லாம் ஒன்று கூட்டித் தாம் பெங்காளத்தின் பொருட்டாக எது வேண்டுமானாலும் செய்யத்தயாராய் இருப்பதாக உலகத்தாருக்குக் காண்பிக்க வேண்டும். பெங்காளத்தின் பொருட்டாக நாம் உயிர் துறக்கத் தயாராய் இருக்கிறோம் என்பதை உலகத்தார் அறிய வேண்டும். நாம் நமது இருதயங்களைத் திடமாக்கிக் கொள்ளும் பட்சத்தில் ஒரு கோடி ஜனங்கள் நம்முடன் சேர்ந்து கொள்வார்கள். வெள்ளைக்காரர்களின் குண்டுகளும் பீரங்கிகளும் பறந்தே போய்விடும். இனிச் சகித்திருத்தல் ஆகாது. மரணத்துக்குத் தயாராக இருக்கும் ஜனங்கள் மட்டும் ஒன்று கூடிச் சேர்ந்து பெரு முழக்கம் செய்து வெள்ளைக்காரர்களை அடித்துத் துரத்த வேண்டும்".

இவ்வாறு அந்த அறிக்கையை வெளியிட்டுள்ள பாரதியார் அதனை அறிக்கையாகவோ அல்லது விளம்பரமாகவோ வெளியிடாமல் ஒரு செய்தியாகத் தந்திருப்பதும் அச்செய்தியின் மேல் பாரதி வைத்திருக்கும் விமர்சனம் அறிக்கைக்கு

உடன்பாட்டு நிலையில் அல்லாமல் அதே சமயத்தில் தமிழ் நாட்டு மக்களிடம் அச்செய்தியைப் பரவவிடும் பாங்கில் ஆன ஓர் உத்தியாகக் கொண்டிருப்பதும் பாராட்டிற்குரியவையாக அமைந்துள்ளன. இந்த அறிக்கையை இந்தியா பத்திரிகையில் வெளியிட்டது பற்றிய விவரங்களைத் தந்துள்ள ரகுநாதன் (1986) பின் வருமாறு பாரதியின் உத்தியைப் பாராட்டுகிறார்.

"இவ்வாறு தமக்கு எதிராகச் சதி நடக்கிறது என்பதை அம்பலப்படுத்த விரும்பி ஆங்கிலேயப் பத்திரிகைகள் வெளியிட்ட வங்கப் புரட்சி இயக்கத்தின் இரகசியச் சுற்றறிக்கையைப் பாரதி தானும் வெளியிட்டு அதனைத் தனது இந்தியா பத்திரிக்கை மூலம் தமிழறிந்த மக்கள் மத்தியிலும் சுற்றுக்கு விட்டு விடுகிறான். இவ்வாறு இந்தச் சுற்றறிக்கையைத் தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் பரப்பிவிட்டு அதன் பின் அரசாங்கத்தையும் ஆங்கிலேயப் பத்திரிகைகளையும் கேலி செய்வது போல் பின்வரும் அடிக்குறிப்பையும் மிகவும் சாமர்த்தியமாக எழுதி முடிக்கிறான். 'இந்த விளம்பரத்திற்கு மூல காரணமாக இருந்தவர்கள் இன்னார் என்று தெரியவில்லை. இம்மாதிரி விஷயங்களைக் கவர்ன்மெண்டார் மறுபடியும் பத்திரிகைகள் தோறும் பரவச் செய்வதற்கு இடம் கொடுப்பது அவர்களுக்கு அனுகூலம் இல்லை என்றே நமக்குத் தோன்றுகிறது. இவ்வித சமாசாரங்கள் ஆரம்பத்தில் ஆங்கிலேயப் பத்திரிகைகள் மூலமாகவே பரவுகின்றன".

இந்த உத்தி மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்த மாதிரியான ஒருவகைப் பயனைப் பாரதியார் பெற்று விடுகிறார்.

1. அறிக்கையில் உள்ள தீவிரவாத நடவடிக்கை குறித்த தகவல்களைத் தமிழ் நாட்டார் அறிந்திட வழிவகை செய்து முடித்தது.

2. இந்தச் செய்தி அறிக்கையை இந்தியா நாளிதழில் வெளியிடுவதில் தமக்கு உடன்பாடு இல்லாதது போலவும் இருப்பினும் அரசாங்கத்தார் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாது செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என அரசாங்கத்திற்குக் கூறுவது போலவும் அதற்காகவே இந்தச் செய்தி அறிக்கை வெளியிடப்பட்டது என்று கூறித் தடைச் சட்டத்தில் இருந்து தம்மைக் காத்துக் கொண்டது.

இதேபோல் 'இந்து சுவராஜ்யம்' என்ற பம்பாய்ப் பத்திரிகையின் ஆசிரியர் சங்கர்லால் வல்லுபாய் டாணா வாலா என்பவர் மீது அந்தப் பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரைக்காகவும் அவரது மறைந்த தாயாரால் எழுதப்பட்ட ஒரு பாடலை வெளியிட்டதற்காகவும் அரசாங்கம் ராஜதுரோக வழக்குத் தொடர்ந்ததை இதே உத்தி மூலம் இந்தியா பத்திரிகையில் வெளியிட்டார். "மேற்கண்ட வியாசத்துடன் மேற்படி பத்திரிகைத் தலைவரின் தாயாராகிய ஜவரிபாயி என்பவரால் இயற்றப்பட்ட பாடல் ஒன்று பிரசுரமாய் இருக்கிறது. இதன் கருத்தாவது : தேச நலத்தின் பொருட்டு எதிரியையும் கொன்றுவிட்டுத் தானும் இறந்து போய் எல்லாத் திசைகளிலும் புகழ்பரப்ப வேண்டும் என்பதே ஆகும்" (இந்தியா, 20.10.1906, பாரதி தரிசனம் I).

இவ்வாறான ராஜதுரோகச் செய்திகளை வெளியிடுவது பற்றிய விமர்சனத்தை ரகுநாதன் (1986) தந்துள்ளார். "இவ்வாறான கருத்துகள் மக்கள் இடையே பரப்பக் கூடாத கருத்துகள் ஆகும் என்பது பாரதியின் எண்ணமாக இருந்திருந்தால் அவர் அவற்றைத் தமது பத்திரிகையில் வெளியிட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை. மாறாக அக்கருத்துகள் தமக்கு உடன்பாடானவை என்பதால்தான் அவற்றை அப்படியே இந்தியா இதழில் வெளியிட்டார். அந்தக் கருத்துகள் தமக்கு உடன்பாடானவை என்பதால்தான் அது ராஜதுரோகக் கட்டுரை என்று புலப்பட்டிருந்தும் அதனைத் தாம் திரும்பவும் வெளியிடுவதன்மூலம் தானும் ராஜதுரோகக் குற்றச் சாட்டிற்கும் தண்டனைக்கும் உள்ளாகக் கூடிய ஆபத்து உண்டு என்று தெரிந்து இருந்தும் கூட அதனை வெளியிட்டிருக்கிறார் என்பது தெளிவு. அதிலும் இத்தகைய கட்டுரைகளை வெளியிட்டு வந்த பத்திரிகைகளின் மீது அரசாங்கம் வழக்குகளைத் தொடுத்து அடக்குமுறையைப் பயன்படுத்தி வந்த நிலையில்தான் பாரதி அவற்றை மறுபிரசுரம் செய்துள்ளார். அத்தகைய கட்டுரைகளில் உள்ள கருத்துகள் தமிழ்நாட்டு மக்கள் இடையேயும் பரவவேண்டும் என்ற எண்ணத்தினாலும் நம்பிக்கையினாலும் தான் விளைவுகளையும் பொருட்படுத்தாமல் பாரதி அவற்றை வெளியிடத் துணிந்தார் என்று கொள்ளலாம்" (ரகுநாதன் 1986).

இந்தியா பத்திரிகை இவ்வாறான தீவிர தேசியவாதக் கருத்துகளை வெளியிட்டுக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் பாரதியும் ஒரு தீவிரவாத அரசியல் வாதியாக மாறிக் கொண்டிருந்தார். பாரதி ஒரு தீவிரவாதத் தேசிய இயக்கத்தவர்

என்பதை விரிவாக விவரிக்கும் ரகுநாதன் (1986) நிறைவாகப் பின்வருமாறு தன் கருத்துகளைப் புலப்படுத்தி உள்ளார்.

> வங்கப் புரட்சியாளர்கள் சென்னைக்கு வந்து தமிழ் நாட்டிலும் ஆயுதம் தாங்கிய போர் மற்றும் ஆயுதந் தாங்கிய நடவடிக்கை ஆகியவற்றுக்குத் தயாராகும்படி ரகசிய இளைஞர் சங்கங்களைத் தோற்றுவிக்க முயற்சிகளை மேற்கொண்ட காலத்தில் அவர்கள் பாரதியின் அரசியல் நண்பர்களான நீலகண்டரையும் சுரேந்திர நாத ஆர்யாவையும் இது சம்பந்தமாகச் சந்தித்துப் பேசினார்கள். அதே சமயம் பாரதியே அவர்களுக்குத் தமது நண்பர்களை அறிமுகம் செய்து வைத்துள்ளார். நிவேதிதா தேவியிடம் சுதேசபக்தி உபதேசம் பெற்றவனும் சென்னையிலிருந்து தீவிரத் தேசியவாத இயக்கத்தின் ஒரே பத்திரிகையாக ஒரே குரலாக வெளிவந்த 'இந்தியா' பத்திரிகையின் ஆசிரியனாக விளங்கியவனும் வங்கத் தலைவர் விபின் சந்திரபாலரின் நம்பிக்கைக்கு உரியவனாக விளங்கியவனும் இளைஞர்கள் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் மதிப்பும் செல்வாக்கும் பெற்று விளங்கியவனும் ஆன பாரதிக்கும் அந்தப் புரட்சியாளர்களுக்கும் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கும் எந்தச் சம்பந்தமுமே இருக்கவில்லை என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடத்துணிவது நம்புமாறு இல்லை என்பது தெளிவு (ரகுநாதன் 1986).

ஆக இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் பேரெழுச்சி பெற்ற தீவிர தேசியவாத இயக்கம் பாரதியையும் பாதித்திருந்ததை அறியமுடிகிறது. தீவிர தேசியவாத முழக்கமாகவே பாரதி பொறுப்பு ஏற்றிருந்த இந்தியா பத்திரிகை திகழ்ந்து வந்தது. இந்தியாவில் ஏற்பட்டிருந்த ஆங்கிலேயருக்கு எதிரான மறைமுகச் செயல்பாடுகளை இதழியல் உத்தி மூலமாகவே பாரதி தமிழ்நாட்டு மக்களிடம் பரப்பி வந்தார். இந்தப் போக்கு இந்தியா முழுவதுமே பரவி வேரூன்றி இருந்தது. தேசிய விடுதலை இயக்கத் தலைவர்கள் பலரும் தீவிர தேசிய வாத இயக்கத்தைச் சார்ந்து நின்றனர். இந்தியா முழுவதும் அந்நியர் ஆட்சிக்கு எதிரான இரகசிய சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஆயுதம் தாங்கிய புரட்சிக்கும் வெடிகுண்டு கருவிப் புரட்சிக்கும் இந்திய இளைஞர்கள் தயாரானார்கள். இதற்கு எதிர்முனையில் பிரிட்டிஷ் அரசாங்கம்

தீவிர தேசிய வாதிகளை நசுக்கவும் இவர்களின் கருத்துகளை மக்களிடையே கொண்டு செல்லும் பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பொசுக்கவும் ஆன நடவடிக்கையில் ஈடுபட்டது. 1908-ஆம் ஆண்டு இந்த நடவடிக்கைகள் வீறு கொண்டன. இந்த நடவடிக்கைகளின் தொடர் நிகழ்ச்சிகளால் பாரதியின் புதுவை வருகை நிகழ்ந்தது. தொடர் நிகழ்ச்சிகளை ரகுநாதன் (1986) பின்வருமாறு தொகுத்துரைத்துள்ளார்.

"09.031908 அன்று தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் சுயராஜ்யதினம் கொண்டாடிய மூன்றே நாட்களில் வ.உ.சியும் சிவாவும் அவர்களது சகாவான திருவனந்தபுரம் பத்மநாப அய்யங்காரும் திருநெல்வேலியில் 12.03.1908 அன்று கைது செய்யப்பட்டு விசாரணைக் கைதிகளாகச் சிறையில் அடைக்கப் பட்டனர். இவர்கள் கைதானதற்கு மறுநாளே 13.03.1908 அன்று திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் தச்சநல்லூரிலும் பயங்கரமான கலவரங்கள் வெடித்தன. இந்தக் கலவரங்களை அடக்க நடந்த துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் மாண்டனர். கலகத்தைத் தொடர்ந்து தண்டப் போலிஸ் கொண்டு வரப்பட்டு மக்கள் பல்வேறு அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். இந்தக் கலகங்களை முன்னின்று நடத்தியதாகத் திருநெல்வேலிச் சுதேசி எம்போரியத்தைச் சேர்ந்த சங்கர நாராயணய்யரும் வ.உ.சியின் சகாவான ஏட்டு குருநாதய்யரும் மற்றும் கலகத்தில் பங்கெடுத்த குற்றத்திற்காக நூற்றுக்கு மேற்பட்டோரும் கைது செய்யப்பட்டனர். இவர்களில் பலருக்கும் பல்வேறு தண்டனைகள் வழங்கப்பட்டன. இக்கலகத்தின் போது மாணவர்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டி விட்டார் என்ற குற்றச் சாட்டின் பேரில் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த கே.ஜி. லோகநாதய்யரும் கைது செய்யப்பட்டுப் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார். 17.03.1908 அன்று காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா கரூரில் நடந்த கூட்டத்தில் வ.உ.சியையும் சிவாவையும் கைது செய்ததைக் கண்டித்துப் பேசிய காலத்தில் 'ராஜதுரோகமாக'ப் பேசியதாகக் கோயம்புத்தூர் நீதிமன்றத்தில் ஐந்தாண்டுச் சிறைத் தண்டனை பெற்றார். இதே போல் பாரதியின் நண்பரான ஹரி சர்வோத்தமராவ் 26.03.1908 அன்று தமது 'சுயராஜ்யா' பத்திரிகையில் வ.உ.சி சிவா ஆகியோர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து எழுதியதற்காக மூன்றாண்டுச் சிறைத் தண்டனை பெற்றார். இதன் பின் 7.7.1908 அன்று திருநெல்வேலியில் வ.உ.சிக்கும். சிவாவிற்கும் எதிராக

நடந்த 'ராஜ துரோக' வழக்கில் வ.உ.சிக்கு இரட்டை ஆயுள் தண்டனையும் (40 ஆண்டுகள்), சிவாவிற்குப் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. இவ்வாறு இவர்களுக்குச் சிறைத் தண்டனை விதித்ததைக் கண்டித்து 25.07.1908 அன்று பாரதியின் நண்பரான சுரேந்திரநாத் ஆர்யா சென்னையில் பேசிய பேச்சுக்காக அவரும் கைது செய்யப்பட்டு ஐந்தாண்டு சிறைத்தண்டனை பெற்றார். இதனைத் தொடர்ந்து சுதேசமித்திரன் ஆசிரியரான ஜி.சுப்பிரமணிய அய்யர் குற்றாலத்தில் ஓய்வு பெற்று வந்த சமயத்தில் 21.08.1908 அன்று கைது செய்யப்பட்டுச் சென்னைக்கு அழைத்துவரப்பட்டார். அதே சமயத்தில் சுதேச மித்திரன் அலுவலகமும் சுப்பிரமணிய அய்யரின் வீடும் சோதனை இடப்பட்டன. சுதேச மித்திரனில் வெளிவந்த ஆட்சேபகரமான செய்திகளுக்காக அவர் மீது வழக்கும் தொடரப்பட்டது. அதே 21.08.1908 ஆம் நாள் அன்றும் அதற்கு மறுநாளும் இந்தியா பத்திரிகை அலுவலகமும் சோதனை இடப்பட்டது. அதன் ஆசிரியராக அறிவிக்கப்பட்டிருந்த முரப்பாக்கம் சீனிவாசன் கைது செய்யப்பட்டார். 1908 மே மாதத்திலும் சூன் மாதத்திலும் இந்தியா பத்திரிகையில் வெளிவந்த சில 'ஆட்சேபகரமான' கட்டுரைகளுக்காகச் சீனிவாசன் மீது வழக்குத் தொடரப்பட்டது

> இந்தியா பத்திரிகை அலுவலகம் சோதனையிடப்படும் சமயத்திலும் முரப்பாக்கம் சீனிவாசன் கைது செய்யப்படும் சமயத்திலும் அங்கிருந்து பாரதி தப்பித் தலைமறைவு ஆனார்.

பின்னர்ச் சில நாட்களில் புதுச்சேரியை அடைந்தார்" (ரகுநாதன், 1986).

இவ்வாறாகப் பாரதியின் புதுச்சேரி வருகை நிகழ்ந்தது.

ஆக இதுகாறும் விவரிக்கப்பெற்ற செய்திகளில் இருந்து பாரதியின் புதுச்சேரி வருகை பற்றிய வரலாற்றுப் பின்னணியைப் பின் வருமாறு பட்டியல் இடலாம்:

1. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் உலகு எங்கும் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் எதிரொலித்தது. 1905 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரஷ்ய புரட்சி உலக அடிமைத் தளையைக் களைந்து எறிய ஓர் உந்து சக்தியைத் தந்தது.

2. இந்த உந்து சக்தி ஒரு புறமும் வங்கப் பிரிவினை ஒரு புறமும் இந்திய விடுதலைச் சிந்தனைப் போக்குகளில் ஒருவித தீவிரத் தேசிய வாத இயக்கத்தைத் தோற்றுவித்தன.

3. இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்துஆண்டுகளில் தீவிரத் தேசிய வாதம் வலுப்பெற்றது. தமிழ்நாட்டில் மகாகவி பாரதி, வ.உ.சி., சுப்பிரமணிய சிவா முதலியோர் இத்தகு சிந்தனைப் போக்கு உடையவராகத் திகழ்ந்தனர்.

4. தீவிரத் தேசியவாதத்தின் வளர்ச்சியாக இரகசிய சங்கங்கள் தோன்றுதல் ஆயுதம் தாங்கிய புரட்சிக்கு அடிகோலுதல் வெடிகுண்டுப் புரட்சிக்கு வித்திடல் ஆகியனவும் விளைந்தன.

5. இவற்றைத் தமிழ்நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லும் ஒரே ஊடகமாகப் பாரதியின் "இந்தியா" இதழ் செயல்பட்டது.

6. இவற்றின் எதிர் விளைவுகளாக அன்றைய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடக்குமுறைகளும் தண்டனைகளும் அமைந்தன. 1908-ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

7. தமிழகத்தில் வ.உ.சியும் சிவாவும் கைது செய்யப்பட்டனர். இந்தியா நாளிதழ் அலுவலகம் சோதனை இடப்பட்டது. அதன் ஆசிரியர் கைது செய்யப்பட்டார். பாரதியாரும் கைது செய்யப்படுவார் என்ற சூழலில் அவர் அங்கிருந்து வெளியேறிப் புதுச்சேரியை அடைந்தார்.

பகுதி இரண்டு

இந்தியா இதழின் சட்டப்படியான ஆசிரியராகப் பதிவு செய்து கொண்டவர் முரப்பாக்கம் சீனிவாசன் ஆவார். ஆனால் அந்த இதழின் அறிவிக்கப்படாத ஆசிரியராக இதழை நடத்தி வந்தவர் பாரதியார் ஆவார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் நிலவிய கடுமையான அரசியல் சூழல் காரணமாக இந்தியா பத்திரிகையின் ஆசிரியராகப் பாரதி தம்முடைய பெயரை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. இதனால்தான் அரசு பதிவுகளிலும் இன்னபிற இடங்களிலும் அவருடைய பெயர் இடம்பெறவில்லை. ஆனால் உண்மையில் பாரதிதான் ஆசிரியராக இருந்துள்ளார்.

இந்தியா பத்திரிகை அலுவலகம் சோதனை இடப்பட்டு அதன் ஆசிரியர் சீனிவாசன் கைது செய்யப்பட்டார். பின்பு வழக்கு நீதி மன்றத்திற்கு வந்தது. 'தான் குற்றவாளி இல்லை' என்று செசன்ஸ் நீதிமன்ற நீதிபதி முன் சீனிவாசன் எழுதிக் கொடுத்த வாக்குமூலம் நீதிபதிகளுக்கு முன்பு படித்துக்காட்டப்பட்டது. அதன் ஒருபகுதியை இங்குக் குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும்.

> "இந்தப் பத்திரிகைக்கு எப்போதும் ஸி.சுப்பிரமணிய பாரதிதான் பத்திராசிரியராக இருந்தார். நானாவது அல்லது திருமலாச்சாரியாவது தான் அச்சிட்டு வெளிப்படுத்தி வந்தோம். 1907-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எம்.பி. திருமலாச்சாரியார் பம்பாய்க்குச் செல்ல எண்ணங் கொண்டிருப்பதாகவும் ஆகையால் பத்திரிகையை என்னிடத்தில் ஒப்புவித்துப்போவதாகவும் ஸி.சுப்பிரமணிய பாரதி பத்திராசியராக இருப்பார் என்றும் என்னிடம் சொன்னார். ஸி. சுப்பிரமணிய பாரதி பத்திராசிரியராக ரூபாய் 50 மாதச் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்" (சீனி. விசுவநாதன், 1993).

இந்த வாக்கு மூலத்தின்படி பாரதியே இந்தியா பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்று இருந்தார் என்பது தெரிய வருகின்றது.

இந்தியா இதழ் சென்னையில் இருந்து 1906-ஆம் ஆண்டு மே மாதம் 9-ஆம் நாள் முதல் வெளிவரத் தொடங்கியது என்று சீனி. விசுவநாதன் (1993) கருதுகிறார். மைக்ரோ பிலிம் பகுதியில் கிடைத்துள்ள முதல் கட்டுரையின் இதழ் 7. அது 23.06.1906 என்றுள்ளது. அதற்கு முன்னர் வாரந்தோறும் பத்திரிகை வெளிவந்துள்ளது என்று வைத்துக் கொண்டால் முதல் இதழ் மே 12-இல் வெளியாகி இருக்க வேண்டும் என்று ஸி.எஸ். சுப்பிரமணியன் (பாரதி தரிசனம் பதிப்புரை) கூறுகிறார். முதல் இதழின் சிதைந்த பகுதி பின்பு கிடைக்கப்பெற்றுப் பாரதி தரிசனம் முதல் தொகுதியின் இரண்டாம் பதிப்பில் வெளியிடப் பட்டுள்ளது. அதில் மே, 9, 1906 என்று உள்ளது. காரணம் புதன் கிழமை தோறும் வெளிவரும் என்ற அறிவிப்போடு முதல் இதழ் தொடங்கப்பட்டுள்ளது. ஆனால் பின்னர்ச் சனிக்கிழமை தோறும் வெளிவரும் என்ற அறிவிப்போடு இறுதிவரை சனிக்கிழமைகளிலேயே வெளிவந்துள்ளது. முதல் இதழ் 09.05.1906 புதன்கிழமை என நாள் இடப்பெற்றிருந்தாலும் இதழியல்

முறைப்படி சில நாள் முன்னதாக 04.05.1906-இலேயே வெளிவந்துள்ளது என்று பா. இறையரசன் (1995) கூறியுள்ளார்.

இந்தியா இதழைத் தொடங்கியவர் எஸ்.என். திருமலாச் சாரியார். பாரதியாருக்கு மூன்று வயது சிறியவர். தொடக்க காலத்தில் இவரே தம்மை ஆசிரியராகவும் பதிப்பாளராகவும் அச்சிடுபவராகவும் பதிவு செய்து கொண்டார். தென்னிந்தியாவில் விடுதலை இயக்கம் தீவிரமடையக் காரணமாக அமைந்தவற்றுள் இந்தியா பத்திரிகையும் விபின் சந்திரபாலரின் சென்னைக் கடற்கரைச் சொற்பொழிவுகளுமே ஆகும். இரண்டிற்கும் மூலகாரணமாக இருந்தவர் திருமலாச்சாரியார். இந்தியா இதழின் தொடக்கக் காலங்களில் அதன் திரைக்குப் பின்னே பாடுபட்டவர்கள் தேசபக்தி தீபத்தை ஏந்தியவர்களான அழகிய சிங்கப் பெருமாள் என்கிற மண்டயம் சக்கரவர்த்தியும் எம்.பி.டி. ஆச்சாரியா என்கிற சுதந்திர வீரரும் ஆவார்கள். இரயில்வே ஆடிட்டர் அலுவலகத்தில் பணியாற்றி வந்த திரு எம்.சீனிவாசன் எஸ்.என். திருமலாச்சாரியாரின் பள்ளித் தோழர். அந்தத் தோழமை காரணமாகப் பிற்காலத்தில் இந்தியாவின் ஆசிரியராகப் பதிவு செய்து கொண்டார். இதனிடையே 1906-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் பாரதியாரும் இந்தியா பத்திரிகையில் பணியாற்ற வந்து விடுகிறார்.

பாரதி இந்தியா பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டது முதல் பத்திரிகையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. செய்தி தரும் முறைகளிலே மாற்றம்; தலையங்கம் எழுதுவதில் தனிநடை கையாளப்பட்டது. இந்தியாவின் இந்தப் புதுவகையான மாற்றம் பற்றி அன்றைய பத்திரிகைகளான அமிர்த குண போதினி (1928 நவம்பர்), விவேகபானு, ரங்கூன் சுதேச பரிபாலினி, இந்து சாதனம், சுதேச மித்திரன் முதலான இதழ்கள் பாராட்டி உள்ளதை அறிய முடிகின்றது (சீனி.விசுவநாதன், 1993).

ஆங்கில அரசுக்கு எதிராகத் தூண்டிவிடும் கனல் பறக்கும் எழுத்தையும் பேச்சையும் வெளியிட்ட ஒன்பது பேரைச் சிறை செய்ய ஆளுநர் சர் ஆர்தாலாலி ஆணையிட்டார். அவர்களில் இந்தியா இதழின் ஆசிரியராகப் பதிவு செய்யப்பட்டிருந்த சீனிவாசனும் உரிமையாளராகப் பதிவு செய்யப்பட்டிருந்த எம்பி. திருமலாச்சாரியும் அடங்குவர்.1908 மே, சூன் மாதங்களில் பாரதியார் எழுதிய 'மகாபாரதக் கதைகள்', 'எத்தனையோ

கொள்ளைகளில் இதுவும் ஒரு கொள்ளை', 'ஏன் காலத்தை வீணாக்க வேண்டும்' முதலிய கட்டுரைகள் அரசுக்கு எதிராக இருப்பதாகக் குற்றம் சாட்டி இந்தியாவின் இதழாசிரியரை 20.08.1908-இல் கைது செய்தனர். சென்னையிலிருந்து பாரதியார் புறப்பட்டது 26.08.1908. ஆயினும் 05.09.1908 நாளைய இதழை வெளியிட்ட பின் புறப்பட்டிருக்க வேண்டும் எனவும் 05.09.1908 நாளைய இதழுடன் இந்தியா நின்றுபோனது என்றும் சீனி. விசுவநாதன் கூறியுள்ளார் (1993). எனவே செப்டம்பர் முதல் வார இதழ் வரை இந்தியா சென்னையிலிருந்து வெளிவந்துள்ளது. சென்னையிலிருந்து செப்டம்பர் இறுதியில் வெளியான இந்தியா இதழ் புதுச்சேரியில் அக்டோபர் 20-ஆம் நாள் மறுபடி வெளியிடப்பட்டதாக விஜய பாரதி கூறுவதாக இறையரசன் கூறியுள்ளார் (1995).

புதுச்சேரியில் 20.10.1909 முதல் வெளிவந்தது என்று பெ.தூரன் கூறியுள்ளார். ஆனால் மீண்டும் புதுச்சேரியிலிருந்து 10.10.1908 முதல் இந்தியா வெளி வரலாயிற்று. பாரதி 26.08.1908-இல் காவலர்களுக்குத் தெரியாமல் புதுச்சேரி சென்றார். பாரதியின் குடும்பம் சொந்த ஊருக்குச் சென்றது. அச்சகத்தைப் புதுச்சேரியில் உள்ள ஒருவருக்கு விற்றதாகக் காட்டிப் புதுச்சேரிக்குக் கொண்டுசென்று அம்பலத்தரு அய்யர் தெருவிலுள்ள 71-ஆம் எண் கட்டடத்தில் நிறுவப்பட்டது. இது நிகழ்ந்தது 04.09.1908க்குள்; எஸ்.என். திருமலாச்சாரியாரே இதனைச் செய்தார். புதுச்சேரியில் பிரெஞ்சு இந்தியாவில் பிறந்த ஒருவர் ஜாமீன் தந்தால்தான் அச்சகம் தொடங்க முடியும் என்ற நிலையில் சீனிவாசாச்சாரியாரின் நண்பர் வில்லியனூர் எஸ். லட்சுமி நாராயண அய்யர் இப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். புதுச்சேரி இந்தியா இதழ் முகப்பில் "சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம்" என்ற புரட்சிகர வாசகங்களைத் தாங்கி வெளிவரத் தொடங்கியது. புதுச்சேரி இந்தியா முதலில் சிறிய அளவிலும் (26 x 38cm), பின்னர் 27.11.1909 முதல் பழைய பெரிய அளவிலும் (53 x.26 cm) வெளிவந்தது (பா. இறையரசன், 1995). இந்தியா இதழ்கள் குறித்து ரகுநாதன் கூறுவது வருமாறு:

> இந்தியா இதழ்கள் அத்துணையும் கிடைத்துவிடவில்லை. இந்தியா 1906 மே 12 முதல் வாரஇதழாக வெளிவரத் தொடங்கியது. 1908 ஆகஸ்ட் 21 ஆம் தேதி இதழ் வெளிவந்த தருணத்தில் 21,22 ஆகிய நாள்களில் இந்தியா அலுவலகம்

சோதனை இடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்குப்பின் பாரதி தலைமறைவாகிப் புதுச்சேரிக்குச் சென்று விட்டார். இதன்பின் பாரதி சொல்லியனுப்பிய தகவலின் பேரில் நீலகண்ட பிரம்மச்சாரி அடுத்த இரண்டு வார இதழ்களைக் காலாகாலத்தில் கொண்டு வந்தார் என்று ரா.அ. பத்மநாபன் கூறுகிறார். இந்தியா புதுவையிலிருந்து 1908 அக்டோபர் 10 முதல் மீண்டும் வெளிவரத் தொடங்கியது. புதுச்சேரியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த இந்தியா இதழ் பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் வருவதற்கு அன்றைய ஆட்சியாளர்கள் தடை விதித்தனர். பின் அந்தஇதழ் நின்று போனது. புதுவையிலிருந்து வெளிவந்த கடைசி இதழ் 1910 மார்ச்சு 12 ஆம் நாளைய இதழ் ஆகும் என்று பத்மநாபன், கோதண்டராமன் இருவரும் குறிப்பிடுகின்றனர். இந்த இதழைத் தாமும் பார்த்ததாகத் தூரனும் எழுதி உள்ளார். ஆயினும் 1906 மே 12 முதல் தொடங்கி 1910 மார்ச்சு 12 வரை வெளிவந்த இந்தியா இதழ்கள் அனைத்தும் நமக்குக் கிடைக்கவில்லை (ரகுநாதன், 1982).

12.03.1910 ஆம் நாளுடன் இந்தியா இதழ் நின்று போனதாக அறியமுடிந்தாலும் அவ்விதழ் 1910 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை வெளிவந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று பா.இறையரசன் (1995) கருதுகிறார். இவர் கருதுவது வருமாறு:

இதுவரை கிடைத்துள்ள இந்தியாவின் கடைசி இதழ் 12.03.1910 நாளிட்டது. எனவே 12.03.1910 உடன் அவ்விதழ் நின்று போயிற்று என்பதாகப் பெ.தூரன், ரா.அ. பத்மநாபன், பிரேமாநந்தக் குமார், எஸ். இராமகிருஷ்ணன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். ஆயின் ஆங்கில அரசினரின் இரகசியக் காவலர் குறிப்புகள் அதற்குப் பின்னும் அவ்விதழ் ஓரிரண்டு வெளிவந்துள்ளதைக் குறிப்பிடுகின்றன. இந்தியா 19.03.1910 இதழ் ஒன்றைச் சென்னை ஆளுநருக்கு அனுப்பி அத்துடன் ஒரு மடலும் எழுதித் தம் இதழைத் தடை செய்ய வேண்டாம் என இதழ் சார்பில் அதன் உரிமையாளராகப் பதிவு செய்யப்பெற்றிருந்த எஸ்.இலட்சுமி நாராயண அய்யர் வேண்டி உள்ளார். இதே போல் 05.04.1910, 14.04.1910 ஆகிய நாட்களில் இந்தியா அலுவலகம் கடிதம் அனுப்பி உள்ளது. ஆனால் போட்ட ஆணையை மாற்றுவதற்கு இல்லை என்று அரசினரிடமிருந்து 24.04.1910இல் மடல் வந்துள்ளது.

உரிமையாளர் மீண்டும் 28.04.1910-இல் மடல் எழுதி எந்தக் கட்டுரையில் எந்தெந்த வரிகள் அரசெதிர்ப்புக்கு உட்பட்டவையாகக் கருதப்படுகின்றன என்று கேட்டார். ஆனால் எந்தப் பயனுமில்லை. எனவே 30.04.1910 உடன் இதழ் நிறுத்தப்பட்டுள்ளது. 17.05.1910 இல் எழுதப்பட்ட இரகசியக் காவலர் குறிப்பில் இந்தியா இதழ் நின்று போயிற்று என்றும் பாரதி குறைந்த வாடகையுள்ள வீட்டுக்குக் குடியேறினார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. . .

02.07.1910, 23.07.1910 இந்திய இதழ்களில்

1. சிவாஜி பற்றிய குறிப்புகள்
2. வீரம்
3. அறுபது கோடி ரூபாய்க்கு இந்தியா கொள்ளை இடப்படுகிறதாம்.
4. ஆதிக்க அரசினரின் நீதியற்ற மனிதத் தன்மையற்ற சட்டங்கள்.
5. எது உண்மை
6. டான் இதழிலிருந்து மொழிபெயர்ப்பு
7. கர்மயோகியின் இதழிலிருந்து மொழிபெயர்ப்பு
8. தர்மா இதழிலிருந்து மொழிபெயர்ப்பு
9. பிரிட்டிஷ் இந்தியாவின் நிலைமை

என்னும் கட்டுரைகள் ஆங்கில அரசினர்க்கு எதிரானவையாக ஆங்கில அரசாணையில் குறிக்கப்பட்டுள்ளன. எனவே பாரதி மீண்டும் இந்தியா இதழை நடத்த விரும்பினார் என்பதும் அரசினரின் அடக்குமுறைக்கு எதிராக நடத்த இயலவில்லை என்பதும் தெளிவாகின்றன. 1910 ஆம் ஆண்டின் இதழ்ச் சட்டத்தைப் பயன்படுத்திப் பிரிட்டிஷ் இந்திய அரசு இந்தியா இதழை மீண்டும் தடை செய்ய நிதித்துறைக்கும் அஞ்சல்துறைக்கும் 24.08.1910 இலும் 12.09.1910 இலும் ஆணை பிறப்பித்துள்ளது. எனவே இதுவரையில் கிடைத்துள்ள கடைசி இதழ் 12.03.1910 நாளிட்டது என்றாலும் கூட 1910 செப்டம்பர் வரை இடைவெளிவிட்டு இந்தியா இதழ் சில வெளிவந்துள்ளமை உறுதிப்படுகிறது.

என்று கோ.கேசவன் தகவல்களை மேற்கோள் காட்டி விவரிக்கும் பா. இறையரசன் (1995:25,26) கூற்றுவழியே இந்தியாவின் கடைசி இதழ் 1910 செப்டம்பரில் வந்திருக்க வேண்டும் என்பதை ஊகிக்க முடிகின்றது.

இந்தியா இதழை ஒடுக்குவதற்காகப் பிரிட்டிஷ் இந்திய அரசு பல்வேறு வகைகளில் முயற்சிகளை மேற்கொண்டது. 1908 ஆம் ஆண்டில் அன்றைய சென்னை ஆளுநர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனால் இந்தியா இதழ் பிரெஞ்சு இந்தியாவில் இருந்து வெளிவந்து கொண்டிருந்ததால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாமல் போயிற்று. என்றாலும் சென்னை ஆளுநர் 1908 நவம்பர் 7,14,21,28 திசம்பர் 5,12 ஆகிய இதழ்களைப் பிரெஞ்சு இந்திய ஆளுநர்க்கு அனுப்பி இந்தியா இதழை ஒடுக்குவதில் உதவுமாறு வேண்டி 05.02.1909 நாளிட்ட மடலில் வேண்டி உள்ளார். ஆனால் பிரெஞ்சு இந்திய ஆளுநர் தமது 20.02.1909 நாளிட்ட மடலில் தங்கள் நாட்டுச் சட்டப்படி அச்சுத்துறை உரிமையை இந்த இதழ் மீறவில்லை என்பதால் தண்டிக்க முடியாது என்று தெரிவித்தார்.

1909-ஆம் ஆண்டு சனவரி மாதம் 2-ஆம் நாள் வெளிவந்த இந்தியா இதழ் இது பற்றிய கருத்துப்படம் ஒன்றையும் வெளியிட்டு உள்ளது. 'ஓர் சம்பாஷணை' என்ற தலைப்பில் உரையாடலும் உரையாடலை விவரிக்கும் கருத்துப்படமும் அந்த இதழின் முகப்பில் இடம் பெற்றுள்ளன. அவை வருமாறு:

ஓர் சம்பாஷணை

இங்கிலாந்து : பிரிய சகோதரி! நெடுநாள் விரோதத்திற்கு அப்பால் நாம் இப்போது சிநேகம் செய்து இருக்கிறோம். ஒரு சங்கதி சொல்கிறேன். நீ அதில் எனக்குத் துணை புரிய வேண்டும். அதென்ன வென்றால் இந்தியா என்று எனக்கு ஒரு வெள்ளாட்டி இருக்கிறாள் பார்த்தாயா? அவளுக்குச் சில புது விலங்குகள் போடப் போகிறேன். அதற்கு நீ ஏதேனும் உதவி செய்ய முடியுமானால் எனக்கு அவசியம் செய்ய வேண்டும்.

பிரான்ஸ் : அந்தப் பேச்சு மட்டிலும் என்னிடம் பேசாதே; உன்னுடைய பழைய ஸமாசாரமெல்லாம் நான் மறக்கவில்லை. நான் சில காரணங்கள் பற்றி உன்னோடு சிநேகம் செய்து கொண்ட போதிலும் எனக்குள்ள சுதந்திர பக்தியை ஒருபோதும் கைவிட மாட்டேன்.

சித்திரவிளக்கம்

பிரான்ஸ் தேசத்திற்கும் இங்கிலந்திற்கும் அநேக நூற்றாண்டுகள் விரோதமுண்டு. பிரான்ஸில் இங்கிலந்தை (துரோகி இங்கிலந்து) என்று சொல்வது வழக்கம். இவ்வாறு இருக்கச் சமீபத்தில் சில காரணங்களை உத்தேசித்து இவ்விரண்டு தேசங்களிடையே நட்பு உடன்படிக்கை நடந்திருக்கின்றது. இதை வைத்துக்கொண்டு பிரிடிஷ் பார்லிமெண்டில் மிஸ்டர் ரீஸ் என்பவன், “பிரான்ஸ் தேசத்தில் பிரிடிஷ் ராஜாங்கத்துக்கு விரோதமாகச் சில ராஜதுரோகப் பத்திரிகைகள் பிரசுரமாகின்றன; பிரான்ஸ் நம்முடன் சிநேகமாயிருப்பதால் அதைத் தடுப்பதற்கு உரிய முயற்சிகள் செய்யும்படிக் கேட்டுக் கொள்ள வேண்டும்” என்று பேசியிருக்கிறான்.

ராஜதுரோகம் என்றால் என்ன அர்த்தம்? சாமானியமாகப் பிரிடிஷ் சட்டத்துக்கு உட்பட்டுச் சில சுதந்திரங்களுக்காகப் பாடுபட வேண்டுமென்று எழுதினாற்கூட அது ராஜதுரோகம் என்பதாகப் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் புத்தியிலே படுகிறது. இதைப் பிரான்ஸ் தேசத்தார் எப்படித் தடுக்க இச்சிப்பார்கள்? பிரான்ஸ் தேசமே ஸ்வதந்திர தேவியின் ஜன்மபூமி. அங்கே போய் ஆங்கிலேயர் ஸ்வதந்திர தேவியைக் கொல்வதற்கு மருந்து கேட்கப்போவது அவர்களுடைய மண்புத்தியைக் காண்பிக்கிறது (நன்றி: ஆ. இரா.வேங்கடாசலபதி, 1994).

சென்னை ஆளுநர் இந்தியா இதழை ஒடுக்க வேண்டிப் பிரெஞ்சிந்தியக் கவர்னர்க்கு 05.021909-இல் மடல் எழுதியமை முன்பு விளக்கிக் கூறப்பட்டது என்றாலும் பத்திரிகையை ஒடுக்க வேண்டும் என்ற கருத்துப் போக்கு அதற்கு முன்பேயே தொடங்கி விட்டதை 02.01.1909 நாள் இந்தியா இதழின் கருத்துப்படம் விளக்கி உள்ளதை அறிய முடிகின்றது. இதற்கும் முன்பாக இங்கிலாந்தில் இது பற்றிய விவாதப்போக்குகள் இருந்துள்ளதையும் அறியமுடிகிறது. என்றாலும் பிரிட்டிஷ் அரசுக்கும் பிரெஞ்சு அரசுக்கும் உள்ள பகை உணர்வும் பிரெஞ்சு அரசின் பத்திரிகைச்சட்டமும் புதுச்சேரியில் இந்தியா இதழ் அச்சிடுவதற்கு வாய்ப்பாக அமைந்துவிட்டன எனலாம்.

சென்னையிலிருந்தும் புதுச்சேரியிலிருந்தும் வெளிவந்த இதழ்களில் இதுவரை ஏறத்தாழ 125 இதழ்கள் கிடைத்துள்ளன என்றும் சுமார் 60 மேற்பட்ட இதழ்கள் கிடைக்கவில்லை என்றும்

தெரிய வருகின்றது. கிடைத்துள்ள இதழ்கள் பற்றி ஆ.இரா. வேங்கடாசலபதி (1994) விவரிப்பது வருமாறு :

"இந்தியாவின் முதல் ஆறு இதழ்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. முதல் இதழின் முகப்புப் பக்கத்தின் மேற்பாதி மட்டும் ஸி.எஸ். சுப்பிரமணியம் அவர்களால் கண்டெடுக்கப் பட்டது. 23.06.1906 முதல் 22.06.1907 வரையிலான இதழ்கள் ஒரே தொகுதியாகக் கட்டடம் செய்யப்பட்டுக் கல்கத்தா தேசிய நூலகத்தில் உள்ளன. இதில் 15.09.1906, 09.03.1907, 01.6.1907 ஆகிய மூன்று இதழ்கள் இல்லை.

29.06.1907 முதல் 05.09.1908 வரை வெளியான இந்தியா இதழ்களில் ஐந்து இதழ்கள் மட்டுமே கிடைத்துள்ளன. அவை: 18.04.1908, 25.04.1908, 02.05.1908, 13..06.1908, 20.06.1908 ஆகியன. இவை இப்பொழுது புதுச்சேரி மகாகவி பாரதியார் நினைவு அருங்காட்சியகம் மற்றும் ஆய்வகத்தில் உள்ளன. 10.10.1908 இலிருந்து புதுவைப் பதிப்பு வெளிவரலாயிற்று. இது புத்தகம்1, இலக்கம் 1 எனப் புதிய வரிசையிடப்பட்டு வெளிவந்தது. இதிலிருந்து 09.10.1909 வரை (புத்தகம்1, இலக்கம் 52) வெளியான இதழ்கள் கிடைத்துள்ளன. 16.10.1909 முதல் (புத்தகம்2, இலக்கம் 20) உள்ள இதழ்கள் ரா.அ. பத்மநாபன் அவர்களிடம் இருந்து பின்னர்ப் புதுவை பாரதி அருங்காட்சியகத்துக்கு வந்தன."

இவையே இன்றைக்குப் பார்வைக்குக் கிடைக்கக் கூடிய இதழ்களாக ஆய்வாளர்களால் பட்டியலிடப்பட்டுள்ளன.

இயல் நான்கு

"இந்தியா" இதழ்ச் செய்திகள்: அமைப்பும் வகைப்பாடும் வாய்பாடும்

பகுதி ஒன்று

தமிழில் வெளிவருகின்ற இன்றைய நாளிதழ்களுக்கு எல்லாம் ஒரு முன்னோடியாக "இந்தியா" இதழ் விளங்கியுள்ளது. அது அரசியல் சார்ந்த இதழாக விளங்கினாலும் கூடத் தமிழ்நாட்டு, இந்திய, உலக நிகழ்ச்சிகள் பற்றிய பார்வையோடு திகழ்ந்துள்ளதை அறிய முடிகின்றது. என்றாலும் அது தீவிரத் தேசிய வாத இயக்கத்தின் குரலாகத்தான் ஒலித்துள்ளது. தீவிரத் தேசிய வாத இயக்கச் சார்பு பெற்றதன் வாயிலாக அது பல்வேறு கோணங்களில் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டி இருந்தது.

1. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் எதிர்ப்பு
2. மித தேசிய வாத இயக்கத்தார் எதிர்ப்பு

இந்த இரண்டு எதிர்ப்புகளையும் மீறிப் பொது மக்களைக் கவருகின்ற வகையில் செய்திகளைத் தொகுத்து அளிப்பதில் "இந்தியா" வெற்றி கண்டுள்ளது.

"இந்தியா" இதழில் வெளியிடப்பட்டுள்ள விளம்பரங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்கது. இந்த விளம்பரங்களின் மிகுதியே அந்த இதழ் பொது மக்களிடம் பெற்று இருந்த செல்வாக்கை வெளிப்படுத்த வல்லது. நவீன தொழில் நுட்பத்தோடு கூடிய அச்சாக்க முறையையும் நூறாண்டுகளுக்கு முன்னால் "இந்தியா" இதழ் நடைமுறைப் படுத்தி உள்ளது. தமிழ் நாட்டில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் "இந்தியா" பத்திரிகை மட்டுமே தமிழில் கருத்துப்படங்களை வெளியிட்டு இருந்தது. பின்பு பக்கந்தோறும் செய்திகளுக்கு ஏற்பப் படங்களை வெளியிட்டது. இது தென்னிந்தியாவிலேயே முதன்முதலாக நிகழ்த்தப்பட்டது என்பதைப் பாரதியே கூறியுள்ளார். "இந்தியா" இதழ் நுவலும் செய்திகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி வரைப்படம் மூலம் அறியலாம்:


இந்தியா இதழ்
அமைப்பு
1
இதழ்த்தலைப்பு விவரங்கள்
2
சித்திரம் (கருத்துப்படம்)
3
சித்திரவிளக்கம்
4
துணுக்குச் செய்திகள்
5
தலையங்கம்
6
துணைத்தலையங்கம்
7
கவிதைகள்
8
உரையாடல்
9
கட்டுரைகள்
10
நிருபம் (கடிதம்)
11
தொடர்
12
வர்த்தமானங்கள்
13
விளம்பரங்கள்

மேலே வரைபடம் மூலம் காட்டப்பெற்ற அமைப்பை ஒரு மாதிரி அமைப்பாகவே கொள்ளுதல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட இந்தியா இதழை மட்டுமே எடுத்துக்கொண்டு அதன் அமைப்பு இங்கு வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பு மாதிரியை ஏறத்தாழ எல்லா இதழ்களுக்கும் பொருந்தக் கூடியதாகக் கருதலாம். மாற்றங்கள் இருக்கக் கூடும்.

1. மாதிரி அமைப்பை விளக்க எடுத்துக் கொண்ட இதழ் 16.10.1909 ஆம் நாள் வெளிவந்த இதழ் ஆகும். புத்தகம்:2, இலக்கம்:1 என்ற எண் பெற்று வெளிவந்துள்ளது.

2. இந்த இதழை எடுத்துக் கொண்டதற்குக் காரணங்கள் உண்டு. இந்தியா இதழ் புதுவையிலிருந்து வெளிவரத் தொடங்கி ஓர் ஆண்டு முடிவுற்ற நிலையில் இரண்டாம் ஆண்டின் முதல் இதழாக வெளிவந்த இதழே இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

3. பாரதியார் புதுச்சேரிக்கு வந்து ஓர் ஆண்டு நிறைவுற்ற நிலையில் புதுச்சேரியின் சமூக, அரசியல், பொருளாதாரச் சூழல் பற்றிய ஒரு புரிந்துணர்வு எய்திய நிலையில் வெளிவந்த இதழ் இது ஆகும்.

4. பல்வேறு வகைப்பட்ட கூறுகளை உள்ளடக்கிய தாகவும் அதே சமயம் பரவலாக வாசகர்களின் வரவேற்பைப் பெற்றதாகவும் இந்தக் காலக்கட்ட இதழ்கள் வெளிவந்துள்ளன.

இந்தக் காரணங்களால் 16.10.1909ஆம் நாள் வெளிவந்த இதழ் மாதிரி அமைப்பு விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தியா இதழின் முகப்புப் பக்கம் சித்திரத்தோடு வெளிவருவது வழக்கம். 16.10.1909 ஆம் நாளைய இதழின் முகப்புப் பக்கம் இங்கே தரப்பட்டுள்ளது.

இந்தியா.
சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

1. இதழ்த் தலைப்பு விவரங்கள்

இதழ்த் தலைப்பு விவரங்கள் என்பதாக இதழின் தலைப்பு பெரிய எழுத்தில் அமைந்துள்ளது. அதற்கு மேலே

ஸவதந்திரம் ஸமத்துவம் ஸஹோதரத்துவம்
(சுதந்திரம்) (சமத்துவம்) (சகோதரத்துவம்)

எனும் பொன் மொழி பொறிக்கப்பட்டுள்ளது. இது பிரெஞ்சு புரட்சியின் விளைவாகத் தோன்றிப் பிரெஞ்சு அரசால் கடைப்பிடிக்கப்படும் பொன்மொழி ஆகும். இதற்கு வலது புறத்திலும் இடது புறத்திலும் பதிவெண்ணும் விலையும் பொறிக்கப் பெற்றுள்ளன.

" Registered No. M. 771 தனிப்பிரதி அணா (1)

இந்தியா பெயரின் கீழ் "சனிக்கிழமை தோறும் வெளியாகும்" எனும் தொடர் இடம் பெற்றுள்ளது: இதற்கும் கீழே இதழ் எண்ணும் நாளும் இடம் பெற்றுள்ளன

பு2] புதுவை சௌமிய ௵ புரட்டாசி ௩௧ உ 1909 ௵ அக்டோபர் 16 உ [இ . 1

(புத்தகம் : 2; புதுவை இடம்; சௌமிய ஆண்டு புரட்டாசித் திங்கள் 31 ஆம் நாள் 1909 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள்; இலக்கம் : 1)

மேலே கூறப்பெற்ற தகவல்களே இதழ்த்தலைப்பு விளக்கங்களாக அமைந்துள்ளன.

2. சித்திரம் (கருத்துப்படம்)

சித்திரத்தின் கருத்து விளக்கமும் நான்கு படிநிலைகளை உடையது



இதழ்த்தலைப்பு விவரங்களை அடுத்துச் சித்திரம் இடம் பெற்றுள்ளது. இது எல்லா இதழ்களுக்கும் பொருந்தும் சித்திரத்தின் உச்சியில் அதன் தலைப்பு இடம் பெற்றுள்ளது.

"ஸர்-பி-மேட்டாவின் வீண் மனோ கர்வம்"

என்பது சித்திரத் தலைப்பு ஆகும். இதன் கீழ்ச் சித்திரம் இடம் பெற்றுள்ளது. மேத்தா நாற்காலியில் அமர்ந்துள்ளார். மேலும் சில காங்கிரசுகாரர்கள் அவரைச் சூழ்ந்து நிற்கிறார்கள். மேத்தா கடல் அலையைப் பார்த்து அலை வீசுதல் கூடாது என்று அதிகாரம் செய்கிறார். ஆனால் அலையானது வேகமாக வீசி அனைவரையும் நனைக்கிறது. இதுவே பட அமைப்பு ஆகும். இதன் கீழே சித்திர அடிக்குறிப்புப் பின் வருமாறு அமைந்துள்ளது.

> ஸர்-பி-மேட்டா இந்தப் பாரத ஜாதியென்னும் மஹா ஸமுத்திரம் அலை வீசுவதை மூடத்தனமாகக் கூடாதென்று அதிகாரஞ் செய்கிறார். அலையானது முன்னிலும் பலமாய் வீச அவர் மேலும் பரிவாரத்தின் மேல் மேன்மேலும் மோதியடிக்கிறது (சித்திர விளக்கத்தைக் காண்க)

3 சித்திர விளக்கம்

சித்திரம் விவரிக்கும் அரசியல் சார்பான விளக்கத்தை இதழின் இரண்டாம் பக்கத்தின் முதல் பத்தியில் காண முடிகின்றது. அது வருமாறு:

> நாம் எண்ணி இருந்தபடி நமது "இந்தியா" பத்திரிகையின் இரண்டாவது புத்தகத்தின் முதல் ஸஞ்சிகைக்குக் குறிப்பிட்ட சித்திரம் தயாராகவில்லை. ஆகையால் வேறு சித்திரம் இவ்வாரத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. இதில் பாரத ஜாதி என்னும் மஹா ஸமுத்திரத்தை அடக்கி ஆள வேண்டும் என்று பேராசை கொண்ட ஸர்.பி. மேட்டா (உட்கார்ந்திருப்பவர்) அவருடைய அங்கரக்ஷக மெய்க் காவலர்களான மெஸர்ஸ்வாச்சா (வலதுபுறம் இருப்பவர்) கோகலே (இடது புறம் இருப்பவர்) ஹரிகிருஷ்ணன்லால் (கோகலேயிக்கு வலதுபுறமாய்ப் பின்னால் இருப்பவர்) ஆகிய தமது முகஸ்துதி பரிவாரங்களுடன் தமது மதி மயக்கத்தால் காங்கிரஸ் அக்ராஸனம் என்ற நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கையில் பிரபுத்வம் என்ற அதிகாரக்

> கோலையும் இடுப்பில் தேசபக்தர்களைப் பகைத்தல் என்ற கத்தியையும் வைத்துக் கொண்டு "பாரத ஜன ஸமுத்திரமே! நாம் உனது அரசன்! நீ எமது அதிகாரத்திற்குக் கீழ்ப் படிந்து நடக்க வேண்டும். எமது காங்கிரஸ் அக்ராசன நியமனத்தை எதிர்த்து ஆக்ஷேபக் கிளர்ச்சி என்ற அலை வீசாதே. நாம் உத்திரவு செய்கிறோம். நமது ஆணையை மீறாதே" என்று ஆக்ஞாபித்தார். ஆனால் பாரத ஜன ஸமுத்திர அலைகளோ இவர் அதிகாரத்தைக் கிஞ்சித்தேனும் லக்ஷியம் செய்யாமலும் ஓயாமலும் முன்னிலும் பலமாக வீசி மோதியடித்து ஸர்.பி. மேட்டாவையும் அவருடைய பரிவாரங்களையும் கூடச் சேர்த்து ஒரே இழுப்பாய் இழுத்துத் தலை கீழாய்த் தள்ளி அமிழ்த்தி விடுகிறது. மீதி வெளிப்படை

இந்தச் சித்திரமும் அது வெளிப்படுத்தும் செய்தியும் தேசிய விடுதலை இயக்கத்தில் இரு பிரிவுகள் தோன்றிவிட்டதையும் அவற்றிடையே கருத்து மோதல்கள் இருந்ததையும் வெளிப்படுத்துகின்றன.

4. துணுக்குச் செய்திகள்

துணுக்குச் செய்திகள் என்ற தலைப்பு பாரதியாரால் இடப்பட்டது அன்று. வர்த்தமானச் செய்திகளாகவே இவற்றையும் கொள்ள முடியும். சித்திர விளக்கத்திற்கும் தலையங்கத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் இச் செய்திகள் அடங்கி உள்ளன. துணுக்குச் செய்திகளாகப் பின் வரும் தலைப்புகள் இடம் பெற்று உள்ளன.

1. தூத்துக்குடி சுதேசிக் கப்பல் கம்பெனி
2. தூத்துக்குடி ஸ்வதேசீ. ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கு ஓர் நன்கொடை
3. ஸோல்ஜர் திருடினான்
4. ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஹிந்து பெண்கள் பாடசாலை.
5. மொராக்கோ.

முதல் இரண்டு தலைப்பும் தூத்துக்குடிச் சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு நிதி திரட்டுவது தொடர்பானவை. இக்கம்பெனியின்

இரண்டு கப்பல்கள் புறப்பட இரண்டு லட்சம் ரூபாய் தேவைப்படுவதாகச் செய்திகள் விவரித்துள்ளன. சுதேசிய அபிமானிகள் சிலர் இந்த ரூபாயைச் சேர்ப்பதற்குப் புதிய பங்குகள் வாங்கி உள்ளனர். சிலர் கடன் பத்திரத்திற்குப் பணம் கொடுத்து உள்ளனர். சிலர் பிரயாணத் தர்ம சீட்டுகளை ஒரு ரூபாய் வீதம் கொடுத்து உதவி செய்துள்ளனர். சிலர் நன்கொடையாகவும் பணம் தந்துள்ளனர். பலர் தீபாவளிக்கு நன்கொடை வசூலித்து அதைக் கம்பெனிக்குக் கொடுத்து உதவ வேண்டும் எனவும் இதனை இந்தியா பத்திரிகையே செய்ய வேண்டும் எனவும் விருப்பம் தெரிவித்து உள்ளனர். இதுபற்றி இதழ் கூறுவது வருமாறு:

> இத்தகைய அபிமானிகள் தாங்களே முன்னின்று வசூல் செய்து கம்பெனிக்கு அனுப்புவதே சிறந்த தருமம்; நிறைந்த புண்ணியம். இது நமது நேயர்கள் மனத்தில் கல்லின் மேல் எழுத்து போல நன்கு நாட்டப்பட்டுள்ளது. அவர்கள் இந்தத் தர்ம பூர்த்திக்கு முயற்சி செய்து உண்மையாய் உழைத்து உதவி செய்ய வேண்டும் என்பதே நமது வணக்கமான பிரார்த்தனை.

தூத்துக்குடி சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு அளிக்கப்பெற்ற நன்கொடைகள் பற்றிய செய்திகளை அடுத்த தலைப்பு பேசுகின்றது. தூத்துக்குடியில் நாடகம் நடத்தும் நாடகக் கம்பெனியார் தமது ஒரு நாளைய வருமானமாகிய ரூ.250 ஐ கப்பல் கம்பெனிக்கு நன்கொடையாகத் தந்துள்ளனர். இதனை இந்தியா இதழ் வரவேற்று உள்ளதோடு ஒவ்வொரு நாடகக் கம்பெனியும் தமது ஒரு நாளைய வருமானத்தை நன்கொடையாக அளிக்கவும் வேண்டுகோள் விடுத்துள்ளது. இதேபோல் இரண்டு மாதங்களுக்கு முன்பு புதுவையில் சர்க்கஸ் நடத்திய ஸ்ரீபட்டவர்த்தன் ரூ.50 ஐ கம்பெனிக்குத் தந்து கம்பெனியின் இரண்டு பங்குகளை வாங்கியுள்ளார்.

சமீபத்தில் சென்னை மாநகரில் சர்க்கஸ் நடத்தி வந்த ஸ்ரீகாரெல்கர் சர்க்கஸ் கம்பெனியார் ஒரு நாள் வசூலைச் சுதேசிக்கப்பல் கம்பெனிக்குக் கொடுத்துள்ளனர். இவற்றை எல்லாம் குறிப்பிடும் இந்தியா இதழ் பாகவதர்கள், பாடகர்கள் முதலியோரும் ஒரு நாளை வருமானத்தைத் தர வேண்டுகோள் விடுக்கிறது.

சோல்ஜர் திருடினான் என்ற தலைப்பில் ராணுவ வீரன் ஒருவன் திருட்டிற்காக ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை பெற்றதை விவரிக்கிறது. டார்ஜெட் ரெஜிமெண்ட்டைச் சேர்ந்த ரேமண்ட் என்பவன் மவுண்ட்ரோட்டில் உள்ள மெக்ளூர் கடையில் இரண்டு டப்பிகள் பற்பொடியையும் ஒரு டப்பி பற்காவியையும் திருடி உள்ளான். இதற்காகவே தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பெண்கள் பாடசாலைக்கு நிதி வேண்டி ஒரு செய்தி இடம் பெற்றுள்ளது. அது வருமாறு:

> திருவல்லிகேணியில் 1905-ஆம் வருடத்தில் ஸ்ரீசபாபதி ஐயரவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ பார்த்தசாரதி சாமி ஹிந்து பெண்கள் பாடசாலையின் நிர்வாகத்தை ஸ்ரீ. எஸ். திருமாலாசார்யா, ஸ்ரீ கோபாலசாமி நாயுடு காரு, ஸ்ரீ எஸ்.என். திருமலாச்சார்யா, ஸ்ரீ சி.கே. கிருஷ்ண அய்யங்கார் பி.எ., எல்.டி. இவர்கள் சேர்ந்த ஒரு கமிட்டியார் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். திருவல்லிக்கேணி வீரராகவ முதலி தெருவில் இருந்த மேற்படி பாடசாலை இப்போது தெற்கு மாடவீதியில் 12, நெ. கிரஹத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதில் இப்போது 80 சிறுமிகள் படிக்கின்றார்கள். மேற்படி பாடசாலை உபயோகத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டுப் பாரத நாட்டில் ஸ்திரீகளின் அபிவிர்த்தியை உண்மையாக விரும்புகிற தேசாபிமானிகள் திரவியத்தினாலும் முயற்சியினாலும் சகாயம் செய்ய வேண்டும் என்று மேற்படி கமிட்டியாரால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பெண்களுக்காக 1905இல் தனியாகப் பாடசாலை உருவாக்கப்பட்டதும் அதில் 80 பெண்கள் படித்ததும் ஆன தகவல்கள் தெரிய வருகின்றன.

மொராக்கோ என்ற தலைப்பில் அங்கு நடந்த ஒரு நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. ஸ்பெயின் தனது சுய நன்மைக்காக மொராக்கோவுக்குள் நுழைந்தது என்று அங்கிருந்த பிரான்சு கமாண்டர் மிக கோபத்துடன் தெரிவித்தாராம். இதற்காக அவரைப் பென்சன் வாங்குவோரில் ஒருவராகச் சேர்த்து விட்டனராம். அதாவது வேலையிலிருந்து நீக்கி விட்டனராம்.

இவ்வாறான செய்திகள் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

5. தலையங்கம்

இந்தியா இதழின் மூன்றாவது பக்கத்தில் தலையங்கம் தொடங்குகிறது.

"இந்தியா"
சௌமிய ஞூ
புரட்டாசி 31 உ

என்ற செய்திகளின் கீழே தலையங்கத்தின் தலைப்பு இடம்பெற்றுள்ளது.

நமது
இரண்டாவது - வருஷம்

என்பது இந்த இதழின் தலையங்கம் ஆகும். இந்தியா இதழ் புதுச்சேரியிலிருந்து தொடங்கப்பட்டு ஓர் ஆண்டு நிறைந்து இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்த நிலையில் இத்தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. தலையங்கச் செய்திகள் வருமாறு:

"சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் எனும் மூன்று உண்மைகளையும் அனுபவத்தில் கடைப்பிடித்து வரும் புதுச்சேரியில் நமது இந்தியா பத்திரிகையை ஆரம்பித்துச் சென்ற சனிக்கிழமையோடு ஓர் ஆண்டு ஆகிவிட்டது. இந்தச் சனிக்கிழமை நமது இரண்டாவது ஆண்டு ஆரம்பித்துவிட்டது. வங்காளப் பிரிவினையைக் கண்டிக்க ஐக்கிய சபா மண்டபம் நிர்மாணிக்க அத்திவாரக் கல் நாட்டப்பட்டதினம் இன்றுதான். உபய வங்காள ஐக்கிய மகோற்சவம் கொண்டாடப்படும் தினமும் இன்றுதான். நமது தமிழ்நாட்டினர் ஐக்கியமாய்த் தேச நன்மைக்காக ஒத்துழைக்க வேண்டும் என்பதே நமது நோக்கம். இந்த ஐக்கியத்தைப் பற்றியே நாம் வெளியிட்டு வந்தோம்.

தற்கால அடிமைத்தனம் நீங்கிச் சுகம் அடையும் வழிகளையும் புகட்டி வந்தோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளை எடுத்துக்காட்டிக் கண்டித்து நியாய வழிகளை அவர்களுக்குக் கூறி வந்தோம். தேசத்தில் நவீன கிளர்ச்சி வெகுவேகமாகப் பரவி வருகின்றது. பிரிட்டிஷ் அரசு அதை அடக்கப் பல தீய சட்டங்கள், கொடிய தண்டனைகள் செய்தும் அடங்காமல் அது வேகமாகப் பரவி வருகின்றது.

நாகப்பூரியில் தேசபக்தர்களின் ஐக்கிய காங்கிரசு பிரிட்டிஷ் அரசால் நிறுத்தப்பட்டது. சென்னை சங்கேத காங்கிரசு இழவு நடைபெற்றது. வங்காள நவமணிகள் வெளியேற்றப்பட்டனர். அரவிந்தருக்கு ஸ்ரீபகவான் சிறையில் தரிசனம் தந்தனர். அரவிந்தர் மாசில்லாமணி என்று விடுதலை அடைந்தனர். 'பல தேசபக்தர்கள் தண்டிக்கப்பட்டனர். பல பத்திரிகைகள் அடைக்கப்பட்டன. தேசபக்தர்களுக்குச் சிறைவாசம்; தீபாந்திரசிட்சை, தூக்குத்தண்டனை இவை இயல்பாகி விட்டன.

> பலவித போலீஸ் உபத்திரவங்கள், பலவித வீண்வரிகள், பல தப்புக் கேஸ்கள், பல அநியாய தண்டனைகள், பல துஷ்ட சட்டங்கள், பல அநீதிகள் இவை நாடெங்கும் மலிந்து விட்டன.

இவ்வளவு துன்பங்களுக்கும் இடையில் தேசபக்தர்கள் மனம் தளராமல் கடவுளை நம்பிப் பாரதமாதாவிற்குத் திருத்தொண்டு செய்து வருகின்றனர். இதனிடையில் நமக்குக் கட்டுரைகளும் கடிதங்களும் எழுதி வரும் நேயர்களுக்கும், பத்திரிகையை ஆதரித்து வரும் சந்தாதாரர்களுக்கும், பிரதிகளை அனுப்பி வைக்கும் ஏனைய பத்திரிகை ஆசிரியர்களுக்கும் மனப்பூர்வமாக வணக்கங்களைச் சொல்கிறோம். நாமும் எமக்குள்ள பல வித துன்பங்களுக்கு இடையில் பாரத மாதாவிற்குத் தொண்டு செய்து வருகிறோம். கடவுள் நம் எல்லோரையும் காப்பாராக! ஸ்ரீ சுதந்திர லட்சுமி தேவி நமது பாரத நாட்டிற்குத் திருவருள் தருவாளாக"

இவ்வாறாகத் தலையங்கத்தின் பொருள் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

6. துணைத் தலையங்கம்

தலையங்கம், துணைத் தலையங்கம் ஆகியன பற்றிய பெயரீடுகள் பாரதியாரால் தரப்பெற்றவை அல்ல. ஒரு புரிதலுக்காகவும் வகைப்பாட்டிற்காகவும் நூலாசிரியரால் தரப்பெற்றுள்ளன. "காங்கிரெஸ்" என்ற தலைப்பில் துணைத்தலையங்கம் அமைக்கப் பெற்றுள்ளது. அதில் கூறப் பெற்றுள்ள செய்திகள் வருமாறு.

"வருகிற திசம்பர் மாதம் லாகூரில் சங்கேதபிருஷ்-காங்கிரஸ் கூடப் போகிறது. அதற்கு சர்பி. மேட்டா தலைவராகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவரைத் தேர்ந்தெடுத்த

லட்சணத்தைப்பற்றி நாம் முன்பே வெளியிட்டு இருக்கிறோம். இந்தத் தலைவர் நியமனம் வியாபாரம் போல் ஆகிவிட்டது. சர்பி. மேட்டாவும் அதைத் தாம் அங்கீகரித்து விட்டதாகவும் தெரிவித்து இருக்கிறார். ஒரு வியாபாரக் கம்பெனியின் முதலாளி அதனை வலுப்படுத்தப் பணம் கொடுத்துச் சில ஏஜண்டுகளை அனுப்பித் தங்கள் வியாபாரத்தைப் பற்றிப் பொய்யாகவோ, மெய்யாகவோ புகழ்ந்து பேசிக் கமிஷன், லாபம் முதலியவற்றை இரகசியமாகப் பேசி அந்த வியாபாரத்தைப் பரவச் செய்வது வழக்கம். அதுபோலவே மேத்தாவும் ஒரு ஏஜெண்டை வங்காளத்திற்கு அனுப்பினார். அவர் பெயர் மிஸ்டர் கரே; இவரது முயற்சியால் பாபு சுரேந்திரநாத் பானர்ஜி, பாபு பூபேந்திரநாத் வாசு ஆகியோரும் வேறுசிலரும் லாகூருக்கு வருவதாக ஒப்புக் கொண்டதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி உள்ளன. இதன் உண்மை எவ்வளவு சரி என்பது இனிமேல்தான் தெரியவரும்.

ஆனால் ஒன்று இந்த யாசாகா விர்த்தியை இன்னும் கட்டிக் கொண்டு அழும் மழமழப்புத் தாளம் போடுபவர்களான சில மிதவாதிகள் வீண்பணச் செலவு செய்து மூன்று நாள் தமாஷை நடத்திவிட்டு வெள்ளைக் கடிதாசியைக் கறுப்புக் கடிதாசியாக்கித் தங்களைக் காதைப் பிடித்துக் கிள்ளித் தாடையை இழைத்து ஆட்டி வைப்பவர்கள் ஆன பிரிட்டிஷ் நிரங்குச ஏகாதிபத்தியத்திற்கு அனுப்பி விட்டதனாலேயே இந்த பிருஷ்ட காங்கிரெஸ் சிரேஷ்ட காங்கிரெஸாய் விடமாட்டாது. அப்படி அவர்கள் சேர்ந்து செய்த தீர்மானங்கள் இந்தப் பாரத மஹா ஜன ஸமூகத்தைப் பொருந்தியது அல்ல. மெஸர்ஸ் ஸர்.பி. மேட்டா, கோகலே, ஹரிகிஷண்லால் அண்ட் கம்பெனியின் தீர்மானங்களே. ஸ்ரீ பாரத ஜாதீய மஹாஸபை எனப் பொருள்படும் நேஷனல் காங்கிரஸ் தாங்கள்தான் என்று அந்த மழமழப்பு விளக்கெண்ணெய் கட்சியார் தப்பாகவும் அயோக்கியமாகவும் பெயர் வைத்துக் கொண்டால் அந்தக் காங்கிரசுக்குத் தேசபக்தர்கள் எல்லாம் ஒரே கட்டுப்பாடாய்ப் பிரதிநிதிகள் தேர்ந்து எடுத்து அங்குப் போய்த் தங்கள் அபிப்பிராயங்களுக்கு இணங்கக் காரியங்களைச் செய்ய வேண்டும். இந்தியன் நேஷனல் காங்கிரஸ் மேட்டா கம்பெனியாரின் அப்பன்

வீட்டுச் சொத்து அல்ல. அவன் இஷ்டபடி அவன் நடத்திக் கொள்ளக் கூடின நடனசாலை அல்ல. அதற்குச் செல்லும் தேசபக்தப் பிரதிநிதிகள் தங்கள் மனத்தையும் மானத்தையும் தேசக் கீர்த்தியையும் மேட்டா கம்பெனியாரின் தாட்சண்ய குலாவலுக்கு விற்றுவிட்டுச் சபையில் தலையாட்டிப் பொம்மைகள் போல் உட்காரும் மழமழப்புக்காரர்களைப் போல் பயந்த குடிகள் அல்ல. . . இது மேட்டா கம்பெனியாரின் கூட்டம்; இது பாரத தேச மகாஜன சமூகப்பிரதிநிதி சபை அல்ல என்று சூரத்தில் 23ஆவது காங்கிரஸ் குழப்பத்தில் வெளியிட்டது போல் இப்போதே வெளியிட்டுவிட்டால் தேசபக்தர்கள் அதற்குத் தக்கபடி ஒரு ஏற்பாடு செய்து கொள்வார்கள்.

ஆகையால் தேசபக்தர்கள் ஆங்காங்குக் கூட்டம் கூடிக் கவனிக்க வேண்டியவை:

1. லாகூர் பிருஷ்ட ஸங்கேத காங்கிரஸ் பாரததேச மொத்தத்திற்கும் பிரதிநிதியான சபையல்ல. அதன் தீர்மானங்களைப் பொதுமகாசனங்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

2. அப்படி அது ஜாதீய மகாசபை என்றாலும் தேச பக்தர்களும் மிதவாதிகளும் சேர்ந்து விசயங்களை விமர்சித்துத் தீர்மானங்களை நிறைவேற்றினால்தான் அது பொது சனப் பிரதிநிதிக் கூட்டம் ஆகும்.

3. அப்படி இரு சாராரும் சேர்ந்து நடத்துவது என்றால் தலைமைப் பதவி விசயத்தில் தேசபக்தர்களின் கருத்துகளும் அங்கீகரிக்க வேண்டும்.

4. அது பாரத ஜாதீய மகாசன சபை அல்ல. ஏதோ ஆண்டுதோறும் கூடிச் சாப்பிட்டுவிட்டு வம்பு அளக்கும் கூட்டம் என்று முன்னாடியே தேசபக்தர்களுக்குத் தெரிவித்தல் நலம்.

7. கவிதைகள்

இந்தியாவின் இந்த இதழில் இரண்டு கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

1. வாழ்த்துக் கவிதை
2. ஏசல் கவிதை

முன்னது ஆசிரியப்பாவில் அமைந்தது; பின்னது கும்மிப்பாட்டு. பாரதியாரின் புகழ்பெற்ற கவிதையாகக் கருதப்படுவதும், தமிழ்நாட்டினரால் தமிழ் நாட்டுப்பண்ணாகப் பாடப்பெறுவதும் ஆன "வாழிய செந்தமிழ்" எனும் பாடல் இந்த இதழில்தான் வெளியிடப்பெற்றுள்ளது. இந்தியா இதழின் இரண்டாம் ஆண்டின் தொடக்கம் பற்றிப் "புதுவருஷம்" எனும் தலைப்பில் இரண்டாம் ஆண்டை வரவேற்றுப் பாடிய பாடலே இது-

ஸ்ரீ
புதுவருஷம்
ஆசிரியப்பா

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க
நன்மை வந்தெய்துக தீதெலாம் நலிக
அறம் வளர்ந்திடுக மறம்மடிவுறுக
ஆரிய நாட்டினர் ஆண்மையோடு இயற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக
நந்தேயத்தினர் நாடொறும் உயர்க
வந்தே மாதரம் வந்தே மாதரம்

இன்னும் ஒரு கவிதை, சென்னை உயர் நீதி மன்றத்தில் நீதிபதியாக நியமனம் பெற்ற வீ. கிருஷ்ணசாமி அய்யரைக் கிண்டல் செய்தும் கண்டித்தும் எழுதப்பட்டுள்ளது. கவிதையின் அடியில் "சேலம் 12-10-06 ஒரு மிதவாதி'' என்ற குறிப்புடன் இக்கவிதை வெளியிடப்பட்டுள்ளது. அது வருமாறு

1. அதிகாரம் என்னும் ஓர் அற்பப்பொருளை
அதிகப் பெரிதாய் நினைத்து மிக
மதிமோசம் போனதோர் தேசபக்தரின்
மகிமையைப் பெண்காள் நீர் பாடுங்கடி

2. சென்னைமா நகர் வக்கீல் சிரேஷ்டராம்
சீமான் கிருஷ்ணசாமி அய்யரவர்
தன்னை மறந்து தன் தேசத்தை மறந்து
தாவி உட்கார்ந்தாரே ஐகோர்ட்டில்

3. தையலே! இவர் செய்த பிரசங்கம் எல்லாம்
தரணியில் வஞ்சகப் பேச்சாச்சு
அய்யரின் வார்த்தைகளின் வளவிலே
அசத்தியமாகவே முடிந்த தம்மா

4. தன்னைப் போன்ற தோர் தேசபக்தர்கள்
தரணியிற் காண்பதும் அரிது என்றார்
அன்னையே! திலகரைச் சூரத்தில் திட்டினார்
அதி சீக்கிரம் ஜெயில் சேர்வீர் என்றார்

5. அமிதவாதிகளை நீக்கிவிட்டேன் நான்
அலகாபாத் கன்வென்ஷன் ரூலை நாட்டி
மிதவாதி காங்கிரசைக் கூட்டிவித்தே நம்
மிடிமைகள் தீரவே செய்வேன் என்றார்

6. சென்ற வருஷத்தில் காங்கிரசு சபையைச்
சடிதியாகவே கூட்டி வைத்தார்
மதுராசில் சபையைக் கூட்டி வைத்தார் திவ்ய
மந்திரம் ஒன்றும் அமைத்து வைத்தார்

7. சபை முடிந்த மறுதினமே யிவர்
சல்லாபமாகக் கவர்னருடன்
விருந்தும் உண்டுமே சந்தோஷித்தார் அப்போ
விந்தை கொண்டார் ஜனங்கள் எல்லாம்

8. காங்கிரஸ் பிரமுகரைக் கவர்னரெவரும்
கூட்டி அழைத்துமே குலாவுவாரோ?
இங்கு விசேஷம் இருக்க வேண்டும் நமது
அய்யருக்கு யோகம் பிறக்க வேண்டும்

9. என்று ஜனங்களும் நினைத்தார் அப்போ
என்ன சொல்வேன் அந்த விந்தையதை
நன்றாகப் பத்துமாத முடிவிற்குள்
நல்லதோர் உத்தியோகம் பெற்றார் அம்மா

10. ஐகோர்ட்டு ஜட்ஜியின் வேலையைப் பெற்றார்
அதிகாரங்கள் மிகத் தானும் பெற்றார்
மெய்யன்பு பக்தர்கள் சிக்குண்டபோது
மிக சிக்ஷை விதிக்கும் வரத்தைப் பெற்றார்

11. இனியவரைத் தேசபக்தரெனக் கூற
என்நாவும் எப்படி எழுமம்மா
இனி யவர் போதித்த சுராச்சியத்தை
எவ்விதம் நம்புவேன் நானும் அம்மா

12. காலனி சுராச்சியம் வேண்டும் என்றே இவர்
கையடித்துச் சொன்ன சத்திய மெல்லாம்

மேலான பெரியோர்கள் நம்புவரோ அதை
மெத்த இகழ்ச்சியும் செய்யாரோ

13. மிதவாதிகள் என்ற பேருக்கே குறைவு
வந்த தம்மா யிவர் செய்கையாலே
அதிகாரம் கவுரவம் இந்த இரண்டும்
அவர்களின் நோக்கம் என்று இகழலாச்சு

14. சுதேசீயம் என்ற பேச்சுகள் எல்லாம்
சுந்திர பதவிக்கோர் ஏணியாச்சு
ஏசவும் நேசர்கள் பார்த்தோர் சிரிக்கவும்
இடம் கொடுத்ததம்மா இவர் நடத்தை

இவ்வாறு எளிமையாகப் பொருள் கொள்ளுமாறு இக்கவிதை படைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

8. உரையாடல்

இந்தியா பத்திரிகையில் உரையாடல் உத்திமுறையில் சில செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ள இதழில் "ஸுக்கூர் ஸலாம் சள்ளை" என்ற தலைப்பில் ஓர் உரையாடல் செய்தி இடம் பெற்றுள்ளது. இந்தியன் ஒருவனிடம் இருந்து ஆங்கிலேயன் ஒருவன் வணக்கம் (சலாம்) பெற்ற தொல்லையை (சள்ளை) இந்நிகழ்ச்சி விவரிக்கிறது. அது வருமாறு:

பஞ்சாப் மாகாணத்தில் உள்ள டால்ஹவுசி என்னும் ஊரில் இருந்த ஸ்ரீபகவத்சிங் என்பவர் "பஞ்சாபி" பத்திரிகைக்குப் பின் வருமாறு எழுதுகிறார்.

நேற்றைய தினம் நான் தபாலாபீசிலிருந்து வந்து கொண்டு இருக்கும்போது குதிரையின் மேலேறிவந்த ஒரு இங்கிலீஷ்காரனை எதிரில் பார்த்தேன். அவன் என்னண்டை வந்து தன் குதிரையை நிறுத்தி

இ : "நீயா" என்று கேட்டான்

ப : ஆம்

இ : நீ இந்தியன் என்பது எனக்குத்தெரியும். இப்பொழுது எங்கிருந்து வந்து கொண்டு இருக்கிறாய்?

ப : தபாலாபீசிலிருந்து வந்து கொண்டிருக்கிறேன்.

இ : நீ இந்த ஊருக்கு வந்து எத்தனை நாள் ஆயிற்று

ப : போன சனிக்கிழமை வந்தேன்

இ : ஆனால் நீ புதிய ஆஸாமி போலிருக்கிறது.

ப : ஆனால் என்ன?

இ : நீ எதற்கு இங்கு வந்திருக்கிறாய் ?

ப : சும்மா டல்ஹவுசியைப் பார்த்து விட்டுப் போகத்தான்.

இ : நாம் யார் என்று உனக்குத் தெரியுமா?

ப : தெரியாது, எனக்கு ஏன் தெரிய வேண்டும்.

இ : நான் ஒரு இராணுவ உத்தியோகஸ்தன்.

ப : ஆனால் என்ன, நல்லது, மேலே

இ : ஆனால் என்னவா? நமக்குக் குட்மார்னிங் என்று சொல்லி ஸலாம் போடுவாய்.

ப : நல்லது, ஆனால் நமக்கு (குட்மார்னிங்) ஸலாம் நீர் சொன்னபடி போட்டாயிற்று (விஸ்கீ) சிவப்புக் குதிரையின் பேரில் ஏறியிருந்த இங்கிலீஸ்துரை ஸலாம் பெற்றுக் கொண்ட சந்தோஷத்தால் குதிரைக் கச்சிமடா கொடுத்து சவாரிவிட்டார். நானும் இந்த அற்பத்தனமான இங்கிலீஸ்காரனின் பலாத்காரமான வெட்கங்கெட்ட சலாம் யாசகா சள்ளையைப் பற்றிச் சிரித்துக் கொண்டே வந்துவிட்டேன்.

9. கட்டுரைகள்

இந்தியா இதழ் அரசியல் தொடர்பான செய்திகளுக்கு முதன்மை தந்த பத்திரிகை. ஆதலின் அரசியல் சமூகம் தொடர்பான பல்வேறு கட்டுரைகளும் அதில் வெளிவந்துள்ளன. பாரதியாரே அன்றி வேறு சிலரும் இவற்றை எழுதி உள்ளனர். ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இதழில் மூன்று கட்டுரைகள் வெளியாகி உள்ளன. அவை :



கட்டுரை:1

ஸ்ரீ நமது இந்தியா பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு

இந்தியா பத்திரிகை புதுச்சேரிக்கு வந்தபோதும் பிறகும் நடந்த நிகழ்ச்சிகள் இக்கட்டுரையில் தொகுத்துத்தரப்பட்டுள்ளன அவை வருமாறு:

ஸ்ரீ அரவிந்தர் முதலான 34பேர் மாணிக்கத்தோலா வெடிகுண்டு வழக்கில் கைது செய்து சிறைவைக்கப்பட்டனர். திலகர், சிதம்பரம் பிள்ளை, சிவா முதலியோர் பிரிட்டிஷ் கோர்ட்டுகளில் ராஜ நிந்தனைக்காகத் தீபாந்தர சிக்ஷை முதலியன விதிக்கப்பட்டவர்கள். சுவராஜ் விகாரி, ஸ்வராஜ் (அலகாபாத்), கேசரி, வந்தே மாதரம், தேசசேவக், திலக், இன்குவிலாப், இந்தியா (மதராஸ்) சுவராஜ் (பெஜாவாடா) மராட்டா, சுதேசமித்திரன், முதலிய பல பத்திரிகைகளின் மீது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் விதவிதமான தண்டனைகளை விதித்தது; பல துஷ்ட சட்டங்கள் செய்யப்பட்டன. அச்வினிகுமாரதத் முதலான பலரும் அயோக்கிய தேச நிர்வாகச் சட்டப்படி வெளியேற்றப்பட்டனர்.

அரவிந்தர் முதலான சிலர் விடுதலை செய்யப்பட்டனர். வாரீந்திர குமார கோஸ் முதலியோருக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. மிதுனபுரி வெடிகுண்டு வழக்கில் கைதானவர்கள் விடுவிக்கப் பட்டார்கள். இதில் போலிஸ் துர்நடத்தை பற்றி விசாரணை நடைபெறுகிறது. திருவாங்கூர்சாலை கலக வழக்கில் எல்லோரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறாகப் பல்வேறு வழக்குகள் பற்றியும் தண்டனைகள் பற்றியும் விடுதலை பற்றியும் கூறிவரும் கட்டுரை பின்வருமாறு நிறைவு பெறுகிறது:

> "உலகத்தில் எங்குப் பார்த்தாலும் சுதந்திரக் கிளர்ச்சி தோன்றி அதன் பயன்களும் வெளிப்படையாக விளங்குகின்றன. இந்தியாவிலோ குழப்பமானது. என்னென்ன விதமாய் இங்கிலீஸ் காரர்கள் தடைசெய்த போதிலும் ஓயாமல் பலப்பட்டுக் கொண்டே வருகிறது. சுதேசியமும் அன்னிய விலக்கும் ஜாதீயக்கல்வியும் சுயராஜ்ஜிய திடபக்தி விசுவாசமும் ஏராளமாய்ப் பரவி வருகின்றன. அதேக கைத்தொழிற் சாலைகள் நமது பாரத நாட்டில் நிர்மாணம் செய்யப்பட்டன. இதனிடையில்

நமது “இந்தியா” ஆபீஸ்க்கு அனேக கனவான்கள் விஜயம் செய்தனர். ஆனால் சில சமயங்களில் வயிறு பிழைக்க மனத்தையும் மானத்தையும் ஞானத்தையும் பைசாவுக்கு விற்றுவிட்ட அயோக்கிய நாய்களும் பன்றிகளும் கழுதைகளும் கூட எமது ஆபீஸ் உள்ளே வந்தும் வெளியே இருந்து பார்த்துக் கொண்டும் போய்விட்டதாகத் தெரிகிறது. நாம் நமது மனிதச் செய்கைகளுக்காவது நமது சரீர சம்ரக்ஷணைக் காகவாவது கொஞ்சம் கூடப் பயப்படவில்லை. முன்வைத்தகாலை பின்வாங்கவும் இல்லை. இந்து சுதேசிய ஜாதீய மகா தர்மத்தை ஓர் சிறந்த பரிசுத்தமான கட்டளை என்று கடவுள் நமக்குப் பிரசாதித்திருக்கிறார். இக்கட்டளையை நிறைவேற்ற வேண்டியது ஸ்ரீ பாரதமாதாவின் சத் சந்தானங்களின் முழுமுதற்கடமை. மத வேற்றுமைகள் காய்கறி பதார்த்த ருசிவகை வேற்றுமை போன்றது. நமது பாரத தேசத்தவர்கள் உன்னத பதவிக்கு வரவேண்டிய வழிகளையும் ஜாதீய தர்ம விவரங்களையும் உலக வர்த்தமானங்களையும் நாம் அடிக்கடி நம் தமிழ் நாட்டினர்களுக்கு எடுத்துக்காட்டி வந்தோம். நம்மவர்கள் பொது நலக் காரியங்களில் தங்கள் ஜாதி மதவேற்றுமை பாராட்டாமல் ஒத்துழைத்து வரவேண்டியது என்பதே நமது பிரார்த்தனை. நம் நாட்டின் நன்மையை நாடி நம்மால் இயன்றளவு நிரந்தரமான நீதி நியமங்களை நவில்வோம். வந்தேமாதரம்.

கட்டுரை : 2
உண்மையான அரசர்கள்

உண்மையான அரசர்கள் யார்? அரசர்களின் தகுதி தகுதியின்மை எவை என்பது பற்றிய ஒரு கட்டுரை இந்த இதழில் இடம்பெற்றுள்ளது. இதனைக் கமலநாயகி என்பவர் எழுதியதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் குறிக்கப்படும் அரசரது தகுதிப்பாடுகள் வருமாறு:

தகுதிகள்

1. விசால புத்தி உடையவராக இருக்க வேண்டும். தம் புத்தியைப் புத்தியீனருடைய மேன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும்.

2. மக்களுடைய மனத்தை நல்வழியில் செலுத்துதல் வேண்டும்.
3. நல்ல அரசன் உருவமும் எண்ணங்களும் பொதுமக்களின் மனத்தில் பதிந்து இருக்க வேண்டும்.
4. பொதுமக்கள் உள் அன்போடு போற்ற வேண்டும்.
5. அரசர் தம் சொந்தப் பிரச்சனைகளை விட்டுப் பொது மக்களின் நலனுக்குச் செலவிட வேண்டும்.

அரசர் எனப்படாதவர் குணங்கள்

1. பிறப்பால் அரசக்குடும்பத்தைச் சேர்ந்து செய்கையால் அக்குலத்தைச் சேராதவர்.
2. மக்கள் வியர்வை சிந்தி உழைத்த பொருளைச் சட்டம் என்ற ஆயுதத்தால் பயமுறுத்தியும் துன்புறுத்தியும் பறித்துக் கொள்பவர்.
3. கொடூரமான யுத்த கருவிகளைச் செய்து பலகீனராய் உள்ள ஜாதியாரை வென்று அவர் பொருளைப் பறித்துச் சிற்றின்பத்திற்காகச் செலவிடுபவர்.
4. தந்திரத்தினாலும் யுத்தத்தினாலும் பலகீனராய் உள்ள ஜாதியாரை வென்று அச்சாதியில் உள்ள சில தேசத் துரோகிகளின் உதவி பெற்று மக்களை நம்ப வைத்து நியாயமாக ஆளுவது போலப் பாவனை செய்பவர்.
5. விதி வசத்தால், பலகீன ஜாதியாரின் நலனுக்காகப் பாடுபடும் தேசாபிமானிகளைத் துன்பத்துக்கு உள்ளாக்கி அவர் நல்லெண்ணம் நிறைவேறாமல் செய்வதாக நினைத்துத் திருப்தி அடைபவர்.

கட்டுரை : 3 (சிறைவாழ்க்கை வரலாறு)

ஸ்ரீயுத அரவிந்தகோஷ் சிறை வாசத்தின் விருத்தாந்தம்

தேசிய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டிருந்த அரவிந்தரைத் தேச துரோகக் குற்றம் சாட்டிப் பிரிட்டிஷ் அரசு சிறையில் அடைத்தது. அந்தச் சிறைவாசத் தண்டனையை வனவாசமாக விவரித்து அரவிந்தரின் சிறைவாழ்க்கை வரலாறு தொடராக எழுதப்பட்டுள்ளது. அவ்வரலாற்றுக் கட்டுரையின் ஒருபகுதி வருமாறு:

1908-ஆம் வருஷம் மே மாதம் முதல் தேதி வெள்ளிக்கிழமை அன்று நான் 'வந்தேமாதரம்' பத்திரிகையின் காரியஸ்தலத்திலே உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது ஸ்ரீயுத சியாம சுந்தர சக்கரவர்த்தி முஜப்பூர் தந்தி ஒன்றை என்கையில் கொடுத்தார். அதைப் படித்துப் பார்த்ததில் முஜப்பூரில் ஓர் வெடிகுண்டு எறியப்பட்டது என்றும் அதனால் இரண்டு ஆங்கிலேய ஸ்திரிகள் இறந்து விட்டார்கள் என்றும் எனக்குத் தெரிய வந்தது. அதே தினத்து "எம்பைர்" என்ற ஆங்கிலப் பத்திரிகையிலே போலிஸ் கமிஷ்னர் "யார் யார் இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் அனைவரையும் நான் நன்றாக அறிவேன். அவர்கள் அனைவரும் சீக்கிரம் கைதாவார்கள்" என்று சொல்லியதாகவும் படித்தேன். இவ்விதமாக அவர் கொண்டிருந்த சந்தேகத்தின் முக்கிய குறி நானே என்பது அந்தச் சமயத்தில் எனக்குத் தெரியாது. போலிஸார் சிந்தனைப்படி நானே பிரதானக் குற்றவாளி என்பதும் ரஷ்யப் புரட்சியை வேண்டும் வாலிபக் கூட்டத்தாருக்கு ஆலோசனை சொல்பவனாகவும் ரகசிய நேதா (வழிகாட்டி) வாகவும் என்னையே கருதுகிறார்கள் என்பதும் அப்போது எனக்குத் தெரியாது.

இந்த நாள் எனது வாழ்வில் ஓர் கண்டாந்த நாள் என்பதை நான் அறிந்தேன் இல்லை. ஒரு வருஷ சிறைவாழ்க்கை என்னை எதிர்நோக்கி இருக்கிறது என்பதும் இந்தச் சமயம் முதலாக மனுஷ வாழ்க்கையுடன் இருந்த பற்றுகள் எல்லாம் சின்னபின்னமாகப் போய் விடும் என்பதும் இனி ஒரு வருஷகாலம் மனித சமூகத்தின்று வெளிப்படுத்தப்பட்டு விலங்குகளைப் போலக் கூட்டிலே அடைப்பட்டிருக்க நேரிடும் என்பதும் அப்பால் கர்ம சேத்திரத்திற்கு நான் திரும்ப வரும்போது பழைய வழக்கப்பட்ட அரவிந்தன் அன்று, புதியநடை, புதிய புத்தி, புதிய பிராணன், புதிய மனம் இவை பெற்று ஒருபுதிய காரியத்தைத் தன்மீது பொறுப்பாகக் கொண்டு அலிப்பூர் ஆசிரமத்தில் இருந்து வெளியேறுவேன் என்பதும் எனக்கு அப்போது தெரியாது. மேலே "ஒரு வருஷத்துச் சிறைவாசம்" என்ற சொற்களைப் பிரயோகித்து இருக்கிறேன். ஆனால் அதை

ஒரு வருஷ வனவாசம் அல்லது ஒரு வருஷ ஆசிரம வாசம் என்று சொல்வதே தகும்.

இவ்வாறு தொடங்கும் கட்டுரை அரவிந்தரின் கைது நிகழ்ச்சியை விவரித்து "இன்னும் வரும்" என்ற குறிப்புடன் நிறைவு பெற்று உள்ளது.

10. நிருபம் (கடிதம்)

இந்தியா இதழில் இலக்கியச் சுவை மிக்கதாக இக்கடிதப் பகுதி விளங்குகின்றது. "இந்துக்களின் வீரம்- ஓர் நிருபம்" எனும் தலைப்பில் "தொடர்" ஆக இக்கடிதம் இடம்பெற்றுள்ளது. அக்கடிதப் பகுதி வருமாறு:

"அய்யா தமக்கு யான் என்ன எழுதுவேன்? எழுத உட்காரும் இடத்தில் பகைவர்கள்! அனேகம் இடையூறுகள்; நான் வாசம் செய்வது ஒரு முடுக்கில் உள்ள இடுக்கு வீட்டில். என் தௌர்ப் பாக்கியத்துக்குத் தக்கபடி ஐந்தாறு பூஞ்செடிகள் வைத்திருக்கிறேன். என்னுடன் கூட யாரும் இல்லாத சமயத்தில் அச்செடிகளின் புஷ்பங்களே துணையாக இருக்கக்கடவன என்று நினைத்தேன். பெண்களுக்குப் போலவே இவைகளுக்கு இன்பம் வரும்படி இச்சகவார்த்தைகள் சொல்ல வேண்டியதில்லை. பணம் காசு கொடுத்து அவற்றைச் சந்தோஷிபிக்க வேண்டியதில்லை. நகைகள் புடவைகள் வாங்கிக் கொடுக்க வேண்டியதில்லை. நல்ல வார்த்தைகள் சொல்லி வசப்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்தாலும் அவை கேட்பதில்லை. அவற்றிற்கு இஷ்டமான போது மலரும். அப்போது என்னைச் சந்தோஷிக்கச் செய்யும். அவை எப்போதும் சிரித்துக் கோண்டே இருக்கும். ஒரு நாளும் அழுவதில்லை. ஆசை, மோசம் முதலியவை அவைகளிடத்தில் கொஞ்சமும் இல்லை. இங்கிலீஷ் பள்ளிக் கூடங்களில் படித்துத் தேறியவர்களின் குணம் அவற்றில் ஒருபோதும் காணப்படுவது இல்லை. புஷ்பங்கள் கவர்ந்தன; நட்சத்திரங்கள் பிரகாசித்தன. நான் ஆலோசனை செய்து கொண்டிருக்கும் போது மனதில் யோசனை உண்டாயிற்றோ இல்லையோ அதற்குள்ளே பூக்கள் அலர்ந்ததைக் கண்டு வண்டுகளும் தும்பிகளும் தேனீக்களும் ரஸிக புருஷர்களைப் போலவே கூடிக் "குஸ குஸ", "பனி பனி", "கொண கொண" என்று இரைந்து கொண்டு "பிரு பிரு" என்று தேகமெல்லாம் எரிச்சலுண்டாகும் படி செய்து விட்டன. நான் அவற்றை வெகுவாய் நல்ல வார்த்தைக் கூறினேன்"- இவ்வாறு

தொடங்கும் கடிதம் வண்டுகளின் ஒலியால் கடிதம் எழுத முடியவில்லை என்று முடிகிறது.

11. தொடர்

"விடுதலை மெய்க்கதை" என்ற தலைப்பில் 'தொடர்' ஒன்று இந்தியா இதழில் வெளிவந்துள்ளது. தொடர் எண்ணாக IV என்ற எண் இடப்பட்டுள்ளது. "முன் தொடர்ச்சி" என்ற தொடர் முதலில் இடம் பெற்றுள்ளது. இது, தொடர் கதையாக இடம் பெற்றது போலும். நாகேந்திர பாபு என்பவருக்கும் மாவட்ட நீதிபதி ஒருவருக்கும் இடையே நடைபெறும் உரையாடல் இடம்பெற்றுள்ளது.

12. வர்த்தமானங்கள்

வர்த்தமானம் என்பதற்குச் "செய்தி", "தற்கால நிகழ்ச்சி" என்பது பொருள். இந்தியா இதழில் ஏறத்தாழ நான்கு பக்க அளவிற்கு வர்த்தமானங்கள் இடம் பெற்றுள்ளன. வர்த்தமான செய்திகளை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை:



நீதிமன்றம், வழக்கு, நீதிபதிகள் தொடர்பானவை

1. பயிரா கலக கேஸ்
2. அசோகாபுரி கைத்துப்பாக்கி கேஸ்
3. பய்ரா கலக கேஸ்
4. மாணிக்தோலா வெடிகுண்டு கேஸ்
5. பய்ரா கலக கேஸ்
6. மாணிக் தோலா வெடிகுண்டு கேஸ்
7. பாடியாலா சமஸ்தானத்தில் ராஜ துரோகம்
8. கோகலேயைக் கொன்றுவிடும்படி தூண்டினாராம்
9. வழிமறித்து அடித்த கேஸ்

10. குற்றவாளி இந்தா நந்தியின் பக்ஷத்தில் ஸ்ரீ சக்கரவர்த்தி பேச ஆரம்பித்தார்.
11. 144 வது செக்ஷன் கீர் ஓர் மாஜிஸ்திரேட்டின் விளம்பரம்
12. கல்கத்தா ஸமிதியைக் கலைத்தல்
13. விடுதலை அடைந்தான்
14. ஒரு மீட்டிங் தடுக்கப்பட்டது
15. பரோடாவின் முக்கிய நியாயரதிபதி
16. காஷ்மீரத்தில் சீப் ஜட்ஜ்
17. கல்கத்தா பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட்டுக்குத் தேசு அசெளக்கியம்.

வங்கப்பிரிவினை

18. ஓர் வதந்தி (பிரிவினைக் கொண்டாட்டம் தடுக்கப்படும் என்று)
19. வங்காளப் பிரிவினைக் கொண்டாட்டத் தினம்
20. ஸ்ரீமான் அரவிந்த் கோஷின் அபிப்பிராயம்
21. பிரிவினைக் கொண்டாட்டத் தினம்
22. மிஸ்டர் கரேயும் வங்களாத் தலைவர்களும்
23. பிரிவினை உற்சவத்தின் ஏற்பாடுகள்
24. பிரிவினை உற்சவம்

வேலை நிறுத்தங்கள்

25. நெசவுச் சாலையில் வேலை நிறுத்தம் (காரெபூர் நெசவுச்சாலை)
26. கௌரீபுரி நெசவுச் சாலையில் வேலைநிறுத்தம்.
27. பாலிபுட் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம்.
28. மற்றொரு வேலை நிறுத்தம் (கங்கினாரா சணல் தொழிற்சாலை)

பொதுவானவை

29. கேடிவ் அரசர்
30. ரஞ்சித் சிங் இளவரசரின் நற்சிந்தனை

31. பெரி பெரி நோய்
32. காலம் சென்ற லால் மோகன் கோஸ்
33. ஓர் விபத்து
34. தென்னாப்பிரிகா
35. லாகூர் காங்கிரஸ்
36. பிரான்ஸ்
37. ஓடும்ரயிலில் கொள்ளையும் கொலையும்
38. ஓர் ஐரோப்பிய அதிகாரி தற்கொலை செய்து கொண்டான்
39. தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள்
40. ஹீன ஸதிர ஜீவன மில்லாதவர்கள்
41. பிரிட்டிஷ் வியாபாரக் கணக்கு

நீதிமன்றம் தொடர்பான செய்திகள்

பயிரா கலக வழக்கில் இருவருக்கு ஆறுமாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பெற்றது. இருவர் விடுதலை செய்யப் பெற்றனர். தண்டனை பெற்ற இருவர் அப்பீல் செய்ததால் ரூ.500 செலுத்தி ஜாமின் பேரில் அவர்கள் விடுதலை செய்யப்பெற்றனர். இச்செய்தி மூன்று இடங்களில் இடம் பெற்றுள்ளது. "இந்து பன்ச்" என்ற பத்திரிகையில் வந்த செய்தி கோகலேயைக் கொலை செய்யத் தூண்டும்படி இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு அப்பத்திரிகை அலுவலகத்தை அரசு கையகப்படுத்தி உள்ளது. பாரித்பூரைச் சேர்ந்த ஒருவர் அந்நிய சர்க்கரை விற்றதற்காகச் சுதேசிகள் சிலர் தாக்கியதாகப் புகார் கொடுத்தார். மாணிக்தோலா வெடி குண்டு வழக்கில் வழக்குரைஞர் விவாதம் முடிந்தது. பின்பு வழக்குக்கு முக்கியமான மூங்கில் குழாய் துப்பாக்கி, காற்றுத் துப்பாக்கி, ஓர் வில் முதலியன கோட்டார் முன்பு காட்டப்பட்டன.

வருகிற அக்டோபர் மாதம் 16ஆம் நாள் வர்சன உற்சவம் தொடர்பாகச் சரத்பூரில் பொதுக்கூட்டம் நடைபெறும் என்று காவல் துறை அறிக்கை மூலம் தெரிய வந்தது. அடுத்து 144 ஆவது செக்ஷன்படி அக்டோபர் 13 முதல் 16 வரை எந்த வித ஊர்வலமோ, பொதுக்கூட்டமோ நடத்தக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக நீதிமன்றம் தொடர்பான செய்திகள் இடம் பெற்றுள்ளன.

வங்கப் பிரிவினை தொடர்பான செய்திகள்

வங்கப் பிரிவினைக் கொண்டாட்டத்தைச் சென்ற வருடம் போல இந்த ஆண்டும் தடை செய்யப்படும் என்ற வதந்தி நிலவி உள்ளது.

வங்கப்பிரிவினைக் கொண்டாட்டத்தில் மாணவர்களைச் சேர்க்க விடாமல் செய்வதற்கு அதிகாரத்தைக் காட்டிலும் போதனையே சிறந்தவழி என்று அரசாங்கத்தார் உணர்ந்ததன் காரணமாக ஆசிரியர்களும், பெற்றோர்களும், பாதுகாவலர்களும் மாணவர்களைக் கொண்டாட்டத்தில் பங்கேற்க விடாமல் செய்யும்படி அரசாங்கத்தார் கேட்டுக் கொண்டு உள்ளனர். சிறுவயதிலேயே மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது அவர்களுக்கே கேடு தரும் என்று போதிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீமான் அரவிந்தர் கவர்னரின் இந்தத் தீர்மானத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் மாணவர்கள் இந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டி உள்ளார்.

வங்கப் பிரிவினை உற்சவத்தின் போது நடைபெறும் ஊர்வலங்களில் எவரும் கையில் தடியோ அல்லது பிற ஆயதங்களோ வைத்திருக்கக் கூடாது என்றும் சூரியன் மறைந்த அரைமணி நேரத்திற்குப் பிறகு பொது இடங்களில் மக்கள் கூட்டமாக நிற்கக் கூடாது என்றும் காவல் துறை விளம்பரப்படுத்தி உள்ளது.

பிரிவினை உற்சவ ஏற்பாடுகள் பற்றிச் சுரேந்திரநாத் பானர்ஜி, மோதிலால் கோஷ் ஆகியோர் கையெழுத்திட்ட விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. நிகழ்ச்சி நிரல் அவற்றில் குறிக்கப்பட்டிருந்தன. அவை வருமாறு:

> காலையில்: கல்கத்தா நகரத்தின் ஒவ்வொரு பாகத்திலும் விடியற்காலையில் சுதேச கீதங்களைப் பாட வேண்டும். பின்பு கங்கையில் ஸ்நானம் செய்து கோயிலுக்குச் சென்று ஒவ்வொருவரும் மாதாவைத் தியானிக்க வேண்டும். அதற்குப் பிறகு எல்லோரும் பீடன் ஸ்கொயரில் கூடிக் கையில் நோன்புக் கயிறைக் கட்டிக் கொள்ள வேண்டும். அன்று முழுவதும் எவரும் அடுப்பு மூட்டக் கூடாது. கூடிய வரையில் வேலை இல்லாமல் இருக்கப் பிரயத்தனப்பட வேண்டும்.

மாலையில் பகல் நாலு மணிக்கு ஐக்கியக் கூடத்தின் காம்பவுண்டுக்குள் ஓர் பெரிய பொதுக் கூட்டம் நடைபெறும். அப்போது வங்காளப் பிரிவினை கண்டிக்கப்படும். அன்னிய வஸ்து வர்ஜன விரதம் எடுத்துக் கொள்ளப்படும். மூன்று மணிக்கு ஒரு பெரிய ஊர்கோலம் காலேஜ் ஸ்கொயரிலிருந்து புறப்பட்டு ஐக்கிய மண்டபத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தோடு சேரும். கல்கத்தா முழுவதும் உள்ள பஜனைக் கூட்டங்கள் சுதேச கீதங்களைப் பாடிக் கொண்டு காலேஜ் ஸ்கொயரில் கூடவேண்டும்.

இவ்வாறு வங்கப் பிரிவினைக் கொண்டாட்டம் அக்டோபர் 16 ஆம் நாள் காலை முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

வேலை நிறுத்தங்கள் தொடர்பான செய்திகள்

கிழக்கு வங்காளம் காரெபூர் நெசவுச் சாலையில் கூலிகள் வேலையை நிறுத்தி உள்ளார்கள். கடந்த அக்டோபர் 2-ஆம் நாள் கம்பெனி மேனேஜர் கூலிகள் காலை ஐந்து மணி முதல் இரவு எட்டுமணி வரை வேலை செய்ய வேண்டும் என்று கட்டாயப் படுத்தி உள்ளான். கூலிகள் அதற்கு இணங்க வில்லை. அவர்கள் திங்கள் கிழமை முதல் வேலைக்கு வர வில்லை. பிறகு வியாழக்கிழமை நெசவுச் சாலை அதிகாரிகள் கூலிகளை வேலைக்கு வரவேண்டித் தூண்டிப் பார்த்தார்கள் அதற்குக் கூலிகள் அவர்களைக் கல்லால்அடித்து விரட்டி விட்டார்கள். மேற்படி மேனேஜர் கூலிகளால் ஆபத்து வரும் என்று பயந்து அலிபூர் ராணுவப் போலிசை நாடி உள்ளார்.

கௌரீபுரி நெசவுச் சாலையில் வேலை நிறுத்தம் முடிவிற்கு வந்துள்ளது. சனிக்கிழமைகளில் கூலிகள் மாலை 6.00 மணி வரை வேலை செய்வதாக ஒப்புக் கொண்டு வேலைக்குத் திரும்பினர். இதனை ஒட்டி ரிசர்வ் போலிஸ் படை வாபஸ் பெறப்பட்டது.

பாலிபுட் தொழிற்சாலையில் சுமார் 400 கூலிகள் அதிக சம்பளம் வேண்டும் என்று கேட்டதற்கு அதிகாரிகள் உடன் படாததால் வேலையை நிறுத்தி உள்ளனர். கூலிகளால் எந்த விதத் தொந்தரவும் விளைவதற்கு இடம் இல்லை என்றும் அவர்கள் அமைதியாக உள்ளதாகவும் செய்தி தெரிவிக்கிறது. அவர்களுடைய குறைகள் விரைவில் தீர்க்கப்பெற்றுக் கூலிகள்

வேலை செய்யத் தொடங்குவார்கள் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

கல்கத்தாவிற்கு அருகில் உள்ள கங்கினாரா சணல் தொழிற் சாலையில் வேலை செய்கின்ற கூலிகள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டதை அடுத்து அவ்விடத்திற்கு இருபத்தைந்து ரிசர்வ் போலிசார் அனுப்பப்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவிக்கிறது.

இவ்வாறாக வேலை நிறுத்தம் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

பொதுவானவை தொடர்பான செய்திகள்

எகிப்து அரசர் கேடிவ் அவர்களும் அவரது தாயாரும் மெக்காவுக்கு யாத்திரை சென்றதை ஒரு செய்தி குறிப்பிடுகிறது. பிரிட்டிஷ் அரசின் வியாபாரக் கணக்கைப் பிறிதொரு செய்தி கூறியுள்ளது. செப்டம்பர் மாதத்தில் இங்கிலாந்தில் இறக்குமதி 1,458,891 பவுன்; ஏற்றுமதி 1,779,818 பவுன். பெரி பெரி நோயின் காரணத்தைக் கண்டறியப் பிரபல வைத்தியர்கள் முயன்று வருவதாகத் தகவல் கூறப்பட்டுள்ளது. இளவரசர் ரஞ்சித்சிங் பிறந்த தினத்து அன்று 37 விதவைகளுக்கு மாதச்செலவுக்குப் பணம் கொடுக்க உத்தரவிட்டுள்ளார்.

சென்ற எட்டு மாத காலத்தில் பஞ்சாபில் பிரபலமாக நடந்து வரும் சுத்த வைதீக மத ஆரிய சமாஜ நண்பர்கள் இரண்டு பெரிய காரியங்கள் செய்து இருப்பதை அறிய வேண்டுகிறோம். இவை போன்ற நிகழ்ச்சிகள் நமக்குத் தெரிவிக்க இல்லாமல் போகின்றன.. ஐதராபாத் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஒரூரில் பிராமணர் ஒருவர், விதவை ஆன ஒரு சிறு பெண்ணை மணந்து பிறகு அவளும் தானும் கிறித்தவமதம் சேர்ந்து பிள்ளைகள் பிறந்து நெடுநாள் ஆகி அம்மதம் சரிப்படாமல் மறுபடி வைதீக மதத்தில் சேர வேண்டும் என்று பிராயச்சித்தம் செய்துசேர்த்துக் கொள்ளப்பட்டது. இரண்டாவது ஆஸ்திரேலிய வெள்ளைக்காரப் பெண் வைதீக மதத்தில் சேர எண்ணியதில் அவளுக்குச் "சீதா தேவி" என்று பெயர் சூட்டிப் பந்தி போஜனமும் செய்து சேர்த்துக் கொண்டது. இந்த இரண்டு காரியங்களையும் நமது பிராந்தியத்தில் உள்ள வைதீகர் சிலர் மனனம் செய்து அர்த்தத்தையும் விசாரிப்பாராக என்று ஒரு செய்தி இடம் பெற்றுள்ளது.

மிஸ்டர் கரே என்பவர் காங்கிரஸ் தொடர்பாக வங்காளத் தலைவர்களைச் சந்தித்ததாகவும் அவர்களும் காங்கிரசுக்கு வருவதாக ஒப்புக் கொண்டதாகவும் ஒரு வங்காளப் பத்திரிகை எழுதி இருந்தது. இது தொடர்பாகக் கல்கத்தாவில் உள்ள "வங்காளி" பத்திரிகை பின் வருமாறு எழுதி உள்ளது: "மிஸ்டர் கரே வங்காளத் தலைவர்களிடம் பேசியதில் அவர்கள் எப்பொழுதும் போலக் காங்கிரசுக்கு வருவதாக வாக்களித்தனர் என்பது முற்றிலும் ஆதாரமற்றது. வங்காளத் தலைவர்கள் இது பற்றி எவ்விதமான முடிவிற்கும் வரவில்லை என்றும் வருகிற நவம்பர் மாதம் வரையில் எவ்வித முடிவிற்கும் வரமுடியாது என்றும் நாம் சொல்லுகின்றோம்"- என ஓர் செய்தி இடம் பெற்றுள்ளது- இவ்வாறான பொதுச் செய்திகள் பல இந்த இதழில் இடம் பெற்று உள்ளன.

13. விளம்பரங்கள்

''இந்தியா'' இதழில் மேலே சுட்டப்பெற்ற பன்னிருவகையான செய்திகளை ஒரு கோணத்திலும் விளம்பரங்களைப் பிறிதொரு கோணத்திலும் நின்று ஆராய வேண்டி உள்ளது. விளம்பரம் அல்லாத செய்திகளின் இயங்கு தளம் வேறு; விளம்பரங்களின் இயங்குதளம் வேறு. "இந்தியா" இதழில் முன்பு சொல்லப்பட்ட செய்திகளுக்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லாத தகவல்களைக் கொண்டதாக விளம்பரங்கள் பகுதி விளங்குகிறது. இந்த இதழில் வெளிவந்த விளம்பரங்களைப் பின் வருமாறு வகைப்படுத்தலாம்.



மருந்து வகை விளம்பரங்கள்

1. ஐந்தே நிமிடத்தில் நரை மயிர் கருக்கத் தைலம்
2. தேள் கடி விஷ நிவாரணி - கதறிக் கொண்டு வந்தவன் களிப்புடன் செல்வான்.
3. வீரிய சித்தாந்த மாத்திரை - நைட் பில்ஸ்
4. கற்றாழை மடல் லேகியம்
5. எஸ்டி சாரியாரால் கண்டு பிடிக்கப்பட்டது. 10-நாள் சாப்பிடக் கூடிய 20-குளிகை-அடங்கிய டப்பி 1க்கு ரூ.1. 10 நாளில் குணம் இல்லாவிடில் வாங்கின கிரயம் வாபீஸ் செய்யப்படும். சந்தேகப் பட வேண்டாம், யோசிக்க வேண்டாம்.
6. 200 வருஷ காலமாய்ப் பிரசித்தியுடன் நடைபெறுவது மதன் மஞ்சரி மாத்திரைகள்.
7. சகல வர்த்தகர்களுக்கும் வைத்தியர்களுக்கும் அறிவிப்பு.

பத்திரிகைகள் பற்றிய விளம்பரங்கள்

8. "விஜயா"- மாலை வெளியாகும் பத்திரிகை
9. "விஜயா" ஏஜெண்டுகள் வேண்டும்
10. "இந்தியா" ஏஜெண்டுகள் வேண்டும்
11. "லோகானுகூலன்" பத்திரிகை
12. "ரிக் விதானம்"- சர்வ மந்திர பொக்கிஷம்
13. 'கர்மயோகி" மாதந்தோறும் வெளியுாகும் பத்திரிகை.

பிற

14. சுகந்த மூக்குத்தூள்
15. ரிப்பன் பஞ்சாங்கம்
16. ஏல விற்பனை
17. உன் உயிரைப் பற்றி நிராசையாய் இராதே (யோக மோதிரம் பற்றிய விளம்பரம்)
18. சங்கீதம் சங்கீதம்
19. தீபாவளி காலம் வந்து விட்டது - காசி பட்டு பீதாம்பரங்கள்
20. முகமத் மாங்கன்றுகள் தோட்டம்

இவ்வாறான தலைப்புகளில் விளம்பரங்கள் வெளி வந்துள்ளதைப் பார்க்க முடிகின்றது.

பகுதி இரண்டு

"இந்தியா" இதழ்ச் செய்திகள்: வாய்பாடு

"இந்தியா" இதழ் வெளிப்படுத்திய செய்திகள் 13 வகையாகப் பிரித்து இங்குத் தொகுக்கப்பெற்றுத் தரப்பட்டன. 13 வகை என்பது இதழ் ஆசிரியரால் வகைப்படுத்தப்பட்டது அன்று; வாசகர் புரிதலுக்காக இந்நூலாசிரியரால் வகைப்படுத்தப் பட்டது. சித்திரம், சித்திர விளக்கம், வர்த்தமானங்கள் ஆகியன மட்டும் இதழ் ஆசிரியரால் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வகைப்பாட்டை மாதிரி வகைப்பாடாக மட்டுமே கொள்ளுதல் வேண்டும். இந்தியா இதழின் அமைப்பினைப் புரிந்து கொள்ளவும் அதில் கூறப்பெற்றுள்ள செய்திகளை வகைப்பாட்டிற்குள் அடக்கவும் ஆன ஒரு மாதிரிக் கணக்கீடே இங்கு மேற்கொள்ளப் பெற்றது. இந்த மாதிரிக் கணக்கீட்டிலிருந்து கிடைக்கக் கூடிய "வாய்பாடு" ஏறத்தாழ எல்லா "இந்தியா" இதழ்களுக்கும் பொருந்தக் கூடிய வாய்ப்பினை உடையது. இந்த "வாய்பாடு" கண்டுபிடிப்புப் பற்றிய சமூகவியல் ஆய்வாக இனிவரும் நூற்பகுதி அமையும்.

வாய்பாடு ஒன்று: மித தேசியவாத எதிர்ப்பு

லாகூரில் கூட இருக்கும் காங்கிரசுக் கூட்டத்திற்குத் தலைவராக முன்மொழியப்பட்ட சர்.பி. மேத்தா பற்றி இந்த இதழ் கடுமையான முறையில் விமர்சனங்களை வைத்துள்ளது. கருத்துப்பட விளக்கமும் இக்கடுமையை வெளிப்படுத்துவதாக அமைக்கப் பெற்றதை அறிய வேண்டும். கோகலே முதலியோர் புடைசூழ அமர்ந்திருக்கும் பி. மேத்தா பாரத மக்களாகிய பெருங்கடலை நோக்கி "அமைதியாக இரு" என்று கட்டளை இடுகிறார். ஆனால் அலையோ அதற்குக் கட்டுப்படாமல் அவர்கள் மீது மோதி அடித்துச் செல்கிறது. இக்கருத்துப்படம் சொல்ல வருகின்ற செய்தி:

1. கோகலே முதலானோர் ஆதரவுடன் தலைமைப்பதவி பெற்ற பி.மேத்தா ஒட்டு மொத்த பாரத மக்களின் ஒப்புதலோடு தலைமைப்பதவி எய்தவில்லை என்பது ஒன்று.
2. இத்தலைமைப் பதவியையும் இதற்குப் பின்னணியாளர் களையும் பாரத மக்கள் ஏற்க வில்லை என்பது மற்றொன்று.

இவ்வாறான கருத்துப் பின்னணியை முன்வைக்கும் "இந்தியா" இதழ் சர்.பி. மேத்தா தலைமைப் பதவி பெற்றதை வேறொரு கோணத்திலிருந்து கிண்டல் அடிக்கிறது.

> "ஒரு வியாபாரக் கம்பெனி வைத்தால் அதைப் பலப்படுத்த முதலாளிகள் பணம் கொடுத்து ஏஜெண்டுகள் அனுப்பித் தங்கள் வியாபாரத்தைப் பற்றிப் பொய்யாகவோ மெய்யாகவோ புகழ்ந்து பேசிக் கமிஷன், நட்டம், லாபம் முதலானதுகளைப் பற்றி ரகசியத்தில் பேசிக் கொண்டு அந்த வியாபாரத்தைப் பரவச் செய்வது வழக்கம்".

இது போன்ற பாணியில் சர்.பி. மேத்தா காங்கிரசுத் தலைமைப் பதவியை அடைந்துள்ளார் என்று இதழ் விவரித்துச் செல்கிறது. மேத்தாவின் ஏஜெண்டாக வங்காளத் தலைவர்களைச் சந்திக்கத் திரு கரே சென்றதும் வங்களாத் தலைவர்கள் காங்கிரசுக்கு வரச் சம்மதித்து விட்டார்கள் என்ற தகவலையும் விவரித்த இதழ் இறுதியாகத் தேசப் பக்தர்களுக்கு நான்கு கருத்துகளைத் தெரிவித்து உள்ளது.

1. லாகூரில் கூட இருக்கும் காங்கிரசுக் கூட்டம் பாரதம் முழுமைக்குமான சபை அன்று. அதன் தீர்மானங்களைப் பாரதப் பொதுமக்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.
2. அப்படி அது பாரதப் பொதுமக்கள் முழுமைக்கும் உரியது என்று கூறிக் கொள்ளும் நிலையில் அது தேசபக்தர்களும் மிதவாதிகளும் சேர்ந்து எடுத்த முடிவுகளாகத் தீர்மானங்களை அறிவிக்க வேண்டும்.
3. அப்படி இருவரும் சேர்ந்து கூட்டம் நடத்துவது என்றால் தலைமைப் பதவி நியமனத்தில் தேச பக்தர்களின் விருப்பு வெறுப்பும் கலந்து ஆலோசிக்கப் படவேண்டும்.
4. இவை அல்லாத இடத்து அது பொதுமக்கள் சபை அல்ல என்றும் ஏதோ ஆண்டுதோறும் கூடி உணவு உண்டு வீண் வம்பு அளக்கும் கூட்டம் என்றும் தேசபக்தர்களுக்குத் தெரிவித்து விடலாம்.

இவ்வாறாக லாகூர் காங்கிரசுக் கூட்டத்தைப் பற்றிய விமர்சனத்தை இந்தியா இதழ் முன் வைத்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதலே காங்கிரசு அமைப்பிற்குள்

தீவிரத் தேசிய வாத இயக்கத்தாருக்கும் மித தேசிய வாத இயக்கத்தாருக்கும் ஆன போராட்டமும் பூசலும் இரு இயக்கத்தாரையும் எதிர் எதிரே நிறுத்தின. இது காசியில் கூடிய காங்கிரசுக் கூட்டத்திலேயே கடுமையாக எதிரொலித்தது. கோகலே ஒரு புறமும் திலகர் ஒருபுறமும் எதிரெதிர் அணியில் நின்றனர். மிதவாதிகள் பிரிட்டிஷ் அரசுடன் ஒத்துப் போய்ச் சுதந்திரத்தைப் பெற வேண்டும் என்றனர். ஆனால் தீவிரத் தேசிய வாத இயக்கத்தார் ஆயுதம் தாங்கிய புரட்சிக்கும் வெடிகுண்டுப் புரட்சிக்கும் மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். மக்களை இரண்டாகப் பிரித்து மோத விட்டு வேடிக்கை பார்த்தது அரசு. இம்மோதலில் மிதவாதிகள் பக்கம் அரசு ஆதரவு தந்தது. இதனை "இந்து பன்ச்" என்ற இதழைத் தடை செய்ததன் வழியும் அறிய முடியும். இந்தியா இதழின் வர்த்தமானங்கள் பகுதியில் வந்த ஒரு செய்தி: கோகலேயைக் கொலை செய்யத் தூண்டியதாகக் குற்றம்சாட்டி இந்த இதழ் தடை செய்யப்பட்டது. தடை செய்தது மித வாதத்திற்கான ஆதரவு; தடை தீவிரத் தேசிய வாதத்திற்கான எதிர்ப்பு; இவ்வாறுதான் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதி நியமனம் பெற்ற கிருஷ்ணசாமி அய்யர் பற்றி இந்த இதழில் வெளிவந்த கும்மிப் பாட்டின் சில அடிகள் மிதவாதிகளின் செய்கைகளைக் கிண்டல் செய்கின்றன.

இனி அவரைத் தேசபக்தர் எனக் கூற
என் நாவும் எப்படி எழுமம்மா
இனி அவர் போதித்த சுராச்சியத்தை
எவ்விதம் நம்புவேன் நானும் அம்மா

காலனி சுராச்சியம் வேண்டும் என்றே இவர்
கையடித்துச் சொன்ன சத்தியம் எல்லாம்
மேலான பெரியோர்கள் நம்புவரோ, அதை
மெத்த இகழ்ச்சியும் செய்யாரோ

மிதவாதிகள் என்ற பேருக்கே குறைவு
வந்ததம்மா இவர் செய்கையாலே
அதிகாரம் கவுரவம் இந்த இரண்டும்
அவர்களின் நோக்கம் என்று இகழலாச்சு. . .

இந்தக் கும்மிப்பாடலில் மிதவாதிகளின் நோக்கம், அதிகாரத்தைப் பெறுவதும் கவுரவம் தேடுவதும்தான் என்றும் சுயராச்சியம் என்ற

முழக்கம் வெறும் பேச்சு என்றும் மிதவாதிகளின் போக்குகள் விமர்சிக்கப் பெற்றுள்ளன.

ஆக "மிததேசிய வாத எதிர்ப்பு"- என்பது இந்தியா இதழ்ச் செய்திகள் வெளிப்படுத்தும் கூறுகளுள் ஒன்று என்பதை அறிய முடிகிறது. இந்தக் கூற்றினை வாய்பாடு: 1 என்று வைத்துக் கொள்ளலாம்.

வாய்பாடு இரண்டு: தீவிரத் தேசிய வாத ஏற்பு

மிததேசியவாத எதிர்ப்பு என்ற நாணயத்தின் இன்னொரு பக்கம் தீவிரத் தேசிய வாத ஆரவு என்பதுதான். மித தேசிய வாதத்தை எதிர்த்து எழுதப்பெற்ற எழுத்துகள் அனைத்தையும் தீவிரத் தேசிய வாதத்திற்கு ஆதரவானவையாகக் கொள்ளுதல் வேண்டும்.

> தேசத்தில் நவீனகிளர்ச்சி வெகு மும்முரமாய்ப் பரவி வருகின்றது. பிரிட்டிஷ் தன்னரசு அதை அடக்கப் பல துஷ்ட சட்டங்கள், கொடிய தண்டனைகள் செய்தும் அது ஓயாமல் முன்னிலும் வேகமாய்த் தேசம் எங்கும் தழைத்து வளர்ந்து வருகிறது. நாகப்பூரில் தேச பக்தர்களின் ஐக்கிய காங்கிரெஸ் பிரிடிஷ் கவர்ன் மெண்டால் நிறுத்தப்பட்டது. சென்னை ஸங்கேத காங்கிரெஸ் இழவு நடைபெற்றது. வங்காள நவமணிகள் வெளியேற்றப்பட்டனர். ஸ்ரீ அரவிந்தர் மாசில்லாமணி என்று விடுதலை அடைந்தனர். . . தேச பக்தர்களுக்குச் சிறைவாசம், தீபாந்திர சிக்ஷை, தூக்கு இவைகள் மெத்த சகஜமாய் விட்டன.

என்ற தலையங்கம் பிரிட்டிஷ் அரசையும், மிதவாத அரசியலையும் சேர்த்தே கண்டிக்கிறது. தீவிரத் தேசிய வாதம் "நவீன கிளர்ச்சி" என்ற பெயரால் பாரதியாரால் சுட்டப்பெற்றுள்ளது. தவிர இக்காலக்கட்டத்தில் வந்த தீவிரத் தேசியவாத எழுத்துகளில் இடம்பெறும் "தேச பக்தர்" என்ற தொடர் தீவிரத் தேசிய வாத இயக்கத்தாரையே குறிப்பிட்டுள்ளது. இதற்கு இந்த இதழே சாட்சி ஆகும். தேசபக்தர்களுக்குச் சிறைவாசம், வெகு தொலைவில் உள்ள தீவுகளில் சிறைத் தண்டனை, தூக்குத் தண்டனை என்பவை தீவிரத் தேசிய வாத-இயக்கத்தாருக்கு அளிக்கப் பெற்றவை என்று பொருள் கொள்ளுதல் வேண்டும்.

'யார் உண்மையான அரசர்கள்"- என்ற கட்டுரையில் வரும் அரசர் ஆகாதார் குணங்களைப் பட்டியலிடும் பகுதியில் ஒன்று

இங்கே குறிக்கத்தக்கது. "எவர் ஒருவர் விதி வசத்தால் தம்மிடம் அகப்பட்டிருக்கும் பலகீன இனத்தாரின் சேமத்தின் பொருட்டுப் பாடுபடும் தேச அபிமானிகளைத் துன்பத்திற்கு உள்ளாக்கி அவர்களுடைய நல்ல எண்ணம் நிறைவேறாமல் செய்வதாக நினைத்துத் திருப்தி அடைகிறாரோ அவர் அரசர் ஆகார்"- இந்தக் கருத்துப்பகுதியின் இரண்டு செய்திகள் குறிக்கத்தக்கன.

1. தேசமக்களின் நன்மைக்காகப் பாடுபடுவோர் தேசபக்தர்கள்.

2. இத்தேசபக்தர்களைத் துன்பத்திற்கு உள்ளாக்கி அவர்கள் எண்ணத்தை ஈடேறாமல் செய்வது பிரிடிஷ் அரசு.

இந்தப் பகுதியில் "தேசபக்தர்களின் எண்ணத்தை நிறைவேறாமல் செய்வதாக நினைத்துத் திருப்தி அடையும் அரசு" என்று வரும் பகுதி சுட்டத்தக்கது. தீவிரத் தேசியவாத இயக்கத்தின் எண்ணத்தைத் தடுத்துவிட்டோம் என்று அரசு நினைக்கிறது. ஆயின் உண்மைநிலை அவ்வாறு இல்லை என்பதை இப்பகுதி கோடிட்டுக் காட்டுகிறது.

இந்தியா எங்கும் தீவிரத் தேசிய வாத இயக்கத்தார் சிறையில் அடைக்கப்பட்டதையும் சிறைத்தண்டனை முதலியன விதிக்கப்பட்டதையும் "இந்தியா" பத்திரிகையின் இரண்டாவது ஆண்டுச்செய்திக் குறிப்பு விவரிக்கிறது. அரவிந்தர் முதலியோர் மாணிக்கத்தோலா வெடிகுண்டு வழக்கில் சிறை வைக்கப் பெற்றதையும் பரஞ்ஜபாய், திலகர், வ.உ.சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய சிவா, ஹரிசர்வோத்மராவ், போடி நாராயணராவ், அதிராஜ சுரேந்திரநாத், பசவய்யா, நரசிம்ம சிந்தாமணி சேல்கார், சீனிவாச்சாரியார் முதலான பலர் பிரிட்டிஷ் நீதி மன்றங்களில் ராஜ நிந்தனைக்காகத் தண்டிக்கப் பட்டதையும் இந்தியா இதழ் பட்டியலிட்டுள்ளது. சுயராஜ், விகாரி, கேசரி, திலக், வந்தேமாதரம், இந்தியா முதலான 18 பத்திரிகைகளின் ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டும் அச்சுக் கூடங்கள் பறிமுதல் செய்யப்பட்டும் உள்ளதை இந்தியா பத்திரிகை விவரித்து உள்ளது.

மாணிக்கத்தோலா வெடிகுண்டு வழக்கில் கைதாகிப் பின்பு பிரிட்டிஷ் அரசு சார்பில் சாட்சியாக மாறிய நரேந்திரநாத் கோஸ் என்பவரைச் சிறையில் ரிமாண்டில் இருக்கும்போது கன்னைய லால்தத் சுட்டுக் கொன்றார். இதற்காக இவருக்கும்

சத்யேந்திரநாத் வாசுவுக்கும் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதே வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞரான ஆசுதோஷ் பிச்வாசுவைச் சாருசந்திரபோஸ் என்னும் சிறுவன் நீதி மன்றத்திற்கு வெளியே சுட்டுக் கொன்றான். பின்பு சாரு தூக்கிலிடப்பட்டான்.

வர்த்தமானங்கள் பகுதிகளில் வரும் வழக்கு பற்றிய பல செய்திகளும் கலகம் பற்றிய செய்திகளும் தீவிரத் தேசிய வாத இயக்கச் செய்திகள் ஆகும்.

தீவிரத் தேசிய வாத இயக்கத்தார் இந்தியத் தேசிய விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடுவதும் அதனைப் பிரிட்டிஷ் அரசு பலவிதங்களில் ஒடுக்கி நசுக்குவதும் இதனால் இயக்கத்தார் படும் துன்பங்களும் இந்தியா இதழ் முழுவதும் பரவலாக இழையோடியுள்ளன. இயக்கத்தார் படும் துன்பங்களைக் கூறும் அதே வேளையில் பலர் குற்றம் உறுதிப்படவில்லை என்று விடுதலையான செய்தியும் வெளியிடப்பட்டுள்ளது.

தீவிரத் தேசிய வாதம் தீவிரம் அடையக் காரணமான வங்கப் பிரிவினை எதிர்ப்பு நாள் கொண்டாட்டங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. வங்கப் பிரிவினை எதிர்ப்பு நாளைத் தடுப்பதற்கும் அதில் மாணவர் முதலானோர் பங்கேற்காமல் செய்வதற்குமான முயற்சிகள் அந்நிய அரசால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளமையை "வர்த்தமானங்கள்" செய்திப் பிரிவு விவரிக்கிறது. பிரிவினை எதிர்ப்புக் கொண்டாட்டம் தொடர்பாக நடைபெறவுள்ள ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் முதலியவற்றைச் சென்ற ஆண்டு போலவே இந்த ஆண்டும் தடுத்துவிடக்கூடும் என்ற ஒரு வதந்தியை இந்தியா பத்திரிகை வெளியிட்டுள்ளது. அதே சமயம் வங்கப்பிரிவினை எதிர்ப்பு நாளைக் காலை முதல் மாலை வரை எவ்விதம் கொண்டாட வேண்டும் என்ற தகவலையும் வெளியிட்டுள்ளது.

தீவிரத் தேசியவாத இயக்கத்தவராகக் கருதி அரவிந்தர் கைது செய்யப்பட்ட சிறைவாசத்தின் வரலாறு தொடராகவே இந்த இதழில் வெளியிடப்பட்டது.

ஆகத் தீவிரத் தேசிய வாத இயக்க ஆதரவு என்பது "இந்தியா" பத்திரிகைச் செய்திகள் வெளிப்படுத்தும் கூறுகளின் பெரும்பகுதி என்பது தெரிய வருகின்றது. இந்தக் கூறினை வாய்பாடு : 2 என்று வைத்துக் கொள்ளலாம்.

வாய்பாடு மூன்று: அந்நியர் ஆதிக்க எதிர்ப்பு

மிதவாத இயக்கம், தீவிர வாத இயக்கம். இரண்டிற்கும் அந்நிய ஆதிக்க எதிர்ப்பே அடிப்படை ஆகும். பல்வேறு நிலைகளில் ஆதிக்கம் செலுத்தி அடிமைப் படுத்தி ஆட்சி செலுத்தி வந்த பிரிட்டிஷ் அரசு எதிர்ப்பு என்பதே " இந்தியா" இதழின் அடித்தளக் கட்டுமானம் ஆகும். மிதவாத இயக்கம் பிரிட்டிஷ் அரசினைச் சார்ந்து இயங்கி உரிமை பெறவேண்டும் எனும் நோக்கில் செயற்பட்டதால் அதுவும் தீவிரத் தேசிய வாத இயக்கத்தாருக்கு எதிரானதாக அமைந்தது.

உண்மையான அரசர் யார் என்ற வினாவை எழுப்பி அரசர்களின் பண்பு உள்ளிட்ட சிலவற்றை விவரிக்கும் கட்டுரை ஒன்று "உண்மையான அரசர்கள்" என்ற பெயரில் இந்தஇதழில் வெளியாகி உள்ளது. இக்கட்டுரையில் அரசர் ஆகாதார்க்கு உரிய பண்புகள் பட்டியல் இடப்பட்டுள்ளன. அவை வருமாறு:

1. எவர் ஒருவர், மக்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டப் பாடுபட்டுச் சேர்த்த பொருள்களைச் சட்டம் என்ற ஆயுதம் கொண்டும் அச்சுறுத்தியும் துன்புறுத்தியும் பறித்துத் தம் தனிப்பட்ட நன்மைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறாரோ அவர் அரசர் ஆகார்.

2. எவர் ஒருவர் தம் அறிவினாலும் தம் மக்கள் அறிவினாலும் கொடூரமான போர்க் கருவிகளைக் கண்டு பிடித்து அவற்றால் நலிவடைந்த இனத்து மக்களை வென்று அவர்களுடைய சொத்துகளைக் கொள்ளை அடித்துக் கொண்டு போகிறாரோ அவர் அரசர் ஆகார்.

3. எவர் ஒருவர் தந்திரத்தினாலும் போரினாலும் நலிவடைந்த இனத்தாரை வென்று அந்த இனத்தில் உள்ள சில தேச துரோகிகளின் துணைக்கொண்டு அவ்வின மக்களை நம்பும்படியான ஏற்பாடுகளைச் செய்து நேர்மையாக ஆளுவது போலப் பாவனை செய்கிறாரோ அவர் அரசர் ஆகார்.

4. எவர் ஒருவர் விதிவசத்தால் தம்மிடம் அகப்பட்டிருக்கும், நலிவடைந்த இனத்தாரின் நலத்திற்காகப் பாடுபடும் தேசபக்தர்களைத் துன்பத்திற்கு உள்ளாக்கி அவர்களின் நல் எண்ணம் ஈடேறாமல் செய்வதாக நினைத்துத் தம் மன நிறைவடைகிறாரோ அவர் அரசர் ஆகார்.

மேலே கூறப்பெற்ற கருத்துகள் பழங்கால அரசர் வரலாற்றில் இருந்து ஆராய்ந்து எடுத்துக் கூறப்பெற்றவை போலத் தோற்றம் அளிக்கக் கூடியவை. ஆனால் அவை முழுவதும் பிரிட்டிஷ் ஆட்சியைப் பற்றிக் கூறப்பட்டவை என்பதே உண்மை. இந்தியா சுரண்டப்படுவதும், இந்தியரைப் பிரித்து ஆண்டு அவர்களுக்குள் பூசல் மூட்டுவதும், பல்வேறு சட்டங்கள் தண்டனைகள் மூலம் சுதந்திரத்திற்குப் பாடுபடுவோரைத் தண்டிப்பதுமான கருத்து உருவாக்கங்களே மேலே அரசரின் தகுதி இன்மையாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக அந்நிய ஆதிக்கத்தின் பண்பு வரையறையாக இவற்றைக் கொள்ள முடியும். ஆனால் இவற்றை நேரிடையாகக் கூறாமல் பொது நிலையில் அரச வரலாற்றுச் செய்தியாக ஒரு கட்டுரையில் கூறி இருப்பது ஓர் இதழியல் உத்தி என்றே கூறுதல் வேண்டும்.

> பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளை எடுத்துக்காட்டி நிர்ப்பயமாய்க் கண்டித்து நியாய மார்க்கத்தை அவர்களுக்கு உபதேசித்து வந்தோம்.

என்று பிரிட்டிஷ் அரசின் "கொடுமைகள்" என்று கூறும் "இந்தியா" பத்திரிகையின் தலையங்கப்பகுதி பின்வருமாறு அக் கொடுமைகளைப் பட்டியல் இடுகிறது:

> பல தேசபக்தர்கள் தண்டிக்கப்பட்டனர். பல பத்திரிகைகள் அடைக்கப்பட்டன. பல சமிதிகள் கலைக்கப்பட்டன. தேசபக்தர்களுக்குச் சிறைவாசம் , தேச நிர்வாஸம், தீபாந்திர சிக்ஷை, தூக்கு இவைகள் மெத்த சகஜமாய் விட்டன. பலவித போலிஸ் உபத்திரவங்கள், பலவித வீண்வரிகள், பல தப்பு கேஸ்கள், பல அநியாய தண்டனைகள், பல துஷ்ட சட்டங்கள், பல அநீதிகள் இவை நாடெங்கும் மலிந்து விட்டன.

இவ்வாறு "இந்தியா" இதழ்த் தலையங்கம் பிரிட்டிஷ் அரசின் செயல் பாடுபற்றிக் கடுமையான முறையில் கருத்துத் தெரிவித்துள்ளது. ஒட்டுமொத்தமாகப் பிரிட்டிஷ் அரசின் செயல்பாடே சரியில்லை என்று கூறுவதாக இப்பகுதி அமைந்து விளங்குகிறது.

விசாரணைக் காலத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ரிமாண்டில் இருக்கும் போது காவல்துறையினர் கொடுமையான முறையில் நடந்து கொண்ட விதம் பற்றிப் பல தகவல்களை இதழ்

தந்துள்ளது. காவல்துறையினர் மார்பு எலும்புகள் முறியும்படி ஏறி மிதித்துத் தாங்கள் கூறுவது போல நீதிமன்றத்தில் கூற வேண்டும் என்று துன்புறுத்திய தகவல் இடம் பெற்றுள்ளது. வங்காளத்தில் வெடிகுண்டு எறிதல், வீடு சோதனைகள், ஆயுதம் கண்டெடுத்தல், ஜாமீன் வாங்குதல் இவை தினசரி நிகழ்ச்சிகள் ஆகிவிட்டதைப் பிறிதொரு தகவல் தெரிவிக்கிறது.

"இந்தியா" இதழ் அலுவலகத்திற்கு வந்து சென்ற சிலரைப் பற்றிக் கடுமையான முறையில் இதழ் குறை கூறி உள்ளது.

> "நமது இந்தியா ஆபீஸ்க்கு அநேக கனவான்கள் விஜயம் செய்தனர், ஆனால் சில சமயங்களில் வயிறு பிழைக்க மனத்தையும் மானத்தையும் ஞானத்தையும் பைசாவுக்கு விற்றுவிட்ட அயோக்கிய நாய்களும் பன்றிகளும் கழுதைகளும் கூட எமது ஆபீஸ் உள்ளே வந்தும் வெளியே யிருந்து பார்த்துக் கொண்டும் போய் விட்டதாகத் தெரிகிறது"

இச்செய்தி "இந்தியா" இதழின் விரோதிகள் சிலரை இனம் காட்டுவதாக உள்ளது. பிரிட்டிஷ் அரசிடம் வேலை பார்த்துப் பாரத விடுதலைக்கு எதிராக வேலை செய்யும் சிலரை அடையாளப்படுத்துகிறது.

அந்நிய அரசு நிர்வாகத்தைக் கடுமையாகச் சாடுவது ஒருபக்கம் என்றால் இன்னொருபக்கம் அந்நியரை நகையாடவும் செய்கிறது "இந்தியா" இதழ். "சலாம் சள்ளை" என்ற தலைப்பில் அமைந்த செய்தி ஆங்கில ராணுவ அதிகாரி ஒருவன் குதிரையில் வந்து இந்தியன் ஒருவனிடம் வணக்கம் செய்யச் சொன்ன நிகழ்ச்சியைச் "சள்ளை" அதாவது "தொல்லை" என்று பெயர் சூட்டி நகையாடுகிறது.

"சோல்ஜர் திருடினான்" என்ற தலைப்பில் வந்த செய்தி டார்ஜெட் ரெஜிமெண்டைச் சேர்ந்த இராணுவ வீரன் ஒருவன் மௌண்ட் ரோட்டில் உள்ள கடையில் இரண்டு டப்பி பற்பொடியையும் ஒரு டப்பி பற்காவியையும் திருடி நீதிமன்றத்தில் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை பெற்றதை விவரிக்கிறது.

அந்நிய அரசின் குறைபாடுகளை வெளிச்சம்போட்டுக் காட்டி வெளியிட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தும் உத்தியாகவே இவற்றைக் கொள்ளுதல் வேண்டும்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி நியமனம் பெற்ற கிருஷ்ணசாமி அய்யர் பற்றிய செய்திகளும் ஆங்கிலேயரின் பிரித்தாளும் உத்திக்குத் தக்க எடுத்துக்காட்டு ஆகும். சூரத் காங்கிரசு மாநாட்டில் திலகரைத் திட்டியதும் அவர்க்கு விரைவில் சிறைத்தண்டனை கிடைக்கும் என்று கூறியதும் சென்னையில் மிதவாத காங்கிரசுக் கூட்டத்தைக் கூட்டியதும் கூட்டம் முடிந்த மறுதினமே கவர்னருடன் விருந்து உண்டதும் அய்யர் அவர்களுக்கு நீதிபதி பதவியை வாங்கித் தந்தன என்று கும்மிப்பாட்டு விவரிக்கிறது. இக்கும்மிப்பாட்டில் வரும்

மெய்யன்பு பக்தர்கள் சிக்குண்ட போது
மிக சிக்ஷை விதிக்கும் வரத்தைப் பெற்றார்

என்ற அடிகள் சுட்டத்தக்கவை. அதாவது தீவிரத் தேசிய வாத இயக்கத்தார் சிக்கும் போது அவருக்குக் கொடிய தண்டனைகள் வழங்கும் வரத்தைப் பெற்றார் என்பதே அப்பாடல் அடிகளின் பொருளாகும். அதாவது இந்தியரைக் கொண்டே இந்தியரைத் தண்டிக்கும் பிரித்தாளும் உத்தி இங்கு "இந்தியா" இதழால் கண்டிக்கப்படுவதாக உணரலாம்.

இவ்வாறாகக் கொடிய ஆயுதங்கள், சட்டங்கள், தண்டனைகள், தடைசெய்யப்படுதல், மூடப்படுதல், தூக்கிலிடுதல், பிரித்தாளும் உத்தி, கொடிய வரி போடுதல், துன்புறுத்துதல் முதலான பல்வேறு நிலைகளில் அமைந்த அந்நிய அரசின் செயல்பாடுகள் கடுமையான முறையில் இந்தியா இதழில் கண்டிக்கப் பெற்றுள்ளன.

ஆகப் பிரிட்டிஷ் அரசு எதிர்ப்பு என்பது "இந்தியா" இதழ்ச் செய்திகள் வெளிப்படுத்தும் மையக் கூறாகத் தெரிய வருகின்றது. இந்தக் கூறினை வாய்பாடு:3 என்று வைத்துக் கொள்ளலாம்.

வாய்பாடு நான்கு: சுதேசியம் ஏற்பு

சுதேசிய ஆதரவு என்பது தேசிய வாத இயக்கத்தார் சொந்த நாட்டுப் பொருள், சொந்த நாட்டு அரசியல், சொந்த நாட்டு மொழி, சொந்த நாட்டினரின் ஆட்சி என்பதாகப் பொருள் கொண்டு அந்நிய ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக முன்வைத்த அரசியல் ஆகும்.

இந்தியாவில் விடுதலை இயக்கம் கூர்மைப் படுத்தப்பெற்ற இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் சுதேசியத்

தொழில் முதலான கருத்துகள் இந்தியாவில் முன் வைக்கப் பெற்றன. இந்தியர்கள் பங்கேற்கும் தொழில் முனைப்புகள் வரவேற்பைப் பெற்றன. அந்நியப்பொருள் மறுப்பு ஓர் இயக்கமாகவே நிகழ்த்தப் பெற்றது. "அந்நியப் பொருள் மறுப்பு" என்பது "அன்னிய வஸ்து வர்ஜனக் கொண்டாட்டம்" என்பதாகப் பெரிய அளவில் நிகழ்த்தப்பட்டது. இதற்குரிய நாளாக ஆகஸ்ட்டு 7-ஆம் நாள் அறிவிக்கப்பட்டிருந்தது. இது பற்றி "இந்தியா" இதழ் வெளியிட்டுள்ள செய்தி ஒன்று வருமாறு:

> வங்காள கவர்ண்மெண்டார் தீர்மானம் வருமாறு: அன்னிய வஸ்து வர்ஜனக் கொண்டாட்டத் தினமாகிய கடந்த ஆகஸ்டு மாதம் 7க்குச் சில தினங்கள் முன்பாக வங்காளத்தில் உள்ள பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் கார்டியன்களும் அவரவர்களுடைய சிறுவர்களின் நன்நடத்தையின் நிமித்தமாகவும் இளைமையான சித்தத்தை உடைய அவர்கள் இப்போதே ராஜ விவகாரங்களில் தலையெடுத்துக் கொள்வதனால் அவர்களுக்கே தீமை செய்து கொள்கிறவர்கள் ஆவார்கள் என்ற நோக்கத்துடனும், மாணாக்கர்கள் வருகிற வர்ஜனக் கொண்டாட்டத்தில் சேரக் கூடாது என்று வங்காளத்து லெப்டினெண்ட் கவர்னர் உத்தரவு செய்தார்.

இந்தச் செய்தி மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பங்கேற்கும் பெரும் போராட்டமாக வர்ஜனக் கொண்டாட்டம் நிகழ்த்தப்பட்டிருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

> "தூத்துக்குடி சுதேசிக்கப்பல்", "தூத்துக்குடி ஸ்வதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கு ஓர் நன்கொடை" எனும் தலைப்பில் அமைந்த செய்திகள் சுதேசியத் தொழில் உயர்வு பற்றிய கருத்துகளை வெளியிட்டுள்ளன. தூத்துக்குடி சுதேசிக் கப்பல் கம்பெனியின் கப்பல்கள் புறப்பட இரண்டு லட்சம் ரூபாய் தேவைப்படுவதாகவும் இதனைத் தேச பக்தர்களும் செல்வந்தர்களும் திரட்டித் தந்து பாரதமாதா அருள் பெற வேண்டும் என்றும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நாடகம் நடத்தி வரும் நாடகக் கம்பெனியார் சிலரும் சர்க்கஸ் நடத்தி வரும் சர்க்கஸ் கம்பெனியார் சிலரும் தூத்துக்குடி சுதேசிக் கப்பல் கம்பெனிக்குத் தம் ஒருநாள் வசூலை நன்கொடையாக வழங்கிய செய்தி விரிவாகக்

கூறப்பெற்றுள்ளது. இப்படி நன்கொடைகள் பற்றிய விவரங்களைத் த்ந்து இறுதியாக,

இப்படி நமது நாட்டு சர்க்கஸ் கம்பெனியார்கள் ஹரி கதா கலேட்சபம் செய்யும் பாகவதர்கள் சங்கீத கச்சேரி செய்யும் பிரசித்தி பெற்ற பாடகர்கள் பாடகிமார்கள் ஆகிய இவர்கள் எல்லாம் பிரதி மாதமும் ஒரு நாளைய வருமானத்தை நமது சுதேசிய கப்பல் கம்பெனிக்கு நன்கொடை அளித்தல் விசேச சுதேசிய உபகாரமாய் இருக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி என்று பலதிறப்பட்ட மக்களும் நன்கொடை அளிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப் பெற்றதை அறிய முடிகின்றது.

ஆக அந்நியப் பொருள் மறுப்பு, சுதேசியத்தொழில் ஏற்பு, ஆதரிப்பு, எனும் இவற்றை "இந்தியா" இதழ்ச் செய்திகள் வெளிப்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது. இவற்றை வாய்பாடு:4 என்று வைத்துக்கொள்ளலாம்.

வாய்பாடு ஐந்து : பெண்ணிலை உயர்வு

பெண் நிலை உயர்வு பற்றிப் பாரதியார் பல்வேறு நிலைகளில் பேசி உள்ளார். இந்தியா இதழும் பெண் நிலை உயர்வு பற்றி அவ்வப்போது கருத்துகளை வெளியிட்டுள்ளது. "ஸ்ரீ பார்த்தசாரதிசுவாமி இந்து பெண்கள் பாடசாலை" என்ற தலைப்பில் அமைந்த செய்தி, பெண்கல்வியை வரவேற்று நிதிக்கொடை தருமாறு வேண்டுகோள் ஒன்றையும் வெளியிட்டுள்ளது. சென்னைத் திருவல்லிக்கேணியில் 1905-இல் சபாபதி அய்யர் அவர்களால் இப்பள்ளி தொடங்கப் பெற்றுள்ளது. இப்பள்ளியின் நிர்வாக மாற்றமும் இடமாற்றமும் இச்செய்திக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன.

இப்பள்ளியில் இப்போது எண்பது சிறுமிகள் படிக்கிறார்கள். மேற்படி பாடசாலையின் உபயோகத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டுப் பாரத நாட்டில் ஸ்திரீகளின் அபிவிருத்தியை உண்மையாக விரும்புகிற தேசாபிமானிகள் திரவியத்தினாலும் முயற்சியினாலும் சகாயம் செய்ய வேண்டும் என்று மேற்படி கமிட்டியரால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"பாரத நாட்டில் ஸ்திரீகளின் அபிவிருத்தியை உண்மையாக விரும்புகிற" என்ற தொடர் சுட்டிக் காட்டத் தக்கது.

"இந்துக்களின் வீரம்" என்ற கடிதப்பகுதி வேறொரு கோணத்திலிருந்து பெண்நிலையை விவரித்துள்ளது. இலக்கியச் சுவை நிறைந்த இக்கடிதப்பகுதி புதுக்கவிதைப் பாணியைக் கொண்டது. பூஞ்செடிகளுக்கும் வீட்டுப்பெண்களுக்கும் உள்ள பண்புகளைக் கவித்துவத்தோடு இப்பகுதி வருணிக்கிறது.

> பெண்களுக்குப் போலவே இவைகளுக்கு (பூச்செடிகளுக்கு) இச்சக வார்த்தைகள் சொல்ல வேண்டியது இல்லை. பணம் காசு கொடுத்து அவற்றைச் சந்தோஷிபிக்க வேண்டியதில்லை. நகைகள் புடவைகள் இவை கொடுக்க வேண்டியதில்லை. நல்ல வார்த்தைகள் சொல்லி வசப்படுத்த வேண்டும் என்று முயற்சித்தாலும் அவை கேட்பதில்லை. அவை என் வார்த்தைக்குப் பதில் சொல்வதில்லை. . . அவை எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்கும். ஒரு நாளும் அழுவதில்லை. ஆசை, மோசம் முதலியவை அவைகளிடத்தில் கொஞ்சமும் இல்லை. இங்கிலீஷ் பள்ளிக் கூடங்களில் படித்துத் தேறியவர்களின் குணம் அவற்றில் ஒருபோதும் காணப்படுகிறது இல்லை; பிடிவாதம் இல்லை.

இந்தப் பகுதி பாரதியார் வாழ்ந்த காலத்தில் சமூகத்தின் பெண்நிலை பற்றிய இன்னொரு பக்கமாகக் கொள்ளுதல் வேண்டும். இவற்றிலிருந்து எல்லாம் பெண்கள் வெளியேறி மேனிலை எய்த வேண்டும் என்பதுதான் அந்தக் காலத்துப் பெண்நிலைவாதிகளின் ஆசையாக இருந்தது போலும்.

ஆகப் பெண்நிலை உயர்வு பற்றிய சிந்தனைப் போக்குகளை வெளிப்படுத்துவதும் "இந்தியா" இதழின் பிறிதொரு நோக்கமாக இருந்துள்ளதை அறிய முடிகின்றது. இவற்றை வாய்பாடு : 5 என்று வைத்துக் கொள்ளலாம்.

வாய்பாடு ஆறு : இந்து சமய ஏற்பும் சமய ஒற்றுமை ஏற்பும்

மத நல்லிணக்கம் மத ஒற்றுமை என்பது வேண்டப் பெற்ற அதே காலக்கட்டத்தில் விடுதலை இயக்கத்தை இந்து சமயத்தின் பேரிலும் ஒருங்கிணைக்க வேண்டி இருந்தது. விடுதலைப் போராட்டத்தின் கருவிகளுள் இந்து சமயமும் பேரிடத்தைப் பெற்று விளங்கியது. வங்கப் பிரிவினையை

எதிர்த்து நடத்திய பிரிவினை நாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாகக் கங்கையில் நீராடலும் கோயிலுக்குச் செல்லலும் நோன்பு கயிறு கட்டிக் கொள்ளலும் நிகழ்த்தப் பட்டதை "இந்தியா" இதழின் வர்த்தமானங்கள் பகுதி விவரிக்கிறது. சுதந்திர தேவி, பாரதமாதா என்பன கடவுள் மரபினை ஒட்டிக் கட்டி எழுப்பப் பெற்றவையே.

> இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையே தேசபக்தர்கள் மனந்தளராமல் கடவுளை நம்பி ஸ்ரீ பாரத மாதாவின் திருத்தொண்டு பூண்டு தேச சேவை செய்து வருகிறார்கள்.

என்ற இந்தியாவின் தலையங்கச் செய்தி ஒரு சான்று. இந்திய விடுதலைக்காக மக்களை ஒருமுகப்படுத்த இந்துமதம் கருவியாகப் பயன்படுத்திய அதே வேளையில் இந்து முசுலீம் ஒற்றுமையும் மத நல்லிணக்கமும் வேண்டப்பெற்றுள்ளன. வங்காளப் பிரிவினை எதிர்ப்பு என்பதே இந்து முசுலீம் பிரிவினை எதிர்ப்பாகத்தான் ஒரு சாராரால் பார்க்கப்பட்டது. வங்கப் பிரிவினை என்பது இந்துக்கள் மிகுதியாக வாழும் பகுதியையும் முசுலீம் மிகுதியாக வாழும் பகுதியையும் தனித்தனியே பிரிட்டிஷ் அரசு பிரிவினை செய்ததுதான். இதனை எதிர்த்துதான் சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்தது. தீவிரத் தேசியவாதம் கூர்மை பெறுவதற்கும் இதுதான் காரணமானது. இந்தியா இதழ் மதவேற்றுமைகளை நிராகரித்தது. மத நல்லிணக்கம் மத ஒற்றுமை ஆகியன தேச விடுதலைக்குக் கருவியாகப் பயன்பட வேண்டும் என்று மொழிந்தது.

> சுதேசிய சாதீய மகா தர்மத்தை ஓர் சிறந்த பரிசுத்தமான கட்டளை என்று கடவுள் நமக்குப் பிரசாதித்திருக்கிறார். இக்கட்டளையை நிறைவேற்ற வேண்டியது ஸ்ரீ பாரத மாதாவின் சத் சந்தானங்களின் முழுமுதற் கடமை. *மத வேற்றுமைகள் காய்கறி பதார்த்த ருசி வகை வேற்றுமை போன்றது. . . நம்மவர்கள் பொது நலக் காரியங்களில் தங்கள் ஜாதி, மத வேற்றுமை பாராட்டாமல் ஒத்துழைத்து வரவேண்டும் என்பதே நமது பிரார்த்தனை.

இந்தியா பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு செய்தித் தொகுப்பில் இடம் பெற்றுள்ள இப்பகுதி அடிக்கோடிட்டுக் குறிக்கத் தக்கது.

---

* அடிக்கோடு நூலாசிரியரால் தரப்பெற்றது.

ஆக இந்துசமய ஏற்பும் இந்து இசுலாம் சமய நல்லிணக்கமும் பொது நலத்திற்காக ஒருங்கிணைந்த செய்திகளை "இந்தியா" இதழ் வெளிப்படுத்தி உள்ளது இவற்றை வாய்பாடு : 6 என்று கொள்ளலாம்.

பகுதி மூன்று

"இந்தியா" இதழ்ச் செய்திகள்: வகைப்பாடும் வாய்பாடும்

இதுகாறும் "இந்தியா" இதழ் ஒன்றினை எடுத்துக் கொண்டு அதன் அமைப்பு முறை பற்றியும் அந்த இதழில் வெளிவந்த செய்திகளின் வகைப்பாடு பற்றியும் வகைப்படுத்தப் பெற்ற அச்செய்திகளிலிருந்து பெறப்படும் பிழிவான வாய்பாடு பற்றியும் விவரமாக எடுத்துரைக்கப் பெற்றது. மீண்டும் அவற்றை இங்கே நினைவுகூர்தல் வேண்டும்.

இதழ்ச் செய்திகள் வகைப்பாடு

16.10.1909-ஆம் நாள் வெளிவந்த இந்தியா இதழ் பின்வரும் பதின்மூன்று பொருண்மைகளில் செய்திகளை வெளியிட்டுள்ளது:

1. இதழ்த் தலைப்பு விவரங்கள்
2. சித்திரம்
3. சித்திர விளக்கம்
4. துணுக்குச் செய்திகள்
5. தலையங்கம்
6. துணைத் தலையங்கம்
7. கவிதைகள்
8. கட்டுரைகள்
9. உரையாடல்
10. கடிதம்
11. தொடர்
12. வர்த்தமானங்கள்
13. விளம்பரங்கள்

இந்தப் பதின்மூன்று வகைப்பாடும் இதழ் ஆசிரியரால் தரப்பெற்ற வகைப்பாடு அல்ல. இந்நூலாசிரியரால் பொருண்மைப் புரிதலுக்காகத் தரப்பெற்றவை. இவற்றில் விளம்பரம் மட்டும் தனிப்பட்ட முறையில் சமூகத்தின் பிறிதொரு தளத்தில் நின்று ஆராயப்படவேண்டியவை என்பதை வாசகர்கள் அவற்றைப் பார்த்த நிலையிலேயே உணரமுடியும். ஏனையவை இங்கே ஆய்வுக்கு உட்படுத்தப்பெற்றன.

இதழ்ச் செய்திகள் வாய்பார்டு

பன்னிரு வகைப்பாட்டில் அடங்கிய செய்திகளை விரிவாக அலசி ஆராய்ந்தபோது ஆறுவகைப்பட்ட வாய்பாடுகள் உருவாயின. அவை வருமாறு:

வாய்பாடு ஒன்று : மித தேசிய வாதக் கண்டிப்பும் எதிர்ப்பும்.

வாய்பாடு இரண்டு : தீவிரத் தேசிய வாத ஏற்பும் ஆதரவும்.

வாய்பாடு மூன்று : அந்நியர் ஆதிக்கம் (அ) பிரிட்டிஷ் ஆட்சி எதிர்ப்பும் கண்டிப்பும்.

வாய்பாடு நான்கு : சுதேசியம் ஏற்பும் ஆதரவும்

வாய்பாடு ஐந்து : பெண்நிலை உயர்வு பற்றிய ஆதரவு

வாய்பாடு ஆறு : இந்து சமய ஏற்பும் முன்னிலைப் படுத்தலும் இந்து இசுலாமிய ஒருமைப்பாடு ஏற்பும்.

இவற்றைப் பின்வருமாறும் வகைப்படுத்தலாம்:

ஏற்கப் பெறுபவை	மறுக்கப்பெறுபவை
* தீவிரத் தேசிய வாதம்	* மித தேசிய வாதம்
* சுதேசிய ஆதரவு	* அந்நியர் ஆதிக்கம்
* பெண்நிலை உயர்வு	* பிரிட்டிஷ் ஆட்சி
* இந்து சமய ஏற்பும் முன்னிலைப் படுத்தலும்	
* இந்து இசுலாமிய ஒருமைப்பாடு ஏற்பு	

நோக்கும் போக்கும்

ஆக இந்தியா இதழின் நோக்கும் போக்கும் தீவிரத் தேசிய வாதத்தை ஏற்பதாகவும் சுதேசிய நிலைகளுக்கு ஆதரவு தருவதாகவும் பெண்நிலை உயர்வு பற்றிச் சிந்திப்பதாகவும் அமைந்து இந்து சமயத்தை ஏற்றுக் கொள்ளும் அதே வேளையில் சமய ஒருமைப் பாட்டை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளன. பிறிதொரு நிலையில் அந்நியர் ஆதிக்கத்தை எதிர்ப்பதாகவும் கண்டிப்பதாகவும், மித தேசியவாதப் போக்கைக் கண்டிப்பதாகவும் அமைந்துள்ளன. இந்த அமைப்பைப் பின் வருமாறு காட்சிப்படுத்த முடியும்.



இயல் ஐந்து

"இந்தியா" இதழ்க் கருத்துப்படங்கள் (1909-ஆம் ஆண்டு)

இதழ்ச் செய்திகள் - கருத்துப் படங்கள்: வாய்பாடுகளின் ஒப்பீடு

முன் இயலில் "இந்தியா" இதழ் ஒன்றின் செய்திகள் வகைப்படுத்தப் பெற்று அவற்றிலிருந்து ஆறு வகைப்பட்ட வாய்பாடுகள் கருதுகோள்களாக உருவாக்கப்பட்டன. இந்தக் கருது கோள்களைச் சரிபார்க்க 1909 ஆம் ஆண்டில் வெளிவந்த "இந்தியா" இதழ்களின் 53 கருத்துப்படங்கள் இந்த இயலில் ஆய்வுக்கு உட்படுத்தப் பெறுகின்றன. ஆய்வுக்குள் நுழையும் முன்பாகக் கருத்துப்படங்கள் பற்றிய ஒரு சிறு அறிமுகம் இங்கே தரப்பெறுகின்றது.

பாரதியின் கருத்துப்படங்களைத் தொகுத்து ஆ.இரா. வேங்கடாசலபதி (1994) "பாரதியின் கருத்துப்படங்கள்" எனும் நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலில் "இந்தியா" இதழில் 1906 முதல் 1910 வரை வெளிவந்த கருத்துப் படங்களில் தற்போது கிடைக்கக் கூடிய 87 கருத்துப் படங்களும் அவற்றிற்குரிய விளக்கங்களும் தரப்பெற்றுள்ளன. இந்த நூலில் இடம் பெற்றுள்ள கருத்துப்படங்கள் பற்றிய பொது அறிமுகச் செய்திகளே இங்கே வாசகர்க்காகத் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

1850-ஆம் ஆண்டு தில்லியிலிருந்து வெளியான "தில்லி ஸ்கெட்ச் புக்" இந்தியாவில் முதன் முதலில் கருத்துப்படங்களை வெளியிட்டதாகத் தெரிகிறது. இதற்கு இரண்டொரு ஆண்டுகளுக்குப் பின் "இந்தியன் பன்ச்" என்ற இதழ் தொடர்ந்து கருத்துப்படங்களை வெளியிட்டு வந்தது.

தமிழ் இதழியலில் கருத்துப்படங்களைப் புகுத்திய பெருமை பாரதிக்கே உரியது. 1906 மே மாதத்திலிருந்துவெளிவரத் தொடங்கிய இந்தியா இதழில் 08.09.1906 முதல்தான் கருத்துப்படம் வெளியானது. 1909 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியிலிருந்து ஓர் இதழில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துப்படங்கள் வெளிவரத் தொடங்கின.

> "இந்தியாவில்" வெளியான கருத்துப்படங்கள் பாரதியின் நேரிடை மேற்பார்வையில் வரையப்பட்டதாக அறிய முடிகின்றது. ஒவ்வொரு படத்துக்கும் வழங்கப்பட்ட "சித்திரவிளக்கம்" எனும் பகுதி இதனை உறுதிப்படுத்து கின்றது. . .தேசிய இயக்க நோக்கு நிலையிலிருந்து சமகால அரசியல் விவகாரங்கள் பற்றியே பெரும்பான்மையான கருத்துப் படங்களை வெளியிட்டதால் கருத்துப் பரிமாற்றம் நேரிடையாகவும் உடனடியாகவும் நிகழ வேண்டும் என்பது பாரதியின் கருத்தாக இருந்தது (இதற்குச் 'சித்திர விளக்கம்' பகுதி கைக் கொடுத்தது)

இந்தியா இதழ்களின் கருத்துப்படங்கள் பற்றிப் பாரதிதாசன் கூறியதான தகவல் ஒன்று (ஆ. இரா. வேங்கடாசலபதி 1994) அப்படங்கள் பற்றிய முதன்மையை வெளிப்படுத்தும்.

> 'இந்தியா' பத்திரிகையில் படம் வெளிவரும். சித்திர விளக்கமும் தெளிவாக எழுதியிருக்கும். படங்கள் ராஜிய சம்பந்தமானவை. அர்த்த புஷ்டி உள்ளவை. பத்திரிகை வெளிவருவதை வாசகர்கள் ஆவலோடு எதிர்பார்ப்பார்கள். படத்தை வெட்டி அட்டையில் ஒட்டி வீட்டுச் சுவரில் தொங்க விட்டு வைப்பார்கள். ஒவ்வொரு படமும் இங்கிலீஷ் காரனுக்கும் இந்தியனுக்கும் உள்ள சம்பந்தத்தை - இங்கிலீஷ்காரனிடம் இந்தியன் அனுபவிப்பதைக் குத்தலாக எடுத்துக் காட்டுவதுதான் இந்தப் பத்திரிகையிலே சுவையான பகுதி.

இந்தியாவின் கருத்துப்படங்கள் அன்றைய பிரிட்டிஷ் அரசின் கவனத்தையும் கவர்ந்தன. அரசாங்கத்தின் உளவுத் தேவைகளுக்காக இரகசிய போலீஸ்துறை மற்றும்அரசாங்க மொழிபெயர்ப்பாளர்களால் தயாரிக்கப் பட்ட அறிக்கைகளில் "இந்தியா" கருத்துப்படங்கள் பலவற்றின் சாரம் வழங்கப் பட்டுள்ளது. அரசாங்கம் பணித்ததற்கு இணங்க "இந்தியா"

கருத்துப்படங்களைப் பரிசீலித்த அன்றைய அட்வகேட் ஜெனரல் சிவசாமி அய்யர் 19.08.1907இல் வெளியான கருத்துப்படம் இராஜ துரோகத் தன்மை உடையது என்றும் சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டது என்றும் கருத்துரைத்தார்.

இந்தியா கருத்துப்படங்களின் முக்கியத்துவம் சம காலத்திலேயே பல தரப்பினராலும் உணரப்பட்டமை இவற்றில் இருந்து தெரிய வருகிறது (இதுவரையும் கூறப்பெற்ற செய்திகள் "பாரதியின் கருத்துப்படங்கள்" நூலில் இருந்து தொகுக்கப் பெற்றவை)

கருத்துப்படங்கள் இதழின் முதல் பக்கத்தில் பெரிய அளவில் வருவதாலும் இன்றைய தலைப்புச் செய்திகளைப் போல முதன்மைப் படுத்தப் பட்டிருப்பதாலும் ஆசிரியரின் நேரடிப் பார்வையில் உருவாவதாலும் இதழின் நோக்கத்தை அவை முற்றும் பிரதிபலிப்பதாக எடுத்துக் கொள்ள வேண்டும். இக்காரணத்தினால்தான் இந்தியா இதழ் ஆய்விற்குக் கருத்துப்படங்கள் தரவுகளாகக் கொள்ளப் பெற்றன.

1909 ஆம் ஆண்டில் வெளிவந்த இதழ்களின் 53 கருத்துப்படங்களும் பின்வரும் அலகுகளாக வகைப்படுத்தப் பெறுகின்றன. அவை

அலகு ஒன்று

20.02.1909,	27.02.1909,	13.03.1909
10.04.1909	22.05.1909	05.06.1909
26.06.1909	16.10.1909	06.11.1909
27.11.1909	11.12.1909	

அலகு இரண்டு

09.01.1909,	06.02.1909,	08.05.1909
15.05.1909,	12.06.1909,	19.06.1909
10.07.1909,	24.07.1909,	28.08.1909
04.09.1909,	25.09.1909,	04.12.1909
11.12.1909,	18.12.1909	

அலகு மூன்று

02.01.1909,	16.01.1909,	06.02.1909,
27.03.1909,	17.04.1909,	24.04.1909,
29.05.1909,	03.07.1909,	31.07.1909,.
07.08.1909,	18.09.1909,	20.11.1909
20.11.1909,	04.12.1909	

அலகு நான்கு

30.01.1909,	13.02.1909
17.07.1909,	02.10.1909
20.11.1909	

அலகு ஐந்து

09.10.1909

அலகு ஆறு

20.03.1909,	03.04.1909,	01.05.1909
11.09.1909,	23.10.1909	04.12.1909

பொது அலகு

21.08.1909, 04.12.1909 (சிதைந்த பகுதிகள்)

குறிப்பு 1909 சனவரி தொடங்கி நவம்பர் வரை ஓர் இதழ்க்கு ஒருபடம் வெளிவந்துள்ளது.

நவம்பர் 20 இதழில் 3 படங்கள்

திசம்பர் 4 இதழில் 4 படங்கள்

திசம்பர் 11 இதழில் 2 படங்கள் வெளிவந்துள்ளன.

அலகு ஒன்று

20.02.1909 ஆம் ஆண்டு வெளிவந்த இந்தியா இதழ் மிததேசியவாத இயக்கத்தாரை "நிதானக்கட்சி" என்று அழைத்துப் "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்" என்ற தலைப்பிட்டு

ஒரு கருத்துப்படத்தை வரைந்துள்ளது. ஜன சுதந்திரங்கள் என்ற பால் குடத்திற்கு நிதானக் கட்சியான் என்பவன் காவலாய் இருக்கிறான். அதே சமயத்தில் அந்தப் பாலைச் சிறிது சிறிதாகக் குடித்துவிட விரும்பும் "அதிகாரிகள்" என்ற பூனையிடமும் சினேகமாக இருக்கிறான். மேத்தா கட்சி இவ்வாறாகச் சித்திரத்தில் தீட்டப்பட்டுள்ளது. கோகலே அவர்கள் ஏற்படுத்திய தஷ்ணசபை கூட்டத்தில் அவர் பேசிய கருத்துச் சித்திர விளக்கப் பகுதியில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

> "இதுவரையில் ராஜரீக சம்பந்தமாக நம்மவர்கள் நடத்தும் சபைகளும் சங்கங்களும் சனங்களின் உள்ளத்தை கவர்ன்மெண்ட்டார்க்கு எடுத்துக் கூறுவது என்ற ஒரே தொழில்தான் செய்து கொண்டு வந்தன. ஆனால் இனிமேல் அந்த ஒரே தொழிலோடு நிறுத்தி விடுவதில் உசிதமில்லை; கவர்ன்மெண்டாரின் செய்கைகளையும் எண்ணங்களையும் சனங்கள் விரோதமாகக் கொள்ளாமல் சனங்களுக்குச் சரியாக எடுத்து விளக்குதல் என்ற இரண்டாம் தொழில் ஒன்றையும் சேர்த்து நடத்த வேண்டும் (இந்தியா 20.02.1909)

மேத்தா கட்சியினர் அதாவது மிதவாதிகள் பிரிட்டிஷ் அரசு பக்கம் சாய்ந்து விட்டதை விளக்குவதே இச்சித்திரத்தின் நோக்கம் ஆகும். நாகப்பூர் காங்கிரஸ்க்குத் தடை விதிக்கப்பட்டதின் காரணத்தைக் காவல்துறை அதிகாரி பின்வருமாறு கூறுகிறார். "கல்கத்தா காங்கிரஸில் செய்யப்பட்ட சுதேசியம், சுயராஜ்யம், வர்சனம், ஜாதீயக்கல்வி இவற்றைப்பற்றிய தீர்மானங்கள் ராஜதுரோகமானவை என்றும் சட்ட விரோதமானவை என்றும் நிதானக் கட்சியினரால் கருதப்படுகின்றன. அந்தத் தீர்மானங்களையே நாகப்பூர் காங்கிரசில் பேசப்போவதாகத் தெரிவதால் அது தடை செய்யப்படுகிறது" (இந்தியா 20.02.1909). காவல் துறையினருக்கும் மேத்தா கட்யினருக்கும் இவ்வளவு நேசப் பான்மை உண்டாகி விட்டது பற்றி "அமிருதபஜார்" பத்திரிகை ஆச்சரியப்படுகின்றது. மேத்தா கட்சியார் இந்த நிலைக்கு வந்து விட்டதை விளக்கும் பொருட்டாகவே இந்த வாரத்தில் 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்ற சித்திரம் இடம் பெற்றுள்ளது.

27.02.1909 நாளிட்ட இந்தியா இதழின் கருத்துப்படமும் மேத்தா கட்சியினரை விமர்சித்துள்ளது. லார்டு மார்லியின் சீர்திருத்தத்திற்கும் நிதானகட்சியார்க்கும் உள்ள தொடர்பு

நகையாடப்பட்டுள்ளது. இந்தியர்கள் கேட்டதற்கு லார்டு மார்லி தந்திருக்கும் சீர்திருத்த வரங்கள் கிண்டல் செய்யப்பட்டுள்ளன. லட்சம் பவுன் வர வேண்டும் என்று கடன்சீட்டு கொண்டு வருகிறவன் கையிலே காலணா தபால் தலையைக் கொடுத்து அனுப்புவதற்கு நிகராகும் இந்தச் சீர்திருத்தம் என்று லண்டனில் உள்ள The coming day என்ற பத்திரிகை விமர்சித்து உள்ளது.

லார்டு மார்லியின் சீர்திருத்தத்தைப் "பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்தல்" என்று இந்தியா இதழ் நகையாடுகிறது. இந்தச் சீர்திருத்தத்தைக் கூடச் சிலர் தடுக்கப்புறப்பட்டு விட்டார்கள். இதனால் மேத்தா கட்சியினருக்கு மிகுந்த மனவருத்தம் உண்டாகி இருக்கிறது. ஏனென்றால் மேத்தா கட்சியினரின் முயற்சியால் தான் இந்தச் சீர்திருத்தங்கள் வரப்போகின்றன என்பது அக்கட்சியாரின் எண்ணம்.

இந்த நிலையையே கருத்துப்படம் சித்திரித்துள்ளது. மேத்தா கட்சி கடுமையான நோய்கொண்டு கிடக்கிறது. அந்நோயைத் தீர்க்கும் "மார்லி சீர்திருத்தம்" என்ற புலிப்பாலைக் கொண்டுவரக் கோகலே செல்கிறார். இதனைச் சிலர் தடுக்கின்றனர். இவ்விதமாகச் சித்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

13.03.1909 நாள் வெளிவந்த கருத்துப்படமும் மேல் கருத்தையே சித்திரித்துள்ளது. "லா-மார்லி சீர்த்திருத்தங்களை வடிகட்டுதல்" என்ற தலைப்பில் அப்படம் அமைந்துள்ளது. சீர்திருத்தங்கள் தொடக்கத்தில் திட்டமிட்டது போல் இல்லாமல் போய்விட்டது என்றும் பல்வேறு தடைகள் காரணமாகச் சீர்திருத்த மசோதாவில் ஒன்றுமே இல்லை என்றும் "இந்து" நாளிதழ் ஆசிரியர் கூறியதைக் கருத்துப்படம் சித்திரித்துள்ளது. சீர்திருத்தம் என்பதில் முசுலீம் சங்கம், ஆங்கிலோ இந்தியர், பிரபுக்கள் சபை ஆகியவற்றின் தலையீட்டால் நன்மைக் குறைவு ஏற்படுகிறது. இதனைக் கருத்துப்படம் பின் வருமாறு விளக்குகிறது.

> "சீர்திருத்த சலமெடுத்து மார்லி ஏணியில் உள்ள முதல் பானையில் சிறிது விடுகிறார். அப்பானைக்குக் கீழ் மேலும் இரண்டு பானைகள் உள்ளன. அப்பனைகளில் இருந்து வடிகட்டின நீர் கோகலே கைக்கு வந்து சேரவேண்டும். நீர்வரும் என்று கோகலே கையில் பாத்திரம் ஏந்தி நிற்கிறார். பக்கத்தில் இந்து பத்திரிகை நின்று கொண்டு "கோகலேயின் நோக்கம் நிறைவேறும்

என்று எனக்குத் தோன்றவில்லை'' என்று கூறி வருத்தப்படுகிறது" (இந்தியா. 13.03.1909).

10.04.1909 நாள் வெளிவந்த இந்தியா இதழிலும் இதே சீர்திருத்தக் கருத்தே விளக்கம் பெற்றுள்ளது. படத்தின் உரையாடல் பின்வருமாறு அமைந்துள்ளது:

வைசிராய்: நேர்த்தியான பழங்கள், மார்லிதுரை அனுப்பியது, எடுத்துக் கொள்ளும், கோகலே கொம்பூதுகிறார்.

பஞ்சாபி இந்து : அந்தக் கனிகள் சந்தேகமாக இருக்கின்றன. நமக்கு வேண்டியது இல்லை எடுத்துக் கொண்டுபோம்.

என்று கூறுகின்றனர். இப்படிப்பட்ட உணர்ச்சி நமது பக்கத்துப் பண்டிதர்களுக்கும் வேண்டும் என்று இந்தியா எழுதி உள்ளது.

27.11.1909 நாள் வெளிவந்த இதழும் இச்சீர்திருத்தம் பற்றிய விமர்சனத்தையே கருத்துப்படம் வழி தந்துள்ளது.

> மார்லி என்ற யானை சென்ற மூன்று வருடமாய் கர்ப்பமாய் இருப்பது போல் வயிறு பெருத்துக் காணப்பட்டது. நல்ல குட்டிபோடும் என்று மிதவாதிகள் அதனை வழிபட்டு வந்தனர். இப்பொழுது அந்த யானையின் வயிற்றிலிருந்து வெளியே வந்து விழுந்து விட்டது. என்ன குட்டியா? இல்லை இல்லை ஏழு லத்தைகள். அதில் இரண்டொரு விளாங்கனிகளும் இருந்தன. மிதவாதிகளும் ராஜ விசுவாசிகளும் ஆசையாய் ஓடி வந்து பார்த்தார்கள் எல்லாமே லத்தைதான். இதையெல்லாம் கண்ட இந்துகளும் முகம்மதியர்களும் ஏமாந்துபோய் மிரள மிரள விழிக்கிறார்கள்.

இந்தக் கருத்துப்பட ஒரு சித்திரம் இடம் பெற்றுள்ளது. மார்லியின் சீர்திருத்தத்தில் ஒன்றுமே இல்லை என்றும் மிதவாதிகள் ஏமாந்து போயினர் என்றும் இச்சித்திரம் விவரிக்கிறது.

05.06.1909-இல் வெளிவந்த இந்தியா இதழின் கருத்துப்படம் லாகூர் காங்கிரசு பற்றிய கருத்தினை விளக்கி உள்ளது.

லாகூர் மக்களில் முக்கியமான சிலர் இந்த ஆண்டு மேத்தா காங்கிரசுக் கூட்டத்தைத் தம் ஊரில் நடத்த விருப்பம்

இல்லாமல் இருக்கிறார்கள். இதுவே சித்திரத்தின் கருத்து. மாய கன்வென்ஷன் என்னும் கிழவி லாகூர் தேவியின் வீட்டுவாசலில் வந்து நின்று உள்ளே வரலாமா என்று கேட்கிறாள். லாகூர் தேவி கோபமுற்றவளாக "அவளை உள்ளே விடாதே! துரத்தி விடு" என்று சேவகனிடம் சொல்லுகின்றாள்.

06.11.1909 ஆம் நாள் வெளிவந்த இந்தியா இதழ் கோகலேயைப் பாதுகாக்கத் தீவிரதேசிய வாத இயக்கத்தாரைக் கைது செய்ததை நகையாடியுள்ளது. இப்பொருளில் கருத்துப் படத்தையும் வெளியிட்டுள்ளது. பிரிட்டிஷ் அதிகாரத்திற்குக் கோகலே அபிமான மனைவியாய் இருக்கிறார். கணவன் சொல்படி இந்தியர்களுக்குச் சுதந்திரம் வேண்டாம் என்று கூறுகிறாள். அதற்குப் பலனாக அவள் கணவனாகிய பிரிட்டிஷ் அதிகாரம் அவளைக் கொலை செய்யத் தூண்டியதாகக் குற்றம் சாட்டி இந்து பஞ்ச் என்ற பத்திரிகையையும் இன்னும் சிலரையும் கைது செய்து அவர்களைக் கோகலேயிடம் இழுத்து வந்து காட்டுகிறான். இதனைக் கண்ட கோகலேவாகிய மனைவி, "துரையே! எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தம் என் அரசே இந்தப் பொருத்தம் உலகில் பிறருக்கு எய்தும் பொருத்தமோ" என்று பாடுகிறாள்.

11.12.1909-ஆம் நாள் இந்தியா இதழ்க் கருத்துப் படம் விடுதலை இயக்கத்தைப் பசுவாகச் சித்திரித்து அப்பசுவை மிதவாதி பின்னுக்கு இழுத்துப் பள்ளத்தில் தள்ளுவதாகக் காட்சிப்படுத்தி உள்ளது. தேசபக்தனாகிய தீவிரத் தேசியவாதி பசுவை நீரும் புல்லும் உள்ள விசால இடத்திற்குக் கொண்டு போகிறான். இவ்வாறு கருத்துப்படம் அமைந்துள்ளது.

ஆக அலகு ஒன்றில் கூறப்பெற்ற கருத்துப்பட விளக்கங்களைப் பின்வருமாறு தொகுத்து வரிசைப்படுத்தலாம்.

1. மேத்தாகட்சி, நிதானக்கட்சி, மிதவாதிகள் என்ற பெயரீடுகள் மூலம் சுட்டப்பெறும் மிததேசியவாத இயக்கத்தார் பல்வேறு முனைகளில் நகையாடப் பட்டுள்ளனர். மட்டுமின்றி அவர்களின் செயல்களும், தேசபக்தர் என்று இந்தியா இதழால் சுட்டப்பெறும் தீவிரத் தேசிய வாத இயக்கத்தாரால் மறுதலிக்கப் பெற்றுள்ளன.
2. மார்லியின் சீர்திருத்தம் மிதவாதிகளால் ஏற்கப் பெற்றுள்ளன. ஆனால் இந்தியா இதழ் இதனைக்

கடுமையான முறையில் விமர்சனம் செய்துள்ளது. "பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்தல்" என்ற முறையில் விமர்சனம் செய்கிறது.

3. மிதவாதிகள் அந்நிய ஏகாதிபத்தியத்தோடு ஒத்துப்போகும் போக்கினை அறிய முடிகின்றது. கோகலே போன்றோரும் பிறரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு கொண்ட உறவு கணவன் மனைவி உறவு போன்றது என்பதாகக் கருத்துப்பட விளக்கங்கள் அமைந்துள்ளன.

4. மிதவாதிகளை முன் வைத்துத் தீவிரத் தேசிய வாதிகள் பலர் தண்டிக்கப் பெற்றுள்ளமையை அறியமுடிகின்றது.

5. மிதவாதிகள் நிகழ்த்தும் கூட்டங்கள், முடிவுகள், செயற்பாடுகள் முதலியன தீவிரத் தேசிய வாத இயக்கத்தாரால் மறுதலிக்கப் பெற்றுள்ளமையை அறியமுடிகின்றது.

அலகு இரண்டு:

09.01.1909 ஆம் நாள் இந்தியா இதழில் வெளிவந்த சித்திரம் இந்தியர்கள் வீரம் மிக்கவர்களாக விளங்க வேண்டும் என்ற கருத்தைக் கூறுகிறது. ராஜபுத்திரன் யுத்தத்திற்குச் செல்கிறான்; அவன் தாய் வாளை ஆசிர்வதித்துத் தருகிறாள். இதுவே படம். முற்காலத்தில் வீரமும் போர்த்திறமையும் கொண்டு விளங்கிய பாரதமக்கள் ஆங்கிலேயர் கொண்டுவந்த ஆயுதச் சட்டத்தால் தற்காலத்தில் உலகத்தார் எல்லாம் கண்டு நகைப்பதற்குரிய பேடிகள் ஆகி விட்டார்கள். இவ்வாறு சித்திர விளக்கம் தரும் பகுதி மேலும், "பிரெஞ்சு இந்தியாவில் ஆயுதச் சட்டம் இல்லையே இதனால் ராஜாங்கத்தார்க்கு ஏதேனும் கஷ்டம் இருக்கிறதா"? என்ற வினாவையும் எழுப்புகின்றது (இந்தியா 19.01.1909).

06.02.1909 நாளைய இந்தியா இதழ் "மானிங் போஸ்ட்" என்ற லண்டன் பத்திரிகை வெளியிட்ட செய்தியை அடியொற்றிக் கருத்துப்படத்தைத் தந்துள்ளது. பாரீஸ் நகரத்தில் இந்தியர்களின் வெடிகுண்டு சங்கம் ஒன்று இருக்கிறது என்றும் அதனை நடத்துபவர் ஓர் இந்துவை மணந்து கொண்ட ஜெர்மனியப் பெண் என்றும் செய்தியை வெளியிட்டது. இதனை அறிந்த அப்பெண் வக்கில் நோட்டீஸ் விட அப்பத்திரிகை மன்னிப்புக் கேட்டது (இந்தியா 06.02.1909).

வெடிகுண்டு வழக்கில் கைது செய்யப்பட்ட அரவிந்தர் விடுதலை செய்யப்பட்டது பற்றிய நிகழ்ச்சி 'கிரகண விமோசனம்' என்னும் தலைப்பில் 15.05.1909 நாளைய இந்தியாவில் கருத்துப்படமாக்கப்பட்டுள்ளது.

> அரவிந்தன் என்ற தர்மசூரியனை 'அநீதியாகக் குற்றம் சுமத்தல்' எனும் இராகு வந்து மறைத்திருந்தது. விழுங்கிவிடலாம் என்பது அப்போலிஸ் பாம்பின் எண்ணம். சூரியனைப் பாம்பு விழுங்கமுடியுமா? (இந்தியா 15.05.1909).

அரசு அதிகாரிகள் மிதுனபூர், பரா, திருவாங்கூர் முதலான இடங்களில் உள்ள குற்றமற்றவர்களின் மீது பொய்வழக்குப் போட்டு விசாரணைக்குக் கொண்டு வந்தனர். அவ்வழக்குகளைத் தரும தேவதை விசாரிப்பது போலவும் விசாரித்துக் குற்றமற்றவர் என்று விடுவிப்பது போலவும் இதனைப் பார்த்து அதிகாரி துயரம் கொண்டு கண்ணீர் விடுவது போலவும் கருத்துப்படம் ஒன்றை 19.07.1909 நாளைய இதழ் வெளியிட்டுள்ளது.

ஆண்டுதோறும் சூலைமாதம் 14-ஆம் நாள் பிரெஞ்சு அரசு கொண்டாடி வரும் குடியரசு நாள் பற்றிய கருத்துப்படம் ஒன்று "குடியரசு நீடித்து வாழ்க" என்ற தலைப்பில் 10.07.1909 அன்றைய இதழில் வெளிவந்துள்ளது. பிரெஞ்சுக்காரர்கள் அரசனுடைய கொடுமையைப் பொறுக்க முடியாமல் வெகுண்டு எழுந்து, தேசபக்தர்களையும் மகான்களையும் அடைத்து வைத்திருந்த பஸ்தீல் என்னும் கோட்டைச் சிறைச் சாலையை இடித்துத் தரைமட்டமாக்கி விடுதலை செய்கிறார்கள். இந்த நாளே பிரெஞ்சியரின் குடியரசு நாள் ஆகிறது. இதை விவரிக்கும் சித்திர விளக்கம் இறுதியில்

> புதுவை வாசிகளே! நாமெல்லாம் இந்த மகோற்சவ தினத்திலாவது நமது சண்டை சச்சரவுகளை மறந்து ஒன்று கூடிக் களிப்போமாக. சுதந்திரம் நீடித்து வாழ்க! சமத்துவம் நீடித்து வாழ்க! சகோதரத்துவம் நீடித்து வாழ்க! குடியரசு நீடித்து வாழ்க (இந்தியா 10.07.1909)

என்று நிறைவடைகிறது.

"பாரத தேசபக்தக் கட்சியின் மேல் வரும் மின்னலை வாங்கும் கருவி"- என்ற தலைப்பில் அமைந்த கருத்துப்படம் ஒன்று

04.12.1909 நாள் இந்தியா இதழில் வெளிவந்துள்ளது. இப்படம் பற்றிய சித்திர விளக்கம் வருமாறு:

உலகத்தில் உள்ள உன்னதமான பெரிய கட்டடங்களுக்கு எல்லாம் "இடி விழுங்கி" என்ற ஒரு பாதுகாப்பு விசேஷம் வைப்பது உண்டு. அதாவது அந்தக் கட்டடங்களின் சிகரத்தின் மீது ஒரு முழ நீளம் கூர்மையாயுள்ள தாமிரக் கம்பி ஒன்று வைத்து அதன் மறுமுனையை அங்கிருந்து கொண்டு போய்த் தரையிலாவது கிணற்றிலாவது விட்டு வைப்பது வழக்கம். உன்னதக் கட்டடங்கள் மேக மண்டலத்துக்குச் சமீபமாயிருப்பதால் அவற்றின் மேல் மின்னல் பாய்ந்து கட்டடங்களைச் சேதப்படுத்திவிடும். அதற்கு இந்த 'இடிவிழுங்கி' வைத்து விட்டால் கட்டடச் சிகரத்தைக் காட்டிலும் உன்னதத்தில் இருப்பதால் முதலில் அதன் பேரில் பாயும் மின்னல் இடி முதலியன செப்புக் கம்பி மூலம் பூமியில் ஓடி விடுகிறது. கட்டடத்திற்கு ஒன்றும் அபாயமே இல்லை.

இந்தச் சித்திரத்தில் 'அபிநவ பாரத சுயராஜ்யக் கட்சி' என்னும் கட்டடத்தின் நுனியில் ஸ்ரீமான் அரவிந்த கோஸ் ஓர் இடிவிழுங்கியாய் விளங்குகிறார். இந்தியாவில் பிரிட்டிஷ் தன்னரசின் பட்சம் என்னும் மேகத்திலிருந்து பற்பல விதமாய் அந்தக் கட்டடத்தின் மீது ராஜவிசுவாச மிதவாதிகள், போலீஸ் புலிகள், பிரிட்டிஷ் அதிகாரிகள், ஆனி பீஜாண்டபாய், ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் முதலான இடிகள் விழுந்து அந்தச் சுயராஜ்யக் கட்சியை நாசமாக்கப் பார்க்கின்றன. தெய்வீகத் தலைவரான ஸ்ரீமான் அரவிந்த கோஸ் அவற்றை எல்லாம் விழுங்கிச் சாதீய முயற்சியைக் கைக் கொண்டிருக்கும் பாரத சுயராஜ்யக் கட்சியாரைக் காத்து மகா தேஜஸ்வியாய் விளங்கி வருகிறார்.

இவ்வாறாகத் தேச பக்தக் கட்சியாகத் தீவிர தேசிய வாத இயக்கம் இருப்பதும் அதற்கு ஏற்படும் பல்வேறு தொல்லைகளிலிருந்து அரவிந்தர் காப்பதும் ஆன செய்தி கருத்துப்படமாக வெளிவந்துள்ளதை அறியமுடிகிறது.

இதுவரையும் அலகு இரண்டில் கூறப்பெற்ற கருத்துப்பட விளக்கங்களைப் பின்வருமாறு தொகுத்துத் தர இயலும்:

1. இந்தியர்கள் வீரமிக்கவர்களாகத் திகழவேண்டும் என்பதை ஒரு கருத்துப்படம் ராஜபுத்திர வீரனைக் காட்சிப்படுத்தி விளக்குகிறது. பிரிட்டிஷ் அரசு கொண்டுவந்த ஆயுதச் சட்டத்தை எதிர்த்துக் கேள்வி எழுப்புகிறது. ஆயுதச் சட்டத்தால் இந்தியர்கள் பேடி ஆகிவிட்டார்கள் என்று மன வருத்தப்படுகிறது. ஆக அந்நிய அரசுக்கு எதிராகப் போராடும் வலிவும் வீரமும் இந்தியருக்கு வேண்டும் என்று மறைமுகமாகக் குறிப்பிடுகின்றது.

2. பாரீசு நகரத்தில் இந்தியர்களின் வெடிகுண்டு சங்கம் ஒன்று இருந்ததாகத் தவறான தகவல் இலண்டன் பத்திரிகைகளில் வெளிவந்தாலும் கூட இந்தியர்களின் வெடிகுண்டுப் போராட்டப் போக்கு அன்று இருந்திருக்க வேண்டும் என்பதையும் "ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம்" பற்றிய மறைமுகக் குறிப்பையும் அது வெளிப்படுத்தி உள்ளது.

3. தீவிரத் தேசிய வாத இயக்கத்தார் மீது பொய்யான வழக்குகள் போடப்பட்டதைக் கண்டிக்கும் இந்தியா அவர்களின் விடுதலையைத் தர்மத்தின் வெற்றியாகக் கருதுகிறது.

4. பாரத சுயராஜ்யக் கட்சி என்னும் கட்டத்தின் மீது பல முனைகளில் இருந்து இடி மின்னல் விழுவதாகவும் அவற்றை அரவிந்தர் இடிதாங்கியாக இருந்து விலக்கி விடுவதாகவும் கூறப்படும் கருத்து தீவிரத் தேசிய வாத இயக்கத்தாருக்கு நேரும் இன்னல்களையும் அவற்றிலிருந்து அது தப்பித்து நிற்பதையும் வெளிப்படுத்துகிறது.

5. தீவிர வாத தேச இயக்கத்தாருக்கு எதிரானவர்கள் என்று சிலரைக் கருத்துப்படம் பட்டியலிட்டு உள்ளது. அவர்கள்: ராஜவிசுவாச மிதவாதிகள், போலிஸ் புலிகள், பிரிட்டிஷ் அதிகாரிகள், ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள்.

அலகு மூன்று:

02.01.1909 நாளிட்ட இந்தியா இதழில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பிரிட்டிஷ் அரசு பறிப்பதைப் பற்றிய கருத்துப்படம்

ஒன்று வெளியாகி உள்ளது. புதுச்சேரியில் இருந்து சில பத்திரிகைகள் ராஜதுரோகமாகப் பல செய்திகள் வெளியிடுவதாகவும் தற்போது நட்பு நாடாகி விட்ட பிரான்சு நாட்டிடம் கூறி அத்தகு பத்திரிகைகளைத் தடை செய்ய வேண்டும் என்றும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ரீஸ் என்பவர் பேசியதைக் கேலி செய்யும் முகமாக இக் கருத்துப்படம் வெளியிடப்பட்டுள்ளது (இது பற்றிய விவரங்கள் நூலில் முன்பே கூறப்பட்டன).

16.01.1909 நாள் வெளிவந்த கருத்துப்படம் ஒன்று குறிப்பிடத்தக்கது. துருக்கி நாடு சுதந்திரம் பெற்றது குறித்துப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது. அதே சமயம் இந்தியாவில் சுதந்திரம் கேட்போருக்குத் தீபாந்திரத் தண்டனை தரப்படுகிறது. இந்த முரண்பாட்டைக் கருத்துப்படம் விளக்கி உள்ளது. ஆங்கிலேயன் ஒருவன் இந்திய விடுதலை முயற்சியாகிய பெண் ஒருத்தியின் கழுத்தில் சுருக்குக் கயிறு மாட்டிக் கையில் பிடித்துக் கொண்டு உள்ளான். இன்னொரு கையால் துருக்கியருக்குக் கைகுலுக்குகிறான். பெண்ணின் கையில் சட்டத்திற்கு உட்பட்டு எதிர்த்தல் என்ற சூலாயுதம் உள்ளது.

நாட்டில் உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தைப் பற்றியும் பஞ்சம் தலைவிரித்து ஆடுவது பற்றியும் கருத்துப்படம் ஒன்று 23.01.1909 இந்தியா இதழில் வெளிவந்துள்ளது. பஞ்சத்திற்குக் காரணம் பருவங்களின் ஏமாற்றமே என்று சொல்லிக் கொள்ளும் அரசு, மூட்டை மூட்டையாக நெல்லையும் கோதுமையையும் இங்கிலாந்திற்கும் சீனாவிற்கும் ஏற்றுமதி செய்கிறது. இக்கருத்தை விவரிக்கிறது சித்திரம். எலும்புக் கூடாகக் காட்சியளிக்கும் மக்களிடம் அதிகாரி "உங்களுக்குச் சமாதானம் தருகிறோம் காப்பாற்றுகிறோம்" என்று கூறுகிறான். மக்கள் 'அதெல்லாம் சரி! சோற்றை அல்லவா அள்ளிச் செல்கிறீர்கள்' என்று கூறுகின்றனர். மக்களின் வரிப்பணம் மக்களுக்கு எதிரான செயல்களுக்குச் செலவு செய்யப்படுவதைக் கண்டிக்கிறது ஒரு கருத்துப்படம் (17.04.1909).

"30கோடி சனங்களின் பெரிய தேசத்திலே சுகாதாரத்திற்காக 50 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் பெங்காளம் ஒரு மாகாணத்தில் மட்டும் போலீஸ் இலாக்காவிற்கு 85 லட்சம் செலவிடப் போகிறார்கள். ஜனங்கள் சுதேசியம் தொடங்கிய நாள்முதல் போலீஸ் இலாகா அபிரிதமாக

வளர்ந்து கொண்டே போகிறது. இவர்களுக்குப் பொய்யளவுகள் கற்பிப்பதைத் தவிர வேறு வேலைக்கு இடமில்லை. யார் மேலேனும் சந்தேகங்கள் கற்பித்துக் கொண்டிருந்தால் ஒழிய இந்த மனிதர்களுக்கு உத்தியோகம் போய்விடும். நமது பிரிட்டிஷ் இந்தியா ஜனங்கள் கொடுக்கும் வரிப்பணம் ஓயாத துரோகச் செய்கைகள் செய்யும் ரகசியப் போலீஸ்க்குமா போக வேண்டும்? நாட்டுச் செல்வத்தை வெளியேற்ற வந்த ரயில்பாதைக்குப் பணம் அழிவதைப் பொறுத்தாலும் பொறுக்கலாம். நம்மவரை அடிமைகள் ஆக்கும் கல்விக்குப் பணம் அழிவதைப் பொறுத்தாலும் பொறுக்கலாம். வேறெதைப் பொறுத்தாலும் பொறுக்கலாம்; அபாண்டமாக நம்மவர் மீது பழிகள் சுமத்தி நம்மவருக்கு இம்சைகள் விளைவித்துக் கொண்டிருக்கும் ரகசியப் போலிஸ் சிப்பந்திகளுக்காக நம்மவரின் பணம் செலவிடப்படும் கொடுமையை நினைக்கும் போது ஆ. . . நாம் பொறுத்தென்ன, பொறுக்காவிட்டால் என்ன?" (இந்தியா 17.04.1909).

இந்தச் சித்திர விளக்கத்தை அடியொற்றிக் கருத்துப்படம் அமைக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் வந்திருக்கும் சுதேசிய சர்க்கஸ் கம்பெனியில் வெங்கடசாமி என்பவர் மேல் ஒரு பெரிய கல்லை ஏற்றுகிறார்கள். அந்தக் கல்லின் மீது பல ஜனங்கள் ஏறி உட்கார்ந்து கொள்ளுகின்றனர். இதனால் வெங்கடசாமியை இந்தியாவின் சாண்டோ என்கிறார்கள். இந்தக் கருத்தைப் பின்புலமாகக் கொண்டு ஒரு கருத்துப்படம் 29.05.1909 இதழில் வெளி வந்துள்ளது. இந்திய நாட்டுக் குடியானவர்களான நோஞ்சான் சாண்டோவைப் படுக்க வைத்து அவர்மீது தீர்வை என்ற கற்கள் ஏற்றப்படுகின்றன. இந்த வினோதத்தை நிகழ்த்தும் வில்சன் (அரசு இறை அமைச்சர்) என்ற சர்க்கஸ்காரர் மக்களின் கரவொலியை எதிர்பார்த்துத் தொப்பியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு நிற்கிறார்.

03.07.1909 நாள் இந்தியா இதழில் 'வெளியேற்றம்' என்ற தலைப்பில் பிரிட்டிஷ் அரசின் சட்டங்கள் பற்றிக் கடுமையான முறையில் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. மார்லியும் மிண்டோவும் 1818-ஆம் ஆண்டு சட்டப் பிரிவைக் காட்டி நாட்டு மகான்களைச் சிறையில் அடைத்து விடுகின்றார்கள். பாராளுமன்றத்தில் சிலர் அவர்களை விட்டுவிடும்படி கேட்டுக் கொள்கிறார்கள். இக்கருத்தமைந்த படம் வெளி ஆகி உள்ளது.

இச்சித்திரத்திற்கான விளக்கம் விரிவான முறையில் தரப் பெற்றுள்ளது. பிரிட்டிஷ் அரசு இந்தியாவை அடக்கியாளும் வகையில் கடைப்பிடித்துவரும் சட்டங்கள் அவர்களுக்குப் பழியை விளைவிக்கக் கூடியவை. மக்களுக்கு இராஜாங்கம் தொடர்பாக அதிகாரம் கொடுக்காமல் வரிவசூல் செய்தல், நாட்டு மேம்பாட்டிற்காகப் பாடுபடும் மகான்களை நாட்டை விட்டு வெளியேற்றி விடுதல், பத்திரிகைகளை அச்சிடும் அச்சகங்களை ஜப்தி செய்தல், தேசபக்தர்களை ராஜதுரோகிகள் என்று கூறி நீடித்தகாலம் கடுங்காவலில் வைத்தல் இவ்வாறான சட்டங்களைப் பார்க்கும்போது இங்குச் செங்கோல் ஆட்சி நடைபெறுகின்றது என்று எவரும் கூறமாட்டார்கள். இவ்வாறு தொடங்கும் இச்சித்திர விளக்கம் பின்வருமாறு முடிகின்றது:

> *தற்காலத்தில் நமது பிரெஞ்ச் கவர்ன்மெண்டார் ஆல்ஜீரியாவை எப்படி ஆண்டு வருகிறார்கள் என்பதைப் பார்ப்போம். ஆல்ஜீரியர்களுக்கும் பிரெஞ்சுக் காரர்களுக்கும் ஏதாயினும் வித்தியாசம் உண்டா? அங்கு ஜனங்களுக்கு அதிகாரம் கொடாமல் வரிவசூல் செய்கிறார்களா? அல்லது வெளியேற்றுதல், இராஜ துரோகிகள் என்று கடுங்காவலில் வைத்தல், முத்திரா சாலைகளை ஜப்திசெய்தல் முதலிய கொடுமையான சட்டங்கள் உண்டா? இதற்குப் புதுவையே ஓர் உதாரணம். நமது பிரெஞ்சுகாரர்களின் கொள்கை சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் அல்லவா? பிரிட்டிஷ்காரர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் வித்தியாசம் யாதெனில் பிரிட்டிஷ்காரர்கள் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் என்று வாயினால் மாத்திரம் சொல்கிறார்கள். ஆனால் பிரெஞ்சுக்காரர்கள் உண்மையாகவே அக்கொள்கைகளின்படி நடந்து கொள்ளுகிறார்கள். பிரெஞ்சு காரர்களைப் போல் பிரிட்டிஷ் காரர்களும் நடந்து கொள்ள வேண்டும் ஆயின் இந்தியர்கள் மிகவும் முயற்சி செய்ய வேண்டியது (இந்தியா 03.07.1909).*

"பாரத சுதேசிய தர்மம்" என்ற தலைப்பு இடப்பட்ட கருத்துப்படம் ஒன்று (18.09.1909) இந்தியாவைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரமாகக் காட்டியுள்ளது. "பிரிட்டிஷாரின் ஜீவனத்திற்கும் பெருமைக்கும் பலத்திற்கும் இந்தியாவே அடிப்படை". இந்தியா என்ற அஸ்திவாரத்தின் மேல்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்

கோட்டை கொத்தளங்கள் அமைந்துள்ளன. ஆனால் இந்தியாவில் "பாரத சுதேசிய தர்மம்" ஆரம்பித்த பிறகு அஸ்திவாரம் ஆட்டங் கண்டு இடிந்து விழ ஆரம்பித்துவிட்டது. இதனைக் கண்டு இங்கிலீஸ்காரன் நடு நடுங்குகிறான். இவ்வாறு இக்கருத்துப்படம் அமைக்கப்பட்டுள்ளது.

"மலையைக் கெல்லி எலியைப் பிடித்தல்" என்ற தலைப்பில் ஆன கருத்துப்படம் ஒன்று 20.11.1909 நாளைய இந்தியா இதழில் வெளிவந்துள்ளது. தலைப்பின் கீழே "கனம் லார்ட் மார்லியின் சீர்திருத்தம்" என்ற செய்தித் தலைப்பும் இடம்பெற்றுள்ளது. படத்தில் ஒரு பெரிய மலையைப் பலரும் கருவிகள் கொண்டு வெட்டிப் புரட்டிப் போட்டுக்கொண்டு உள்ளனர். மார்லியின் சீர்திருத்தத்தில் ஒன்றும் இல்லை என்பதை விளக்கவே இப்படம் இடம் பெற்றுள்ளது.

இதுவரையும் அலகு மூன்றில் கூறப்பட்ட கருத்துப்பட விளக்கங்களைப் பின்வருமாறு தொகுத்து வகைப்படுத்தி அறிய முடியும்.

1. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பல்வேறு செயல்பாடுகளும் கடுமையான முறையில் இந்தியா இதழில் விமர்சிக்கப் பெற்றுள்ளன.

2. பத்திரிகைகளுக்குத் தடை, தீவிரத் தேசியவாத இயக்கத்தாருக்குக் கொடும் தண்டனைகள், பொய் வழக்குகள், கடுமையான வரி விதிப்பு, இந்தியச் செல்வத்தைச் சுரண்டி ஏற்றுமதி செய்தல், விடுதலை வேண்டும் மகான்களுக்குத் தேச துரோகக்குற்றம் சுமத்துதல், ஆயுதச் சட்டங்கள் முதலான இந்தியருக்கு எதிரான சட்டங்களைக் கொண்டு வருதல் முதலான செயல்பாடுகளைக் கருத்துப்படங்கள் கண்டிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளன.

3. மார்லியின் சீர்திருத்தம் வீண் வேலை என்றும் அதில் ஒன்றும் இல்லை என்றும் நகையாடப்பட்டுள்ளது.

4. தீவிரத் தேசிய வாத எழுச்சியால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆட்டம் கண்டுள்ள தன்மையும் அந்த எழுச்சியைப் பல்வேறு முனைகளில் அழிக்க மேற்கொண்ட நடவடிக்கைகளும் தெரிய வருகின்றன.

அலகு நான்கு:

அந்நியப் பொருள் நிராகரிப்பு, சுதேசிய ஆதரவு என்பன இந்தியா இதழின் கருத்துப் போக்குகளில் சில ஆகும். சுதேசிய ஆதரவு பற்றியும் பல கருத்துப்படங்களை இந்தியா இதழ் வெளியிட்டுள்ளது. ஆயிரம் கையுடைய கடவுளாகத் தொழில் என்ற தேவி சித்திரிக்கப் பட்டுள்ளாள். அவள் உறங்கிக் கிடக்கிறாள். அவளை எழுப்பச் சில தேசபக்தர்கள் முயற்சி செய்கிறார்கள். தொழிற்சங்கச் செயலாளராக இருந்து தொழில் உற்பத்திக்குப் பல தொண்டுகள் ஆற்றிவரும் மதோல்கார் அவர்களின் உருவம் சித்தரிக்கப்பட்டு அவர் தொழில் தேவியை எழுப்புவதாக வரையப்பெற்றுள்ளது. நாட்டில் பஞ்சம் நீங்கவும், செழிப்பு வரவும் கைத்தொழில் வளர்ச்சி பெறுதல் முக்கியமானது என்பதை உயர்ந்த படிப்பாளிகளும், மேற் குலத்தோரும் நினைப்பில் வைத்திருக்க வேண்டுவதோடு இத்தொழில் கௌரவம் இல்லாதது என்ற எண்ணத்தையும் ஒழித்தல் வேண்டும் என்று இந்தியா இதழ் கூறியுள்ளது (30.01.1909).

கையில் சூலம் தரித்துள்ள பாரத மாதாவாகிய தேவி மக்களைப் பார்த்துச் சுதேசியக் கப்பலுக்கு உதவி செய்யும்படி கட்டளை இடுவதாக 13.02.1909 நாளைய இந்தியா இதழில் கருத்துப்படம் அமைந்துள்ளது.

17.07.1909 ஆம் நாள் வெளிவந்த இதழில் "சுதேச புகைக் கப்பல்கள்" என்ற தலைப்பில் இரண்டு படங்கள் மேலும் கீழும் அச்சாகி உள்ளன. மேலே உள்ள படத்தில் வங்காளத்தில் உள்ள பெரும் கனவான்கள் எல்லோரும் சுதேசியக் கப்பல்கள் நடத்தச் சிறிதும் சலிப்படையாது வேலை செய்வதாகக் காட்டப் பெற்றுள்ளது. கீழே உள்ள படம் தென்னிந்திய நிலையைக் குறிப்பது. இங்குச் சிலரே ஊக்கத்தோடு வேலை செய்கிறார்கள். பெரும்பாலும் பலர் கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கிறார்கள்.

> "இதுதான் பங்காளத்தில் அவர்கள் லாபமடைவதற்கும் இங்கு நாம் நஷ்டமடைவதற்கும் காரணம்"

என்பதோடு சித்திர விளக்கம் நிறைவடைகிறது

20.11.1909 ஆம் நாள் வெளிவந்த இந்தியா இதழில் தீபாவளி தேவி சுதேசக் கப்பல் கம்பெனிக்குப் பாரத மக்களிடம்

இருந்து பணக்கொடை வசூல் செய்து கொடுப்பதான படம் இடம்பெற்றுள்ளது.

அலகு ஐந்து:

09.10.1909 அன்று வெளிவந்த இதழில் பெண்நிலை உயர்வு பற்றிய கருத்துப்படம் வெளியாகி உள்ளது. நான்கு குதிரைகளில் ஏறி விரைந்து வரும் பெண்கள் நால்வர் கைகளில் கோல் ஏந்திப் "போலோ" என்று சொல்லப்படும் பந்து விளையாட்டை விளையாடுவது போல ஓவியம் இடம் பெற்றுள்ளது. இது பற்றிய சித்திர விளக்கம் வருமாறு:

> நமது தேசத்தில் ராஜபுத்திரப் பெண்கள் மொகலாய அரசாட்சிக் காலங்களில் கூடக் குதிரைகளின் மேல் உட்கார்ந்து கொண்டு 'போலோ' என்ற பந்தாடுகிறதுதான் இந்த வாரம் நமது பத்திரிகையின் சித்திரம். ஐரோப்பா, அமெரிக்கா முதலான நாடுகளில் பாரத தேசத்து மாதர்களுக்கு நாகரீகமே தெரியாது; வித்தை வாசனையே கிடையாது அடிமைகள் போல நடத்தப்பட்டு வந்தார்கள்; வருகிறார்கள் என்று இப்படிப் பற்பல விதமாய் நமது நாகரிகத்தையும் பெண்களையும் நம்மையும் பழித்து இழிவாக எண்ணி வருகிறார்கள். அவர்கள்தான் அப்படி என்றால் நம்மவர்களில் சிலர் அவர்கள் சொல்வதை வேதவாக்காக எண்ணி நமது முன்னோர்களைப் பழிக்கிறார்கள்.
>
> நமது தேசத்தில் என்றைக்கும் பெண்கள் நல்ல உன்னத நிலையில் நல்ல படிப்பு, ஞானம், கேள்வி இவைகளுடன் கூடிய ஆரிய வீர தீர தைரியத்துடன் வாழ்ந்து வந்தனர். வீட்டின் மூலையில் அடைத்துப் பூட்டப்பட்டிருக்கும் பெண்களுக்கு என்ன தெரியும் என்று வீண் அரட்டை அடித்துத் திரிபவர்களின் வாய்க்கு ஆப்பிட வேண்டி இச்சித்திரம் பதிப்பிக்கப் பட்டது. இதைப் பற்றி 200 வருடங்களுக்கு முன்பு ஓர் பிரெஞ்சு சிற்ப சாத்திர வித்வான் இந்தச் சித்திரத்தை உதயப்பூர் முதலிய இடங்களில் கண்டு அவற்றை வியந்து புத்தகமும் எழுதி இருக்கிறார். நமது பாரத நாடு உயர்ந்த பெண்களைத் தானாகப் பெற்றது. சம்பாசூர வதத்தில் கைகேயி தசரதனுக்குத் தேரோட்டினாள். அச்சாணி விழுந்து விட்டபோது தனது கையை அச்சாணியாகப்

> பிடித்தாள். நரகாசுர வதத்தில் கிருஷ்ணன் களைத்து விட்டபோது சத்திய பாமா யுத்தம் செய்தாள். மகாராணி அகல்யாபாய் கோல்கார் நாட்டில் அரசாட்சி செய்தாள். . . சீதா, திரௌபதி, மீரா, ஆண்டாள், மங்கையர்க்கரசி, காரைக்கால் அம்மை முதலான பல ரத்னங்களைப் பாரதமாதா மகளிர்களாய்ப் பெற்றிருக்கிறாள் என்பதை இவர்கள் அறிவார்களாக.

என்று மகளிரின் பெருமை பற்றியும் மேன்மை பற்றியும் சித்திர விளக்கத்தில் எடுத்து விளக்கப் பெற்றுள்ளன.

அலகு ஆறு:

இந்தியத் தேசிய விடுதலை என்பது இந்து மதத்தோடு சேர்த்தே பார்க்கப்பட்டது என்பது முன் இயலில் சிறிது விளக்கப்பட்டது. பாரத தேவி, சுதந்திர தேவி, தீபாவளி தேவி, தொழில் தேவி என்று தேசிய விடுதலை இயக்கமே கடவுள் இயக்கமாகக் கருத வைக்கப்பெற்றது. இக்கருத்து இந்தியா இதழின் கருத்துப்படங்களிலும் எதிரொலித்தது.

இந்திய நவீன கிளர்ச்சியும் (தீவிரத் தேசிய வாத இயக்கம்) கிருஷ்ணன் பிறப்பும் பற்றிய ஒரு கருத்துப்படம் 11.09.1909 நாளைய இதழில் வெளிவந்துள்ளது. சிறைச்சாலையில் வாசுதேவரும் தேவகியும் காலில் விலங்குபூட்டி அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அப்போது கிருஷ்ணன் பிறக்கிறார். யாருக்கும் கட்டுப்படாத அதிகார கம்சன் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறான். பகவான் சிறையில் பிறந்ததும் கோடி சூரியப் பிரகாசம் தோன்றியது. துட்டர்கள் மனம் பதைபதைத்து வீழ்ந்தனர். பக்தர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்; ஆர்த்தனர். சிறைக்கதவு திறந்து கொண்டது. வாசுதேவர், தேவகி கால் விலங்குகள் முறிந்தன. நாட்டை நலியும் அடிமைத்தனம் நீங்கி நலமும் தனமும் சுகமும் மக்கள் மகிழ்ச்சியாய் அனுபவித்தார்கள் என்று கூறும் சித்திர விளக்கம் நிறைவாக

> "நமது இந்திய நவீன கிளர்ச்சி இதன் அம்ச அவதாரம்"

என்று முடிகிறது. அதாவது கிருஷ்ணன் அவதாரமும் தீவிரத் தேசிய வாத இயக்கத் தோற்றமும் ஒன்று என்றும், இந்த அவதாரம் அடிமை விலங்கை உடைத்தெறியும்.என்றும் கூறுவது இதன் உள்ளார்ந்த கருத்தாகும்.

'இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரியின் செய்கை'- என்ற தலைப்பில் அமைந்த கருத்துப்படம் (29.10.1909) சுதந்திர தேவியை "ஸ்ரீ பாரத ராஜ்ய சுவதந்திர லட்சுமி" என்றும் அவள் இருப்பிடத்தைச் "சன்னிதானம்" என்றும் குறிப்பிடுகிறது. சுதந்திர தேவி லட்சுமியின் உருவம் தாங்கி நான்கு கரங்களுடன் பீடத்தில் அமர்ந்து திலகர், அரவிந்தர் முதலான பக்தர்களுக்கு அருளாசி வழங்குகிறாள். இவ்விதமாக இந்தக் கருத்துப்படம் அமைந்துள்ளது.

"ஐக்கியமே பலம்" என்ற தலைப்பிடப்பட்ட கருத்துப்படம் ஒன்று 04.12.1909 நாளைய 'இந்தியா' இதழில் வெளி வந்துள்ளது. பாரத மாதாவைப் பார்வதி தேவியாகவும், ஆறு மாகாணமாகப் பிரிக்கப்பட்ட இந்தியாவை முருகனாகவும் சித்திரிக்கிறது இப்படம். சிவன் நெற்றிக் கண்ணிலிருந்து உதித்த முருகன் அறுவராகக் (ஆறு பேராக) கார்த்திகை மகளிரிடம் வளர்கிறான். அந்த அறுவரையும் பார்வதி தேவி சேர்த்துத் தழுவும் போது முருகப் பெருமான் ஒருவனாக அறுமுகக் கடவுளாக ஆகிறான். இது புராணம். இக்காட்சியைப் படமாக்கிய இந்தியா இதழ் இக்காட்சியைப் பின் வருமாறு விளக்கி உள்ளது:

> ஸ்ரீபாரத மாதா தன் ஆறு பிள்ளைகளையும் ஒரே பிள்ளை ஆகும்படி தழுவி ஒன்று சேர்க்கிறாள். ஐக்கியமே பலம்; பிரிவே பிளவு (இந்தியாவில் வங்காளம், பம்பாய், சென்னை, மத்திய மாகாணங்கள், பஞ்சாப், ஐக்கிய வடமேற்கு மாகாணங்கள் என்று ஆறு மாகாணங்கள் இருக்கின்றன. அவைகள் ஒரே மனோ நோக்கத்துடன் சுதந்திரம் அடைய ஒற்றுமைதான் வேண்டும்) (இந்தியா 04.12.1909)

இந்து மதத்தை ஏற்று ஆழ்ந்த ஈடுபாட்டுடன் பல்வேறு முனைகளில் இந்துமதத்தைப் போராட்டக் கருவியாகப் பயன் படுத்திய அதே வேளையில் இந்து முசுலீம் ஒற்றுமையையும் இந்தியா இதழ் வலியுறுத்தி உள்ளது.

இந்தியாவின் நன்மைக்காகக் கோகலே முதலியோர் வேண்டுகோளின்படி மார்லி, 'சீர்திருத்தங்கள்' என்ற கிணறு வெட்டுகிறார். அதிலிருந்த 'இந்து மகமதிய விவகாரம்' எனும் பூதம் புறப்படுகிறது. இவ்வாறு ஒரு கருத்துப்படம் 20.03.1909 இதழில் வெளிவந்துள்ளது.- மார்லி சீர்திருத்தம் இந்து முசுலீம்கள் இடையே அவநம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது என்றும்

பஞ்சாபி பத்திரிகை ஒன்றில் ஒருவர் இந்துக்கள் இனித் தனியாகக் காங்கிரசு நடத்த வேண்டும் என்று எழுதுகிறார் என்றும், அமீர்அலி முதலியோர் நாம் வேறு இந்துக்கள் வேறு நமக்கும் அவர்களுக்கும் ஒன்றாகத் தேர்தல் நடத்தவே கூடாது என்று கூறி உள்ளார் என்றும் கருத்துப்படம் விவரித்துள்ளது. ஆனால் இந்தப் பூதம் அபாயகரமானது அன்று என்றும் கூறியுள்ளது. ஏனெனில் இந்து, முகமதியர் இரண்டு பக்கத்திலுமே சில பட்டந் தேடிகள் மட்டுமே இப்படி அடித்துக் கொள்கிறார்கள்; மற்றபடி பொதுமக்கள் எப்போதும் போல் அண்ணன் தம்பிகளாகவே வாழ்ந்து வருகிறார்கள் என்றும் அக்கருத்துப்படம் விவரித்துள்ளது.

நாட்டு விவகாரங்களில் இந்துவும் முசுலீமும் எதிரிகளாக இருக்கிறார்கள் என்று வைசிராய் சட்டசபையில் சொல்லி இருக்கிறார். இதுபற்றியே தேர்தல் ஒதுக்கீடு/பிரிவு முதலிய சட்டப் பிரிவுகள் ஏற்பாடு செய்து பிரிவினை ஏற்படுத்தி உள்ளதாகச் சொல்கிறார். பிரிவுபட்ட தேர்தல் என்ற சுவர் பொறாமை, விரோதம், கருத்து வேறுபாடு என்பதால் கட்டப்பட்டுள்ளது. ஆனால் இந்துவும் முசுலீமும் இச்சுவரை இடித்துத்தள்ளிவிட்டு ஒருவரை ஒருவர் தழுவி மகிழ்கின்றனர். அவர்களுக்கு மேலே 'எங்கள் தாய்' என்ற பெயர் எழுதப்பட்ட கொடி பறக்கிறது. இவ்வாறு இந்து முசுலீம் பிரிவினையைத் தகர்ப்பது பற்றிய கருத்துப் படம் ஒன்று 03.04.1909 நாளைய இதழில் வெளி வந்துள்ளது.

'இரண்டுவித மகமதியர்' என்ற தலைப்பிட்டு 01.05.1909ஆம் நாள் வெளிவந்த இதழ் ஒரு கருத்துப்படத்தை வெளியிட்டுள்ளது. இப்படத்தில் இரண்டு மகமதியர்கள் தொழுகை நடத்துகின்றனர். ஒருவர் சென்னை மகமதியர். இன்னொருவர் லாகூர் மகமதியர். சென்னை மகமதியர் துருக்கி நாட்டில் மக்கள் ஒற்றுமை இல்லாமல் பிரச்சனை தோன்றியுள்ளது பற்றி வழிபட்டு அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்று தொழுகை நடத்துகிறார். ஆனால் லாகூர் மகமதியரோ இந்தியாவில் மக்கள் ஒற்றுமை இல்லாமல் அவர்களுக்குள் பிரிவுகள் ஏற்பட வேண்டும் என்று தொழுகை நடத்துகிறார். "இவ்விருவருக்குள் எத்தனை வேற்றுமையுள்ளது" என்பதாக இப்பகுதி முடிந்துள்ளது.

வங்கப் பிரிவினையையும் அதனை ஒட்டிய இந்து முசுலீம் அரசியல்சார் பிரிவினையையும் இதற்குரிய

பிரச்சனைகளையும் இந்து முசுலீம் பற்றிய கருத்துப் படங்கள் முன்வைத்துள்ளதை அறிய முடிகின்றது.

அலகுகளும் வாய்பாடுகளும்

இதுவரையும் 1909 ஆம் ஆண்டில் வெளிவந்த இந்தியா இதழ்களின் 53 கருத்துப்படங்களை வகைப்படுத்தி அவற்றின் பொருண்மை நோக்கிலான அடிப்படையில் ஆறு அலகுகளாகப் பிரிக்கப் பெற்றுச் செய்திகள் ஆராயப்பட்டன. இந்தச் செய்திகளில் இருந்து சில வாய்பாடுகளைப் பெறமுடியும். முன் இயலில் இந்தியா இதழ் ஒன்றை ஆய்வுக்கு உட்படுத்தி அவற்றிலிருந்து பெறப்பட்ட வாய்பாடுகளை மீண்டும் ஒருமுறை நினைவு கூர்தல் வேண்டும்.

மித தேசிய வாத எதிர்ப்பு என்பதைப் பல்வேறு முறைகளிலும் இந்தியா இதழ் நிகழ்த்தி உள்ளது. மிதவாதிகளின் செயல்கள், கூட்டங்கள், முடிவுகள் எல்லாமே இந்தியத் தேசிய விடுதலைக்கு எதிரானவை என்பதாக ஒரு கருத்துப்போக்கினை இந்தியா இதழ் வெளியிட்டுள்ளது. 1909ஆம் ஆண்டில் வெளிவந்த இந்தியா இதழ்கள் மிதவாதிகள் கோகலேயையும் மேத்தாவையும் கடுமையான முறையில் விமர்சனம் செய்துள்ளமையையும் அறிய முடிகின்றது.

தீவிரத் தேசிய வாத இயக்கம் மட்டுமே பாரதத்திற்குச் சுய ஆட்சியைப் பெற்றுத் தரும் எனும் கருத்துப்போக்கை இந்தியா இதழ்கள் முன்வைத்துள்ளன. நவீன கிளர்ச்சி என்று வர்ணிக்கப் பெற்றுள்ள இந்த இயக்கம் சில அயல்நாட்டு இயக்கங்களோடும் ஒப்பிடப்பெற்றுள்ளது. சுயராஜ்யம், சுதேசியம், அந்நியப் பொருள் மறுப்பு, ஜாதியக் கல்வி ஆகியவற்றை முன்வைத்துப் போராடிய இந்த இயக்கத்தாரைப் பல்வேறு முனைகளில் ஒடுக்கிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இந்தியா ஏடு கடுமையான முறையில் சாடுகிறது..

தீவிரத் தேசிய வாத இயக்கத்தாருக்கு எதிராக மிதவாதிகளை ஆதரித்துப் பிரிவினையை உண்டாக்கல், இந்து முசுலீம் மதத்தார் இடையே பிரிவினையை உண்டாக்கல், ஆயுதச் சட்டம், பத்திரிகை அடக்குமுறை, தீவிரத் தேசிய வாதிகளைச் சிறை செய்தல், கொடும் தண்டனைகள் வழங்கல் எனப் பல்வேறு அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியா இதழால் கண்டிக்கப் பெற்றுள்ளது.

உள்நாட்டுப் பொருள் உற்பத்தி கைத்தொழில் மேன்மை உள்ளிட்ட சுதேசியம் இந்தியா இதழால் உயர்வான முறையில் முன் வைக்கப் பெற்றுள்ளது. தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரம் பிள்ளையால் உருவாக்கப்பட்ட சுதேசியக் கப்பல் கழகத்தைப் பல்வேறு நிலைகளில் இதழ் ஆதரித்துள்ளது.

இந்தியப் பெண்கள் பற்றிய ஒரு கருத்துப்படம் பெண்நிலை உயர்வு பற்றிப் பேசுவதற்குத் தக்கவாறு அமைக்கப்பட்டுள்ளது. இது பற்றி ஒரு கருத்துப்படமே வெளியிடப்பெற்றாலும் அது முதன்மை மிக்கதாக விளங்குகிறது.

இந்தியத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தீவிரத் தேசிய வாத இயக்கத்தோடு இந்துமதம் முழுவதும் கரைந்து ஒன்றானது என்று கூறும் அளவிற்குப் பின்னிப் பிணைந்தது. இந்து மதத்தையும் இந்துச் சடங்குகளையும் கடவுளரையும் முன்வைத்தே மக்கள் அணி திரட்டப்பட்டனர். தேசியம் முழுவதும் அன்னைத் தெய்வமாக உருவகிக்கப்பட்டது.

இதே வேளையில் எழுந்த இந்து முசுலீம் முரண்பாடும் கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. வங்கப் பிரிவினை நில அளவில் இந்துக்களையும் முசுலீம்களையும் பிரித்தது. இதேபோல் மார்லியின் சீர்திருத்தம் அப்பிரிவினையை விரிவுப்படுத்தியது. இந்நிலையில் தீவிரத் தேசிய வாத இயக்கத்தார் இந்த இரு பிரிவினைகளையுமே கடுமையாக எதிர்த்தனர். இந்திய மக்கள் வேறு வேறு மதத்தார் ஆயினும் தேசிய விடுதலை முதலிய பொதுநல நிகழ்வுகளை மதவேற்றுமை கடந்து ஆதரிக்க வேண்டும் என்று விரும்பினர். எனவே இந்து மதத்தை முன்நிறுத்திய அதே வேளையில் இந்து முசுலீம் ஒற்றுமையும் வேண்டப்பெற்ற ஒன்றாகவே இந்தியா இதழ் கருத்துகளை முன்வைத்தது.

கருத்துப்படங்களின் இத்தகு கருத்துப் பின்னணியில் முன்பு கூறப்பெற்ற அலகுகளிலிருந்து பின்வரும் வாய்பாடுகளைப் பெற முடியும்:

அலகு ஒன்று - வாய்பாடு

மித தேசிய வாத எதிர்ப்பும் கண்டிப்பும்

அலகு இரண்டு - வாய்பாடு

தீவிரத் தேசிய வாத ஏற்பும் ஆதரவும்

அலகு மூன்று - வாய்பாடு

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பும் கண்டிப்பும்

அலகு நான்கு - வாய்பாடு

சுதேசியம் ஏற்பும் ஆதரவும்

அலகு ஐந்து - வாய்பாடு

பெண் நிலை உயர்வு ஆதரவு

அலகு ஆறு - வாய்பாடு

இந்து சமயத்தை முன்னிலைப்படுத்தலும் இந்து இசுலாமிய ஒருமைப்பாட்டை ஏற்றலும்.

ஆய்வு முடிவு

இந்தியா இதழின் நோக்கும் போக்கும் பற்றி இனி விரிவாகக் கூற வேண்டியது இல்லை. 16.10.1909 ஆம் நாள் வெளிவந்த இந்தியா இதழின் வாய்பாடுகளே 1909 ஆம் ஆண்டு வெளிவந்த அனைத்து இதழ்களின் கருத்துப்படங்களிலும் வெளிப்பட்டுள்ளது என்பதை ஒப்பீட்டு முறையில் அறிய முடிகின்றது. குறைந்த பட்சம் 1909 ஆம் ஆண்டு முழுவதும் இத்தகு சமூக அரசியல் பின்னணியில்தான் இந்தியா இதழ் இயங்கி உள்ளது என்பதை அறியமுடிகின்றது.

நிறைவிற்கு முன்

"இந்தியா" மீண்டும் மலராமையும் பாரதியின் அரசியலும்

"இந்தியா" இதழ் 1910 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12 ஆம் நாள் இதழோடு நின்று போனது. இந்தியச் சுதந்திரப் போர் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளில் தமிழ் மண்ணில் இந்தியா இதழ் சாதித்தவை வீரம் செறிந்தவை. முதல் பத்து ஆண்டுகளில் செம்பாதி 1905-1910 வரை இந்தியா இதழின் அரசியல், பாரதியின் நடையில் கூறுவது என்றால் "நவீன கிளர்ச்சி" என்பதாகத்தான் அமைந்தது. அரசுக்கு எதிரானது என்றும் ராஜதுரோகம் என்றும் குற்றம் சுமத்திப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியா இதழைப் பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் தடை செய்தது. அதன் பின்னர் இதழை நடத்த இயலாமல் இந்தியா அலுவலகம் மூடப்பட்டது (மார்ச்சுத் திங்களுக்குப் பின்னர் ஓரிரு இதழ்கள் வந்தமையை முன் இயலில் காண்க). 17.05.1910 இல் எழுதப்பட்ட இரகசியக் காவலர் குறிப்பில் 'இந்தியா இதழ் நின்று போயிற்று என்றும், பாரதி குறைந்த வாடகையுள்ள வீட்டுக்குக் குடியேறினார்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரதியின் தீவிரத் தேசியவாத அரசியலும் இந்தியா இதழின் மறைவோடு சேர்ந்தே மறைந்து போய்விட்டதாகத் தெரிகிறது. 1910 க்குப் பின் பாரதியின் ஆளுமை வேறு தளங்களில் கால் பதிக்கத் தொடங்கியது.

பாரதியின் எழுத்துகள் பற்றிய சில புள்ளி விவரங்கள் பாரதியின் கருத்துப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெரியப் படுத்தவல்லன. பாரதியாரால் 1906-இல் எழுதப்பெற்ற 271 கட்டுரைத் தலைப்புகளின் வகைப்பாடு வருமாறு : (நன்றி: புள்ளிவிவரங்கள் பா. இறையரசன், 1996).

அரசியல் கட்டுரைகள்	187
மதம் தொடர்பான கட்டுரைகள்	20
மொழி, கலை பற்றிய கட்டுரைகள்	23
சமூகம் பற்றியவை	5
பொதுவானவை	36

சுதேசிய மித்திரன் இதழில் 19.01.1916க்கும் 25.08.1921க்கும் இடைப்பட்ட காலத்தில் பாரதி எழுதிய கட்டுரைகள் 54 ஆகும். இவற்றின் வகைப்பாடு வருமாறு:

காங்கிரசு	0
சுதேசியம்	4
ஆங்கிலேயர் ஆட்சி	0
சுயாட்சி	3
மதம்	14
பொது	14
ஏனையவை	19

விகிதாச்சாரம் வருமாறு:

	1906இல்	1916–1921 இல்
காங்கிரசு	9.6%	0%
ஆங்கிலேயர் ஆட்சி	7.0%	0%
சுதேசியம்	26.6%	7.4%
சுயாட்சி	19.0%	5.6%

கட்டுரைகள் இவ்விதம் எனில் கவிதைகள் பற்றிய புள்ளி விவரம் வருமாறு:

	அரசியல்	பொது	மொத்தம்
1904 முதல் 1910 வரை	34	20	50
1911 முதல் 1921 வரை	0	14	14

பாரதியார் 1906முதல் தீவிரத் தேசிய வாத அரசியலைச் சார்ந்து நின்று தீவிர அரசியல்வாதியாகத் திகழ்ந்து உள்ளார். 1906-இல் எழுதப்பெற்ற 271 கட்டுரைகளுள் அரசியல் கட்டுரைகள்187 ஆகும். ஆனால் 1910க்குப் பிறகு காங்கிரசு பற்றியோ ஆங்கிலேய ஆட்சி பற்றியோ எழுதியவை மிக மிகக் குறைவு. 1916க்குப் பிறகு இவை பற்றிய எந்த ஒரு கட்டுரையுமே இடம் பெறவில்லை. இதே போல் கவிதைத் துறையில் 1910 வரை அரசியல் சார்ந்து 34 கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. 1910க்குப் பிறகு எந்தவொரு கவிதையும் அரசியல் சார்ந்து வெளிப்படையாக எழுதப்படவில்லை என்று புள்ளிவிவரங்கள் (பா. இறையரசன், 1996) தெரிவிக்கின்றன. தீவிரத் தேசியவாத இயக்கத்தின் வீழ்ச்சியும் பாரதியின் குடும்பச் சூழலும் அவருடைய அரசியல் வாழ்க்கையைப் பாதித்து இருக்க வேண்டும். ஆகப் பாரதியார் 1910க்குப் பிறகு கவிதைத் துறையிலும் சரி கட்டுரைத் துறையிலும் சரி அரசியல் பற்றிக் கருத்து உரைப்பதிலிருந்து முற்றும் ஒதுங்கி விட்டார் என்று கூறுவதே சரியாக இருக்கும். இதுபற்றி ரகுநாதன் (1986) கூறுவது வருமாறு:

"1908 ஆம் ஆண்டில் இந்தியாவில் நிகழ்ந்த முதல் வெடி குண்டு வீச்சுக்குப்பின் 1908-1911 ஆம் ஆண்டுகளில் விடுதலை இயக்கமே சிதறிச் சீர்குலைந்து போய்விட்ட நிலையில் அதில் ஈடுபட்டிருந்த தீவிர தேசிய வாத இயக்கத்தையும் புரட்சிகர இயக்கத்தையும் சேர்ந்த இளைஞர்கள் பலரும் அதன்பின் வேறுவேறு மார்க்கங்களைத் தேர்ந்தெடுத்தனர். சிலர் அரசியலில் இருந்து விலகிக் கொண்டனர். வெடிகுண்டு இயக்கம் தோற்றுவித்த விளைவுகளினால் புரட்சி நடவடிக்கையிலேயே விரக்தியடைந்த பலர் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து துறவிகளாக மாறினர். காந்தி அடிகள் இந்தியாவிற்குத் திரும்பி வந்த பின்னர்ச் சிலர் அவரது அகிம்சை வழியை ஏற்று மீண்டும் அரசியலில் ஈடுபட்டனர்.

தீவிரத் தேசிய வாத இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான விபின் சந்திரபாலர் 20.08.1908இல் இங்கிலாந்து சென்று தங்கிவிட்டார். திலகர் சிறையிலிருந்து வெளிவந்தவுடன் கோகலேயுடன் சமாதானம் செய்து மிதவாதம் ஏற்றார். 1915இல் கோகலேயும் இறந்தார். வங்கத் தலைவர்களில் முதன்மை பெற்ற அரவிந்தர் புதுச்சேரி வந்து துறவியானார்.

> 1905 ஆம் ஆண்டின் வங்கப் பிரிவினையோடு பிறந்த சுதேசிய தீவிரவாத இயக்கம் 1908ஆம் ஆண்டின் முதல் வெடிகுண்டு வீச்சுக்குப் பின் தேய்ந்து நலிந்து 1911 ஆம் ஆண்டின் இறுதியில் ஐந்தாம் சார்ஜ் மன்னன் இந்தியாவிற்கு வர இருந்த தறுணத்தில் இந்திய மக்களை ஏமாற்றுவதற்காக அரசாங்கம் வங்கப்பிரிவினையை ரத்து செய்து பிறப்பித்த உத்தரவோடு முடிவு கண்டது (ரகுநாதன் (1986)
>
> 1910க்குப் பிறகு தீவிர தேசிய வாத இயக்க வீழ்ச்சிக்குப் பிறகு பாரதியின் கவனம் கவிதை பக்கமாக முழுவதும் திரும்பி விடுகிறது. பாரதியின் புகழ்பெற்ற கவிதைப் படைப்புகள் எல்லாம் 1910க்குப் பிறகே வெளிவரத் தொடங்கி உள்ளன. புகழ் பெற்ற பாஞ்சாலி சபதம் முதற்பாகம் 1912-இல் வெளிவந்தது. இதேபோல் கண்ணன் பாட்டு 1913க்கும் 1917க்கும் இடையில் எழுதப்பட்டுள்ளது. தத்துவார்த்த கவிதையாகிய குயில்பாட்டு 1914-15 வாக்கில் வெளிவந்துள்ளது. (அடிப்படை : பாரதி பாடல்கள் ஆய்வுப்பதிப்பு. தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு). கவிதைத் துறை மட்டுமன்றி ஆன்மீக நெறியிலும் பாரதியின் கவனம் திசை திரும்புகிறது.

1906 இலிருந்து 1908 வரையும் 1908 இலிருந்து 1910 வரையும் 1910க்குப் பிறகும் பாரதியின் அரசியல் படைப்பையும் கவிதைப் படைப்பையும் பின்வருமாறு காட்சிப்படுத்தலாம்.

பாரதியின் அரசியல் இறங்குமுகம்	பாரதியின் கவிதை ஏறுமுகம்
1906 மிகஉச்சம்	மிக உச்சம் 1910க்குப்பிறகு
↓	↑
1908 உச்சம்	உச்சம் 1908
↓	↑
1910க்குப் பிறகு மிதம்	மிதம் 1906

இவ்வாறாகத் தீவிரத் தேசியவாத இயக்கத்தின் தோல்வி அதன் தொண்டர் பலரைத் துவளச் செய்தது. பலரும் வேறு வேறு வழிகளைத் தேர்ந்து எடுத்து அமைதி ஆயினர். பாரதியும் தமது தீவிர அரசியல் நிலையிலிருந்து மாறி ஆன்மீகத்திலும் கவிதையிலும் தமது ஆளுமையைச் செலுத்தத் தொடங்கினார்.

பாரதியின் அரசியல் மிக உச்சத்திலிருந்து மிதமாகிறது. கவிதை மிதத்திலிருந்து மிக உச்சமாகிறது (நேரடி உரையாடல்: க.ப. அறவாணன் 02.12.2002).

தீவிரத் தேசிய வாதம் தேவையா; தேவை இல்லையா என்பது ஒருபுறம் நிற்க; அவ்விதமான இயக்கம் இந்திய மண்ணிலும் குறிப்பாகத் தமிழ் மண்ணிலும் தோற்றுப்போனது ஏன்? வங்கத்திலும் பஞ்சாபிலும் இருந்தது போன்ற மக்கள் பங்களிப்பு இந்த இயக்கத்திற்குத் தமிழகத்தில் இருந்ததா என்பது தெரிய வில்லை. ஆனால் அவ்வாறு ஒரு பங்களிப்பு இருந்திருக்க இயலாது என்பதுதான் தமிழர் சமூகவியல் தெரியப்படுத்தும் செய்தியாக இருக்கும். இதற்குரிய காரணங்கள் யாவை?

1. தமிழரிடமோ இந்தியரிடமோ நவீன ஆயுதங்கள் கிடையாது. மரபு சார்ந்த ஆயுதங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அடக்குமுறைக்கு முன்பு நிற்பன அல்ல.

2. நவீன ஆயுதங்களைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற முனைப்புத் தமிழர்களிடையே இல்லை. வெடி மருந்து

பயன்பாட்டை முன்பே அறிந்திருந்த தமிழர் அவற்றை வழிபாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தினர் (வெடி வெடித்தல் முதலாயின)

3. எதிரியிடம் கொள்ளும் அச்சம் ஒரு பெருங்காரணம். தமிழகத்தில் எத்துணைப்பேர் பாரதிக்குப் பின்னாலும் வ.உ.சிக்குப் பின்னாலும் நின்றிருப்பர் என்பது தெரியவில்லை. 'ஆயுதச் சட்டத்தால் பேடி ஆனார்கள்' என்று பாரதியை வசைபாட வைத்தது எது?

4. பின்னே இழுக்கும் மனப்போக்கும் இதற்கு ஒரு காரணம். எவர் ஒருவரையும் முன்னே வளரவிடும் மனப்பான்மை குறைவு.

5. சுயநலமும் இதற்கு ஒரு காரணம். பதவி ஆசையும் பொருள் ஆசையும் அதிகார ஆசையும் சுயநலமாகி ஒற்றுமையின்மையைத் தோற்றுவித்தன.

6. மித வாதம் தீவிரவாதம் என விடுதலைப் போராட்டம் இரண்டாகப் பிரிவுபட்டதற்கே ஒற்றுமையின்மைதான் தலைக்காரணம்.

இத்தகு மனப்பான்மைகள் பாரதியை மாற்றின; மாறுவதற்கு அடிப்படையாயின. இத்தகு மனப்பான்மைகள் நிலவும் ஒரு சமூகத்தில் "இந்தியா" போன்ற ஓர் இதழ் மீண்டும் தோன்றுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போயிற்று.

துணை நூல்கள்

அறவாணன், க.ப. 2002; தமிழர் அடிமையானது ஏன் எவ்வாறு; புதுச்சேரி; தமிழ்க்கோட்டம்.

இராசேந்திரன், கு 2002; புதுவை பேணும் தமிழ்; புதுச்சேரி: தாய் வெளியீடு.

இறையரசன், பா. 1995; இதழாளர் பாரதி; சென்னை; என்சி. பி.எச்.

கலைவாணி, சோ.; 1997; செய்தி சேகரித்தலும் எழுதுதலும்; வேலூர்; சாரதா வெளியீடு.

குருசாமி, மா.பா. 2001; இதழியல் கலை; திண்டுக்கல்; குரு-தேமொழி.

சக்திவேல், சு. 1997; இதழியல் ; சென்னை; மணிவாசகர் பதிப்பகம்.

சச்சிதானந்தம், க.; 1996; பிரெஞ்சியர் ஆட்சியில் தமிழின் நிலை; புதுச்சேரி; சாரதா பதிப்பகம்.

சம்பந்தன், மா.சு.; 1987; தமிழ் இதழியல் வரலாறு;சென்னை; தமிழர் பதிப்பகம்.

செயராமன், நா. & கருணாகரன், கி. 1988; பாரதி உரைநடை ஆய்வு; கோயம்புத்தூர் ; பாரதியார் பல்கலைக்கழகம்.

சுப்பிரமணியம், ஸி.எஸ். இளசை மணியன், 1986; பாரதி தரிசனம்; சென்னை; என்சிபிஎச்.

தமிழ்மணி மானா; 1997; இதழியல் முன்னோடி எங்கள் பாரதியார்; சென்னை; மணிமேகலைப் பிரசுரம்.

தில்லைவனம்,சு.; 1980; புதுவை மாநிலத் தமிழ் வளர்ச்சி; சென்னை; பாரிநிலையம்.

பத்மநாபன், ரா.அ.; 1982; பாரதி புதையல் பெருந்திரட்டு; சென்னை; வானதி பதிப்பகம்.

மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு; 1987; தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்; சென்னை; மணிமேகலைப் பிரசுரம்.

ரகுநாதன், 1986; பாரதி காலமும் கருத்தும்; சென்னை; என்.சி.பி.எச்.

வாழ்வியற் களஞ்சியம் xi தொகுதி; 1988 தஞ்சாவூர்; தமிழ்ப் பல்கலைக்கழகம்

விசுவநாதன், சீனி, 1993; பாரதியின் பத்திரிகை உலகம்; சென்னை; வெளியீட்டாளர் சீனி விசுவநாதன்.

வேங்கடாசலபதி, ஆ.இரா. 1994; பாரதியின் கருத்துப்படங்கள்; விற்பனை உரிமை; சென்னை, நர்மதா பதிப்பகம்.

கட்டுரை :

செங்கமலத்தாயார், "பாரதியின் கருத்தோவியங்கள்", தேசிய ஒளி (சிறப்பிதழ்) புதுச்சேரி, சூலை, 1994.

பின்னிணைப்பு

“இந்தியா” இதழ்க் கருத்துப்படங்களும் கருத்துப்பட விளக்கங்களும்

* 1909 ஆம் ஆண்டில் வெளிவந்த “இந்தியா” இதழ்க் கருத்துப் படங்களுள் பத்துப்படங்கள் இந்நூலில் பின்னிணைப்பாகத் தரப்பெற்றுள்ளன.

* கருத்துப்படம், கருத்துப்பட அடிக்குறிப்பு, கருத்துப்பட விளக்கம் எனும் முறையில் படம் அமைந்துள்ளது.

* இந்நூலில் ஆய்வு செய்யப்பெற்ற வாய்பாடுகளின் வகைப்பாடுகளுக்கு ஏற்பப் பத்துப்படங்களும் தேர்வு செய்யப்பெற்றுள்ளன.

* நாள், திங்கள் வரிசைப்படி படங்கள் இடம்பெற்றுள்ளன.

* இப்படங்கள் யாவும் புதுச்சேரி பாரதி அருங்காட்சியகம் ஆய்வு மையத்திலிருந்து பிரதி செய்யப் பெற்றவை.

* பிரதி எடுக்கத் துணை செய்த கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் அவர்களுக்கும் அருங்காட்சியக ஆய்வு அலுவலர் முனைவர் நா.செங்கமலத்தாயார் அவர்களுக்கும் நன்றிகள்.

* நூலில் எடுத்தாளப்பெற்ற அனைத்துக் கருத்துப் படங்களையும் கருத்துப்பட விளக்கங்களையும் அறியப் பார்க்க வேண்டிய நூல்: ஆ.இரா. வேங்கடாசலபதி, 1994, பாரதியின் கருத்துப் படங்கள்.

766/1-3

Registered No. M. 771 LIBERTÉ,—EGALITÉ—FRATERNITÉ. தனிப்பிரதி அணா 1.

ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸகோதரத்துவம்.

Acc. No.

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

1909ம் ஏப்ரில் 17உ



வரி கொடுப்பவன் மூக்கிலே விரல் வைத்துக்கொண்டு சொல்லுகிறான்: ஆஹா! நான் கொடுக்கும் பணமெல்லாம் இப்படியா செலவாகிறது. ஜன சௌக்கியத்திற்குப் பணம் கேட்டால் துரை கையிலே சின்ன முடிச்சுத்தான் வருகிறது. போலீஸ்காரன் வந்து கேட்டால் பிரமாண்டமான பணமுடிச்சை யெடுத்துப் போடுகிறார். துரையை நம்பி என் பணத்தை ஒப்புவித்ததற்கு மிகவும் நேர்த்தியாய்த்தான் வேலை செய்கிறார்".

சித்திர விளக்கம்

வரும் வருஷத்து (பிரிடிஷ் இந்தியா) வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிப் பல முறை எழுதியிருக்கிறோம். இவ்வாரச் சித்திரமும் அதே விஷயத்தைக் குறித்ததாகும். 30 கோடி ஜனங்களிருக்கும் பெரிய தேசத்தில் சுகாதாரத்திற்காக (Sanitation) 50 லக்ஷம் ரூபாய் அனுமதி செய்திருக்கிறார்கள்! ஆனால் பெங்காளம் ஒரு மாகாணத்தில் மட்டும் போலீஸ் இலாக்காவிற்கு 84 லஷம் செலவிடப்போகிறார்கள்! ஜனங்கள் சுதேசீயம் தொடங்கின நாள் முதல் போலீஸ் இலாகா அபரிமிதமாக வளர்ந்து கொண்டு போகிறது. அன்றாடம் புதிய உத்தியோகஸ்தர்கள் நியமித்துக் கொண்டு வரவே இவர்களுக்குப் பொய்யளவுகள் கற்பிப்பதைத் தவிர வேறு வேலைக்கிடமில்லை. யார் மேலேனும் சங்தேகங்கள் கற்பித்துக் கொண்டிருந் தாலொழிய இந்த மனிதர்களுக்கு உத்தியோகம் போய்விடும். நமது பிரிடிஷ் இந்தியா ஜனங்கள் கொடுக்கும் வரிப்பணம் யாதொரு அவசியமுமில்லாமல், அவர்களைப் பயமுறுத்தும் பொருட்டாக,குருவியின் தலையிலே பனங்காயை வைத்ததுபோல, அவர்கள் மேலே சுமத்தப்பட்டிருக்கும் சைநியத்திற்கும், அவர்கள் மீது தப்புக் கேஸ்கள் கொண்டுவந்து ஓயாத துரோகச் செய்கைகள் செய்யும் ரகஸ்யப் போலீஸுக்குமா போகவேண்டும்? நாட்டுச் செல்வத்தை வெளியேற்ற வந்திருக்கும் ரயில் பாதைக்குப் பணம் அழிவதைப் பொறுத்தாலும் பொறுக்கலாம். நம்மவரை அடிமைகளாக்கும் கல்விக்குப் பணம் அழிவதைப் பொறுத்தாலும் பொறுக்கலாம். வேறெதைப் பொறுத்தாலும் பொறுக்கலாம். அபாண்டமாக நம்மவர்மீது பழிகள் சுமத்தி, நம்மவருக்கு இமிசைகள் விளைவித்துக் கொண்டிருக்கும் ரஹஸ்யப் போலீஸ் சிப்பந்திகளுக்கு நம்மவரின் வரிப்பணம் செலவிடப்படும் கொடுமையை நினைக்கும்போது, அட . . நாம் பொறுத்தென்ன, பொறுக்காவிட்டாலென்ன? அதை யார் கவனிக்கிறார்கள்? நம்மவர்களை ஆண் மக்களென்று யார் மதிக்கிறார்கள்? நம்மவர் சென்ற ஏழெட்டு மாதங்களாக இடத்துக்கிடம் ராஜபக்திக் கூட்டங்கள் கூடி எங்கள் சுதேசீய முயற்சி ராஜாங்கத்தாருக்கு விரோதமில்லை யென்று பிரமாணம் செய்துகொண்டே வருகிறார்கள். என்ன பிரயோஜனம்? அன்னியன் நம்மவரின் வார்த்தைகளிலே நம்பிக்கை வைக்கின்றானில்லை.

LIBERTÉ—EGALITÉ—FRATERNITÉ.

7681

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

1909ஆம் மேயீ 1 உ — இ-20

LOOK AT THIS PICTURE AND AT THAT

இரண்டு வித மகமதியர் - என்ன தாரதம்மியம்!

(1) சென்னையில் (2) லாஹோரில்

(1) சென்னை மகமதியர் துருக்கியில் கலகம் நீங்கி ஜன ஐக்கியமுண்டாக வேண்டுமென்று தொழுகிறார். (2) லாஹோர் மகமதியர் ஸ்வதேசமாகிய இந்தியாவிலேயே ஜன ஐக்கியமில்லாமல் பிரிவுகளேற்பட வேண்டுமென்று பிரார்த்தனை செய்கிறார். இவ்விருவருக்குள் எத்தனை வேற்றுமையுள்ளது!

சித்திர விளக்கம்

இவரைப் பார். அவனைப் பார்! இவர்களுக்குள் எவ்வளவு வேற்றுமையிருக்கின்றது!

சென்னைப்பட்டணத்தில் சென்ற வாரக் கடைசியில் மகமதியர்களின் முக்கிய குருவாகிய மவுலவி குதரத் ஹாகிம் ஸாஹிபு என்பவரின் அக்கிராசனத்தின்கீழ் சுமார் 5000 மகமதியர்கள் கூடித் துருக்கி ஜனங்களுக்குள்ளே ஒற்றுமையின்மை யேற்பட்டிருப்பதைக் குறித்துப் பரிதாப முணர்த்தித் தந்தியனுப்புவித்தார்கள். இது ஒரு புறம் நடக்க, வடநாட்டில் லாஹோர், டாக்கா முதலிய இடங்களில் ஓரிரண்டு மகமதியப் பட்டந்தேடிகள் இந்தியாவில் நம்மவர்களுக்குள்ளே ஒற்றுமைக் குறைவும், மனஸ்தாபங்களும் ஏற்படுவதற்குரிய காரியங்கள் செய்துவருகிறார்கள். நமது சித்திரத்தில் (1) என்ற குறிப்பில் முந்திய வகுப்பு மகமதியரையும் (2) என்ற குறிப்பில் பிந்திய வகுப்பு மகமதியரையும் காட்டியிருக்கிறோம். துருக்கி ஜனங்களுக்குள்ளே ஐக்கியக் குறைவினால் பலஹீனமுண்டாய் விடும். அதன் பேரில் (கொழும்பில் பிரசுரமாகும் "முஸ்லீம் நேசன்" பத்திரிகை சொல்வது போலத்) துருக்கியை ஐரோப்பாவின் எல்லையிலிருந்து வெளிப்படுத்திச் சின்ன ஆசியாவுக்குத் தள்ளிவிட வேண்டுமென்று விருப்பங் கொண்டிருக்கும் ஐரோப்பிய ஜாதியாரின் நோக்கம் நிறைவேறும். ஆதலால் துருக்கியில் ஜன ஒற்றுமை வேண்டுமென்று பிரார்த்தனை செய்யும் மகமதியர்கள் எத்தனை புகழ்ச்சிக்குரியவர்கள். அதற்கு நேர் மாறாக ஸ்வதேசத்திலேயே ஜன ஒற்றுமையைக் கெடுக்க விரும்புவோர் எவ்வளவு சண்டாளர்கள்!

Registered No. M. 771 LIBERTÉ—ÉGALITÉ—FRATERNITÉ

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்.

771/1
Acc. No. 771/1-6

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

பு. 1 [illegible] 1909 மேயீ 29 உ இ-33

CIRQUE DE WILSON.

ADAPTATION DU JOURNAL ILLUSTRÉ LOYALISTE DE BOMBAY LE "HINDI PUNCH"

"வில்ஸன்" ஸர்க்கஸ்.



"இந்தியாவின் குடிகள்" என்ற, பலமற்ற ஸான்டோவின்மீது ஸர்க்கஸ் தலைவராகிய இந்தியா கவர்ன்மெண்ட் அரசிறை மந்திரி வில்ஸன் என்பவர் தீர்வைப் பாரங்கள் என்ற கற்களைச் சுமத்தி அதன் பேரில் சேனை என்ற பீரங்கியை வைத்து வேடிக்கை காட்டுகிறார்.

சித்திர விளக்கம்

(புதுச்சேரியில் வந்திருக்கும் சுதேசீய ஸர்க்கஸ் கம்பெனியில் ஸ்ரீ வெங்கடஸாமி என்பவர்மேல் ஒரு பெரிய கல்லைச் சுமத்துகிறார்கள். அந்தக் கல்லின்மீது பல ஜனங்கள் ஏறி உட்கார்ந்து கொள்ளுகிறார்கள். ஸ்ரீ வெங்கடஸாமியை இந்தியன் ஸாண்டோ என்கிறார்கள்).

நமது நாட்டுக் குடியானவர்களையே சித்திரத்தில் இந்தியன் ஸாண்டோவாகப் போட்டிருக்கிறோம். அவன்மீது தீர்வைப் பாரங்கள் என்ற கற்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. இந்த விநோதம் காட்டி வைப்பவராகிய வில்ஸன் (அரசிறை மந்திரி) என்ற ஸர்க்கஸ் தலைவர் சபையாரின் கரகோஷத்தை எதிர் பார்த்துத் தொப்பியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு நிற்கிறார்.

774

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

வெளியேற்றம்.

[illegible] இந்திய சட்டமென்று சொல்லி, [illegible]

அடக்கியாளும் சட்டங்கள்

பிரிடிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவை யடக்கியாளும் பொருட்டு ஆதரித்து வரும் அனேக சட்டங்கள் அவர்களுக்கு அபகீர்த்தியை விளைவிக்கத் தக்கவையாயிருக்கின்றன. ஜனங்களுக்கு இராஜாங்க விஷயங்களில் அதிகாரம் கொடாமல் வரிவசூல் செய்தல், தேசாபிவிருத்தியின் நிமித்தம் பாடுபடும் பெரிய மகான்களை வெளியேற்றிவிடுதல், பத்திரிகைகளை யச்சிட்டுப் பிரசுரஞ்செய்யும் முத்திரா சாலைகளை ஜப்தி செய்துவிடுதல், இராஜத்துரோகிகளென்று சொல்வித் தேசபக்தர்களை நீடித்த காலம் கடுங்காவலில் வைத்தல் - இத்தகையான சட்டங்களை நோக்கில், நாகரீகமுள்ளவர் செங்கோல் செலுத்தி வருகிறார்களென்று ஒருவரும் சொல்லமாட்டார்கள்.

சில தினங்களுக்கு முன்பாக லண்டன் நகரத்தில் நடைபெற்றுவந்த பத்திராதிபர் சங்கத்தில் மிஸ்டர் மகார்னெஸ் என்பவர் லார்டு மார்லி இந்தியாவுக்குச் செய்த கொடிய சட்டங்களைக் குறித்து அவரை நிந்தித்தார். அச்சமயம் பதிலொன்றும் சொல்லத் தெரியாமல் வாயை மூடிக்கொண்டிருந்த மார்லி துரையானவர் ஆக்ஸ்போர்டுக்கு வந்து சேர்ந்தவுடனே தான் இந்தியாவின் பொருட்டுச் செய்த செயல்களெல்லாம் வெகு நியாயமானவைகளென்று பேசத் துடங்கினார். அவர் சொன்னதாவது என்ன? 1908-ஆம் ஆண்டு இந்தியாவானது, முன்பு ஒரு முறை அயர்லாந்து இருந்ததைவிட அதிக குழப்பமான நிலையிலிருந்ததாகக் கூறியிருக்கிறார். இப்படி இந்தியாவின்மீது சுமத்தும் இப்பழியை அவர் உண்மையாய் நிரூபிப்பாரா? ஒரு நாளும் முடியாது. ஆயினும் ஸ்ரீ கோகலே ஸ்வாமி யானவர், இந்தியாவானது குழப்பமான நிலைமையிலிருக்கிறதென்று அவருக்குப் போதித்ததாகத் தெரிய வருகிறது.

உண்மையாய்ப் பார்க்குங்கால், இந்தியாவில் குழப்பமேது? அப்படி இங்குமங்கும் குழப்பமிருக்கிற தென்று சொல்லும் பக்ஷத்தில், அவைகளெல்லாம் பிரிடிஷ் கவர்ன்மெண்டாரின் அடக்கியாளும் கொடிய சட்டங்களுக்குப் பிற்பாடு உண்டாயினவேயொழிய முன்பல்ல. அக்கொடிய சட்டங்களின் பலனாக எவ்வளவு மகான்கள் விசாரணையின்றி வெளியேற்றப்

பட்டார்கள். எவ்வளவு தேசபக்தர்கள் இராஜத்துரோகிகளென்று சிறையிலடைக்கப் பட்டார்கள். எவ்வளவு முத்திராசாலைகள் ஜப்தி செய்துவிடப்பட்டன. இவ்வாறு வேறு எத்தேசத்திலாயினும் தண்டனை விதிக்கிறார்களா? பிரான்சு, ஆஸ்திரியா, ஜெர்மனி முதலிய தேசங்களிலுண்டா? அல்லது இங்கிலாந்திலாயினு முண்டா?

சில மாதங்களுக்கு முன்பாக பிரிடிஷ்காரர்களின் அரசனாகிய எட்வர்டானவர், ருஷியா அரசனாகிய ஜாரைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று இச்சித்த பொழுது, கெயிர் ஹார்டி யென்பவர், "ருஷியாவிற்கும் நமக்கும் பொருத்தம் சரியாயில்லாதபடியால், ஜாரைப் போய் பார்க்கக் கூடா" தென்றும், "அப்படிப் போய் பார்க்கும் பக்ஷத்தில் இப்படிப்பட்ட அரசன் இருப்பதை விட இல்லாதிருப்பது மேல்" என்றும் கூறினார். இதே வார்த்தையை இந்தியரொருவர் கூறியிருக்கும் பக்ஷத்தில் அவர் கதி அதோகதியாய்த் தானே போய் விட்டிருக்கும். அவர்களுக்குள் கட்டுப்பாடிருக்கிறபடியால் அரசனால்கூட கெயிர் ஹார்டியை யொன்றும் செய்ய முடியவில்லை. ஆகையால் ஐக்கியமே பலம்.

ஐரோப்பா கண்டத்தில் எத்தேசத்திலாயினும் பெரிய மகான்களை வெளியேற்றி, தேசபக்தர்களைச் சிறைப்படுத்தி, முத்திராசாலைகளை "ஜப்தி" செய்திருந்தால் சும்மாவிருந் திருப்பார்களா? ஆனால் செயல்களெல்லாம் இந்தியாவில் இந்த 20வது நூற்றாண்டில் பிரிடிஷ்காரர்களால் செய்யப்பட்டு வருகின்றன.

ஒருவன் மற்றொருவனைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு போய்விட்டால், அதை அநியாயமென்று சொல்லுகிறார்கள். ஆனால் கவர்ன்மெண்டார் தங்களுக்கு இஷ்டமானவர்களைத் தூக்கிக்கொண்டு போய் விடடால் அது மாத்திரம் (1818 வருஷத்திய) சட்டமாய் விடுகிறது. அவ்வாறே கவர்ன்மெண்டார் ஒருவருடைய முத்திராசாலையை ஜப்தி செய்துவிட்டால் நியாய மென்றும், வேறு யாராயினும் மொருவர் முத்திராசாலையிலுள்ள சாமான்களைக் கொண்டு போய்விட்டால் அது பெரும் பிழையென்றும் சொல்லப்படுகிறது. இது விந்தையே.

தற்காலத்தில், நமது பிரெஞ்ச் கவர்ன்மெண்டார் ஆல்ஜீரியாவை எப்படி யாண்டு வருகிறார்களென்பதைச் சிறிது கவனித்துப் பார்ப்போம். ஆல்ஜீரியர்களுக்கும்,

பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஏதாயினும் வித்தியாஸமுண்டா? அங்கு ஜனங்களுக்கு அதிகாரங்கொடாமல் வரி வசூல் செய்கிறார்களா? அல்லது வெளியேற்றுதல், இராஜத்துரோகிகளென்று கடுங்காவலில் வைத்தல், முத்திராசாலைகளை ஜப்திசெய்தல் முதலிய கொடுமையான சட்டங்களுண்டா? இதற்குப் புதுவையே யோர் உதாரணம். நமது ப்ரெஞ்சுக்காரர்களின் கொள்கை ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸஹோதரத்துவமல்லவா?

பிரிடிஷ்காரர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கு முள்ள வித்தியாஸம் யாதெனில் பிரிடிஷ்காரர்கள் ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸஹோதரத்துவமென்று வாயினால் மாத்திரம் சொல்லுகிறார்கள்; ஆனால் பிரெஞ்சுக் காரர்கள் உண்மையாகவே அக்கொள்கைகளின்படி நடந்து கொள்ளுகிறார்கள். பிரெஞ்சுக்காரர்களைப் போல் பிரிடிஷ்காரர்களும் நடந்துகொள்ள வேண்டுமாயின், இந்தியர்கள் மிகவும் முயற்சி செய்ய வேண்டியது.

Registered No. M. 771 LIBERTE—EGALITE—FRATERNITE. [illegible]

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்.

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

பு. 3	புதுவை [illegible]	1909 ஜூலை 10	[illegible]

குடியரசு நீடித்து வாழ்க.

VIVE LA REPUBLIQUE—LONG LIVE THE REPUBLIC.

1789-ம் ஜூலை 14உ [illegible]

LA PRISE DE LA BASTILLE



பிரெஞ்சுக்காரர்கள் அரசனுடைய கொடுமையைப் பொறுக்க முடியாமல் வெகுண்டு தேசபக்தர் களையும், மகான்களையும் அடைத்து வைத்திருந்த பஸ்டீலென்னும் கோட்டையைப் போய் இடித்துத் தரைமட்டம் செய்து, கைதிகளை எல்லாம் விடுதலை செய்கிறார்கள். இதுதான் குடியரசு பண்டிகை விசேஷம்.

குடியரசுப் பண்டிகை

இம்மாதம் 14-ம் தேதி நமது புதுவையிலும், இதர பிரெஞ்சு இராஜாங்கங்களிலும் குடியரசுப் பண்டிகை அல்லது, இராஜா பண்டிகையென்றொன்று நடைபெற்று வரப்போகிறது. இது இவ்வருஷம் மாத்திரமல்ல, ஒவ்வொரு வருஷமும் பொது ஜனங்களெல்லாம் மனங்களிக்குமாறு ஓர் மகோற்சவமாக நடத்தப்படுகிறது. இம்மகோற்சவத்தின் காரணத்தைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். இங்கு சிறிது பிராஞ்சு தேசத்தின் பழைய சரித்திரத்தையும், நிலைமையையும் சொல்வது தகுதியாயிருக்கும்.

பஸ்தீலென்னும் சிறைச்சாலை ஓர் பெருங் கோட்டையைப் போலக் கட்டப்பட்டு ஒரு பெரிய சேனையினால் காக்கப்பட்டிருந்தது. அதற்கு ஓர் குவர்னேரையே நியமித்திருந்தார்கள். அதில் எண்ணிலாதவ்வளவு லேதர் தெ கஷ்ஷே என்னும் ராஜ ஆக்கினையினால் பிடிக்கப்பட்ட குற்றமற்றவர்களும், நியாயஸ்தலத்தில் அநியாயமாய் தண்டிக்கப்பட்ட தேசபக்தர்களும் இன்னும் இதர மஹான்களும் அடைக்கப்பட்டு நெடுங்காலமாக வருந்திக் கொண்டிருந்தார்கள். ஆகையால்தான் அச்சிறைச்சாலையை ஜனங்கள் பார்த்தவுடனே, அது அவர்களுக்கு அரசன் அநீதியேயோர் உருவங்கொண்டாற் போலப் புலப்பட்டது. ஆதலால் அதைத் தரைமட்டமாக்கிவிட்ட ஜனங்கள் அதின்பேரில் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு "கொடுங்கோன்மை என்றுமழிக! கொடுங் கோன்மை என்றுமழிக!" (A bas la tyrannie -Down with tyranny) என்று கூக்குரலிட்டார்கள். இந்த 14-ம் தேதியாகிய மகாதினம்தான் 120 வருஷங்களாகக் கொண்டாடப் படுகின்றது. இத்தினம் பாரீஸ் நகரத்தில் கொடுங்கோன்மையை யழித்துவிட்டதனால் பிராஞ்சு தேசத்திற்கு உண்டான கீர்த்தியின் வரம்பை யாரால் தான் சொல்லமுடியும். ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸஹோதரத்துவம் என்றும் மூன்று தத்துவங்களும் உலகத்திற்கு உபதேசிக்கப்பட்டன. மூவர்ணக் கொடியானது நாட்டப்பட்டது. பிரெஞ்சு ராணுவ வீரர்கள் தத்துவங்களை நிலைநாட்ட எவ்வளவு அற்புத வேலைகளைச் செய்தார்கள். அவை இன்றைக்கும் வியக்கத்தக்கவையாகவேயிருக்கின்றன. இவ்வபீஷ்டங்களையடையும் பொருட்டே ஒவ்வொரு தேசத்தாரும் முயற்சி செய்கிறார்கள். இவைகளை ஒவ்வொருவரும் அடையத்தான் வேண்டும். புதுவை வாஸிகளே! நாமெல்லாரும் இந்த மகோற்சவ தினத்திலாவது நமது சண்டை சச்சரவுகளை மறந்து, ஒன்றுகூடி மனங்களிப்போமாக.

ஸ்வதந்திரம் நீடித்து வாழ்க! ஸமத்துவம் நீடித்து வாழ்க! ஸஹோதரத்துவம் நீடித்து வாழ்க! குடியரசு நீடித்து வாழ்க! (Viva la republique)

Registered No. M. 771 LIBERTE—EGALITE—FRATERNITE தனிப்பிரதி அணா (1)

ஸ்வாதந்திரம், ஸமத்துவம், ஸகோதரத்துவம்.

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

பு. 1.] புதுவை சௌமிய ஹு புரட்டாசி ௴ ௨ௐ 1909ஹு செப்டெம்பர் ௴ [illegible]

பாரத விசேஷ தர்மம்.



LE NATIONALISME HINDOU
L'ANGLETERRE - Le commence a trembler
pour mon chateau fort
(PASQUINO)

இங்கிலாந்து தேசத்தவள் - ஜிங்கோ இம்பீரியலிஸ்டு: "என்னுடைய பலமான கோட்டை இடிந்து விழ ஆரம்பித்துவிட்டதே என்று என் உடல் நடுநடுங்குதே" என்கிறாள். பஸ்கினோ பத்திரிகை.

சித்திர விளக்கம்

இவ்வாரத்திய சித்திரமானது ஐரோப்பாவில் பிரசுரமாகும் "பஸ்கினோ" பத்திரிகையிலிருந்து எடுத்துப் போடப்பட்டிருக்கிறது. பிரிடிஷார்கள் ஜீவனத்துக்கும் பெருமைக்கும் பலத்திற்கும் அடிப்படை அஸ்திவாரம் "இந்தியா". இந்த அடிப்படையின்மேல் மற்ற கனடா, ஆஸ்திரேலியா, எகிப்து, கயானா, கினி, கொலம்பியா, டிரான் ஸ்வால், ஸொமாலி, ஜமாய்க்கா, மால்டா, ஜிப்ரால்டர் முதலிய நாடுகள் கம்பங்கள் போல் அடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்குமேல் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் கோட்டை கொத்தளங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதன்மேல் ஏகாதிபத்தியத்தின் நிரங்குச அதிகாரக் கொடி பறக்கிறது. அதை ஓர் இங்கிலீஷ்காரன் நிர்ப்பயமாயும் நிர்விசனமாயும் பிடித்துக் கொண்டிருந்தான். இந்தியா நாட்டின்கண் எங்கு பார்த்தாலும் "பாரத ஸ்வதேசீய தர்மம்" ஆரம்பித்த பிறகு, அந்த அஸ்திவாரம் இடிந்து விழுந்துகொண்டே இருக்கிறது. இப்போது பல கொடிய சட்டங்களால் "பாரத ஸ்வதேசீய தர்மத்தை" அடக்கியாள ஆரம்பித்துவிட்டபடியால் இந்த அஸ்திவாரம் இடிந்து விழ ஆரம்பித்துவிட்டது. முழுதும் விழுந்துவிட்டால் என்ன செய்கிறது என்று இங்கிலீஸ்காரன் (ஜிங்கோ) ஒவ்வொருவனும் நடுங்குகிறான். இப்பேர்ப்பட்ட கொடிய சட்டங்களைக் கொண்டு ஸ்வதேசீய தர்மத்தை அடக்கி நடத்தினால் பிரிடிஷார்கள் ஏகாதிபத்தியத்திற்கே உண்டாகும் ஆபத்தை பிரிடிஷார்களுக்கும் முன்னடியாக எச்சரித்து வைக்க பஸ்கினோ பத்திரிகை இதை வெளியிட்டிருக்கிறது.

இதர ஐரோப்பியர்களும் உலகமும் இங்கிலீஷ் காரருடைய ஜீவாதாரத்திற்குக் காரணம் "இந்தியா"தான் என்பதை இந்த மர்மஸ்தலாஹஸ்யத்தைத் தெரிந்துகொண்ட பிறகுங்கூட இங்கிலாந்தில் பார்லிமெண்டார் முதலியர் பலர் இதை நன்கறிந்தும் இன்றும் இந்தியாவைப் பல கொடிய அயோக்கியமான துஷ்ட சட்டங்களால் அடக்கியாண்டு வர எண்ணங்கொண்டு அப்படியே நடத்தி வருவது விந்தையே!!!

Registered No. M. 771 LIBERTÉ—EGALITÉ—FRATERNITÉ.

ஸ்வாதந்திரியம், ஸமத்துவம், ஸஹோதரத்துவம்.

785/1-9

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்

1909ஆ செப்டம்பர்

தர்மமயம்.



ஸ்ரீமான் அரவிந்த கோஷுக்கு அலிப்பூர் ஜெயில் கோர்ட்டில் எல்லாரும் ஸ்ரீ வாசுதேவமயமாகத் தோன்றிய திவ்ய காட்சி.

1. ஜட்ஜ் பீச்க்ராப்ட் 2. ஸ்ரீமான் அரவிந்த கோஷ் 3. Mr. நார்ட்டன் 4. Mr. ஆசுதோஷ்பிச்வாஸ் 5. ஸ்ரீமான் சித்தரஞ்ஜன தாஸ் 6. ஸ்ரீமான் ப்ரபுல்ல சக்ரவர்த்தி 7, 8, 9, 10, 11 போலீஸ் உத்தியோகஸ்தர்கள்

சித்திர விளக்கம்

ஸ்ரீமான் அரவிந்த கோஸ் மாணிக்கத் தோலா வெடிகுண்டு வழக்கில், குற்றம் சாட்டப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தபோது ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அவருக்குச் சிறையில் தரிசனந்தந்தார். பிறகு மற்றொரு நாள் கோர்ட்டிலுள்ள ஜட்ஜு மிஸ்டர் பீச்போர்ட்; கவர்ன்மெண்டு வக்கீல் மிஸ்டர் நார்ட்டன், மிஸ்டர் ஆசுதோஷ விச்வாஸ், அஸெஸர்கள் இருவர் ஸ்ரீ அரவிந்தர் வக்கீலான ஸ்ரீமான் சித்தரஜ்ஜன தாஸ், ஸ்ரீமான் பூமுகேச சக்ரவர்த்தி ஈட்டி சொருகிய துப்பாக்கி பிடித்து நிற்கும் போலீஸ் சேவகர்கள், எல்லாரும், (குற்றம் சாட்டப்பட்டவர்கள் கூண்டில் தர்ம மார்க்கம் எனும் காண்டீபத்தையும், ஸாத்வீக எதிர்ப்பு என்ற அம்புரா தூணியையும் தோளில் தரித்துக்கொண்டு நிற்கும் ஸ்ரீ அரவிந்தருக்கு). ஸ்ரீ வாஸுதேவனாய்த் தோன்றினர். அதுதான் இவ்வாரத்தில் நமது பத்திரிகையின் சித்திரம்.

787/14

Registered No. M. 771 LIBERTE—EGALITE—FRATERNITE

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்.

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

பு. 1.] புதுவை 1909ஆம் அக்டோபர் [8. 32



முகலாயர்கள் இந்தியாவில் அரசுபுரியும் சமயத்தில் ஆரிய வீரர்கள் விளையாடிய "போலோ" என்று சொல்லப்படும் பந்து விளையாட்டு.

(சித்திர 'சக்கரவர்த்தினி')

சித்திர விளக்கம்

நமது தேசத்தில் ராஜபுத்திர ஸ்திரீகள் மொகலாய அரசாக்ஷி காலங்களில்கூடக் குதிரைகளின் மேல் உட்கார்ந்து கொண்டு "போலோ" என்ற பந்தாடுகிறதுதான் இவ்வாரம் நமது பத்திரிகையின் சித்திரம். ஐரோப்பா, அமெரிக்கா முதலான நாடுகளில் பாரத தேசத்து மாதர்களுக்கு நாகரீகமே தெரியாது. வித்தை வாசனையே கிடையாது. அடிமைகளைப்போல நடத்தப்பட்டு வந்தார்கள்,வருகிறார்கள், என்றுஇப்படி பற்பல விதமாய் நமது நாகரீகத்தையும் நமது ஸ்திரீகளையும் நம்மையும் (பாதிரிகள் போதனை ஸத்தியவாக்காய் நம்பி) பழித்து இழிவாகப் பலர் எண்ணி வருகிறார்கள். அவர்கள்தான் அப்படி யென்றால் நம்மவர்களில் பலர் ஒன்றுக்கொத்தல், அரைகுறை படிப்பு படித்துவிட்டு, அந்த ஐரோப்பிய பாதிரிகள் சொல்வதை வேதவாக்காக எண்ணி நமது முன்னோர்களைத் தூஷிக்கிறார்கள். நமது தேசத்தில் என்றைக்கும் ஸ்திரீகள் நல்ல உன்னத ஸ்திதிகளில் நல்ல படிப்பு, ஞானம், கேள்வி, இவைகளுடன்கூடி ஆரிய வீர சூர தீர தைரியத்துடன் அதிரமணீயமாய் உயர்ந்த ராஸிக்யத்துடன் வாழ்ந்து வந்தனர். ஜனானாவில் (மூலை வீட்டில்) அடைத்துப் பூட்டப்பட்டிருக்கும் ஸ்திரீகளுக்கு என்ன தெரியுமென்று வீண் அரட்டை அடித்து தூஷணஞ்செய்து திரிபவர்களின் வாய்க்கு ஆப்பிடவேண்டியே இச்சித்திரம் பதிப்பிக்கப்பட்டது. மேலும் நமது பாரத தேச ஸ்திரீகள் எவ்வளவு நாகரீகமுடையவர்களாய் இருந்தனர் என்பதை ஆஸ்திர் அறிந்து தங்கள் சங்கைகளையொழித்து மனதை நிர்மலப்படுத்தக் கொள்ளவும் இச்சித்திரம் ஓர் உதாரணமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி 200 வருஷங்களுக்கு முன் ஓர் பிரெஞ்சு சிற்பச் சாஸ்திர வித்வான் இந்த சித்திரத்தை உதயப்பூர் முதலிய விடங்களில் கண்டு அவற்றை வியந்த புத்தகமும் எழுதியிருக்கிறார். நமது பாரத நாடு ஸாமான்யமான பெண்களைத் தானா பெற்றது. சம்பராஸுர வதத்தில் கைகேயி தசரதருக்குத் தேரோட்டியானாள். அச்சாணி விழுந்து விட்டபோது தனது கையை அச்சாணியாகப் பிடித்தாள். நரகாஸுரவதத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் களைத்துவிட்டபோது ஸத்தியபாமா யுத்தம் செய்தாள். மஹாராணி அஹல்யாபாய் ஹோல்கார் நாட்டில் அரசாக்ஷி செய்தாள். ராணி லக்ஷிமீயால் 1857ல் யுத்தஞ் செய்தனள். ஸீதா, துரோபதி, மீராபாய், ஆண்டாள், மங்கையர்க்கரசி, காரைக்காலம்மை, லக்ஷிமீபாய், அஹல்பாய், பத்மினி, மொல்லா தேவி, மனோன்மணி, தேவீ சவுதராணி, சகுந்தளா, ஸாவித்ரி. முதலான பல மஹிள ரத்னங்களை மகளிர்களாய்ப் பெற்றிருக்கிறாள் ஸ்ரீ பாரத மாதா என்பதை இவர்கள் அறிவார்களாக.

[789/1-8
Registered No. M.771

LIBERTE,—EGALITE—FRATERNITE.
சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்.

Acc. No. 789/1-8
695

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்

பு.II.] [illegible] 190[illegible] அக்டோபர் 3[illegible]

'What the British Bureaucracy is doing in India'

இந்தியாவில் பிரிடிஷ் அதிகாரிகளின் செய்கை

சித்திர விளக்கம்

ஸ்ரீ பாரத ராஜ்ய ஸ்வதந்திர லக்ஷ்மியானவள் தனது ஸன்னிதானத்தின் கதவை ஸமீபத்தில் தான் திறந்தாள். உடனே தேசபக்தர்களான ஸ்ரீ திலகர், ஸ்ரீ அரவிந்தர் முதலானவர்கள் உள்ளே போய் தரிசனம் செய்து தேவியின் பக்கத்திலிருக்கும் செல்வரூபமான பணப்பையையும், ஞான ரூபமான புஸ்தகத்தையும் கைக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். பிரிடிஷ் ஏகாதிபத்ய நிரங்குசப் பிரபுத்வம் எனும் இங்கிலீஷ் அதிகாரி ஸன்னி தானத்தின் வாசலில் சட்டம் என்ற கத்தியுடன் அதிகாரம் என்னும் விலங்கையும் வைத்துக் கொண்டு உள்ளே போகவொட்டாமல் தடுக்கிறான். தேசபக்தர் ஒரு கையால் மாதாவின் திருவடியைப் பிடித்துக்கொண்டு அதனால் உண்டான சக்தியால் திடங்கொண்டு இங்கிலீஷ்காரனுடைய கையை தமது மற்றொரு கையால் தள்ளி உட்செல்ல எதிர்க்கிறான். மற்றவர்கள் திருவருள் பெற்று மாதாவை ஸ்தோத்திரம் செய்கின்றனர்.

இன்னொரு பக்கத்தில் ஸ்வதந்திர தேவியின் ஸன்னிதிக்கு அருகில் வரும் மிதவாதியின் காதையும் தாடையையும் இங்கிலீஷ்காரன் பிடித்துக்கிள்ளி இழைத்து, "இனி இங்கே வாராதே; வாராதே; ஸ்வதந்திரமும் உனக்கில்லை. அதை நீ மறந்துவிடடா! நான் சொல்கிறபடி சொல். பிரிடிஷ் துரைத்தனமே உலகத்தில் மெத்த நீதியானது. அதுதான் இந்தியாவுக்கிருக்க வேண்டும். நான் இங்கிலீஷ் ராஜவிச்வாஸி, நீங்களும் என்னைப்போல் இங்கிலீஷ் ராஜவிச்வாஸியாய் இருங்கள்" என்று எக்காளக் கொம்பு ஊதச் சொல்லி அடிக்கிறான். அப்படியே Mr.கோக்லே முதலானவர்கள் கொம்பு ஊதுகிறார்கள். மற்ற மிதவாதிகளில் பிரசித்தி பெற்றவன்கூட முகத்தைக் காட்ட வெட்கங்கொண்டு முகத்தைக் காட்டாமல் மறைத்துக் கொண்டு ராஜாங்க பதவியின் உத்தியோகத்திற்கு ஓடுகிறான். அன்னவஸ்திரம், நியாயம், செங்கோலதிகாரம், ஞானம். இவற்றுடன் ஸ்ரீ பாரத ராஜ்ய ஸ்வதந்திர லக்ஷ்மீ வீற்றிருக்கிறாள்.

781/ 763 Acc. No. 781/

Registered No. M.771

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்

[பு. II.] (இலை சௌமிய ஹூ ஐப்பசி ௨௧வ 1909 ஹூ நவம்பர் 6வ [இ-]

Patting on the back



ரிப்பன் அதிகாரி: அயே நம்மா ப்யாரே! (ஏ பிரிய லவ்!) உன்னை நிந்திக்கறாப் போலே சொன்னவர்களையெல்லாம் கைது செய்துகொண்டு வந்திருக்கிறேன். பார்த்தையா!

கோகலே பாப: துரையே! எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்னப் பொருத்தம். என் அரசே. இந்தப் பொருத்தம் உலகில் பிறருக்கு எய்தும் பொருத்தமோ.

சித்திர விளக்கம்

பிரிட்டிஷ் அதிகாரத்திற்குக் கனம் மிஸ்டர் கோக்லே பாய் அபிமான பத்னியாய், பர்த்தாவின் வார்த்தையை மீறாமல்,பர்த்தா சொல்படி இந்தியர்களுக்கு ஸ்வதந்திரம் தகாதென்று உபதேசித்து வருகிறாள். அதற்குப் பிரதியுபகாரமாகப் பம்பாய்க்கடுத்த டாணாவில் 38 வருஷங்களாக தேச ஸேவை செய்துவந்த "ஹிந்து பஞ்ச்" பத்திரிகை கோகலேயைக் கொல்லத் தூண்டியதாகக் குற்றம்சாட்டிப் பிரிடிஷ் அதிகாரிகள் அடக்கி விட்டார்கள். பூனாவில் வக்கீலான ஸ்ரீயுத நீல கண்டவாமன பட்கே அவர்களையும், பாரத பூஷண அச்சுக்கூடத் தலைவரான ஸ்ரீயுத கோவிந்த கந்தார்லிகரையும், கோக்லே பாயின்மேல் அவதூறாகப் பாடல்கள் பாடி அச்சிட்டதாகப் பிரிடிஷ் அதிகாரிகள் கைது செய்திருக்கிறார்கள். இம் மூன்று தேசபக்தர்களையும் பிரிடிஷ் அதிகாரி விலங்கிட்டுத் தன்னுடைய அபிமான நாயகியான கோக்லே பாயிடம் இழுத்துக்கொண்டுவந்து காட்டி அவளை முதுகில் தட்டிக்கொடுத்துக் குலாவுகிறான். கோக்லே பாய் அதிகாரியை ஆனந்தமுறத் தழுவித் தங்களிருவருக்கும் அதிர்ஷ்டவசத்தால் பிராப்தமான பொருத்தத்தைப் பற்றிப் பாழ்த்த குரலோடு பாடுகிறார்கள். மற்றவை வெளிப்படை.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – **600 113**

அண்மை வெளியீடுகள்

AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY	
TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM	200.00
பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2	80.00
ம.பொ.சி யின் தமிழ் உணர்வு	40.00
குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு	80.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து	125.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள்	
விளக்க அட்டவணை தொகுதி-4	110.00
நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும்	30.00
A BUNCH OF ESSAYS ON TAMIL LITERATURE	30.00
திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு	100.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
ON TRANSLATING TIRUKKURAL	50.00
ஐங்குறுநூறு மூலமும் உரையும்	85.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி	200.00
THIRUVACHAGAM	175.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
தமிழர் கட்டிடக்கலை	30.00
THE NARRINAI FOUR HUNDRED	175.00
சர்வக்ஞர் உரைப்பா	40.00
தமிழில் ஆவணங்கள்	75.00
தமிழ் மேடை நாடக வரலாறு	55.00
பரதநாட்டிய சாஸ்திரம்	150.00
இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள்	55.00
மேலை நோக்கில் தமிழ்க்கவிதை	100.00
SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE	35.00
அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள்	125.00
TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY	200.00
சதகத்திரட்டு தொகுதி-1	80.00
தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்	70.00
எழுத்திலக்கணக் கோட்பாடு	70.00
சதகத்திரட்டு தொகுதி-2	55.00
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4	70.00
சுவடிச்சுடர்	120.00
தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர்	45.00
தமிழக மகளிரியல்	80.00
தமிழ் மொழி-இன-இலக்கிய மேம்பாடு	
மறைமலையடிகளாரின் பங்களிப்பு	20.00
அறிவியல் தொழில் நுட்பக் கல்வி இன்றைய சந்தைச் சவால்கள்	25.00

Pub.No.444 **பாரதி இந்தியா** **40.00**